சுதேச மித்திரன்

ஜனவரி 30 [illegible] 44/45
6/13 [illegible] 1939

N59·30·44,45
208226

# சுதேசமித்திரன்

6-12-59




25
காசு

# சுவர்ணமுகியும் ஏழு சித்திரக்குள்ளர்களும்

ஒரே ஒரு காலத்தில்...ஒரு ராஜாவுக்கு ஒரு பெண் இருந்தாள். அவளுடைய பொன்போன்ற வதனம் காரணமாக அவளுக்கு சுவர்ணமுகி என பெயரிடப்பட்டது.

சுவர்ணமுகியின் தாயார் இறந்தவுடன் ராஜா வேறொரு மனைவியைக் கல்யாணம் செய்து கொண்டான். புதிதாக வந்தவள் மாயக் கண்ணாடி ஒன்றின் முன்னே நின்று, "என்னைவிட அழகி யார் உண்டு. சொல் பார்க்கலாம்" என்று கேட்டாள். "சுவர்ணமுகி" என்று பதில் வந்தது.

உடனே ராணிக்குக் கோபம் பொங்கியது. தன் ஆளைக்கூப்பிட்டு சுவர்ணமுகியை உடனே கொன்றுவிடுமாறு உத்திரவிட்டாள். அந்த ஆள் சுவர்ணமுகியை கொல்லாமல் காட்டில் கொண்டு போய் விட்டுவிட்டான்.

காட்டில் வாழ்ந்துவந்த ஏழு சித்திரக்குள்ளர்கள் சுவர்ணமுகி மேல் கருணைகொண்டு அவளை வளர்த்து வந்தனர்.

மறுபடியும் ஒருநாள் ராணி மாயக்கண்ணாடி முன்பு நின்று "யார் என்னைவிட அழகி" என்று கேட்டாள். முன்போலவே "சுவர்ணமுகி" என்று பதில் வந்தது.

திரும்பவும் ராணிக்குக் கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது. விஷம் கலந்த ஆப்பிள் பழம் ஒன்று எடுத்துக் கொண்டு, கிழவி போல் வேஷம் தரித்து அவள் விடுவிடுவென்று காட்டிற்குச் சென்று, சுவர்ணமுகியைக் கண்டுபிடித்து அவளிடம் ஆப்பிளை உண்ணக் கொடுத்தாள். ஒரு துண்டைச் சாப்பிட்டவுடன் சுவர்ணமுகி உயிரற்று விழுந்தாள்.

பின்னர் ஏழு சித்திரக் குள்ளர்களும் சுவர்ணமுகியின் உடலை ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்துக் காப்பாற்றிவந்தனர்.

ஒருநாள் அவ்வழியேவந்த ராஜகுமாரன் சுவர்ணமுகியின் அழகைக்கண்டு அப்படியே மயங்கி விட்டான்.

"எதைக் காண்பித்தால் இவளுக்கு உயிர் வரும் என்பது எனக்குத் தெரியும்" என்று சொல்லிக்கொண்டே ராஜகுமாரன் பாரிஸ் மிட்டாய் டின் ஒன்றை சுவர்ணமுகி முன் காட்டினான். உடனே சுவர்ணமுகி கண்ணைத் திறந்துபார்த்து எழுந்துநின்றாள். யார்தான் பாரிஸ் மிட்டாய்களை மறுக்க முடியும்?





நீதி:

நீ காதலிப்பவர்களில் பாரி மிட்டாய் விரும்பாதவரும் உண்டோ

பாரிஸ் மிட்டாய்கள் நிறைந்த ருசியும், தூய்மையும் கொண்டவை இவற்றை உங்கள் இஷ்டப்படி சில்லறையாகவோ, அல்லது கண்கவர் மோஸ்தர்களில் அமைந்துள்ள அழகான டின்களிலோ வாங்கலாம். விலை ரூ. 1.75 லிருந்து ரூ. 5.00 வரை.

Parry's

தயாரிப்போர்: பாரீஸ் கன்பெக்ஷனரி லிமிடெட். மதராஸ்.



# பொருளடக்கம்

Vol: XXX] [No 44
விகாரிஸு கார்த்திகை 20 டிசம்பர் 6

அடுத்த திட்டத்திற்கு நிதி வசதி 3
மக்கள் மன்றம் 6
அரசியல் துக்கடா 7
காற்றுவாக்கிலே —அரட்டை 11
நாடகமும் நாட்டியமும் —ஸஞ்சாரி 13
குடும்பக் கூட்டம் —ஸ்ரீவத்ஸன் 17
மூடிக்கிடக்குதே உன் நெஞ்சம் —தமிழ்வாணன் 21
பச்சிலை வைத்தியம் —பண்டித மருத்துவமணி 29
நட்சத்திரப் பேட்டி 32
ஆடிப் பெருக்கு —எஸ். ரத்தினவேலு 35
ஜடாயு —சௌரி 45
மாதர் மகாசபை —குங்குமம் 53
மனத் தூண்டில் —கிருஷ்ணா 58
கட்டடக் கலை —ம. ரா. இளங்கோவன் 65
இயந்திரம் —டி. எஸ். கோதண்டராமன் 69
கத்தி முனையிலே... —ஜி. கே. பொன்னம்மாள் 79
மாதுளையும் மக்குத்துரையும் —தமிழ்முடி 94
திருவெம்பாவை —செம்மங்குடி ஸ்ரீனிவாஸய்யர் 96

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.



★

# அடுத்த திட்டத்திற்கு நிதி வசதி

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பணம் திரட்டுவதற்கான வழிவகைகளைப்பற்றி நமது நிதி மந்திரி இந்திய வர்த்தக-தொழில் சபையின் விவாத அரங்கில் பேசியுள்ளார். அத்திட்டம் கூடிய விரைவில் தேசீய செல்வத்தைப் பெருக்கி, மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாயிருக்க வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடில்லை. ஆனால், அது நமது சாத்திய சாதனங்களையும், முதல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் அனுபவத்தையும்பற்றிய உணர்வுடன் அமைவது அவசியம். திட்டத்தைக் கூடியவரை பெரிதாக அமைத்துப் பிரமிக்கச் செய்வதொன்றே கருத்தாயிருக்கக் கூடாது. எனினும் அடுத்தபடியாக பத்தாயிரம் கோடி ரூபாய் செலவாகத்தக்க திட்டமொன்றைப்பற்றி அதிகார வர்க்கத்தினிடை தற்போது யோசனை நடந்து வருவதாகத் தெரிகிறது. இவ்வளவு ஏராளமான பணத்தை எவ்வாறு திரட்டுவது? இதற்கு நமது நிதி மந்திரி தேசாய் முக்கியமாக மூன்று வழிகளைக் குறிப்பிட்டிருக்கிறார். கூடியவரை வரிகளை அதிகரிப்பது ஒன்று. சாத்தியமானவரை மக்களிடை கடன் வாங்குவது இன்னொன்று; சர்க்கார் நடத்தும் தொழில்களில் கூடியவரை அதிகமான லாபம் காண்பது மற்றொன்று. சாதாரண மக்களைப் பற்றியவரை, அவர்கள் சிறு சேமிப்புத் திட்டங்கள்மூலம் சர்க்காருக்குக் கடன் கொடுப்பதென்றால், அவர்கள் மிச்சம் பிடிக்கக்கூடிய நிலையிலிருக்க வேண்டும். ஆனால், விலைவாசி உயர்வு காரணமாக பெரும்பாலான ஜனங்கள் காலட்சேபம் செய்வதே கஷ்டமாயிருக்கிறது. சர்க்கார் நடத்தும் தொழில்களில் இன்னும் அதிகமாக லாபம் எடுக்கப் போகின்றனரெனில், விலைவாசிகள் மேலும் உயர்வது திண்ணம்.

வரிகளை மேலும் உயர்த்த இடமிருப்பதாக நிதி மந்திரி எண்ணுவது ஆச்சரியமாகும். தற்போதைய விலை

வாசி உயர்வுக்கு, நோட்டுச் செலாவணிப் பெருக்கோடு, அளவுகடந்த வரிச் சுமையும் ஒரு முக்கியமான காரணம். இத்தகைய முறைகளைத் தொடர்ந்து கையாள்வராயின், மக்களின் துன்பம் மேலும் பெருகுவதுடன், அவர்களைச் சேமிக்கச் சொல்வது இன்னும் ஒரு பெரிய கேலிக்கூத்தாகி விடும். நாட்டில் தொழில் முயற்சிகள் மலிந்தாலேயே, பிழைப்புக்கான வாய்ப்புகள் பெருகுவதும், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதும் சாத்தியமாகும். ஆனால், தனியார் தொழில் முயற்சிகள் விசேஷமாக பெருகுவதற்கான சூழ்நிலை தற்போது இல்லை. வரிச் சுமை ஒருபுறம்; தொழில் துறையில் சர்க்காரின் ஆதிக்க விஸ்தரிப்பு பற்றிய அச்சம் இன்னொரு புறம்.

சர்க்கார் அதிகப்படி வரி விதிக்கிறார்களென்றால், அதை வெவ்வேறு அனுகூலங்களின் உருவத்தில் பொதுமக்களுக்குத் திருப்பிக் கொடுக்கத்தான் என்று நிதி மந்திரி கூறுகிறார். ஆனால், வரிச்சுமை அளவோடு இருக்க வேண்டும். தனியாரின் பயன்படக்கூடிய பணத்தையும் சர்க்கார் வரியாகக் கொண்டுபோய் விடுவது விரும்பத்தக்கதல்ல. அந்த அதிகப்படி வரிப் பணம் சர்க்காரின் அளவுகடந்த சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுப்பதிலேயே கரைந்து போய்விடுவதை காங்கிரஸ் பிரமுகர்களே சுட்டிக் காட்டியிருக்கின்றனர். அந்தப் பணம் தனியார் கையிலிருந்தால், அதைக் கொண்டு அவர்கள் பலவிதமான தொழில் முயற்சிகள் தோற்றுவிக்கக் கூடுமல்லவா? சில ஜீவாதாரமான தொழில்கள் எந்நிலையிலும் சர்க்கார் வசமே இருந்தாக வேண்டுமென்பதை யாரும் மறுக்கவில்லை. மற்றத் தொழில்கள் விஷயத்தில் சர்க்கார் அத்தியாவசியமான மேற்பார்வை அதிகாரத்தை மட்டும் வைத்துக்கொண்டு, அவற்றைத் தனியார் போட்டி உணர்ச்சியுடன் நடத்த வேண்டிய வசதி செய்து கொடுப்பதே விவேகம். அந்நிலையில்தான் தொழில்கள் துரிதமாகச் செழித்துப் பண்டங்கள் மலிவது சாத்தியமாகும். அவ்வாறு விலைகள் மலியாதவரை உள்நாட்டில் மக்கள் சௌகரியமாக வாழ்க்கை நடத்துவதோ, ஏற்றுமதி பெருகுவதோ சாத்தியமில்லை. அந்த நிலையில்தான் சர்க்கார் மேன்மேலும் அபிவிருத்தித் திட்டங்களைக் கூடிய வரை குறைந்த செலவில் நிறைவேற்றி வைக்கவும் கூடும். இந்தச் சூழ்நிலை இந்நாட்டில் அந்நியரது முதலீட்டுக்கு ஒரு விசேஷமான தூண்டுகோலாகவும் உதவக்கூடும். வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்குவதை விட, இத்தகைய முதலீடுகள் நமக்கு பலவிதத்திலும் அனுகூலமானது என்பதை யார் மறுக்க முடியும்?

# மக்கள் மன்றம்

"கருத்தினித் பிறந்த காட்சி-
கண்கவர் காட்சி.
களிப்பினைக் காட்டும் காட்சி:
கடவுளர் காட்சி!
விருப்பின விரசத்திற் காட்டி-
பரந்தாமன்
விந்தைச் செயல் ஆற்றிட்ட காட்சி!
பக்தனின் உள்ளம் கண்டே பரமனும்
வந்து ஆங்கே!
பாட்டினைப் புனைந்து சேர்த்த-
பேரானந்தக் காட்சி!
இத்திருக் காட்சிதன்னை-எடுப்பாய்
முகப்பில் கொண்டு
இலங்கிடும் "மித்திரனிதழ்" 29ல்
எல்லாமே அழகுக் கோப்பு".

—வி. ராமகிருஷ்ணன்,
திருச்சி.

ஃ ஃ ஃ

22-ந்தேதி இதழின் முகப்போவியக் கவிதைக் கன்னி—கயல் விழியாள் வாசகர்களை வைத்த கண் வாங்காது கவனிக்கச் செய்து விட்டாள்! எல்லாம் ஓவியர் 'நடன்' அவர்களின் கைவண்ணத்தின் பெருமை!

தலையங்கத்தை வாசகர்கள் மட்டுமின்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் படிக்க முன்வந்தால்...ஒரு வேளை....ஆசிரியர் அவர்களின் இலட்சியக் கனவு நினைவாகலாம்!

பெரியார்பற்றிய அரசியல் துக்கடா பிரமாதம். அரட்டையார் அரசியல் கூத்தாடிகட்கு சரியான சவுக்கடி வழங்கியுள்ளார். சந்திரபாபு, சிறந்த கருத்துக்களை உதிர்த்திருக்கிறார். சாவித்திரி—சுப்புலட்சுமி, பேட்டி சுவையாக உள்ளது. கதைகள் யாவுமே அற்புதம்! அவற்றில் காதல் படகு கேரளச் சூழ்நிலையையும், வனப்பையும் நம் முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது. கேரளப் பெண்மணிகளின் வீரத்தைக் கதாசிரியர் நன்றாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்!

ஆ. ரா. கிருஷ்ணன்,
சிதம்பரம்.

22-ந் தேதி இதழைக் கண்டேன்; வெற்றியின் ரகசியம் என்ற கதையை படித்தேன். அதில் தான் ஒரு கலைஞனை வெறுத்து அக்காள் வாழ்க்கையைப் பார்த்தாவது திருந்தி கலைஞனையே மணக்க சம்மதித்தாள். இந்த இடம் என்னை கவர்ந்து விட்டது. 'சாகாதே சாளா' என்ற கதையும் மிகவும் நன்றாக இருந்தது.

வி. வி. நாகராஜன்,
வைத்தீச்வரன்கோவில்.

ஃ ஃ ஃ

22ந்தேதி முகப்புப் படம் வெகு ஜோர்! வரைந்த 'நடனுக்கு' நன்றி. புரட்சி எழுத்தாளர் தமிழ்வாணனின் 'மூடிக்கிடக்குதே உன் நெஞ்சம்' வெகு அழகாய் வருகிறது. நட்சத்திரப் பேட்டி பகுதியில் சந்திரபாபுவின் மனதை அப்படியே எழுதியிருக்கிறீர். 'சியாமாவின்' நிழலும் நிஜமும் கடைசி நன்றாயிருந்தது. (15–11–59) இப்போது மித்திரனில் ஒரு தொடர் கதைதானிருக்கிறது. விரைவில் மற்றொன்றைத் தொடங்க வேண்டும்.

கே. எஸ். ராவ்,
பெருவம்பர்.

ஃ ஃ ஃ

22-ந் தேதி இதழில் வெளியான 'பட்டுப் பூச்சி' ஓர் அழகான கற்பனைக் களஞ்சியம். சினிமா நட்சத்திரத்துக்கு பட்டுப் பூச்சியை உவமை காட்டியிருப்பது மிகவும் பொருத்தமாக இருக்கிறது. அழகான கற்பனை. எளிய நடை. பாத்திரங்களோடு ஒன்றிவிடும் தன்மை—இதை எழுதிய 'சுபத்ரா'வுக்கு என் பாராட்டுகள்.

'சாகாதே சாளா' படித்து நான் சிரித்த சிரிப்பில், நான் சாகாமல் இருந்தது ஆச்சரியம்தான்.

"வாணி"
கோயம்புத்தூர்.

சிந்தனையைத் தூண்டும் 'காற்று வாக்கிலே' பகுதி மிகவும் பயனுள்ள பகுதியெனில் மிகையல்ல! 22-ந் தேதி இதழில் வெளிவந்த சிறு கதைகளில் எனக்குப் பிடித்தது 'அக்காவுக்குக் கல்யாணம்'. இதை எழுதிய ஆசிரியருக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள் உரித்தாகுக.

எம். வி. சத்தியமூர்த்தி.
மதுரை

⁂ ⁂ ⁂

22-11-59 இதழ் கண்டேன். கதைகள் அனைத்தும் உயர்ந்தவை. ஸி. ஆர். ராஜம்மா எழுதிய 'இதுதான் அன்பு' என்ற கதை என்னை வெகுவாகக் கவர்ந்துவிட்டது.

க. ஹரிஹரன்.
திருவனந்தபுரம்.

⁂ ⁂ ⁂

22-ந் தேதி இதழில் துருவன் எழுதிய 'நஞ்சல்ல நண்பன்' என்ற கதை விறுவிறுப்பான நடையுடன் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் அமைந்திருந்தது. சுபத்ரா எழுதிய 'பட்டுப் பூச்சி' என்ற கதையும் நன்றாக அமைந்திருந்தது. தயை செய்து வினா-விடைப் பகுதி ஏற்படுத்தவும்.

என். சுப்ரமணியன். ஆர். ஞானசேகரன்
சிவகங்கை.

⁂ ⁂ ⁂

22-ந் தேதி இதழில் வெளியாகியிருந்த நட்சத்திர பேட்டியைப் படித்தேன். அதில் 'ஏழைகளைப் பணக்காரன் சுரண்டுவதாக வசனம் பேசிவிட்டு, ஒரே நடிகன் பல மாளிகைகளையும் பல கார்களையும் வாங்கி வைத்துக்கொண்டு பணத்தில் புரளுவது முறையல்ல...' என்ற நடிகர் சந்திரபாபுவின் கூற்றைப் படித்து திகைத்துவிட்டேன். தொடை நடுங்கியாக நடிக்கும் இவருக்கு இத்தனை துணிச்சல் எங்கிருந்து வந்தது? சபாஷ் சந்திரபாபு!

ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தி
புது டில்லி.

'மித்திரன்' தீபாவளி மலர் கண்டேன். மிக மனமகிழ்ந்தேன். நன்றி. 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்பதற்கொப்ப மித்திரனது தரங்குறையாத சேவைகளால் பயனடைந்து வரும் வாசகப் பெருமக்களுக்கு 'சிறப்பிதழாகப் பரிமளிக்கும்' தீபாவளி இதழின் பயனும் மணமும் புதிதன்று. வியப்பிற்குரியதுமன்று! அன்பர்கள் ஸ்ரீ தி. ஜா.வும், ஸ்ரீ லா. ச. ரா.வும் தமக்கே உரித்த தனித் தன்மையுடன் சிருஷ்டிகளை உண்டாக்கி வாசகர்களிடம் 'இன்றைய உலகம்' இயங்கும் தடத்தை அறிமுகப்படுத்தியுள்ள பணி தேவையானதொன்று. அப்பப்பா! 'கமலமும், இதழ்களும்' ஊட்டிய போதை, சிந்தனைத் தெளிவு ஆகியவற்றின் பயன் மிகப் பெரிது மட்டுமல்ல! மாண்புடையதுங்கூட.

ஏ. ஆர். ராஜாமணி
புது தில்லி.

⁂ ⁂ ⁂

எங்களது பள்ளி வாசகசாலைக்கு வரும் பல பத்திரிகைகளுள் என்னைக் கவர்ந்ததும், விரும்பிப் படிப்பதும் பழம்பெரும் ஏடான 'சுதேசமித்திரனே!' புரட்சி எழுத்தாளரான தமிழ்வாணரின் நெடுங்கதை சர்க்கரைப் பந்தலில் தேன் மழை பொழிவது போன்று அமைந்துள்ளது. 'மன்னிப்பு' என்ற கதை படிப்பதற்கு நன்றாக அமைந்துள்ளது.

கே. ஏ. முகம்மது அலி.
சிதம்பரம்.

⁂ ⁂ ⁂

புரட்சி எழுத்தாளர் தமிழ்வாணன் 'மூடிக்கிடக்குதே உன் நெஞ்சம்' என் நெஞ்சை கவர்ந்துவிட்டது. நெற்றி வியர்வை விழ ஓடோடிச் சென்று 'சுதேசமித்திரன்' வார இதழை வாங்கி வந்துவிட்டால்தான் 'நோடி அலையும் என் உள்ளம், நிம்மதி அடைகிறது!'

டி. நரசிம்மன்
ஆரணி. (வ. ஆ.)

# அரசியல் துக்கடா

எஞ்சினியரிங் திட்டங்களை நிறைவேற்ற இந்தியாவுக்கு செக். கடன் தரும்.

—ஒரு செய்தி.

செக்காகத் தருமா, அல்லது பணமாகவே தருமா என்று ஒருவர் கேட்கிறார்.

⁂ ⁂ ⁂

ஜெயில் மந்திரி ஸ்ரீ மோஹன்லால் நேற்று சிறையைச் சுற்றி வந்தபோது, சில கைதிகள் தண்டனைக் காலத்துக்கு அதிகமாகவே சிறையில் வைக்கப்பட்டுவிட்டது தெரிய வந்தது.

—ஞாயிறு செய்தி.

இந்தக் கைதிகள் விடுதலையாகி மறுபடியும் சிறைக்கு வரும்போது அவர்களுடைய தண்டனைக் காலத்தில் இந்த அதிகப்படி தினங்கள் கழிக்கப்படுமென நம்புகிறோம்!

⁂ ⁂ ⁂

தொல்காப்பியம் பார்ப்பனரின் சிருஷ்டி. அதைத் தமிழர் காப்பியமென நாம் ஏற்பது தகாது.

—பெரியார்.

பாரதியாரின் பாட்டில் 'கம்பனைப் போல்' என்று வந்த இடங்களைக் 'காப்பியன்போல்' என்று திருத்திய ஆராய்ச்சியாளருக்கு இச்செய்தி அர்ப்பணம்!

⁂ ⁂ ⁂

மேற்கு நாடுகளுக்கு அவ்வளவு சக்தி இல்லை. அவைகளுக்குக் கிழடு தட்டிவிட்டது.

—குருஷேவ்.

உருண்டையான உலகில் மேற்கு நாடு, கிழக்கு நாடு என்று பிரித்துச் சொல்வது அவ்வளவு சரியில்லையோ!

உலகின் பொருளாதாரத் துறையில் முதல் இடம் பெற வேண்டுமென்பதே சோவியத் யூனியனின் குறிக்கோள்.

—மிகோயன்.

ஏன்? சந்திரமண்டலத்தின் பொருளாதாரத் துறையையும் சேர்த்துச் சொல்ல வேண்டாமோ?

⁂ ⁂ ⁂

பிச்சை எடுப்பது இதுவரை ஏழைகளின் தொழில் என்று கருதப்பட்டு வந்தது. ஆனால், பல பிச்சைக்காரர்களை அமர்த்திப் பணக்காரர்களும் இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

—ஒரு எம். பி.

அப்படியானால் நமது சர்க்கார் இந்தத் தொழிலை எடுத்து நடத்தும் நாள் அதிதூரத்தில் இல்லை

⁂ ⁂ ⁂

இந்தியாவில் எண்ணெய் கண்டுபிடிப்பு சம்பந்தமாக வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் அழைக்கப்படுவர்.

—புது டில்லிசெய்தி.

இந்த ஆராய்ச்சியாளர்கள் எண்ணெய் இருக்குமிடத்தைக் கண்ணில் எண்ணெய் விட்டுக்கொண்டு தேடுவார்களென எதிர்பார்க்கிறோம்.

⁂ ⁂ ⁂

கூட்டுறவு முறையில் சேராத விவசாயிகளுக்கு ரசாயன உரங்கள், கடன் வசதிகள் முதலியன மறுக்கப்படாது.

—பார்லிமெண்ட் செய்தி.

மறுக்கவும்படாமல் கொடுக்கவும்படாமல் ஈரெட்டான ஒரு நிலையில் அந்த விவசாயிகள் வைக்கப்படலாமோ?

காங்கிரஸைப் புனிதப்படுத்த முடியாது. சுதந்திரக் கட்சி என்னும் தீக்குச்சியைக் கொண்டு காங்கிரஸ் கோட்டையைக் கொளுத்த வேண்டும்.

—ராஜாஜி.

ஆச்சாரியார் தன்னுடைய முறைகளைக் கையாண்டு தன் புகழில் பங்கு பெறப் போட்டி இடுவதாகப் பெரியார் கருதலாம்.

ஃ ஃ ஃ

இந்தியாவின் யோசனையை நிராகரிக்க சீனா அடித்தளம் அமைக்கிறது.

—செய்தித் தலைப்பு.

ஏனென்றால் இந்திய எல்லையில் ..னகூடம் கட்டுவதற்குச் சீனா அடித்தளம் அமைக்கிறதல்லவா?

நல்ல புத்தகம் படிக்கும் ஆர்வத்தைச் சிறு வயதிலேயே சிருஷ்டித்தல் அவசியம்.

—ஒரு பிரமுகர்.

பல குழந்தைகள், புத்தகங்களைக் கிழித்து எறிவதன்மூலம் நல்ல புத்தகங்களைப் படிக்கத் தங்களுக்கு இருக்கும் ஆர்வத்தைப் புலப்படுத்தவில்லையா?

ஃ ஃ ஃ

நாசர் இந்தியா வருவார்.

—ஒரு செய்தித் தலைப்பு.

நாஸர் இந்தியாவுக்கு வரட்டும், வரவேற்போம். ஆனால், நாசர்கள் யாரும் இந்தியாவுக்கு வரவேண்டாம்!

★

---

# இலங்கை விஷயம்

இலங்கையில் தஹநாயகா அரசாங்கம் இனி நாட்கணக்கில்தான் இருக்க முடியுமென்று கூறும் அளவுக்கு ஆட்டம் கொடுத்துவிட்டது. இக்கடிதம் அச்சுக்குப் போவதற்கு முன் அரசாங்கம் வீழ்ச்சியடைந்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அரசாங்கத்தின்மீது சென்ற முறை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டபொழுது, நிதி மந்திரி ஸ்டான்லி சொய்சா என்பவர்மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு அவர் தன்மானமுள்ளவராக இருந்தால், தாமாகவே பதவியைவிட்டு விலக வேண்டுமென்று எதிர்க் கட்சிகள் ஒருமுகமாக வற்புறுத்தின. ஸ்ரீ ஸ்டான்லி சொய்ஸாவைப் பிரதம மந்திரி ராஜினாமாச் செய்யுமாறு கோருவதற்குப் பதிலாக அழையாத ஒரு மகாநாட்டில் கலந்து கொள்ளுவதற்காக ஆஸ்திரேலியாவுக்கு அவரை அனுப்பினார். இவ்வாரம் அவர் ஆஸ்திரேலியாவிலிருந்து திரும்பியவுடன் மற்றும் பல புதிய விஷயங்கள் நடந்துவிட்டன. முதலாவதாக அவரது சகோதரரான ஸ்ரீ டிக்கி சொய்ஸா என்பவர் பண்டாரநாயகா கொலை சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார். பண்டாரநாயகாவைக் கொலை செய்த துப்பாக்கிக்கு உரியவர், நிதி மந்திரியின் நண்பர் என்பதும் வெளியாகியிருக்கிறது. இதை நிதி மந்திரியே பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருக்கிறார். இந்த நிலைமையில் நிதி மந்திரிக்கு ராஜினாமாச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை. அவர்மீது எதிர்க் கட்சியினர் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் பார்லிமெண்டில் தாக்கல் செய்திருக்கிறார்கள். அத்தீர்மானம் விவாதத்துக்கு வருமுன்பே நிதி மந்திரி பதவியைத் துறந்துவிட்டார். என்றாலும் அரசாங்கத்தின்மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர எதிர் கட்சியினர் ஏகமனதாக முடிவு செய்திருக்கிறார்கள்.

அரசாங்கத்துக்கு எதிர்க் கட்சிகளிடையில் மட்டுமல்ல, அரசாங்கக் கட்சிக்குள்ளேயே கடும் எதிர்ப்பு உருவாகிக் கொண்டிருக்கிறது. பண்டாரநாயகாவின் கொலை வழக்கு விசாரணையில் அரசாங்கத்தின் போக்கில் சர்க்கார் கட்சியைச் சேர்ந்த பலரும் பகிரங்கமாகவே அதிருப்தி தெரிவித்து வருகின்றனர். இந்த நிலைமையில் அரசாங்கத்தின்மீது கொண்டுவரப்படவிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் சுலபமாக நிறைவேறிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சர்க்கார் தோல்வியடைந்து ராஜினாமாச் செய்ய நேரிட்டால் அடுத்தபடி என்ன? முன்னாள் பிரதம மந்திரி சர் ஜான் தலைமையில் ஒரு காபந்து சர்க்காரை நிறுவ வேண்டுமென்று சில வட்டாரங்கள் முயற்சி செய்து வருகின்றன. கட்சிப் பற்று அற்ற சர்வ கட்சி அரசாங்கமொன்றை நிறுவி, நாட்டில் அமைதியை நிலை நிறுத்திய பிறகுதான் பொதுத் தேர்தலை நடத்த வேண்டுமென்பது இவர்களது கருத்து. ஆனால், எதிர்க் கட்சிகள் இதை ஆதரிக்கத் தயாராயில்லை. உடனே பொதுத் தேர்தல் நடத்த வேண்டுமென்பதையே எதிர்க் கட்சிகள் வற்புறுத்தி வருகின்றன. எந்த நிமிடமும் பார்லிமெண்ட் கலைக்கப்படக் கூடுமென்று எதிர்பார்க்கலாம். அடுத்த வருட ஆரம்பத்தில் இலங்கையில் பொதுத் தேர்தல் நடைபெறக்கூடும்.

## பொதுத் தேர்தலும் இந்தியரும்


இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர்களான சுமார் பத்து லட்சம் பேர்களில் சுமார் ஒரு லட்சம் பேர்கள்தான் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களிலும் ஓட்டுக் கொடுக்கும் வயதடைந்தவர்கள் சுமார் பதினையாயிரம் இருந்தால் மிக அதிகம். பல லட்சம் ஓட்டர்களிடையில் இந்தப் பதினையாயிரம் பேர்கள் தங்களது ஓட்டு பலத்தினால் பார்லிமெண்டுக்கு ஒரு அங்கத்தினரைக்கூட தேர்ந்தெடுத்து அனுப்ப முடியாதென்பது தெளிவானது. இதற்காகவே அவர்களுக்குக் குறைந்த பட்சம் நான்கு ஸ்தானங்களையாவது நிச்சயப்படுத்த டில்லி ஒப்பந்தத்தின்படி பதிவுப் பிரஜைகளை ஒரு தனித் தொகுதியில் வைப்பதென்றும் அவர்களுக்கு நான்கு ஸ்தானங்களை ஒதுக்கிக் கொடுப்பது என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால், அந்த ஏற்பாட்டை இலங்கை அரசாங்கம் ஒருதலைப் பட்சமாக நிராகரித்துவிட்டது. இன்றுள்ள நிலைமையில் இந்திய வம்சா வழியினர் தேர்தலில் போட்டியிட்டு பார்லிமெண்ட் ஸ்தானத்தைப் பெறுவதென்பது துர்லபமானது. இதற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒரு புதிய நடவடிக்கையைக் கையாளவிருக்கிறது. 1949-ம் வருடத்திய பிரஜாவுரிமைச் சட்டத்தின்படி இலங்கையில் பிறந்த ஒருவரின் தாயோ அல்லது தகப்பனோ இந்நாட்டில் பிறந்திருந்தால் அவருக்கு இலங்கைப் பிரஜையாகும் உரிமையுண்டு. இலங்கைத் தோட்டங்களிலுள்ள பல லட்சம் இந்திய வம்சாவழியினர் இச்சட்டத்தின்படி இலங்கைப் பிரஜைகளாக முடியும். இம்மாதிரிச் சட்டம் ஒன்று இருந்தும், தோட்டத் தொழிலாளர் இதுவரையில் அதைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டனர். தோட்டத் தொழிலாளரிடையில் இலங்கையின் வம்சா வழிப் பிரஜைகளாகக் கூடியவர்களைக் கண்டுபிடித்து அவர்களை இந்நாட்டுப் பிரஜைகளாக்கவும் ஓட்டர்களாக்கவும் ஸ்ரீ தொண்டமான் ஆதரவிலுள்ள காங்கிரஸ் இப்பொழுது நடவடிக்கையெடுத்து வருகிறது. இதற்காக ஒரு விசேஷக் கமிட்டியையும் ஸ்ரீ தேசிக ராமானுஜத்தின் தலைமையில் காங்கிரஸ் நியமித்திருக்கிறது.

## காங்கிரஸ் ஒற்றுமை

இதற்கிடையில் காங்கிரஸிலே தொண்டமான் காங்கிரஸென்றும், அஸீஸ் காங்கிரஸென்றும் இரு கோஷ்டிகள் இருந்து வருவது, இந்திய வம்சா வழியினருக்குப் பல விதங்களிலும் துன்பம் விளைவித்து வருவது யாவரும் அறிந்ததே. இந்தப் பிளவை நீக்கி இரு ஸ்தாபனங்களையும் முன்போல ஒன்றாக இணைக்க இப்பொழுது முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. சென்ற வாரம் அஸீஸ் காங்கிரஸின் காரியக் கமிட்டி கூடியபொழுது இதைப்பற்றி பல அங்கத்தினர்கள் பேசியதாயும் ஒத்துப் போக வேண்டுமென்ற விருப்பத்தைப் பலரும் வெளியிட்டதாயும் அறியப்படுகிறது.

★

## கம்யூனிஸ்ட் ஸர்க்கஸ்!



# காற்று வாக்கிலே!

### வந்து விட்டது ராம ராஜ்யம்!

பாரத் புண்ணிய பூமியில் ராம ராஜ்யம் வெகு விரைவில் ஏற்பட்டுவிடும். சற்றும் சந்தேகமில்லை. அவசர அவசரமாகக் காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. பலமான அஸ்திவாரம் போடும் பெருமை சென்னைக்கே கிட்டியிருக்கிறது. 'தமிழனென்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா!'

'வயது வந்தவர்களுக்கே' என்று நிர்ணயிக்கப்பட்டுள்ள சினிமா படங்களை ஞாயிற்றுக்கிழமை அல்லது இதர பொது விடுமுறை நாட்களைத் தவிர, மற்ற தினங்களில் பகல் காட்சியின்போது திரையிடலாகாது என்று சென்னை சர்க்கார் புது உத்தரவு பிறப்பித்திருக்கிறது. பொருளாதார இன்னல்கள் நீங்க நாட்டில் தார்மிகச் சூழ்நிலை வளர வேண்டும் என்று அண்மையில் அபிமான அமைச்சரொருவர் அறிவுறுத்தினார்.

நம் ஊர் தியேட்டர் முதலாளிகளுக்கு இதெல்லாம் தெரிகிறதா? பெரிய போலீஸ் அதிகாரியிடம் தூது. விண்ணப்பம் சமர்ப்பித்து முறையீடு. தர்ம நியாயத்தில் நாட்டமில்லாவிடினும் அரசியல் சட்ட நுணுக்கங்களைக் கரைத்துக் குடித்தவர்கள்; ஆகவே உரிமைக் குரல். சர்க்கார் உத்தரவு ஆங்கிலப் படங்களையே அதிகம் பாதிக்கும்; இப்படிப் பாரபட்சம் காட்டுவது சரியா என்று வாதம். யார் இவர்களை ஆங்கிலப் படங்களைக் காட்டச் சொன்னது? ஒழிக, ஆங்கிலம்!

ரொம்பவும் அவசரமான, அவசியமான காரியம். விலைவாசி ஏற்றம் கண்டு மக்கள் குமுறுகின்றனர். என்கும் கிளர்ச்சி. பண வீக்கம் ஏற்பட்டு விலைவாசிகள் உயரும் என்று தெரிந்திருந்தும் விலைகள் குறைய வழி தெரியாது திகைப்பு. உணவுப் பொருள்களில் கொள்ளை லாபமடிப்போரையும், பதுக்கி வைப்போரையும் தட்டிக் கேட்க சக்தியின்றித் தவிப்பு. இரண்டு ஐந்தாண்டு திட்டங்களுக்குப் பின்னும் இந்த நிலையா என்று பாமரரின் வேதனை விம்மல். தற்போது ரூபாயின் மதிப்பு பழைய கால் ரூபாயின் அளவுகூட இல்லையே என்று நிபுணர்களின் ஓலம். அவைபற்றிக் கவலைப்படுவானேன்? அவசரமில்லை.

அடிகளார் வருந்துகிறார். நாட்டின் நலிவுகள் நீங்க, மக்கள் வாழ்வு வளம் பெற அன்று நாம் சுதந்திரம் கோரினோம்; ஆனால், இன்று பெரிய முதலாளிகள் ஏழைகளைச் சுரண்டிச் சுகமாக வாழ்கின்றனர்; கட்டுப்படுத்தவில்லையே என்று மனம் வெதும்புகிறார். என்ன அவசரம்? ஏழைகள் தானாகவே ஒழிந்துவிடுவார்கள்

'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' [illegible] தர்மோபதேசம் செய்யும் தலைவர்கள் அதற்கேற்ப நடந்துகொள்கிறார்களா? பஞ்சை பராரிகளுக்கும், கால் வயிற்றுக் கஞ்சிக்கு வழியில்லாதவருக்கும்தானே உபதேசம் செய்கிறார்கள்? மாடமாளிகை கட்டி வாழ்பவரிடமும் எதையும் விட்டுக்கொடுக்க வற்புறுத்தவில்லையோ? சென்னை சர்க்கார் அப்படியல்ல! ஏழைப் பிள்ளைகளின் நலனில் பணக்கார சினிமா தியேட்டர்காரர்களின் தலையிலேயே கை வைத்துவிட்டது. சபாஷ்!

கல்வியின் தரம் குறைந்துவிட்டது. கல்வி ஸ்தாபனங்களில் கோளாறுகள் பெருகிவிட்டன. ஆசிரியர்கள் அரசியலில் கலந்துகொள்கிறார்கள். மாணவர்கள் அரசியலில் தலையிடக்கூடாது என்று ஊசறிய உபதேசம் செய்த போதிலும், அரசியல்வாதிகள் குறுக்கிடுவதில் குறைவேயில்லை. கல்வித்துறை அறிஞர்கள் அலறுகிறார்கள். அபயமளிக்க விரைந்திருக்கிறது அ-

சாங்கம்! மாணவர்களைப் பாதுகாக்கவே தாக்கீது. இனி என்ன கவலை?

'வயது வந்தவர்களுக்கே' என்ற முத்திரை தாங்கிய படங்களைப் பார்ப்பதில் வயது முதிராத மாணவர்களுக்கே அலாதியான ஆசை. வாஸ்தவம்தான். ஆனால், ஒரு காட்சியைத் தடை செய்வதால்மட்டும் அவர்கள் அப்படங்களைப் பார்ப்பதை தடுத்துவிட முடியுமா? ஒரு காரியத்தைத் தடை செய்தால் அதில் உடனே ருசி அதிகரிப்பது தானே மனித இயற்கை? வகுப்புகளுக்கு மட்டம் போட்டுச் சினிமா பார்ப்பது பழக்கமாகிவிட்டால், மற்ற பகல் காட்சிகளுக்குப் பஞ்சமிருக்கப் போவதில்லையே? எல்லா பகல் காட்சிகளையும் சர்க்கார் தடை செய்துவிடவில்லையே? பெரியவர்களுக்குமட்டும் பிரத்யேகமான படங்களையும் பள்ளிக்கூடமில்லாத நாட்களில் மாணவர்கள் கண்டு மகிழலாமல்லவா? சென்னையில் எத்தனை கொட்டகைகளில் இந்தத் தடையைக் கண்டிப்பாக அமுலாக்குகிறார்கள்? பிஞ்சு உள்ளங்கள் பேதலிக்கக் கூடாது என்பது நோக்கமென்றால் எவ்விதத் தடையுமின்றி நடமாடும் நமது தமிழ், இந்திப் படங்கள் பெரும்பாலானவற்றில் இனக் கவர்ச்சியும், அரை நிர்வாண உடையும், ஆபாசக் காட்சிகளும் மலிந்திருக்கின்றனவே? அவற்றையெல்லாம் சர்வ சுதந்திரமாக ஊரில் உலாவ விட்டுவிட்டு, மாணவர்கள் ஒழுக்கத்தையும், படிப்பையும் பாதுகாக்க முயற்சிப்பது பலிக்குமா? வெங்காயச் சருகு சேலையணிந்த 'திடீர் காதலிகள்' இளைஞரை வருந்தியழைத்துப் 'பருவப் பசி' தீர்ப்பதையே விசேஷ அம்சமாகக் கொண்டிருக்கும் 'முற்போக்கு' ஏடுகள், உடலழகையெல்லாம் பகிரங்கமாகக் காட்டி நிற்கும் அழகு மங்கையரின் எழிலோவியங்களைத் தாங்கி நிற்கும் தாள்கள், நட்சத்திரங்களின் அந்தரங்க வாழ்க்கையை அம்பலப்படுத்துவதாகத் தம்பட்டமடித்துவரும் சஞ்சிகைகள் ஆகியவற்றை அடக்கியொடுக்க வழி தெரியவில்லை. சினிமா கொட்டகைகளிலேயே பல்லாண்டுகளாக நடக்கும் டிக்கட் பதுக்கல், கள்ள மார்க்கெட்டை ஒழித்துக் கட்டவக்கில்லை. அழுக்கும், அசுத்தமும் நிரம்பி, ஜனங்களின் ஆரோக்கியத்துக்கே ஆபத்து விளைவிக்கும் சினிமா கொட்டகைகளை இன்னமும் சீர் திருத்த முடியவில்லை. தெற்கு, வடக்கு என்று பிரித்துப் பேசுவது கூடாது என்று கண்டித்தும், டில்லியிலிருந்து வரும் செய்திப் படங்களில் தென்பிராந்திய நிகழ்ச்சிகளுக்கு உரிய இடம் வாங்கித் தர இன்னமும் இயலவில்லை. தாங்கள் தங்கும் விடுதிகளில் வசதிகள் போதவில்லை என்று மாணவர்கள் கொந்தளித்து வகுப்புகளுக்குப் போகாமல் உண்ணாவிரதம் செய்ய முற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை. கிடப்பதெல்லாம் கிடக்கட்டும் என்று ஒரு தினுசான பகல் ஆட்டத்துக்குமட்டும் அவசர அவசரமாகத் தடை. பெரியாரிடமும், பெரியவரிடமும் பாராட்டை விரும்பினால் ஒரு வழியாகச் சினிமாக்களுக்கே தடை விதித்து விடுவதுதானே? ஆனால், 'சினிமா கட்சி'யின் ஆதரவை நாடுபவர் இந்த விஷயத்திலும் திடீர் 'பிரேக்' போட்டால்?

மாணவர்களின் ஒழுக்கத்தைப் பாதுகாப்பதே நோக்கமென்றால், அவர்களிடை மத நம்பிக்கையை வளர்க்க வேண்டும். புராண, இதிகாசங்களும், மதக் கோட்பாடுகளுமே நமது சீலத்தைப் பாதுகாக்கின்றன. ஆனால், சமயச் சார்பிலா நமது அரசாங்கம் செய்யக்கூடிய காரியமா இது? ஒரு சினிமா காட்சியைத்தான் நிறுத்த முடியும். மதத்திலும், சம்பிரதாயத்திலும் நம்பிக்கையில்லாவிடில், நமக்குத் தற்போதுள்ள ஒழுக்கமும் அழிந்துவிடும். வாழ்க்கை முறையும் கெட்டுவிடும். ஆனால், பல சினிமா படங்கள் அவற்றை இகழ்ந்து, பழித்து, ஏளனம் செய்வதையே குறிக்கோளாகக்கொண்டிருக்கின்றன. படத் தணிக்கையாளரின் 'கழுகுப் பார்வை'யிலிருந்தும் அவை எப்படியோ தப்பிவிடுகின்றன. ஆனாலுமென்ன? அஸ்திவாரம் போட்டாகிவிட்டது. இனிக் கட்டிடம் தானாகவே வளரும். வந்துவிட்டது ராம ராஜ்யம்!

—அரட்டை.



# நாடகமும் நாட்டியமும்

## மனோஹருக்குப் பட்டம்

திருவல்லிக்கேணி ஸ்ரீ நடராஜா கல்விக் கழக கட்டிட நிதிக்காக இலங்கேஸ்வரன் புகழ் மனோஹர் குழுவினர் 'உபகுப்தன்' நாடகத்தை நவம்பர் 22-ந் தேதி என். கே. டி. கலா மண்டபத்தில் நடத்தினர். ஸ்ரீ மனோஹரின் கலைத் தொண்டைப் பாராட்டி அவருக்கு அன்றைய தினம் 'கலைமணி' என்கிற பட்டத்தை சட்ட மன்றத் தலைவர் டாக்டர் யு. கிருஷ்ண ராவ் கழகத்தின் சார்பாக வழங்கினார்.


டாக்டர் மு. வரதராசனார், ஜெமினி கணேசன் ஆகியோரும் மனோஹரின் கலைத் திறமையைப் புகழ்ந்துரைத்தார்கள். கழக கட்டிட நிதிக்காக ஸ்ரீ மனோஹர் ரூ. 201 நன்கொடையும் அளித்தார்.

## சரஸ்வதி கலை மன்ற விழா

சிந்தாதிரிப்பேட்டையிலிருக்கும் சரஸ்வதி கலை மன்றத்தின் முதல் ஆண்டு விழா, வெகு சிறப்பாக இந்த வார ஆரம்பத்தில் கொண்டாடப்பட்டது. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி ஸ்வாமி சபா பிரத்தியேகப் பந்தலில் விழாவையொட்டி நவம்பர் 22-ந் தேதி 'நான் வாழ வேண்டுமா?' என்கிற நாடகமும், மறுநாள் 'நான் வாங்கிய கணவன்' என்கிற நாடகமும் நடைபெற்றன.

முதல் நாடகம் ஓர் துப்பறியும் சோகக் கதை. எழுதியவர் ஜே. கே. எஸ். நந்தகுமார்.

ஜெமினி கணேசன் அந்நாடகத்துக்கு வந்திருந்தார். 'கல்யாணப் பரிசு' சினிமாவில் சிறப்பாக நடித்ததற்காக



மனோஹருக்குப் பட்டமளித்தனர் நடராஜா கல்விக் கழகத்தினர்.

வதி படம் ஒன்றை பரிசளித்தது. அமெச்சூர் நாடகத் துறையில் மன்றம் புரிந்து வரும் சேவையை அவர் பாராட்டினர்.

இரண்டாவது நாடகத்தின் கதை, வசனகர்த்தா எஸ். கோபாலன். இந்த நாடகம் மிகவும் தமாஷாக இருந்தது.

மன்றத்தின் தலைவர் ஸ்ரீ பி. என். துரைஸ்வாமி பிள்ளை தலைமை வகித்துப் பேசுகையில், பொது மக்கள் மன்றத்தை ஆதரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இரண்டு நாடகங்களையும் டைரக்ட் செய்த ஸ்ரீ பி. ராமஸ்வாமியும், ஆசிரியர் ஸ்ரீ ஜே. கே. எஸ். நந்தகுமாரும் இரண்டாம் நாளன்று பாராட்டப் பட்டனர்.

## கே. ஆர். கீதாவின் நடனம்

குமாரி கே. ஆர். கீதா பரத நாட்டியத் துறையில் மளமளவென்று முன்



னணிக்கு வந்து சோபித்துக்கொண்டிருக்கிறார். அவரது கச்சேரி தியாகராய நகர் வாணி மஹாலில் நவம்பர் 21-ந் தேதி நடந்தது.

நிகழ்ச்சியின்போது பல தடவை அவர் 'அப்ளாஸ்' பெற்று வெகு அழகாக ஆடினார். பந்தநல்லூர் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் சிஷ்யை அவர்.

—ஸஞ்சாரி.

## முல்லை ராஜா

வ. உ. சி. கலா மன்றத்தார் நவம்பர் 6-ந் தேதி மாலையில் சினிமா நடிகர் ஸ்ரீ ஈ. ஆர். சகாதேவனின் முன்னிலையில் சென்னை மியூசியம் தியேட்டரில் 'முல்லை ராஜா' என்ற சரித்திரக் கற்பனை நாடகத்தை நடித்தனர். கதை—வசனம், பாடல்கள், பயிற்சி அத்தனையும் ஏற்றவர் ஸ்ரீ பி. வேணுகானம். கதாநாயகனை ராஜேந்திரன் பாகம் ஏற்ற ஸ்ரீ சி. ஆர். பாஸ்கரன் திறம்பட பேசி நடித்தார். வேஷப் பொருத்தம் கச்சிதமாக இருந்த அவரது நடிப்பு காதல் கட்டத்தில் சோபிக்கவில்லை. ஆனால் தாயிடம் கொஞ்சும் கட்டத்தில் தன் முழுத் திறமையைக் காட்டிய அவர், வீரம் ததும்பும் கட்டத்திலும் சிறப்பாக நடித்தார். பாண்டியராக நடித்த கிருஷ்ணஜிக்கு நல்ல உடல் கட்டும் வேஷப் பொருத்தமும் இருந்தாலும், வசனங்களைத் தெளிவாகப் பிழையின்றி அவர் உச்சரிக்காதது குறை. மற்றும் விதூஷகராக நடித்த ராஜேந்திரன், சிங்க முகனாக நடித்த சக்திவேலப்பா, தளபதியாக நடித்த மதனை ஆகியோரும் தத்தம் பாகங்களைக் கூடியவரை திறம்பட நடித்து நாடக வெற்றிக்குப் பெரிதும் உதவினர். தாயின் பாகமேற்ற ஸ்ரீமதி தனலக்ஷ்மியின் நடிப்பு சிறப்பாக இருந்தது. முல்லையாக நடித்த ஸ்ரீமதி ஜானகியின் நடிப்பு காதல் கட்டத்தில் சோபித்த அளவுக்குச் சோகக் கட்டத்தில் எடுபடவில்லை. காந்திமதி—சேதுராமனின் நகைச்சுவை விருந்து ரசிக்கும்படி அமைந்திருந்தது.

---

கல்யாணமான புதிதில் கணவன் பேச, மனைவி கேட்கிறாள். அடுத்த ஆண்டில், அவள் பேச, அவன் கேட்கிறான். அதற்கும் அடுத்த ஆண்டிலோ, இருவரும் பேச, அக்கம்பக்கத்தார் கேட்கிறார்கள்.

—சிவம் மயூரமழி

★

## தில்லி நகர்த் தபால்


★

## சிவாஜிக்கு வரவேற்பு

பரதனாகவும் வீரபாண்டிய கட்டபொம்மனாகவும் மக்கள் மனத்தில் அழியா இடம் பெற்றுவிட்ட பிரிய நடிகரை—தமிழகத்தின் தவப் பெரும் நடிகர் திலகத்தை தில்லித் தமிழ்ப் பெரும் மக்கள் நேரில் கண்டு மகிழ்ந்தனர். சாண்டில்யனின் 'ஜீவ பூமி' படப் பிடிப்பிற்கென பதேபூர் சிக்ரிக்குச் சென்று சிவாஜியையும் மின்னியம்மா புகழ் சாவித்திரி கணேசையும் தில்லி அன்பர்கள் நவம்பர் பதினெட்டாந் தேதியன்று சப்ரூ மாளிகையில் கண்டு மகிழ்ந்தனர். 'சௌத் இந்தியன் தியேட்டர்ஸார்' நடிகர் திலகத்தின் முன்னிலையில் தேவனின் படைப்பு 'கோமதியின் காதலன்' நாடகத்தைப் பெருமையுடன் நடத்திக் காட்டி வெற்றி கண்டனர்.

டைய மொழிப் பற்றையும், கலைப் பணியையும் சிவாஜி கணேசன் பாராட்டினார். ஆயிரம் மைல்களுக்கு அப்பால் வந்தும் தமிழ்க் கலைகளை ஆர்வத்துடன் பேணிவரும் மக்களின் ஊக்கத்தைப் போற்றினார். தில்லியில் தமிழ்ப் படங்களை மாலை நேரங்களில் பார்க்கவும், நாடகங்களை எல்லா வசதிகளுடன் நடத்தவும் தகுந்ததான தனியொரு கட்டிடம் மெத்த அவசியமே என்று அவர் கூறினார். 'தியேட்டருக்கென தகுந்த மனையை வாங்குங்கள்; நானும் என்போன்ற கலைஞர்களும் இயன்ற உதவி அனைத்தையும் செய்வோம்' என்று அவர் சொன்னபோது, சபையில் பலத்த கரகோஷம் பல நிமிஷநேரம் நீடித்திருந்தது.

அடுத்துப் பேசிய சாவித்திரி கணேஷ் தில்லியில் கலைப்பணி செய்வோரைப் பாராட்டி, தியேட்டர் கட்டுவதற்கு, தாமும் உதவுவதாகக் கூறினார். 'குட்டித் தமிழகத்தில் இருப்பதைப்போன்ற உணர்வுதான் எனக்கு ஏற்படுகிறது' என்று சாவித்திரி கூறினார்.



டில்லியில் சிவாஜி கணேசன் தலைமையில் சௌத் இந்தியன் தியேட்டர்ஸ் நடத்திய 'கோமதியின் காதலனி'ல் ஒரு காட்சி இது.

துணை மந்திரி ஸ்ரீ எஸ். வி. ராமசாமி வரவேற்றுப் பேசுகையில், சிவாஜியின் வள்ளல் தன்மையைப் பாராட்டினார். ஸ்ரீ என். சீனுவாசன் தியேட்டர் சார்பில் வரவேற்புரை நிகழ்த்தினார். காரியதரிசி ஸ்ரீ எஸ். வி. ராமனும் ஸ்ரீ நாகரத்தினமும் சிவாஜியை வரவேற்று உபசரித்தனர். டைரக்டர் சுப்புடு நடிகர்களை அறிமுகம் செய்வித்தார்.

சிவாஜியும் சபையினரும் சுமார் இரண்டரை மணிநேரம் வயிறு குலுங்கக் குலுங்கச் சிரித்து மகிழ்ந்தனர். எல்லா நடிகர்களும் மிகச் சிறப்பாக நடித்தனர். ஸ்ரீ கணேசன் குணசித்ர பாத்திரம் ஏந்தி சிறப்பாக நடித்த பூர்ணம் விச்வநாதனை குறிப்பாகப் பாராட்டினார். கோபு, மாப்பிள்ளை, ஜெயராமன், குமார், பாசு முதலானோர் மிகச் சிறப்பாக நடித்தனர். ப்ராணநாதனின் தமக்கையாக வந்த எல்லோருடைய ஒருமனதான பாராட்டைப் பெற்றவர், பாலசந்திரன். போதிய வசதியற்ற 'சப்ரூ மாளிகை' அரங்கில் சற்றுகூடத் தாமதமின்றிக் காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக வேகமாக ஓடும்படிச் செய்த பெருமை ராஜகோபாலன், ராவ், ஈஸ்வரன் முதலான அன்பர்களைச் சாரும்.

நடிகர் திலகம் சப்ரூ மாளிகைக்கு வருமுன்னர் லோதி காலனியில் உள்ள மதராஸிப் பள்ளிக்கூடத்திற்கு விஜயம் செய்தார். பார்லிமெண்டரி காரியதரிசி ஸ்ரீ ஜீ. ராஜகோபாலன் முதலானோர் சிவாஜியை வரவேற்று உபசரித்தனர். பள்ளி மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்துகொண்ட வரவேற்பில் சிவாஜி 'நாட்டின் நல்ல பிரஜைகளாக விளங்குவதற்கு நன்றாகப் படித்து அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்' என்றார். தில்லித் தமிழரின் கல்விப் பணியைப் பாராட்டினார். பள்ளிக்கூட நிதிக்கு, தம்மால் இயன்ற உதவியை அளிப்பதாகவும் ஸ்ரீ கணேசன் கூறினார்.

## ஆர். வேங்கடராமனின் உருவப்படத் திறப்பு

தலைநகரில் லோதி காலனியில் பிரம்மாண்டமாக எழுந்து நிற்கும் தமிழ்ப் பள்ளிக்கூடத்தைக் காணும் போதெல்லாம் தென்னாட்டினர் பெருமிதங்கொள்வதுண்டு. தமிழரின் பெரிய சாதனையான இந்தக் கட்டிடத்தைக் கட்டித் தருவதில் உள்ள பெருமை, பெருமளவு அப்போது மதராஸிக் கல்விக் கழகத்தின் அக்ராசனராயிருந்து பெரும்பணி செய்த ஸ்ரீ ஆர். வேங்கடராமனைச் சாரும். தலைநகரில் தமிழ்க் கல்வி இயக்க வரலாற்றிலே ஸ்ரீ வேங்கடராமனுக்கு சிறப்பிடம் ஒன்று உண்டு. நன்றிப் பெருக்குள்ள தில்லித் தமிழர் ஸ்ரீ ஆர். வி. யின் உருவப் படமொன்றை வைத்துப் போற்றினர். மத்ய அரசாங்க மந்திரி டாக்டர் சுப்பராயன், படத்தைத் திறந்துவைத்தார்.

## கலை நிகழ்ச்சி

தில்லி நாட்டியக் கலாலயத்தினர் ஆந்திர வனிதா மண்டலியின் உதவிக்கென சென்ற ஞாயிறு 29ந் தேதி யன்று விமரிசையாக நடத்திய 'பார்வதி புனர் ஜன்மம்' என்ற நாட்டிய நடனத்தைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். உபராஷ்டிரபதியின் முன்னிலையில் நடந்த இந்த நிகழ்ச்சி, கலை விருந்தாக அமைந்திருந்தது. கலாலயத் தலைவி ஸ்ரீமதி கிரிஜா பக்கிரிசாமியையும் மற்றையோரையும் டாக்டர் ராதாகிருஷ்ணன் புகழ்ந்துரைத்தார். குமாரி கோமதியும் ஸ்ரீமதி காமாட்சி குப்புஸ்வாமியும் அருமையாகப் பதங்கள் பாடினார்கள்.

பல்கலைக் கழகத்தில் உள்ள தமிழ், ஆந்திரம், மலையாளம், கன்னட மொழிச் சங்கங்கள் ஒன்று சேர்ந்து நவம்பர் 20ந்தேதியன்று கதம்ப நிகழ்ச்சி ஒன்றை நடத்தினர். வினயநகரில் ஆர்வமிக்க இளைஞர்கள் ஒன்று கூடி கந்தர்கலை மன்றம் என்பதாக ஒன்றை நிறுவியுள்ளனர். சமீபத்தில் அவர்கள் நிதி இலாகா துணைக் காரியதரிசி ஸ்ரீ பாலகிருஷ்ணன் தலைமையில் கிழக்கு வினயநகரில் கதம்ப நிகழ்ச்சி ஒன்றை நடத்திக் காட்டினர்.

# குடும்பக் கூட்டம்

"ஸ்ரீவத்ஸன்"

இந்தக் குடும்பத்தின் வருடாந்தரக் கூட்டம் இன்று மாலை ஆறு மணிக்கு ஊஞ்சலுக்கு அடுத்த தாழ்வாரத்தில் கூடும். எல்லா அங்கத்தினர்களும் கூட்டத்திற்கு வரும்படியாக அழைக்கப்படுகிறார்கள்.

வரப்போகும் வருடத்திற்கு தலைவர், காரியதரிசி முதலியவர்கள் தேர்ந்தெடுக்கப்படும்.

அறிக்கையைப் பார்த்தவர்கள் பார்த்ததற்கு அடையாளமாக அறிக்கையில் கையெழுத்திடவும்.

இப்படிக்கு

காரியதரிசி,

சாம்பு.

அறிக்கையைப் படித்துத் தெரிந்து கொண்டோம். மிஸஸ் சாம்பு, கணபதி, வாலாம்பாள், சுசீலா, வனஜா, நிர்மலா,



பாலு.

2.

சாயங்காலம். ஊஞ்சலுக்கு அடுத்த இடம். கூட்டம் ஆரம்பமாகிறது.

காரியதரிசி சாம்பு:— முதலில் கடவுள் வணக்கம். நிரஞ்சனாவை கடவுள் வணக்கம் பாடும்படி அழைக்கிறேன்.

வனஜா:— அப்பா, இதை நான் ஆட்சேபிக்கிறேன். போனவருடம் வருடாந்தரக் கூட்டம் நடந்தபோது நிரஞ்சனு கடவுள் வணக்கம் என்று சொல்லி, 'ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும்' என்று பாடினுள். அதன் பலன் நம் குடும்பத்தில் ஒரு பெரியவர், எட்டு வயதுப் பெண், கைக் குழந்தை குளோ ஸாகிவிட்டார்கள். வேறு யாராவது பாடலாம் நிரஞ்சனுவைத் தவிர.

மிஸஸ் சாம்பு:— நானே பாடி விடுகிறேன் (தொண்டையை கனைக்கிறாள்)

சுசீலா, வனஜா, நிர்மலா:— அம்மா பாடுவதென்றால் கூட்டத்தைக் கலைத்து விடலாம். நல்ல சுப வேளையில் அம்மா பாடி வழக்கமில்லை. இதுவே அனுதாபக் கூட்டமாக இருந்தால், அம்மா பாடுவது பொருத்தமாக இருக்கும். சுபத்துக்கும் அம்மா பாட்டுக்கும் வடதுருவமும் தென் துருவமும்தான்.

பாலு:— கடவுள் வணக்கம் சுத்த நான்சென்ஸ். வெள்ளைக்காரா கூட்டம் ஆரம்பிக்கச்சே கடவுள் வணக்கமா பாடறு?

காரியதரிசி:— நிரஞ்சனுவே பாடட்டும்.

வனஜா:— 'அப்பா மாண்டாயோ' பாடிவிடாதே நிரஞ்சனு.

கடைசியாகக் கடவுள் வணக்கம் பாடப்படுகிறது.

காரியதரிசி சாம்பு:— அடுத்த நிகழ்ச்சி சென்ற வருடத்தில் காலமானவர்களுக்கு அனுதாபம் காட்டுவது. முதலில் அண்ணு மனைவி சஞ்சலா இறந்தாள். அதற்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு எல்லோரும் இரண்டு நிமிடம் எழுந்து நிற்கவேண்டும்.

சாம்புவின் தாயார்:— என்னுலே முடியாது. இரண்டு காலும் விட்டுப்போறது. அதிலேயும் சஞ்சலா உசிரோடே இருக்கச்சே மாமியார் ஆச்சேன்னு என்னைக் கண்டா எழுந்திருப்பதுகூட இல்லை. அவளுக்காக நான் ஏன் எழுந்திருக்கணும்? மாமியாரைக் கண்டால் எழுந்திருக்காத மாட்டுப் பெண்ணுக்காக நான் எழுந்திருக்கமாட்டேன்.

(சாம்புவின் தாயாரைத் தவிர மற்றவர்கள் நிற்கிறார்கள்.)

சாம்பு:— அடுத்த அயிட்டம் போன வருடத்தில் பிறந்து நம் குடும்பத்தில் மெம்பர்களானவர்களுக்கு வரவேற்பு கூறுவது. அதன்படி கைக்குழந்தை கலிவரதனுக்கு வரவேற்பு கூறுகிறோம். போன வருடம் வரவு ரூ. 1800—00 செலவு ரூ. 3000.

வனஜா:— செலவு அதிகமாவானேன்? யார் ஜவாப்தாரி? குடும்பத்தில் யாரால் செலவு அதிகம் ஏற்பட்டது? விவரம் தேவை.

சாம்புவின் தாயார்:— எல்லாம் உங்கம்மாவால்தான் குடம் குடமா காப்பி, பெட்டி பெட்டியா புடவை, ராக் ராக்கா எவர்ஸில்வர்! செலவு விஷம்மாதிரி ஏறுதா?

சாம்புவின் மனைவி:— ஆமாம். என்னுலேதான் செலவு. மழைத் தண்ணி மாதிரி ஒருவாய் காப்பி நான் சாப்பிடறது உங்களுக்குக் கண்ணை உறுத்துகிறது. அதையும் இன்னியிலேந்து விட்டுவிடுகிறேன்.

வனஜா:—எங்கே விட்டுடறே? வயத்துக்குள்ளேயா?

சாம்பு மனைவி:— என்னுலெ செலவில்லை. மாமியார்தான் ரிஷி பஞ்சமி விரதம், முனி சஷ்டி விரதம்னு ஏக செலவு வைக்கிறார். மாமனார் டன் கணக்கில் பொடியை உறிஞ்சுகிறார். அப்பா சினேகிதருக்கு டிபன் தானம் செய்யறா. ஏன் செலவு அதிகமாகாது?

சாம்பு அப்பா:— எல்லாத்தையும் விட்டுட்டு, என் மூக்கைப் பிடிப்பானேன்? ஏற்கெனவேயே எனக்கு சப்பை மூக்கு! பொடி போடணும் போலிருந்தால், மிளகாய்ப் பொடி அரைக்கும் மிஷன் அருகில் போய் நின்னுட்டு வரேன்.

வனஜா:— சரி; இது விஷயம் முடிவாகல்லே. அடுத்த அயிட்டம் பார்க்கலாம்.



சாம்பு:— போனவருடம் ஸ்தல யாத்திரைக்கு ஒருவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. இந்தத் தடவையும் ஒருவருக்குக் கொடுக்கலாம். யாருக்குக் கொடுப்பது?

சாம்புவின் தாயார்:— ஏண்டா சாம்பு, உன்னைப் பெத்து வளர்த்ததற்கு ஒரு தடவை ராமேஸ்வரம் போயிட்டுவர எனக்கு அனுமதி கொடு. நான் போயிட்டு வரேன்

சாம்பு மனைவி:— வயதான காலத்திலெ ரயில் பிரயாணம் போய் எங்கேயாவது விழுந்து வைக்கவா? தனுஷ்கோடியிலெ என் தங்கை பிரசவத்துக்கு இருக்கா. நான் போயிட்டு வரேன். பேசாமல் ஆத்தோடே கிடங்கோ.

சாம்புவின் தாயார்:— என்னைப்படுத்தி எடுப்பதற்கு நீ ரொம்ப அனுபவிப்பெ. உனக்கு இவ்வளவு பொறுமைத்தனம் ஆகாது.

பாலு:— என்ன ஸ்தல யாத்திரை வேண்டியிருக்கு? இந்த அயிட்டத்தை ரத்து செய்தால் செலவு மிச்சம்.

சாம்பு:— ஒருத்தரும் போகவேண்டாம். நான் போய்விட்டு வரப் போகிறேன்

சாம்பு மனைவி:— எனக்குத் தெரியாதா உங்க ஆகடி. கிராமத்திலே போய் சாட்டாடிப் பணத்தைத் துலைச்சுட்டு க்ஷேத்ராடனம் செய்ததாகச் சொல்லுவேள். பன்றிக் குட்டிக்கு சங்கராந்தியா,

சாம்பு:—சரி; இந்த விஷயமும் முடிவாகவில்லை. அடுத்த அயிட்டம் நகை தட்டு செய்வது. இந்த வருடம் நகை தட்டு செய்யக்கூடாது என்பது அபிப்பிராயம். செலவு குறையும்.

சாம்பு மனைவி:— வருடா வருடம் இங்கே செட் செட்டாகப் பண்ணி வாழல்லியா? செலவைக் குறைக்கணுமாமே!

பாலு:— வருடா வருடம் நகை பண்ணுகிறோமில்லையா? இந்த வருடம் நகைகளை அழித்தால் என்ன? இப்போ



"நடுரோட்டிலே நின்று பிச்சையெடுத்தது குற்றமாச்சே?"

"நான் பிச்சை எடுக்கல்லீங்க! என் குடும்ப செலவுக்காக நன்கொடை கேட்டேன் அவ்வளவு தானுங்க!"

நாட்டில் அழிப்பு இயக்கத்துக்குத் தானே மவுஸ்? அம்மா நகைகளில் சிலவற்றை அழிக்கலாம்.

சாம்பு மனைவி:— நீ எனக்கு நகை பண்ணிப் போடல்லே. உங்கப்பா பண்ணிபோட்டது. நீ பேசவேண்டாம். என் நகையைத் தொட்டால் தெரியும் சேதி!

சாம்பு:— சரி; இந்த விஷயமும் முடிவாகவில்லை, வர வருடத்தில் என்னென்ன சஞ்சிகைகள் வாங்குவது?

வனஜா, நிரஞ்சனு:— ஏராளமாக சிறுவர் பத்திரிகைகள் வருகிறது. அரை டஜனுவது வரவழைக்கணும்.

சாம்பு தாயார்:— ஏண்டாப்பா யாரோ பெரியவா வியாசர் விருத்து எழுதி மலிவா தாராளமே! அதை வாங்கு. மத்தியான வேளையில் படிச்சு சொல்

லைச் சொல்லி கேட்கிறேன் பேர்ற வழி க்குப் புண்ணியம் உண்டு.

வனஜா, நிரஞ்சனா, பாசு:—பாட்டிக்கு புஸ்தகம் வாங்குவதை எதிர்க்கிறோம். எங்களைப் படிக்கச் சொல்லி நச்சரிப் பாள்.

சாம்பு:— இதுவும் முடிவாகவில்லை. அடுத்த விஷயம் வண்ணான் செலவைக் குறைப்பது.

சாம்பு மனைவி:— முதல்லெ உங்க வேஷ்டியை நீங்க தோய்க்க ஆரம்பி யுங்கோ. என் புடவையை வண்ணா னுக்குப் போடத்தான் போடுவேன்.

சாம்பு:— இதுவும் முடிவாகவில்லை. அடுத்தது. வரும் வருடத்துக்குத் தலை வர், உபதலைவர் தேர்ந்தெடுப்பது.

சாம்பு அப்பா:— எனக்குத்தான் எல்லாரையும்விட வயசு அதிகம். நான் தான் தலைவன்.




"எதற்காக எங்களை வரும்படி போன் செய்தீர்கள்?"
" "கொள்ளை மலிவு" என்று எழுதி வச்சிருந்த போர்டை எவனோ கொள்ளை அடிச்சுட்டான்!"

சாம்பு அம்மா:— நீங்க வாழல்லியா! நீங்க சம்பாதிக்கிற நாளிலெ நான் இல்லாமல் இருந்திருந்தால் உங்கபாடு அதோகதி ஆகியிருக்கும். நான்தான் தலைவி!

சாம்பு மனைவி:— என் கையிலெ அதி காரம் கொடுத்தால், அப்புறம் நடக் கிறதே வேறுதான்.

வனஜா:— அம்மா கையிலெ அதிகாரம் கொடுத்தால், எதுக்கோ அதிகாரம் கொடுத்து நாழிக்கு ஒரு தடவை கொட்டுமாமெ அதுமாதிரிதான். நான் தான் தலைவி.

நிரஞ்சனா:— மூனு வருடமா மூனு வது பாரம். அவசியம் உங்கிட்டெ அதி காரம் கொடுக்கவேண்டியதுதான்.

சாம்பு:— இதுவும் முடிவாகவில்லை. சரிசரி; முதல்லே கடவுள் வணக்கத்தி லேந்து இதுவரை எந்த விஷயமும் முடிவாகவில்லை, இனிமெ கூட்டமே தேவையில்லை. கூட்டத்தைக் காலவரை யறை அன்றிக் கலைக்கிறேன்.

வனஜா:— போனவருடம் பூரா அப்பா செய்த சேவைக்கு அம்மா நாளைக்கு அவருக்கு சேவை செய்யவேண்டும்.

நிரஞ்சனா:— அப்பா சேவைக்காக அம்மா சேவை செய்வது அப்பாவைக் கௌரவிக்கவா அல்லது அகௌரவப் படுத்தவா?

அதே சமயம் சாம்பு மாமியார் வரு கிறாள்.

சாம்பு மனைவி:— வாம்மா நல்ல சம யத்திலே வந்தே.

சாம்பு மாமியார்:—ஆமாம்மா. இன் னும் ஒரு வருடத்திற்கு இங்கேதான்.

3

சாம்பு மனைவி:— பார்த்தீர்களா? கட வுளா பார்த்துத்தான் அம்மாவை அனுப்பியிருக்கிறார். இனிமே அம்மா தான் வீட்டுத் தலைவி!

(எல்லோரும் திகைக்கிறார்கள்.)






'அக்கா, நம்முடைய கார்தான் இது!' என்றாள் கட்டழகி.

'எப்படி இது இங்கே வந்தது? அடிபட்ட மனிதன்தான் இதை இருந்த இடத்திலிருந்து பின் னுக்கு எடுத்து ஓட்டி வந்திருப் பானோ?' என்று சொல்லிவிட்டு வியப்புடன் மீண்டும் காரைப் பார்த்தாள்.

'பெட்ரோல் ஏது அவனுக்கு? காரில் பெட்ரோல் இல்லாமல் இருந்ததே!' என்றாள் கட்டழகி.

'பெட்ரோல் இல்லை என்பதைத் தெரிந்துகொண்டு, பெட்ரோலு டன் வந்துதான் அவன் காரைக் கிளப்பிக் கொண்டு வந்திருக்க வேண்டும்!'

'அவனுக்குத்தான் அடிபட் டிருந்தது என்று சொன்னாயே அவனால் ஓட்டிவந்திருக்க முடி யுமா?' என்று கேட்டாள் கட் டழகி.

'அது குறித்துத்தான் நானும் சிந்தனை செய்கிறேன். இரத்தம் கொட்டுவதை நிறுத்த அவன் வலக்கையால் இடத் தோளை அமுக்கிப் பிடித்துக்கொண்டிருந் தான். அவனே எப்படிப் பெட் ரோல் கொண்டு வந்திருப்பான், எப்படிக் காரை ஓட்டி வந்திருப் பான் என்று எண்ணிப் பார்க்க முடியவில்லை!'

புரட்சி எழுத்தாளர்
தமிழ்வாணன்

கட்டழகி அச்சத்துடன் தன்னைச் சுற்றிலும் ஒரு முறை பார்த்துக்கொண்டாள். துப்பாக்கிக் குண்டால் அடிபட்ட ஒரு மனிதன், அவர்கள் காரைக் கிளப்பிக் கொண்டு வந்து அந்த இடத்திலே மறைத்து வைத்திருக்கும் அந்த அச்சம் தரும் மனிதன் அங்கே தான் எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கிறான் என்ற நினைப்பு அவளைக் கோழையாக்கியது! அவனை நேரில் பார்த்துவிட்டால்கூட அவள் அப்படி நடுங்க மாட்டாள்! இது வரையில் அங்கேயிருந்த அந்த மனிதன், எங்கே எப்படிப் போய் விட்டிருப்பான்?

'அக்கா'

'என்னடி?'

'நாம் போய்விடலாமா?'

'திரும்பிப் போய் என்ன செய்வது? வந்தது வந்துவிட்டோம், துணிவுடன் இருக்கவேண்டும்! வேறு வழியில்லை!'

கட்டழகி பூமகளுடன் அப்படியே ஒட்டிக்கொண்டு நின்றாள். மீண்டும் அவள் பார்வை சுற்றியது. அங்கே—

எவரையும் காணோமே!

பூமகள் விளக்கைத் தூக்கிப் பிடித்துக் காரின் அருகில் சென்றாள். முன்கதவைத் திறந்து முன் சீட்டில் பார்த்தாள். பிறகு, பின் கதவைத் திறந்து பின்சீட்டைப் பார்த்தாள்.

'என்ன அக்கா?'

'காரில் துளிக்கூட இரத்தக் கறை இல்லையடி!'

'அப்படியானால்?'

'அப்படியானால் அடிபட்ட மனிதன் காரை ஓட்டிக்கொண்டு வந்திருக்க முடியாது!'

'நான் சொல்லுகிறேன்.'

'சொல்லு'

'தேவமணி காரை ஓட்டி வந்து மறைத்திருப்பாரோ?'

'சொல்லுவதற்கில்லை!'

'ஏன் சொல்லுவதற்கு இல்லை என்கிறாய்? அடிபட்ட மனிதனை எங்கே நாம் பார்த்துவிடப் போகிறோமோ என்று முன்னறிவிப்புக் கொடுத்து இங்கே வந்து மறைந்திருக்கும்படி சொன்ன தேவமணி காரை ஏன் கொண்டு வந்து மறைத்திருக்கக் கூடாது?'

'அப்பாவைத் தேடிக்கொண்டு தேவமணி சென்றபோது, நாம் வீட்டின் வெளியே வந்து நின்றிருந்தோமே? அப்போது தேவமணி காரை எடுத்திருந்தால், காரின் விளக்கு வெளிச்சம் தெரிந்திருக்குமே!'

'விளக்கைப் போடாமல் காரை எடுத்திருந்தால்?'

'விளக்கைப் போடாமல் எந்தப் பக்கங்களில் காரை எடுத்தால் ஏதாவது பாறையில் மோத வேண்டியதுதான்!'

'நாம் காரைவிட்டு இறங்கி, அந்த வீட்டைத் தேடிச் சென்றவுடனே, தேவமணி காரை எடுத்துச் சென்றிருக்கலாம். இல்லையா?'

பூமகள் இலேசாகச் சிரித்தாள். கட்டழகி சொன்னதிலும் உண்மை இருந்தது. கட்டழகியின் கணக்குப்படி தேவமணி காரை மறைத்துவிட்டு வந்தாலும், அந்தப் பெண்கள் இருவரையும் முதன் முதலில் சந்தித்திருக்கிறான். ஆனால்—

அதுதான் உண்மை என்பதற்குச் சான்று ஏதுமில்லை. பூமகள் சிறிது நேரம் வரையில் கட்டழகியையே பார்த்துவிட்டு, 'தேவமணிதான் காரைக் கொண்டு வந்தான் என்று எப்படிச் சொல்ல முடியும்? வேறு எவராவது காரைக் கொண்டு வந்து இங்கே மறைத்திருக்கலாம்!' என்றாள்.

'அந்த மூன்றாவது மனிதன் எவன் என்று எண்ணுகிறாய்?' என்று ஆவலுடன் கேட்டாள் கட்டழகி.

'மூன்றாவது மனிதன் அல்லன் அவன்! அவன்தான் முதல் மனிதன்!'

'அப்படியானால்...'

'டிரைவர்தான்! நம்முடைய டிரைவர்தான்!'

'முதலிலிருந்தே நீ டிரைவர் மீது ஐயப்பட்டுக் கொண்டிருக்கிறாய்! டிரைவரும் இந்தச் சதியில் ஈடுபட்டிருக்கலாம் என்று நம்பத்தான் வேண்டியிருக்கிறது! ஆனால், எதற்காக இப்படி ஒரு சதி என்பதுதான் தெரியவில்லை!' என்றாள் கட்டழகி.

'கட்டழகி'

'என்ன?'

'விடியும் வரையில் நாம் இந்தக் காரிலேயே உட்கார்ந்திருந்தால் என்ன?'

'நல்ல திட்டந்தான்!'

'அப்பா ஒருவேளை நம்மைத் தேடி வந்தாலும், இந்தக் காரைத் தேடி வந்தாலும் நாம் இங்கேயே மறைந்திருப்பது நல்லது!'

'அடிபட்ட மனிதன்?'

'அவனைத்தான் காணோமே!'

'கை விளக்கு?'

'அதை இருந்த இடத்திலேயே கொண்டு போய் வைத்துவிட்டு வா!'

'எனக்கு அச்சமாக இருக்கிறது!'

'நான் கொண்டு போய் வைத்து விட்டு வருகிறேன்!'

'என்னைத் தனியாக விட்டுப் போகாதே! நானும் உன்னுடன் நிழலைப் போல வருகிறேன்!'

பூமகளின் கையை விடாமல் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு நடந்தாள் கட்டழகி!

இருவரும் அந்த அறைக்குச் சென்றார்கள். பூமகள் விளக்கை இருந்த இடத்திலேயே வைத்து விட்டுத் திரும்பினாள். கட்டழகி அவளுடன் நடந்தாள்.

காரின் பின் கதவைத் திறந்து கொண்டு இருவரும் பின்சீட்டில் ஏறி உட்கார்ந்தார்கள். அப்போது—

இதுவரையில் காலியாகவே கிடந்த காரில், முன்சீட்டில்,





நான் ஒன்று எழுதிவைத்திருக்கிறேன்! அதை எந்தப்பத்திரிகைக்கு அனுப்பினாலும் ஏற்றுக் கொள்வார்கள்!

என்னது? கதையா? கட்டுரையா?

இல்லை! ஒரு வருஷ சந்தாவுக்கு ஒரு "செக்"!





காரோட்டியின் இடத்தில் ஓர் உருவம் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தது! அந்த உருவம்—

யார் என்று தெரியவில்லை!

முதலில் காரில் ஏறி உட்கார்ந்ததும் பூமகளுக்கும் கட்டழகிக்கும் இருட்டில் எதுவும் தெரியவில்லை! சிறிது நேரம் கழித்து இருளில் பார்த்துப் பார்த்துக் கண்கள் பழகிப் போனதும் தான்—

அந்த உருவம் தெரிந்தது!

காரின் முன்சீட்டில் ஏதோ திட்டத்துடன், உறுதியுடன் உட்கார்ந்திருந்த அந்த மனிதன் திரும்பிப் பார்த்ததும்—

கட்டழகி அலறினாள்!

பூமகள் அவளை அணைத்துக் கொண்டாள்! அவளுக்கும் அலற வேண்டும் போலிருந்தது! ஆனால்—

அவள் கத்தினாலும், அந்தப் பக்கத்தில் அவர்கள் போடும் கூச்சல் அவர்களுக்கேதான் எதிரொலியாகக் கேட்கும் என்பதை அறிந்திருந்தாள் அவள்!

## 7

மறுநாள் பிற்பகல். மூன்று மணிக்குமேல் ஆகிவிட்டது.

கோயம்புத்தூரில் ஒரு மருத்துவ விடுதியில் படுத்துக் கிடந்தார் உலகையா ஜி. சி. எஸ். அவர் கண்களை மிகவும் துன்பத்துடன் திறந்து பார்த்தபோது—

எதிரே நிழலைப் போல் மூன்று உருவங்கள் தெரிந்தன!

அவர் எதிர்பார்த்த உருவங்கள் இரண்டு. ஒன்று கட்டழகியின் உருவம், மற்றொன்று பூமகளின் உருவம். ஆனால்—

மூன்று உருவங்கள் தெரிகின்றனவே! அவை ஆண் உருவங்கள்!

திறந்த கண்களை மீண்டும் மூடிக்கொண்டார்! அவரால் வெளிச்சத்தைச் சரியாகப் பார்க்

கவே முடியவில்லை! அவருடைய உடல் கனத்திருப்பதைப் போல இருந்தது, கதகதப்பாக இருந்தது!

சிறிது நேரம் கழித்து மீண்டும் அவர் கண்களைத் திறந்து பார்த்தபோது—

முன்னைவிட இப்போது சற்றுத் தெளிவாகத் தெரிந்தது! அவர் அடிக்கடி கண்களை மூடி மூடித் திறந்து, வெளிச்சத்தில் பார்க்கத் தமது கண்களைச் சரிப்படுத்திக் கொண்டார்! எதிரே நின்ற மூவரும் ஆண்கள்தாம்!

மூவரில் ஒருவர் பழக்கப்பட்டவர். உலகையாவைப் போலவே அவரும் வயதானவர். கோவையில் பல ஆலைகளுக்கு முதலாளி அவர். இன்பநாயகம் என்பது அவருடைய பெயர். உலகையா பதவியில் இருந்தபோது, அடிக்கடி அவரை அலுவலகத்தில் வந்து பார்த்திருக்கிறார். உலகையாவும் அவருக்கு எத்தனையோ உதவிகளைச் செய்திருக்கிறார். அரசினரின் உதவியில்லாமல் இந்தக் காலத்தில் ஆலைகளை நடத்துவதுதான் இயலாத செயலாயிற்றே! அவருக்குப் பக்கத்தில் நின்றிருந்த மற்றொருவன்—

இளைஞன்!

இருபத்தைந்து வயது இருக்கும் அவனுக்கு. நல்ல சிவப்பு, நல்ல உயரம். இளைஞனின் சாயலைப் பார்த்து, இன்பநாயகத்தின் மகனாக இருப்பானோ என்ற ஐயம் வந்தது உலகையாவுக்கு. மூன்றாவது மனிதரின் கழுத்தில் தொங்கிய ஸ்டெதாஸ்கோப்பைப் பார்த்து, அவர்தான் மருத்துவ விடுதியின் டாக்டர் என்பதைப் புரிந்துகொண்டார் உலகையா.

டாக்டர் மென்சிரிப்புடன் உலகையாவைப் பார்த்து, 'அப்படியே படுத்திருங்கள். எழுந்திருக்க முயல வேண்டாம். நீங்கள் மிகவும் களைப்படைந்திருக்கிறீர்கள். அமைதியுடன் இருக்க வேண்டும். ஏதாவது சாப்பிடுகிறீர்களா?' என்றார்.

'ஆமாம் டாக்டர், நாக்கு உலர்ந்து போயிருக்கிறது!' என்றார் உலகையா.

'இலேசாகக் காய்ச்சல் இருக்கிறது. ஊசி போட்டிருக்கிறேன். ஊசி போட்டதுகூட உங்களுக்குத் தெரியாது! அப்படியே படுத்திருங்கள். சூடாக ஹார்லிக்ஸ் கொண்டு வரச் சொல்லுகிறேன். அதைப் பருகிவிட்டுப் பிறகு பேசுங்கள்.'

'நன்றி' என்றார் உலகையா.

டாக்டர் நகர்ந்து அந்த அறையின் வாயிற்படியருகில் சென்று நர்ஸை மெல்ல அழைத்து ஹார்லிக்ஸ் கொண்டு வரும்படி சொன்னார். பிறகு அவர் திரும்பி வந்து உலகையாவின் பக்கத்தில் நின்றார். அப்போது—

டாக்டர் சொன்னதையும் மறந்து உலகையா பேசத் தொடங்கி விட்டார்! 'என்ன நடந்தது? எங்கே பூமகள்? கட்டழகி எங்கே?' என்றார் ஆவலுடன்!

இன்பநாயகம் குனிந்து உலகையாவைப் பார்த்து ஆறுதல் சொல்லுவதைப்போல் பேசினார். 'சரியாக நினைவு படுத்திப் பாருங்கள். என்ன நடந்தது என்பதை நீங்கள்தாம் சொல்ல வேண்டும். பூமகள் என்பது யார்?' என்றார்.

'பூமகளும் கட்டழகியும் என்னுடைய பெண்கள். உங்களுக்குத் தெரியாதா?'

'உங்களுக்கு இரண்டு பெண்கள் இருப்பது தெரியும். அவர்களுடைய பெயர்கள் தெரியாது. அவர்கள் உங்களுடன் வந்தார்களா?'

'இது என்ன கேள்வி? நாங்கள் மூவரும்தாமே எங்கள் காரில் வந்துகொண்டிருந்தோம்! அவர்களை நீங்கள் பார்க்கவில்லையா?'

'நீங்கள் காரில் வந்தீர்களா? காரையே நாங்கள் பார்க்கவில்லையே!' என்றார் இன்பநாயகம்.

'அப்படியானால் நான் எப்படி இங்கே வந்தேன்?' என்று கேட்டார் உலகையா. அவருக்கு அப்போது தெளிவாக எதுவும் கவனத்துக்கு வரவில்லை!

'சேலத்திலிருந்து நான் காரில் வந்துகொண்டிருந்தேன். இவன் என் மகன், மாணிக்கம். கல்லூரிப் படிப்பை இந்த ஆண்டு முடித்தான். இவனும் என்னுடன் வந்துகொண்டிருந்தான். சாலையில் வழியில், நீங்கள் விழுந்து கிடந்தீர்கள்! எவரோ என்று நினைத்தோம் முதலில்! மாணிக்கம் காரை நிறுத்திவிட்டான். இருவரும் இறங்கிப் பார்த்தோம். எங்களால் நம்பவே முடியவில்லை! இருட்டில், மழையில் நனைந்து, சாலையில் விழுந்து கிடப்பது உலகையா ஐ. சி. எஸ். என்று எவரால்தான் நம்பமுடியும்?'

அந்த இளைஞன் மென்சிரிப்புடன் உலகையாவைப் பார்த்தான். உலகையா நன்றியுடன் அவனைப் பார்த்தார். அவன் சொன்னான்: 'அப்பா உங்களைப்பற்றி அடிக்கடி சொல்லுவார். ஆனால், உங்களை, நான் இதற்குமுன் நேரில் பார்த்ததில்லை. அப்பா உங்கள் பெயரைச் சொன்னதும், உங்களை அந்த நிலையில் கண்டதும் என் உடல் துடித்துப் போய்விட்டது! உங்களைக் காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு, மருத்துவ விடுதிக்குக் கொண்டு வந்துவிட்டோம்! இப்போது நீங்கள் கோவையில் இருக்கிறீர்கள்!'

உலகையாவுக்குத் தலைசுற்றுவதைப் போலிருந்தது. மீண்டும் நினைவை இழந்துவிடுவோமோ என்று அவர் அஞ்சினார். கண்களை மூடி மூடித் திறந்து பார்த்தார். பிறகு, 'ஹார்லிக்ஸ் வரவில்லையா?' என்றார்.

டாக்டர் திரும்பிப் பார்த்தார். இன்பநாயகமும் மாணிக்கமும் கூடத் திரும்பினார்கள்!




"இந்தக் கணக்கைச் சொல்லு. உங்கப்பா என்னிடம் நூறு ரூபாய் கடன் வாங்குகிறார். மாதா மாதம் இருபது ரூபாய் திருப்பிக் கொடுப்பதாக ஒப்புக்கொள்கிறார். மூன்று மாதம் ஆனதும் அவர் எனக்கு எவ்வளவு திருப்பிக் கொடுத்திருப்பார்?"

"ஒன்றும் கொடுத்திருக்கமாட்டார்!"

"மண்டு! மண்டு! எப்படிடா?"

"நான் ஒன்றும் மண்டு இல்லை சார்! உங்களுக்குத்தான் எங்கப்பாவைப்பற்றி ஒன்றும் தெரியாது!"

" ! ! ! "

நர்சு ஹார்லிக்ஸ் கோப்பையுடன் ஓடிவந்தாள்.

உலகையா எழுந்து உட்கார முயன்ருர். மாணிக்கம் தலையணையை அவர் முதுகில் கொடுத்து உட்கார வைத்தான். டாக்டர் உலகையாவைப் பிடித்துக் கொண்டார்.

நர்சு, ஹார்லிக்ஸ் கோப்பையை உலகையாவிடம் கொடுத்தாள். அவர் அதை வாங்கி மெல்லப் பருகினுர். அவருடைய வயிற்றில் சூடாக ஹார்லிக்ஸ் போய் விழுந்ததும்—

அவர் சிறிது தெம்புடன் பார்த்தார்.

அவருடைய நினைவு சுழன்றது.

ஹார்லிக்ஸை அவர் பருகி முடித்ததும், 'டாக்டர்! நான் உடனே போகவேண்டும்!' என்ருர்.

'வெளியே புறப்படும் நிலையில் நீங்கள் இல்லை! அமைதியுடன் இருங்கள்!' என்ருர் டாக்டர்.

நர்சு, காலிக் கோப்பையை வாங்கிக்கொண்டு டாக்டருக்குப் பின்னுல் போய் நின்றுகொண்டு வேடிக்கை பார்த்தாள்.

உலகையா சிறிது நேரம் சிந்தனை செய்தார். அவருக்கு என்ன சொல்லுவது என்று தோன்றவில்லையா?

'என்ன நடந்தது? நீங்கள் கொண்டுவந்த கார் ஏதாவது விபத்துக்கு உள்ளாகிவிட்டதா?' என்று கேட்டார் இன்பநாயகம்.

'இல்லை!' என்ருர் உலகையா. பிறகு—

'கார், விபத்துக்கு உள்ளாகவில்லை. இப்போதுதான் நினைவுக்கு வருகிறது. டிரைவர் திருமலை காரைத் தவருன வழியில் செலுத்திவிட்டான்! கோயம்புத்தூருக்குச் செல்லும் பாதை என்று எண்ணி, போக்குவரத்து இல்லாத காட்டுப் பாதையில் காரைச் செலுத்தினுன். மழை பெய்து கொண்டிருந்ததால் வழிவாய்க்கால் தெரியவில்லை! தவருன பாதையில் சென்றுகொண்டிருந்த கார் ஒரு மலைச்சாலில் நின்றுவிட்டது! காரில் பெட்ரோல் இல்லை!' என்ருர்.

உலகையாவுக்கு, நடந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்ருக இப்போதுதான் நினைவுக்கு வந்து கொண்டிருந்தன!

'கார் நின்றுவிட்டால் என்ன? மழை காலத்தில் இப்படி நடப்பது சாதாரணம்தான்! கோவைக்குச் செல்லும் பாதை என்று ஓரிடத்தில் கைகாட்டிப் பலகை தவருன வழியைக் காட்டிக் கொண்டிருந்தது! நாங்களும்தாம் பார்த்தோம்!' என்ருன் மாணிக்கம்.

'கார் கெட்டுப்போவது இயல்பு! தவருன பாதையில் செல்லுவதும் இயல்புதான்! ஆனுல், காரில் பெட்ரோல் இல்லாமல், முன்பின் தெரியாத ஓர் இடத்தில் நிற்பது என்பது அருமை!' என்ருர் உலகையா உரத்த குரலில்!

'அமைதியுடன் சொல்லுங்கள். கார் பெட்ரோல் இல்லாமல் நின்றுவிட்டது பிறகு?' என்ருர் டாக்டர்.

உலகையாவுக்கு அந்த நேரத்தில் அந்த நிகழ்ச்சி கவனத்துக்கு வந்துவிட்டது! உடனே அவர் சற்று உரத்த குரலில், 'நான் ஒரு மனிதனைக் கொன்றுவிட்டேன்! ஆமாம், சுட்டுக் கொன்றுவிட்டேன்!' என்று கத்தினுர் உணர்ச்சி வசப்பட்டு!

(தொடரும்)



# பச்சிலை வைத்தியம்

பண்டித ஆ. மருத்துவமணி

## 8. புகையிலை

★

இறைவன் படைப்பினுல் உலகில் தோன்றிய செடி, கொடி, காய், கனி, கிழங்கு ஆகியவை பெரும்பாலும் மக்களுக்குப் பயன்படுகின்றன. இவற்றுள் சில மிருகங்களுக்கும் உணவாகின்றன. ஆனுல், சில தாவர வர்க்கங்களை, மானிடர்களுக்குத் தீங்கு விளைவிக்கவும், பூச்சிகளையும் மிருகங்களையும் அழித்துப் போடுவதற்கும் மட்டுமே (விஷமாக) உபயோகிக்கலாம்.

இவ்வகையைச் சார்ந்ததுதான் புகையிலைச் செடி. இது புகைப்பிடிப்பதற்கு காரணமாயிருப்பதால் புகையிலை எனப் பெயர் வழங்கப்பெற்றது.

இது அமெரிக்கா தேசத்திற்குரிய பயிரென்பர். ஆனுல் இப்பொழுது இந்தியாவின் வெப்பப் பிரதேசங்களிலும், உயர் ரகங்கள் குறிப்பாக, கோதாவரி, டெல்டா, பிரதேசங்களில் பயிராகின்றன.

புகையிலை உலர்ந்த பிறகுதான் வாசனை அதிகமிருக்கும். இதில் விஷசத்து நிறைய உள்ளது. நூறு பலம் எடையுள்ள உலர்ந்த புகையிலையில், இரண்டு பலம் எடையுள்ள நிகோடீன் என்று சொல்லப்படும் கொடிய விஷம் இருக்கிறது.

இந்த விஷம் அரளிவேரைக் காட்டிலும் மிகக் கொடியது. புகையிலையை சுருட்டாகவோ, அல்லது பீடி, சிகரெட்டாகவோ அல்லது மெல்லும் புகையிலையாகவோ எந்த ரூபமாய் உபயோகித்தாலும் அதனுல் உடம்பில் விஷம் ஏற்படுகிறது என்பதில் ஐயமில்லை. சிலர் சிகரெட்டாகப் பிடித்தால் தீங்கில்லையென்றும், சுருட்டாகப் பிடித்தால்தான் தீங்கென்றும் நினைக்கிருர்கள். தீங்கு இல்லையெனக் கருதி சிலர் மூக்குப் பொடியாக உபயோகிக்கிருர்கள். அவ்வளவு நஞ்சாகாதெனக் கருதி சிலர் வாயிலே போட்டு அடக்கிக் கொள்ளுகிருர்கள். எப்படியிருப்பினும், புகைப்பிடித்தால் என்ன தீங்குண்டாகுமோ; அதேபோல் மூக்கினுட் செலுத்தினுலும், வாயிலிட்டடக்கிக் கொண்டாலும் உண்டாகிறது என்பது மறுக்கமுடியாத உண்மை.

இளம்பிராயத்தினர் புகையைப் பிடித்து உள்ளுக்கிழுத்து, பிறகு வெளி

பண்டிட் ஆ. மருத்துவமணியின்

மணி நேத்திரானந்த ஸ்நானத் தைலம்

தலையில் ஏற்படும் சகலவித ரோகங்களுக்கும் சிறந்த நிவாரணி

16 அவுன்ஸ் ரூ. 4-50; 8 அவு ரூ. 2-50

மற்றும் அநேக அபூர்வ ஔஷதங்களும் எம்மிடமிருக்கின்றன. அன்பர்கள் அவரவர் நோயின் விவரங்களைத் தெளிவாகத் தெரிவித்து தக்க சிகிச்சை உத்தரவாதமாகப் பெறலாம்.

விவரங்களுக்கு
15 காசு ஸ்டாம்பு அனுப்புக:

பரஞ்சோதி சித்த வைத்திய நிலையம்

62, துளசிங்க நாயகன் தெரு,
புதுப்பேட்டை, சென்னை-2.

(எழும்பூர் கண் ஆஸ்பத்திரிக்கு அருகில்)

மூச்சுடன் மூக்கு வழியாகவிடுகிறார்கள். இம்மாதிரி செய்யும்போது ஒருவருக்கொருவர் போட்டியும் ஏற்படுவதுண்டு. இது ஒரு பெரிய சாமர்த்தியமான வேலை என்று அவர்கள் பூரிப்படைவர்.

'தன்னையறியத்தனக்கொருகேடில்லை,

தன்னையறியாமல் தானே கெடுகின்றான்'

என்ற சித்தர்களின் பொன் மொழிக்கேற்ப இவர்கள் அறியாமையினால் தீமையைத் தாமே வரவழைத்துக் கொள்ளுகிறார்கள். புகையை நுரையீரல்களுக்குள்ளே இழுத்துக்கொண்டு, பிறகு வெளிமூச்சுடன் மூக்கு வழியாக விடுகிறதினாலே இரத்தத்தினுள் அதிக விஷம் புகுகிறது. இம்முறை மூக்குப்பொடி இவைகளைப் பார்க்கினும் அதிக தீங்குள்ளதாய் இருக்கிறது.

புகையிலை உபயோகிக்கும் வழக்கத்தை ஆரம்பத்திலேயே விட்டுவிட வேண்டுமானால் விட்டுவிடலாம். நாள் ஏற ஏற இப்பழக்கத்தை விடுவது கஷ்டமாய்த்தானிருக்கும்.

புகையிலை மூளையையும் நரம்புகளையும் உணர்ச்சியடையச் செய்கிறது. இதன் உண்மை என்னவெனில், புகையிலை விஷத்தால் மூளையும், நரம்புகளும் திமிர்த்துப் போய் அவ்வமயம் ஆயாசமும் மனக்கவலையும் தெரிவதில்லை.

துக்கத்தை அனுபவிப்பவர்கள் சுருட்டு குடித்தாலோ அல்லது வாயிலிட்டடக்கிக்கொண்டாலோ; துக்கத்தை மறந்துவிடுகிறார்கள். இதையறிந்தே, இடு காட்டில் சுருட்டு கொடுக்கும் பழக்கம் பெரும்பாலோரிடத்தில் இன்றைக்கும் இருந்து கொண்டு வருகிறது.

மருந்தை முறித்துவிடும், வாய்

வறளச் செய்யும்

திருந்து பலவீனஞ் சேர்க்கும்—

பொருந்து பித்தம்

உண்டாக்கும் விந்தழிக்கும்

ஓது புகையிலையைக்

கண்டார்க்கும் ஆகாதுகாண்

தமிழ் வைத்திய முறையில் முக்கியமாய் சித்த மருந்துகளை உபயோகிக்கும்போது, புகையிலையை எவ்வகையிலும் உபயோகிக்கக்கூடாதென்கிற விதியுமுண்டு.

ஆனால், அளவோடு சில நோய்களுக்கு வைத்தியர் சொற்படி கேட்டுத்தனியே உபயோகிக்கலாம்.

கட்டிகள் கரையவும், வீக்கங்கள் குறையவும், புகையிலையை மேலுக்குப் பற்றுப்போட தீவிர குணங் காணலாம்.

சிறு குழந்தைகளுக்கேற்படும் மலக்கட்டுக்குப் புகையிலைக் காம்பை ஆசனத்துள் செலுத்தி சில குழந்தைகளுக்கு நன்மையையும், சில குழந்தைகட்கு தீமையையும் விளைவிக்கிறார்கள். இப்பழக்கத்தை நீக்குவதே நல்லது.

பயிர் வகைகளுக்குப் பூச்சிப் பிடித்தால் புகையிலையை தண்ணீரில் ஒரு நாள் ஊற வைத்து, மறுநாட்காலையில் எடுத்து நன்றாய் பிசைந்து, பயிர்கள் மீது தெளித்தால், புகையிலை காரத்தினால் பூச்சிகள் சாகும். இதனால் பயிர்களும் செழித்து வளருவதைக் காணலாம்.


புகையிலைச் சுட்ட சாம்பலை, வெண்ணெய் அல்லது வாஸலைனுடன் குழைத்துப் புண்கள்மீது பூசிவர ஆறும்.

பாம்பு கடி விஷம் நீங்க 1½ பலம் புகையிலையை ¼ படி தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து நன்றாய் கசக்கிப் பிழிந்து, வடிகட்டி எடுத்த கஷாயத்தை ½ ஆழாக்கு வீதம் கொடுக்க விஷம் நீங்கும்.

### புகையிலை வழக்கத்தை விட்டுவிடும் வகை

புகையிலைப் பழக்கம் இல்லாதவர்கள் அதை உபயோகிக்கக் கற்றுக்கொள்ளக்









டாக்டர் ஸார்! உடலில் நோய் இருந்தால் நீங்கள் கொடுத்த மருந்தினால் குணமடைந்திருக்கும். ஆனால், என் உள்ளத்திலிருக்கும் நோயை...' ஜெயாவை மேற்கொண்டு பேச முடியாதபடி இருமல் தடுத்தது.

'கண்ணுக்கும் கருத்துக்கும் நிறைந்த அன்பே உருவான கணவர். கை கட்டி வேலை செய்ய ஆட்கள். இத்தனை இருந்தும் உனக்கு என்னம்மா உள்ளத்தில் வேதனை? என்னிடம் சொன்னால் முடிந்த அளவு போக்க முயற்சிக்கிறேன்' என்றார் டாக்டர்.

'உண்மையிலேயே நான் வாழ வேண்டுமானால் உங்கள் ஒருவரால் தான் அந்த உதவியைச் செய்ய முடியும். எனக்காகச் செய்வீர்களா?'

'நிச்சயமாகச் செய்கிறேன்.

'எனக்கு காச நோய் இருப்பதால் குடும்ப வாழ்க்கைக்கு நான் இனிப் பயன்பட மாட்டேன் என்றும் ஆகையால் என் கணவரை வேறு கல்யாணம் செய்து கொள்ளும்படிச் சம்மதிக்கச் செய்ய வேண்டியது. நானே முன்னின்று

அந்தத் திருமணத்தை நடத்தி வைக்க வேண்டும். பெண்கூடப் பார்த்துவிட்டேன்.'

'ஜெயா! உனக்கு இருக்கும் இருமல் சாதாரணமானது, காசமல்ல. மனதை அலட்டிக்கொள்ளாமல் நல்ல ஓய்வு எடுத்துக் கொண்டால் விரைவில் குணமாகி விடும்.'

'டாக்டர்! சாதாரணமான இருமல்தான் என்பது எனக்குத் தெரியும். உண்மையிலேயே காச நோயினலோ, வேறு எந்தக் காரணத்தினலோ சீக்கிரம் சாகவில்லையே என்றுதான் வருந்துகிறேன். இருமல் நின்று என் உடல் குணமடைந்தாலும், என் நெஞ்சில் மூண்டு விட்ட தீ சிறுகச் சிறுக எரித்து சாம்பலாக்கி விடும். நானும் அழிந்து என் தங்கையும் அழிவதில் என்ன நன்மை இருக்கிறது? நான் மட்டும் இப்போது இறந்துவிட்டால் என் தங்கையின் திருமணமும் நடந்துவிடும். லொக்... லொக்...'

'உன் தங்கையின் திருமணத்திற்காக நீ ஏன் சாக வேண்டும்? நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்து திருமணம் செய்தால் போகிறது.'

'அவளை மணந்து கொள்ள யாரும் முன் வரவில்லை. அவளின் அந்த அவல வாழ்வுக்கு நான்தான் காரணம். என் தங்கை வாழ்விழந்து விடுவாளோ என்ற வேதனையைத்தான் என்னல் தாங்க முடியவில்லை. ஆகவே என் இன்பத்தை, என் கணவரை அவளுக்குக்கொடுத்துவிட முடிவு செய்து விட்டேன். என் கணவர் நல்லவர். என் மீது உயிராக இருக்கிருர். 'என்னை மறந்து விடுங்கள்' என்று நான் சொன்னல் அவர் இந்த உலகத்திலிருந்து மறைந்தாலும் மறைந்து விடுவார். ஆகையால்தான் உங்களிடம் இந்த உதவியை நாடுகிறேன்' என்ருள் ஜெயா.

'இதில் நான் செய்ய வேண்டிய உதவி என்ன இருக்கிறது?'

'உண்மையிலேயே எனக்கு காச நோய் இருப்பதாகவும், இப்போதைக்கு என் உடல் நிலை குணமடைந்தது போலத் தெரிந்தாலும் குடும்ப , வாழ்க்கைக்கு இனி நான் பயன்பட மாட்டேன்' என்று என் கணவர் நம்பும்படிச் செய்ய வேண்டும். இந்த உதவியை நீங்கள் எனக்குச் செய்தால் என் உயிர் உள்ள மட்டும் நானும், என் தங்கையும் கடமைப்பட்டவர்களாகயிருப்போம். தனக்கும் திருமணம் நடக்குமா? தானும் மற்றவர்களைப்போல் கணவனுடன் குடும்பம் நடத்துவோமா?'என்று ஏங்கிக்கொண்டிருக்கும் ஒரு பெண்ணிற்கு வாழ வழி காட்டிய தெய்வமாகக்கூட நீங்கள் திகழுவீர்கள்'

'மற்றவர்கள் உன் தங்கையை மணந்து கொள்ள மறுப்பதற்கு அவளிடம் உள்ள குறைதான் என்ன?'

'என் தங்கையின் உள்ளம் ஊனமற்றது. ஆனல், இன்றைய உலகம் உள்ளத் தூய்மைக்கு மதிப்புக் கொடுப்பதில்லை. உடலுக்குத்தான் மதிப்புக் கொடுக்கிறது. என் தங்கை சந்திராவின் உடலிலே ஒரு ஊனம். அதற்குக் காரணம் நான் தான்...' மேலே பேச முடியாதபடி துக்கம் அவள் தொண்டையை அடைத்தது. மனம் விட்டு அழ ஆரம்பித்து விட்டாள் ஜெயா.

'ஜெயா! மனதில் உள்ள வேதனையைப் பிறரிடம் சொன்னல் கொஞ்சம் நிம்மதி ஏற்படும். உன் தங்கை எப்படி ஊனமானுள்?'







உங்களுக்கும் — சினிமா நட்சத்திரங்களின் சொக்குமெழில் மேனி!

பத்தரை மாற்று மேனி யெழிலே பெண்மைக்கழகு! அழகிற் சிறந்த ஜமுனா கூறுகிறார்: "எனது மேனியழகுக்காக நான் உபயோகிப்பது மணங்கமழும் லக்ஸ் டாய்லெட் சோப். மென்மையும் செழிப்பும் வாய்ந்த அதன் நுரையை நான் பெரிதும் விரும்புகிறேன். அதுவே சருமத்துக்கு மிக நல்ல சோப்." லக்ஸ் சோப் உங்கள் அழகுசாதனமாகவும் விளங்கட்டும்.

தூய, வெண்மையான லக்ஸ் டாய்லெட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகுசாதன சோப்

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

LTS/13-50 TM

'அப்போது அப்பா மாயவரத்தில்தான் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். நான் எட்டு வயது சிறுமி. தங்கை சந்திராவுக்கு ஐந்து வயது இருக்கும். அன்று ஆடிப் பெருக்கு. ஊரே காவேரி கரையில்தான் திரண்டிருந்தது. நானும் சந்திராவும் அம்மாவுடன் காவேரிக் கரைக்குப் போனோம்.

கடைத் தெருவிலே பலூன் விற்றுக் கொண்டிருந்தான் ஒருவன். என் தங்கை பலூன் வேண்டுமென்று அடம் பிடிக்க ஆரம்பித்து விட்டாள். மேலும் அம்மாவிடம் அவளுக்கு அதிகச் சலுகை. எங்கள் இருவருக்கும் ஆளுக்கு ஒரு பலூன் வாங்கிக் கொடுத்தாள் அம்மா.

ஆற்றின் இரண்டு படிகளைக் கடந்து மூன்றாவது படியிலே முழங்கால் அளவு தண்ணீரிலே நின்று கொண்டு நானும் சந்திராவும் வாயிலே தண்ணீரை எடுத்து, பலூனிலே நிரப்பி விளையாடிக் கொண்டிருந்தோம். கொஞ்ச நேரத்தில் சந்திராவின் பலூன் உடைந்து விட்டது. என் பலூன் உடையவில்லை. பலூன் உடைந்த ஏமாற்றத்தில் அவள் அழ ஆரம்பித்தாள். என் பலூனைக் கேட்டாள். நான் கொடுக்க முடியாது என்று மறுத்தேன். அத்துடன் அவள் பலூன் உடைந்து விட்டதற்காகப் பரிகாசமும் செய்தேன். அவளுக்கு ஆத்திரம் வந்து விட்டது. நான் எதிர்பாரா வண்ணம் என் கையிலுள்ள பலூனையும் அமுக்கி உடைத்து விட்டாள்.

அவளின் இந்தச் செய்கையால் ஆவேசமுற்ற நான், நாங்கள் ஆற்றில் நின்று கொண்டிருக்கிறோமென்பதையும் மறந்து, சந்திராவின் கன்னத்தில் என் பலம் கொண்ட மட்டும் ஓங்கி அடித்தேன். முதல் அடியின் வேதனையைத் தாங்க முடியாத அவள், மேலும் நான் அடித்து விடுவேனோ என பயந்து கரைக்கு ஓட முயன்றாள். அடுத்த படியில் வேகமாகக் காலை வைத்ததும் அதிலிருந்த பாசி வழுக்கி விட்டது.

'அம்மா!' என்று அலறிக் கொண்டே சந்திரா கீழே விழுந்துவிட்டாள். பக்கத்திலிருந்தவர்கள் அவளைத் தூக்கிக் கரைக்குக் கொண்டு வந்தனர். படிகள் அந்தத் துறையில் நிறைய இருப்பதால் காலில் அடி பலமாகப் பட்டு விட்டது. நான் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டேன். அன்றைய தினம் நான் அம்மாவிடம் வாங்கிய அடியும், திட்டும் என்னால் என்றுமே மறக்க முடியாது.

கண்ணுக்குத் தெரியும்படியான காயம் ஏதும் சந்திராவிற்கு ஏற்படவில்லை. மறுநாள் இடது கால் வலி எடுப்பதாகச் சொன்னாள். காலில் வீக்கமும் கண்டு இருந்தது.

கல்லில் கால் பலமாக அடிபட்டிருப்பதால் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. கட்டு கட்டிய பின் இரண்டு மாதமாக நடமாட்டமின்றி படுக்கையில் இருந்தாள். அவள் சீக்கிரம் எழுந்து நடமாட வேண்டுமென்று நான் வேண்டாத தெய்வமில்லை.

கட்டை அவிழ்த்த பின் சந்திரா எழுந்து நடந்தாள். ஆனால், முன்போல் அவள் நடை நேராக இல்லை. மற்றவர்களைப்போல் தன்னால் நடக்க முடியாததை உணர்ந்த சந்திரா 'அக்கா! நான் பலூனை உடைத்ததற்கு பதிலாக நீ என் காலை உடைத்து விட்டாயே! நான் நொண்டியாகிவிட்டேனே இனி எப்படி நான் விளையாட முடியும்?' என்றாள். அன்று அவள் உள்ளத்திலிருந்து எழுந்த தீனக்குரல் இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது.

நாளடைவில் கால் பழைய நிலைக்கே வந்துவிடும் என்றார் டாக்டர். அந்த நம்பிக்கையிலேயே சில வருடங்கள் கழிந்தது. நின்று கொண்டிருந்தால் கால் ஊனம் என்று யாராலும் சொல்ல முடியாது. ஆனால், அவள் நடக்கும்போது கொஞ்சம் தாங்கியே நடப்பாள்.

காலம் எப்படிப்பட்ட கவலையையும் மாற்றும் மருந்தல்லவா! காலப்போக்கிலே சந்திராவின் கால் ஊனமடைந்த நிகழ்ச்சியை அனைவருமே மறந்து விட்டனர். அவளும் படித்துக் கொண்டிருந்ததால் அந்த பிரச்னைக்கே இடமில்லாது போய் விட்டது. ஆனால், என்னால் மட்டும் அந்த நிகழ்ச்சியை மறக்க முடியவில்லை. ஒவ்வொரு வருஷமும் ஆடிப் பதினெட்டாம் பெருக்கு பண்டிகையன்று ஆற்றங்கரையிலே நடந்த நிகழ்ச்சிகள் நிழற்படம்போல் என் முன்னே தோன்றி மறையும்.

நான் ஐந்தாம் படிவத்தில் தோல்வியடைந்தேன். அத்துடன் என் பள்ளிப் படிப்பிற்கும் முற்றுப் புள்ளி விழுந்தது. அப்பா என் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தார். அன்பிலும், பண்பிலும் சிறந்தவரே எனக்குக் கணவராக வாய்த்தார். அம்மட்டும் நான் கொடுத்து வைத்தவள்தான்.

என் கணவருக்கு நிலபுலன்கள் நிறைய இருந்ததால், அவைகளைப் பார்த்துக்கொண்டு சொந்த கிராமமான திருச்சிற்றம்பலத்திலேயே நாங்கள் வசித்து வந்தோம். திருமணமாகி மூன்று வருடங்கள் என் வாழ்க்கை இன்பமாகவே சென்றது. உலகில் என்னைப் போல் பாக்யசாலி ஒருவருமே இல்லை என்று இறுமாந்தேன்.

அன்று அப்பாவிடமிருந்து கடிதம் வந்தது. சந்திராவுக்கும் பதினெட்டு வயது ஆகிறது என்றும், சீக்கிரம் கல்யாணம் செய்துவிட விரும்புவதாகவும் நீலத்தநல்லூரிலிருந்து சந்திராவைப் பார்க்க மாப்பிள்ளை வீட்டினர் இன்னும் சில தினங்களில் வருவதால் என்னையும் புறப்பட்டுவரச் சொல்லி எழுதியிருந்தார்.

என்னதான் கணவன் வீட்டில் சுகமாக வாழ்ந்தாலும் பிறந்த வீட்டிற்குப் போகிறோம் என்றால் உள்ளத்தில் புது மகிழ்ச்சி உதயமாகத்தான் செய்கிறது. நானும் என் கணவரும் அன்றே மாயவரத்திற்குப் புறப்பட்டோம்.

நான் பிறந்த வீட்டிற்கு வந்து ஒரு வருடத்திற்குமேல் ஆகியிருந்தது. நாங்கள் வீட்டிற்குப் போகும்போது அம்மா எங்கோ வெளியே போயிருந்தார்கள். சந்திரா மட்டும் பூவேலை செய்து கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளைப் பார்த்தவுடன் என் உள்ளத்தில்கூட பொறாமை எழுந்தது. ஏனெனில் அவள் அத்தனை அழகியாக யிருந்தாள். ஒரு வருடத்திற்குள்தான் எத்தனை மாறுதல்! எங்கள் தெருவிலேயே நான்தான் அழகி என்று எல்லோரும் சொல்வார்கள். ஆனால், சந்திரா என்னைவிட அழகியாக யிருந்தாள்.

'சந்திரா! உன்னைக் கல்யாணம் செய்து கொள்பவன் ரொம்பவும் கொடுத்து வைத்தவன். நான் மட்டும் ஒரு ஆணாக யிருந்தால் இப்

போதே உன் கழுத்தில் தாலியைக் கட்டிவிடுவேன்' என்றேன் சிரித்துக்கொண்டே.

'போ அக்கா! எப்போதுமே உனக்கு கேலிதான்.'

'ஜெயா! தங்கையுடன் பேசுவதில் என்னை மறந்துவிட்டாயா? கொஞ்சம் தண்ணீர் கொடு' என்றார் என் கணவர்.

'அக்கா! பிரயாணக் களைப்புத் தீர நீயும் அத்தானும் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள். நான் காப்பி போட்டுக்கொண்டு வரு



கிறேன்' என்று சொல்லிவிட்டு சந்திரா சமையற்கட்டை நோக்கி நடந்தாள்.

சந்திராவின் நடையைப் பார்த்தவுடன் என் உள்ளத்தை வேதனை கசக்கிப் பிழிந்தது. அதிலிருந்து கசியும் ரத்தம் கண்ணீராக வந்தது. இந்த இயற்கைக்கும், கடவுளுக்கும்தான் எத்தனைக் கெட்ட எண்ணம்! தாமரைக்கு சேறு! ரோஜாவுக்கு முள்!! சிறந்த சிற்பியின் சிலை போன்ற சந்திராவுக்குக் காலில் ஊனம்!!!

மறுநாள் மாப்பிள்ளை வீட்டினர் வந்தனர். பெண்ணை அனைவருக்குமே பிடித்திருந்தது. ஆனால் கடைசியில் பெண்ணிற்கு ஒருகால் ஊனமாக இருப்பதால் மாப்பிள்ளையைக் கேட்டுக் கொண்டுதான் மேற்கொண்டு பேசவேண்டும்' என்றனர். சந்திராவின் குணத்திற்கும், அழகிற்கும் எப்படியும் இவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்றுதான் எதிர்பார்த்தேன். ஆனால், மாப்பிள்ளை வீட்டினரிடமிருந்து வந்த பதில் என்னைப் பேரிடிக்குள்ளாக்கியது.

வேற்று மனிதர்கள் தன்னை நொண்டி என்று சொன்னது சந்திராவின் இதயத்தை எந்த அளவிற்குப் புண்படுத்தியிருக்கும் என்பதை என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை.

'சந்திரா! நீ எதற்கும் கவலைப் படாதே. உனக்கு கல்யாணம் செய்து வைப்பது என் கடமை. உன்னைப் போன்ற குணவதி ஒருத்தி மனைவியாக வாய்க்க அந்த மாப்பிள்ளைக்குக் கொடுத்து வைக்கவில்லை. கூடிய சீக்கிரம் நான் உன் திருமணத்தை நடத்தி வைக்கிறேன்' என்று சொல்லிவிட்டு என் கணவருடன் திருச்சிற்றம்பலத்திற்கு வந்துவிட்டேன்.



மேலும் ஒரு வருடம் ஓடி மறைந்தது. இந்த இடைக்காலத்திற்குள் என் முயற்சியினாலும், அப்பாவின் முயற்சியினாலும் பலர் வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். வந்தவர்கள் அனைவரும் பலகாரமும், காப்பியும் சாப்பிட்டுவிட்டுப் போனதுதான் கண்ட பலனாக இருந்ததே தவிர, கல்யாணம் நடக்கும் வழியாக இல்லை.

கவலை என்பதே இன்னதென்று தெரியாது வாழ்ந்துவந்த என் உள்ளத்தில் கவலை குடிகொள்ள ஆரம்பித்துவிட்டது. வரும் சம்பந்தம் எல்லாம் இப்படியே தட்டிக்கொண்டுப் போவதைப் பார்க்கும்போது சந்திரா கல்யாணமே இல்லாமல் கன்னியாகவே வாழும்படி வாய்த்துவிடுமோ என்ற பயமும் என் உள்ளத்தில் தலை எடுக்கத் தொடங்கியது. இந்தக் கவலையாலேயே என் உடல் நலன் பாதிக்கத் தொடங்கியது. சந்திராவுக்கு ஆறுதல் கூறி அடிக்கடி கடிதம் மட்டும் எழுதிக் கொண்டிருந்தேன்.

சில சமயங்களில் என் கவலையிலே என் கணவரும் பங்கெடுத்துக்கொள்வார்.

சில மாதங்களிலேயே சந்திராவுக்கு கல்யாணம் ஆகவில்லையே என்ற கவலையினால் என் உடல் நிலை ரொம்பவும் பாதிக்கப்பட்டு படுக்கையிலே கிடந்தேன். அப்போது சந்திராவைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் என் உள்ளத்தில் எழுந்தது. என்னைப் பார்க்க அம்மா வருவதாகயிருந்ததால், சந்திராவையும் அழைத்து வரும்படிக் கடிதம் எழுதச் சொன்னேன்.

மறுநாள் சந்திராவும், அம்மாவும் திருச்சிற்றம்பலத்திற்கு வந்தார்கள். என் உடல் நிலையும் கொஞ்சம் அபிவிருத்தியடைந்தது. ஆனால் உள்ளத்தில்...?'

திருச்சிற்றம்பலம் சிறிய கிராமம்தான். அதிகமாகப் போனால் ஐம்பது வீடுகளுக்குமேல் இராது. நான்கைந்து டீ கடைகள், இரண்டு மளிகை கடைகள், இன்னும் சில கடைகள் இத்யாதிகளுடன் கள்ளுக் கடைகளுக்குப் பதிலாக மதுவிலக்குக்குப்பின் கிராமங்கள் தோறும் தோன்றியிருக்கும் ஒரு டூரிங் சினிமா. இவைகளினால் அந்த ஊருக்குப் பெருமை கிடைக்காவிட்டாலும் அங்கிருக்கும் கோவிலினால் அதுவும் பூவிழுங்கிப் பிள்ளையாரினால் நிச்சயம் அந்த ஊருக்குப் பெருமை உண்டு. கோவிலின் முற்பகுதி பாழடைந்து கிடந்தாலும், உள்பிராகாரம் களையுடனேயே விளங்கும். பிராகாரத்திற்குள் நுழைந்ததும் அங்குள்ள கல் கவற்றிலே ஒரு விநாயகர் சிலை செதுக்கப்பட்டிருக்கும் விக்ரகத்தின் இரண்டு காதுகளிலும் ஒரு புதிய காசு அளவுள்ள துவாரங்கள் இருக்கிறது.

நாம் முயற்சிக்கும் ஒரு காரியத்தின் வெற்றி தோல்வியைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், கடவுளை மனதில் நினைத்துக் கொண்டு விக்ரகத்தின் காதில் உள்ள துவாரத்தில் இரண்டு மலர்களைச் சொருகவேண்டும். நாம் நினைத்த காரியம் வெற்றியடையுமானால் கற் சுவருக்குள் இருக்கும் வண்டு மலர்களை இழுத்துக் கொள்கிறது. நம் முயற்சி தோல்வி அடையும் என்றால் ஒரு நாள் முழுவதும் இருந்தாலும்கூட மலர்கள் வைத்த இடத்தைவிட்டு அசைவது இல்லை. அதனால் அதை பூவிழுங்கிப் பிள்ளையார் என்றே ஊரில் அனைவரும் சொல்வார்கள்.

அன்று வெள்ளிக்கிழமை. சந்திரா அடுத்த வீட்டுப் பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்தாள். நானும் மருந்து சாப்பிட்டுவிட்டுக் கொஞ்சம் ஓய்வாகப் படுத்தேன்.

'அக்கா! அக்கா!!' என்று கூவிக் கொண்டே சந்திரா தன் காலில் உள்ள ஊனத்தையும் மறந்து என்னிடம் ஓடி வந்தாள்.

'என்ன சந்திரா!'

'அக்கா! எனக்குக் கல்யாணம் நடக்...'

மேற்கொண்டு அவளைப் பேச நான் விடவில்லை. 'உண்மையாகவா? மாப்பிள்ளை யார்?' என்று கேட்டுக்கொண்டே அவளை சிறு குழந்தையைப் போல் அணைத்துக்கொண்டேன்.

நானும் அடுத்த வீட்டுப் பெண்ணும் இன்று கோவிலுக்குப் போயிருந்தோம். எனக்கு கல்யாணம் நடக்குமா? நடக்காதா? என்று பூவிழுங்கிப் பிள்ளையாரிடம் கேட்டேன். பூ வைத்த கொஞ்ச நேரத்திற்குள்ளாகவே உள்ளே போய்விட்டது. பூ உடனே போனதால் கூடிய சீக்-



கிரம் எனக்குத் திருமணம் நடக்குமென்று அங்கிருந்த குருக்களும் சொன்னார்கள். பூவிழுங்கிப் பிள்ளையாரின் வரம் என்றுமே பொய்யானதில்லையாம்' என்றாள் சந்திரா.

தனக்கு மணமாக வேண்டுமென்பதில் சந்திராவுக்கு எத்தனை ஆர்வம் இருக்கிறது என்று அவள் பேசியதிலிருந்தே தெரிந்துகொண்டேன்.

மறுநாள் அப்பாவிடமிருந்து கடிதம் வந்தது. 'கல்யாணபுரத்திலிருந்து சந்திராவைப் பார்க்க இன்னும் இரண்டு தினங்களில் வருவதால் உடனே அம்மாவையும், சந்திராவையும் அனுப்பி வைக்கவும்' என்று எழுதியிருந்தார்.

அப்பாவின் கடிதத்தைப் பார்த்ததும் என் உடலிலும், உள்ளத்திலும்கூட புதிய தெம்பு உண்டாயிற்று. சந்திராவும், அம்மாவும் மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். பூவிழுங்கிப் பிள்ளையாரின் வரம் இத்தனைச் சீக்கிரம் பலிக்குமென்று நான் நினைக்கவில்லை.

'சந்திரா! அடுத்த தடவை நீ மட்டும் தனியாக வரக்கூடாது. உன் கணவனுடன் சேர்ந்து வர வேண்டும். பிள்ளையாரிடம் கேட்கும் வரம் பிறக்கப்போவது ஆணா? பெண்ணா? என்று இருக்க வேண்டும்' என்றேன்.

'போ அக்கா! எப்போதுமே உனக்குப் பரிகாசம்தான்' என்றாள் வெட்கத்துடன். அன்றைய தினமே அம்மாவையும், சந்திராவையும் மாயவரத்திற்கு அனுப்பி வைத்தேன்.

பத்து நாட்கள் கழித்து அப்பாவிடமிருந்து கடிதம் வந்தது. இதற்குமுன் பார்த்தவர்கள் சொன்னதையே இவர்களும் சொன்னார்களாம். சந்திராவின் திருமணம் நின்றுவிட்டது. கடிதம் முழுவதையுமே என்னால் படிக்க முடியவில்லை. கண்ணீர் கண்களுக்குத் திரையிட்டது. அன்று முழுவதுமே நான் அழுது கொண்டுதானிருந்தேன். அதிலிருந்து இன்னும் என் கண்ணீர் வற்றவில்லை. அதற்குப்பின் வந்து வந்து பார்த்துவிட்டுப் போகும் நபர்கள்கூட வரவில்லை.

இந்த வேதனையினால் மீண்டும் என் உடல் நிலை பாதிக்கப்பட்டது. தனக்குத் திரும்மணம் நடக்காததுதான் என் உடல்நலக் குறைக்குக் காரணமென்பதை உணர்ந்த சந்திரா, எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாள். ஆனால், அந்தக் கடிதத்தைப் பார்த்தபின் என்னால் வாழ்விழந்த அவளுக்கு என் வாழ்வைக் கொடுத்துவிடுவது என்ற முடிவுக்கு வந்தேன்.

அன்பு அக்கா!

சிறு குழந்தையிலே நடந்த ஒரு விளையாட்டு நிகழ்ச்சியில் என் கால் ஊனமடைந்து விட்டதற்குக் காரணமே நாம்தான் என்று வீணாக நினைத்து மனதை வேதனைக்குள்ளாக்கி உன் உடல் நலனைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம். எனக்கு கல்யாணம் ஆகவில்லையே என்ற கவலையும் வேண்டாம். குழந்தைகள் பெறவும், குடும்பம் நடத்துவதற்கு மட்டும் பெண்கள் வாழ்ந்ததில்லை. சிறந்த ஒரு கொள்கைக்காகவும் வாழ்ந்திருக்கிறார்கள். இதிகாசத்திலே ஒரு காரைக்கால் அம்மையார், இலக்கியத்திலே ஒரு மணிமேகலை, வரலாற்றிலே ஒரு தில்லையாடி வள்ளியம்மாள். இவர்கள் பிறந்து வளர்ந்து வாழ்ந்த நமது மாவட்டத்தின் மண்ணிலே பிறந்த நானும் ஏன் இவர்களைப் போல் வாழக்கூடாது? குடும்பம் நடத்துவது ஒன்றுதான் மனித வாழ்க்

கையின் லட்சியமென்றால் ஒரு சித்தார்த்தர் புத்தராயிருக்க மாட்டார். ஒரு மோஹன்தாஸ் காந்தி, மகாத்மா காந்தியாகி யிருக்கமாட்டார். ஆகையால் என் வாழ்க்கையை இனி நான் மற்றவர்களுக்காகப் பயன்படுத்தப்போகிறேன். நான் ஆசிரியையாக பணியாற்றுவது என்று முடிவு செய்துவிட்டேன். ஏனெனில் நம் நாட்டில் இப்போது கல்விப் பஞ்சம்தான் அதிகமிருக்கிறது. நாளைய உலகம் உன் தங்கையைப் போற்றுவதைக் கண்டு பூரிப்படைய உன் உடலைக் கவனித்துக்கொள்ளவும். அசோகனை அகிம்சை வாதியாக்கியது ஒரு கலிங்கத்துப் போர்! என்னை மற்றவர்களுக்காக வாழ வைத்தது ஒரு 'ஆடிப் பெருக்கு' என்று எழுதியிருந்தாள்.

சந்திராவின் வாழ்விலே ஏற்பட்ட தோல்வி அவளைத் துறவுக் கோலத்திற்கு துரத்தியடிக்கிறது. சிறந்த ஒரு கொள்கைக்காக என் தங்கை வாழப்போகிறேன் என்று சொல்வதை நான் வரவேற்கிறேன். ஆனாலும் இயற்கையின் நியதியான உடலின் உணர்ச்சிகளும், உள்ளத்தின் எழுச்சியும் அவளைக் கொடுமைப்படுத்தாமல் விடாது.

காவேரியின் கரையிலிருந்து பார்க்கும்போது தண்ணீர் அமைதியாகப் போவது போல் தெரிந்தாலும், அதில் எதிர் நீச்சல் அடிக்க முடியுமா? அப்படியே நீந்தினாலும் எவ்வளவு நேரம் நீந்த முடியும்?

நான் ஓரளவுக்கு வாழ்ந்துவிட்டேன். என் உடல் நிலையும் அடிக்கடி பாதிக்கப்படுகிறது. தாலி கட்டிய கணவரைக்கூட என்னால் திருப்திபடுத்த முடியவில்லை. நான் நல்ல நிலையில் இருந்தால் சந்திராவை மணந்துகொள்ள என் கணவர் சம்மதிக்கமாட்டார். ஆகையால் தான் நான் சாக விரும்புகிறேன்' என்றாள் ஜெயா.

அறைக்கு வெளியே இருந்து டாக்டரிடம் ஜெயா சொன்னதை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்த அவள் கணவன் ரங்கராஜனின் கண்களும் கலங்கியது.

'ஜெயா! நீ சாகவேண்டாம். உன்னைச் சாகவும் விடமாட்டேன். சந்திராவைப் பற்றிக் கவலைப்படாதே. நானே அவளைக் கல்யாணம் செய்து கொள்கிறேன். இனி அவள் என் மனைவி...' உணர்ச்சிப் பெருக்கில் அவன் குரல் தடைபட்டது.

'அத்தான்! உண்மையாகவா? சந்திராவுக்கு கல்யாணம்! அவளுக்குக் கணவர் நீங்கள்!! ரொம்பவும் கொடுத்து வைத்தவள்தான் சந்திரா...' ஜெயா இதற்குமேல் பேசவில்லை. பலஹீனமான நிலையில் எதிர்பாராத செய்தியைத் தாங்கும் இதயம் அவளுக்கு இல்லாமல் போய்விட்டது.

அடுத்த வீட்டில் 'டப்' என்ற சப்தத்துடன் பலூன் வெடித்தது. பலூனை இழந்த குழந்தையின் அழுகை ஒலியுடன், ஜெயாவை இழந்த ரங்கராஜனின் அழுகை ஒலியும் கலந்து ஒலித்தது. ஆடிப் பெருக்கின் சுமங்கலிப் பிரார்த்தனை வீண் போகவில்லை. மஞ்சள் குங்குமத்துடன் மகாராசி போய்விட்டாள்.

பூவிழுங்கிப் பிள்ளையார் கொடுத்த வரம் மற்றவர்களுக்குப் பலித்ததோ என்னமோ தெரியவில்லை. ஆனால், சந்திராவின் விஷயத்தில் அது பலிக்கத்தான் செய்தது.

★



# ஜடாயு

வங்காளிக் கதை: தாராசங்கர் வந்த்யோபாத்யாய



தமிழாக்கம்: சௌரி

இரு சவங்களும் 'போஸ்ட்மார்டம்' கட்டிடத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டன. சவ பரிசோதனைக்கூடத்தில் நல்ல கூட்டம். ஒரு பிணம் பித்துக்கொள்ளி ஜடாயுவினுடையது; மற்றது ரௌடி காலுவினுடையது.

ஜடாயுவின் எலும்புக் கூடான சரீரத்தில் ஒரு பலத்த காயம் இருந்தது. கழுத்து, கைப்பக்கங்களிலும் லேசான காயங்கள் பட்டிருந்தன. இவைதான் சாவுக்குக் காரணம் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. காலுவின் அருகில் ரத்தம் தோய்ந்த கத்தி ஒன்றும் கிடந்தது. அது அவனுடையதுதான். ஜடாயுவைக் காலு ரௌடி அக்கத்தியால் குத்திக் கொன்றிருக்கிறான் என்பது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது. ஆனால், காலு எப்படிக் கொல்லப்பட்டான்? புதிராக இருந்தது.

காலு பேர்பெற்ற போக்கிரி; ராக்ஷசன். கருத்த-பெருத்த சரீரம், கூடையைக் கவிழ்த்து வைத்தாற்போல், புதர்க்காடான தலைமயிர்-பயங்கரம். சப்பை மூக்கு. வெளியே நீண்டிருக்கும் கோரைப்பல்-மகா கோரம். ஆறடி உயரத்திற்கு அச்சுறுத்தும் பயங்கர உருவம். இப்பேர்ப்பட்டவனை, ஜடாயு போன்ற ஒரு நோஞ்சல் பிறுக்கன் கொன்றுவிட்டான் என்பதை யாராலும் நம்ப முடியவில்லை. காலுவின் கழுத்தில் ஓர் ஆழமான புண் தெரிந்தது. கைவிரல் நகங்கள் ஆழப் பதிந்த அடையாளம் அது. ஜடாயுவின் அரை அங்குல நகங்களும் ரத்தத்தில் நனைந்திருந்தன.

1947-ல், குண்டன் காலு முதல் முதலாக, அந்த ஊர்ப்பக்கம் தலை காட்டினான். காவி உடை; கழுத்தில் ருத்ராக்ஷம்; தோளில் தொங்கும் ஜோல்நாப் பை; கையில் இரும்புச் சிம்டா-இந்தக் கோலத்துடன் ஒரு நாள் காலு வந்து

சேர்ந்தான். சிம்டாவைத் தாளமாக ஒலித்துக்கொண்டு, 'இந்து மகாஜனங்களே! பிராம்மணர் முதல் பறையர் வரை எல்லோரும் கேளுங்கள்! பகவான் விசுவநாதரின் ஆணைப்படி நான் வந்திருக்கிறேன். எல்லாரும் சந்தா கொடுங்கள். நவகாளியிலும் கல்கத்தாவிலும் இந்துக்களை முஸல்மான்களிடமிருந்து காப்பாற்றவேண்டும். இந்து தர்மத்தைப் பாதுகாக்கவேண்டும். தாராளமாக நன்கொடை அளியுங்கள்!' என்று கத்திக்கொண்டு வந்தான்.

அந்தச் சமயத்தில் சக்கிலியர்களுக்கு தோல் வியாபாரம் செய்யும் இம்தியாஸ் மியான் அந்தக் கிராமத்திற்கு வந்து சேர்ந்தான். ஊர் ஊராகச் சுற்றுவது அவன் தொழில். காலுவைக் கண்டதும், அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'அரே! நீதானே அன்றைக்கு எங்கள் ஊருக்கு வந்த பக்கிரி?' என்று கேட்டான்.

காலு துளிக்கூடக் கலங்கவில்லை. 'நாம் சன்னியாசி—பக்கிரி எல்லாரும் தான். முற்றும் துறந்த துறவி நாம்' என்றான்.

'அப்படி இல்லை. முஸல்மான் பக்கிரியாக நீ முர்ஷிதாபாத் 'ஷேக் பஸ்தி' (பேட்டை)க்கு வந்து, 'நான் ஆண்டவனின் தூதன். முஸல்மான்களை இந்துக்களிடமிருந்து காப்பாற்றவேண்டும்' என்று சொல்லி, சந்தா வசூலிக்கவில்லை? இன்று இங்கு வந்து......'

இதைக் கேட்டதும் காலுவிற்கு ஆத்திரம் வந்தது. சிம்டாவைச் சுழற்றிக்கொண்டு, அவனை அடிக்கப் போனான். இம்தியாஸ் பயந்து ஓடிவிட்டான். காலு அவனை விடவில்லை. அவன் மென்னியைப் பிடித்துக் கீழே தள்ளி புடைக்கத் தொடங்கியபோது, இம்தியாஸ் 'சுவாமி! நீங்கள் முஸல்மான் இல்லை. வேறு யாரோ அப்படி வந்திருக்கலாம். என்னை மன்னித்துவிடுங்கள்' என்று கெஞ்சினான்.

கூட்டத்தார் வேறு மத்யஸ்தம் செய்யவே அவனை விட்டான். உடனே கூட்டத்தைப் பார்த்து, 'இந்துக்களே! நீங்கள் வெறும் ஓநாய்க் கூட்டங்கள், பயந்தாங்கொள்ளிகள். இந்தச் சண்டாளன் சொன்னதைக் கேட்டீர்களா? முஸல்மான்கள் சந்தா வசூலிக்கிறார்களாம். படை திரட்டி உங்களை நிர்மூலமாக்கப் போகிறார்கள். இனியாவது விழித்துக்கொள்ளுங்கள். உங்களை அறிவுறுத்த பகவான் விசுவநாதரே என்னை இங்கே அனுப்பிவைத்திருக்கிறார். சந்தா செலுத்தாத இந்து சர்வநாசமடைவான். அவன் வீடு தீப்பற்றி எரியும்; பாம்பு பிடுங்கிச் சாவான். கொண்டாருங்கள் சந்தாவை!' என்று உரக்க அறிவித்தான். இந்துக்கள் பயந்துகொண்டு இயன்ற பணத்தைச் சந்தாவாகக் கொடுத்தார்கள். நல்ல வரமான வசூல்; ஐம்பது ரூபாய் சேர்ந்தது.

காலு இப்படியே ஊர் ஊராகச் சென்று சந்தா வசூலிக்கத் தலைப்பட்டான். இப்பேர்ப்பட்டவர்களுக்கு சீடர்கள் நிறையச் சேருவார்கள். காலு கோஸாயி (துறவி)க்குப் பல சீடப் பிள்ளைகள் வந்து கூடினார்கள். புதுப் புது இலாகாக்கள் ஏற்பட்டன.

ஒரு நாள் போலீஸ் வந்து, காலுவைக் கைது செய்துகொண்டு போயிற்று. நவக் கிராமம் என்ற புதிய ஊருக்கு அழைத்து வந்தார்கள். இந்து—முஸல்மான்களுக்குள் பிளவு ஏற்படுத்துவதாகக் குற்றச்சாட்டு. ஆனால், மறுநாளே காலு பழையபடி வெளியே வந்துவிட்டான். போதிய சாட்சியம் இல்லாததால், வெறும் மிரட்டலோடு விடுதலை செய்துவிட்டார்கள்.

காலு அந்தக் கிராமத்திலேயே, ஒரு அடர்ந்த மரத்தடியில் தியான யோகத்தில் அமர்ந்துவிட்டான். இரு தினங்களானதும், அந்த இடத்தில் திரிசூலமொன்றைப் பிரதிஷ்டை செய்தான். சீடர்கள் கூடினார்கள். அந்தி—சந்தி தவறாமல் பூஜை மணி ஒலித்தது. பட்சணம் விற்கும் ராம்துலாரி, ஒரு சிற்றுக் கொட்டகை போட்டுக் கொடுத்தாள். அவள் மகன் ஒருவன், கொள்ளைக் கூட்டத்தில் கூட்டாளி. கீழே நல்ல தளம் அமைக்கப்பட்டது. சிறு கோயில் ஏற்பட்டது. தெய்வத்தின் பெயர் காலி கேசவர். காலு அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டதால் இந்தப் பெயர் தரப்பட்டது.

பக்தர்கள் கூட்டம் வளர வளர, கிராமத்தில் திருட்டுகள் அதிகரிக்கத் தொடங்கின. காலு மக்களைப் பல வகைகளிலும் இழிவுபடுத்தத் தொடங்கினான்; அடியும் உதையும் எடுத்ததெற்கெல்லாம் விழத் தொடங்கின. ஊரே அவனைக் கண்டு அஞ்சியது.

ஒரு நாள் போலீஸ் இன்ஸ்பெக்டரும், துப்பறியும் அதிகாரி ஒருவரும் காலுவின் கோவிலுக்கு வந்து சேர்ந்தார்கள். அதிகாரியைப் பார்த்ததும், காலு குரோத வெறியுடன், அவர்மேல் பாய்ந்தான். அதற்குள் இருவரும் தம் கைத்துப்பாக்கிகளை நீட்டி, 'ஜாக்கிரதை!' என்று எச்சரித்தார்கள். காலு அடங்கினான். ஆனால், அவன் வாய் அடங்கவில்லை. மிக ஆபாசமாக வையத் தொடங்கினான். போலீஸ் ஜவான்கள் சூழ்ந்துகொண்டு, காலுவை நையப் புடைத்தார்கள். காலு ரோஷத்துடன் கத்தினான்:

'ஏய்! நான் நேபால் குண்டா, தெரிஞ்சுதா? இந்த அடி உதைகளுக்கெல்லாம் அஞ்சுகிறவனில்லை நான். என் தலையைப் பாருங்கடா, எத்தனை தடி அடிக் காயங்கள் விழுந்திருக்கின்றனவென்று. முதுகிலே பார், கத்திக்குத்து. ஒரு சமயம், உங்கள் ஜாதி நாய் ஒன்று என்னைத் துப்பாக்கியாலே சுட்டுவிட்டது. முழங்கால்பக்கம் துளைத்துவிட்டது; இதோ பார் வடுவை!'

கூடி இருந்தவர்களுக்கு முதலிலேயே சந்தேகம் ஏற்பட்டிருந்தாலும், இந்தக் காலு சன்னியாசி, பேர்பெற்ற போக்கிரியான நேபால் குண்டாவாக இருப்பானென்று யாரும் நினைக்கவில்லை. கல்கத்தாதான் அவனுடைய சேத்திரம். அங்கிருந்து விரட்டப்பட்டதும், பீஹாரில் குடியேறினான்—காலு குண்டா என்ற பெயரில். அங்கும் நிர்ப்பந்த நிலை ஏற்பட்டதும், வங்காளத்துக்கு வந்து சேர்ந்தான். கொள்ளை, திருட்டு, பெண்களைக் கடத்தல்—இவை தான் காலுவிற்கு முக்கியத் தொழில். இந்தியா—பாகிஸ்தான் பிரிவினை ஆனதும், அவன் தொழில் பிரபல்யமடைந்தது.



"நீங்க சங்கேதத்திலே முன்னுக்கு வர வேகத்தைப் பார்த்தா எனக்கு பயமாயிருக்கு..."

"ஏன் ஸார் அப்படி சொல்றீங்க..."

"நீங்க என்னிக்காவது மேடையிலேருந்து கீழே விழுந்துவிடப் போறீங்களேன்னுதான்..."

உள்ளூர் போலீஸ் இன்ஸ்பெக்டர், காலு சாமியாரின் நடவடிக்கையில் சந்தேகம்கொண்டு, அவன் போட்டோவைக் கல்கத்தாவுக்கு அனுப்பிவைத்தார். துப்பறியும் போலீஸ் இலாகாவிலிருந்து ஓர் அதிகாரி நேரிலேயே வந்துவிட்டார். அவரைக் கண்டதும் தான், காலு கொதித்தெழுந்தான்.

போலீஸார் காலுவைக் கைது செய்து கொண்டு போனார்கள். ஆனால், சில மாதங்கள் கழித்து, அவன் பழையபடியே வந்து சேர்ந்தான். அதே பரம பக்தனின் வேஷம்!

'காளி! மகாகாளி!......பம் சங்கர்! பம் சங்கர்!......' இடைவிடாத நாம கோஷம். நடு நடுவே, 'போலீஸ் என்னை என்ன செய்துவிட முடியும்? பகவான் விசுவநாதரின் கோபம் தாக்கியது. நடுங்கிப் போய் விட்டு விட்டார்கள். நான் என்ன குற்றம் செய்தேனாட்

...டைய எல்லாம் நம் தேச நலனுக்குச் செய்த உதவிதானே. நம் இந்து மதத்திற்குச் செய்த உதவிதானே. அந்தப் பாவிகள் என்னை என்ன செய்துவிட முடியும்?'

ஊர் மக்கள் இதையும் நம்பினார்கள். காலுவின் மதிப்பு முன்னிலும் அதிகமாயிற்று. 'பாபா' என்று ஆதரவுடன் அழைக்கலானார்கள். இதற்கு ஏற்றாற்போல், காலுவின் சக்தியும் அபாரமாக இருந்தது. ஒரு சமயம், வெறி பிடித்த ஒரு முரட்டு எருமையை ஒரே அடியில் பணிய வைத்துவிட்டான். ஒரு வெறி நாய் பல பேர்களைக் கடித்து, ஊர் பூராவையுமே கதிகலங்க வைத்தது. காலு தனியாகப் போய்க்கொண்டிருந்தபோது, அது கடிக்க வந்தது. கையிலிருந்த இரும்பு 'சிம்டா'வால் அதன் தலையைத் துண்டித்துவிட்டான் காலு!

'இத்தகைய ராக்ஷச பலமும், துணிவும் படைத்தவன் காலு. இவனைப்போய் நோஞ்சல் ஜடாயு கொல்வதென்றால்?

ஜடாயு பிறவியிலிருந்தே கிறுக்கன்தான். அவன் தந்தை சிபு கருமான் தொழிலாளி. வசதி அதிகமில்லாத போனாலும், உடை—உணவுக்குப் பஞ்சமில்லை. ஜடாயு வீட்டில் ஒரு நிமிஷம் கூடத் தங்கமாட்டான். இருபது—இருபத்திரண்டு வயதுவரைக்கும் தந்தையின் தொழிலுக்கு உதவியாக இருந்து வந்தான். அப்போது நல்ல வாட்டசாட்டமான வாலிபனாக இருந்தான். பிறகுதான் அவன் புத்தி பேதலித்தது.

கிராமத்து ஜமீன்தார்களின் இல்லங்களில் பண்டிகை—விழா நாட்களில் ராம லீலா நாடகம் நடைபெறும். அதில் 'சீதா அபகரணம்' கட்டம் வந்ததும், ஜடாயு குலுங்கக் குலுங்க அழுவான்.

கல்கத்தாவைச் சேர்ந்த ஒரு பையன், சீதை வேஷம் தரித்தான். வேஷப் பொருத்தம் மிக அமைப்பாக இருந்தது. ராமனாக, உள்ளூர்ப் பையன் சிவநாதன் நடித்து வந்தான். இவ்விருவர்களின் நடிப்புத்தான் சிகரமாக இருந்து வந்தது.

நாடகம் முடிந்த பிறகும், ஜடாயு வீடு திரும்பமாட்டான். இரவு முழுவதும், அந்த மைதானத்திலேயே உட்கார்ந்திருப்பான். அப்படியே தூங்கி விடுவான்.

ஒரு சமயம், நாடகம் முடிந்ததும், ஜடாயுவாக நடித்த உமேஷ் என்பவனை வழிமறித்து, அவன் கையை இறுகப் பிடித்துக்கொண்டான் ஜடாயு, 'மோசக்காரன்! குள்ளநரி!' என்று வைதான்.

உமேஷ் நடுங்கிவிட்டான்: 'விடடா கையை, வலிக்கிறது' என்று முறையிட்டான்.

'வலிக்கிறதா?' ஜடாயு வெறுப்புடன் சொன்னான்: 'வெட்கங் கெட்டவனே! செத்துவிட்டவன் மாதிரிப் பாசாங்கு தானே செய்தாய்? உயிரோடு இருக்க உனக்கு வெட்கமாக இல்லை? குள்ளநரி! நீ உயிராசையைவிட்டு, ராவணனோடு சண்டை போடவில்லை. செத்த மாதிரிப் பாசாங்கு செய்துகொண்டு, விழுந்து கிடந்தாய்; உடனே ராவணன் சீதாப்பிராட்டியை அபகரித்துக் கொண்டு போய்விட்டான்.' ராம லீலா நாடகத்தில் உமேஷ் ஜடாயுவாக வந்தவன் ஜடாயுவின் தியாகத்தைக் கண்டு சிபு கருமானின் மகன் 'ஜடாயு' தன் மயமாகிவிட்டான். சவம் மாதிரிக் கிடந்த உமேஷைக் கைகுவித்து பல முறை வணங்கினான். உரத்த குரலில், 'உமேஷ், நீ வாழ்க! உன் தியாகமே தியாகம்! உனக்கு நிறையப் புண்ணியம் கிடைக்கும். நேரே சுவர்க்கம் போவாய்' என்று கத்தினான்.

இதனால்தான், பிறகு உமேஷை உயிருடன் கண்டபோது, ஜடாயுவுக்கு ஆத்திரமும், வெறுப்பும் பொங்கி வந்தன. உமேஷ் உண்மையாகச் சண்டை போடாததனாலேயே, ராவணன் சீதையை அபகரித்துக்கொண்டு போய்விட்டான். தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத்தான், பிணம் மாதிரி கிடந்திருக்கிறான்; இதனாலேயே ராவணன் அவனை விட்டு விட்டான். இதே ஆத்திரத்தில் 'ஏண்டா வஞ்சகனே! உனக்கு உன் உயிர்தானே உயர்த்தியாகி விட்டது?' என்று கேட்டான்.

கேட்ட ஜனங்கள், வயிறு குலுங்கச் சிரித்தார்கள். 'நாடகத்தில் நடப்ப



தெல்லாம் உண்மையாகுமா? வெறும் நடிப்பு. பொய்' என்று அறிவுறுத்தினார்கள். ஜடாயுவுக்கு உமேஷிடம் வெறுப்பு ஏற்பட்டு விட்டது. அதிலிருந்து, சிவநாத்திடம் அதிக அன்பு செலுத்தத் தொடங்கினான். சிவநாத் ராமர் வேஷம் தரிப்பவன். நல்ல அழகன். கிராமத்திற்கே அவன் அரசன் போன்றவன். எளிய குடும்பத்தில் பிறந்து, எம். ஏ. வரை படித்துத் தேறியிருந்தான். கிராமத்தில் எந்த நற்காரியங்களுக்கும், அவன்தான் முதன்மையாக நிற்பான். விவாகம் செய்து கொள்ளவில்லை. பொது நலத் தொண்டே அவன் லட்சியமாகியது. இனிய இயல்பைப் போலவே, அழகிய முகம்



ஜடாயுவுக்கு சிவநாத் கூடவே இருக்க வேண்டும்போல் இருந்தது. 'எனக்கும் 'ராம லீலா' நாடகத்தில் வேஷம் கொடு' என்று நச்சரிக்கத் தொடங்கினான்.

சிவநாத் தெளிவாக, 'முடியாது' என்று சொல்ல முடியவில்லை. 'நிச்சயம் கொடுக்கிறேன்' என்று சொல்லிவைத்தான். உற்சாகம் தாளவில்லை ஜடாயுவுக்கு. தன்னை அசல் ஜடாயுவாகவே பாவித்துக்கொண்டு, 'யாரடா நீ? காயாந்தகாரப் பிசாசே! மாபாவி...!' என்று வசனங்களை உரக்க ஒப்புவித்தான். நடு நடுவே சில பிழைகளைத் திருத்திக் கொடுத்தான் சிவநாத். ஏறக்குறைய 'ஜடாயு'வின் வசனங்கள் முழுவதும் அவனுக்கு மனப்பாடம். ஆக்ரோஷத்துடன், நிஜமான ஜடாயுவாகவே தன்னைப் பாவித்துக்கொண்டு பேசினான். சிவநாத்தை ராமனாகவே நம்பி, அவன் காலடியில் விழுந்து, திவ்ய தரிசனம் தருமாறு வேண்டிக் கொண்டான்.

சிவநாத், ஜடாயு பைத்தியமாக இருந்தாலும் நன்றாக நடிக்கிறான் என்று எண்ணினான். வழக்கமான 'ஜடாயு' உமேஷைவிட இவனுடைய நடிப்பு நன்றாக இருந்தது. அதை வெளிப்படையாகச் சொல்லிப் புகழ்ந்தான்.

ஜடாயுவுக்கு ஆனந்தம். 'அப்படியானால், எனக்குக் கொடேன் அந்த வேஷத்தை. உமேஷ் பயந்தாங் கொள்ளி; வெறும் குள்ளநரி. அவன் சாகவே இல்லையே. தடியனாக வந்து நிற்கிறான்' என்றான்.

'சரிதான். நீ நிஜமாகவே செத்து விடுவாயா? போலீஸ் வந்து ராவணன் வேஷக்காரனைப் பிடித்துக்கொண்டு போய்விடுவார்கள்.'

'ராமப்பிரபு நீ; பகவான் நீ; நீ சொல்லிவிடேன், ஜடாயு சுவர்க்கத்திற்குப் போய்விட்டானென்று. போராடி தானே உயிரைக் கொடுத்தான் என்று சொல்லிவிடு. சத்தியமாகச் சொல்லுகிறேன், எனக்கு இன்றைக்கு 'ஜடாயு' வேஷம் கொடு.'

'இன்றைக்கு 'சீதா அபகரணம்' இல்லை; 'ராணா பிரதாப்' நாடகம். சிவநாத் சிரித்துக்கொண்டே சொன்னான்.

ஜடாயு பித்தனாகிவிட்டான், நாடகத்தில் தோன்றுவதற்கு. எப்போதும் அதே பேச்சுத்தான். சிவநாத் வீட்டுக்குத் தினமும் வந்துவிடுவான். 'ராமபிரானே! நீங்கள் கலியாணம் செய்து கொள்ளுங்கள். சீதாதேவியை வீட்டுக்கு அழைத்து வாருங்கள்' என்று நச்சரிப்பான்.

'ஜடாயு! அந்தப் பாக்கியம் எனக்கு இல்லை. இந்த ஏழைக்கு யார் பெண் கொடுப்பார்?' என்பான் சிவநாத்.

ஆனால், அந்த நிலை ஒரு நாள் திடீரென மாறிவிட்டது. சிவநாத்தின் மதிப்பு வெகுவாக உயர்ந்துவிட்டது. அவன் நண்பன் ஒருவன் சினிமாவில் வேலை பார்த்துவந்தான். அவனுக்கு ஒரு படத்தைத் தயாரிக்கும் பொறுப்பு கிடைத்தது. அதில், சிவநாத்தைக் கட்டாயப்படுத்தி நடிக்க வைத்தான். சிறிய பாகம்தான். ஆனால், அதன்மூலமே சிவநாத்தின் புகழ் பரவி விட்டது. நல்ல முகவெட்டு; நடிப்பும் மிக உயர்வாக அமைந்துவிட்டது. தொடர்ந்து இரண்டு படங்களில் வாய்ப்புக் கிடைத்தது. புகழ் பெருகவே, மூன்றாவது படத்தில் கதாநாயகனாக நடிக்க வாய்ப்புக் கிடைத்தது.



ஒரு வருஷம் கழித்து, சிவநாத் கிராமத்திற்குத் திரும்பினான். மிகப் பிரபலமான நடிகர் திலகமாகிவிட்டான் இதற்குள். ஏழ்மை விலகிவிட்டது. முன்னிலும் அதிகமான பொலிவு முகத்தில் பூரித்திருந்தது. கிராமத்தார் எல்லாரும் அவனைப் பார்க்க வந்தார்கள். ஜடாயுவும் வந்திருந்தான். எல்லாரும் விடை பெற்றுத் திரும்பினர். ஜடாயுமட்டும் எழுந்திருக்கவில்லை.

ஜடாயு முன்னைவிட மோசமாகத்தான் இருந்தான். உடல் இளைத்திருந்தது. தலைமயிர் காய்ந்து பம்பிக் கிடந்தன. அழுக்குத் துணி உடுத்தியிருந்தான். நின்ற இடத்தில் நிற்காமல் சுற்றித் திரிவதுதான் தொழில். சிவநாத்தைப் பார்த்ததும் ஜடாயுவின் கண்கள் கலங்கின; உதடுகள் துடித்தன 'ராம்! நீங்கள் இவ்வளவு கொடியவரா? என்னை விட்டு விட்டுப் போய் விட்டீர்களே. இங்கே உள்ளவர்கள் எனக்கு நடிக்க சந்தர்ப்பம் தர மறுக்கிறார்கள், நான் பைத்தியமாம். நீங்களே வந்து சொல்லுங்கள், நான் நன்றாக நடிக்கமாட்டேனா? இப்போ வேணுமானாலும் ஒப்பிக்கட்டுமா?...... 'ஏய், யாரடா நீ? காமாந்தகாரப் பிசாசே! மகாபாவி! ராவணா!......'

'சிவநாத், ஜடாயு! போதும், நீ நிஜமாகவே நன்றாய் நடிக்கிறாயப்பா!' என்று சொல்லி, அவனைச் சமாதானப் படுத்தினான்.

'அப்படியானால், என்னை உங்கள் கூடவே கல்கத்தாவுக்கு அழைத்துச் செல்லுங்கள். ஒரேவொரு தடவை நடிக்கவையுங்கள் போதும்; பிறகு நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.'

'சரி, ஆகட்டும்.'

சிவநாத் கல்கத்தாவிற்குப் புறப்பட்டபோது, ஜடாயு வழியனுப்ப வந்தான். 'போனதும் கடிதம் போடுங்கள்; நான் வந்து சேருகிறேன்' என்றான் ஆவலுடன்.

'ஆகட்டும்', சிவநாத் சொல்லிவைத்தான்.

பிறகு, அன்று முதல் ஜடாயு தினமும் போஸ்டாபீஸ் போய் வரத் தொடங்கினான். ஒரு நாள் பொறுமை இழந்து, 'எனக்கு வந்த கடிதத்தை உங்கள் போஸ்டுமேன் திருடிக்கொண்டு விட்டான்' என்று புகார் செய்தான். போஸ்ட்மாஸ்டர் ஜடாயுவை அதட்டி வெளியேற்றினார். பக்கத்திலிருந்தவர்கள் கேலி செய்தார்கள். ஜடாயு வெறி பிடித்தவன்போல் அந்த இடத்தை விட்டு ஓடினான். அடிக்கடி கூக்குரலிட்டான். ஜடாயுவின் நாடக வசனங்களை உரக்கச் சொல்லிக்கொண்டிருந்தான். பைத்தியம் முற்றிவிட்டது. வயிறு நிறைய உணவு கிடையாது. உடம்பு மேலும் மெலிந்துவிட்டது.

இத்தகைய ஜடாயுதானா குண்டா காலுவைக் கொன்றிருக்கிறான்? நடக்காத காரியம்!

ஃ ஃ ஃ

நீதிபதியின் இந்த வியப்பையும் சந்தேகத்தையும் போக்கினான் சிவநாத்: 'உண்மையில் நடந்தது அப்படித்தான். பூரா விவரத்தையும் சொல்லுகிறேன், கேளுங்கள்' என்று தொடங்கி விவரித்தான்.

காலு ரௌடி, ஜடாயு பைத்தியம் — இருவருடைய சவங்களும் பரிசோதனைக்கு வந்த அன்று மாலை, சிவநாத் கிராமத்திற்கு வந்து சேர்ந்தான். செய்தியைக் கேட்டதும், போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனான். அவனுக்கு விவாகம் சமீபத்தில்தான் நடந்தது. மனைவி நல்ல அழகி, படித்தவள்; அழகாகப் பாடுவாள். கலியாணமாகி வந்ததும், கிராமம் பூராவையும் அழைத்து விமரிசையாக விருந்து வைத்தான். அதற்கு ஜடாயுவும் வந்திருந்தான். அவனுக்குப் பெருமை. சிவநாத்தின் காதுகளில், 'ராமா! மிக அழகான சீதை கிடைத்திருக்கிறாள்' என்றான். பிறகு, 'ராமப் பிரபு! மறுபடியும் ஒரு தடவை 'சீதாபகரணம்' நாடகம் நடத்து. நான் பத்து ரூபாய் சேர்த்து வைத்திருக்கிறேன்' என்று வேண்டிக்கொண்டான்.

'சரி, ஆகட்டும், பார்க்கலாம். முதலிலே வயிறு நிறையச் சாப்பிடு' என்று கூறிவிட்டு அப்பால் சென்றான் சிவநாத்.

ஜடாயு விடவில்லை. சிவநாத்தின் மனைவியிடம், நீங்களாவது ராமருக்கு எடுத்துச் சொல்லுங்கள், தாயே!' என்று சொல்லி, ஜடாயுவின் வசனங்களை ஒப்பிக்கத் தொடங்கினான்.

சிவநாத் முக்கிய காரியமாக, கல்கத்தா செல்ல வேண்டியிருந்தது. மனைவியைக் கிராமத்திலேயே விட்டுச் சென்றான். ஸ்டேஷனுக்குப் போகிற வழியில், சிவநாத்தை ஜடாயு சந்தித்தான்: 'எங்கே போகிறாய்?' என்றான்.

'கல்கத்தாவுக்கு.'

'சீதாதேவி வரவில்லையா?'

'கிராமத்திலேதான் இப்போது இருப்பாள்' என்று சொல்லிவிட்டு, சிவநாத் சென்றுவிட்டான்.

இதற்குமேல் நடந்ததை, சிவநாத்தின் மனைவி கல்யாணி தெரிவித்தாள். அவள் உதடுகள் துடித்தன. பேசவே நா எழவில்லை, பக்கத்திலிருந்த சிவநாத், 'சங்கோசப்படாமல் சொல்' என்று ஊக்குவித்தான். பிறகுதான் அவளால் சொல்ல முடிந்தது.

கல்யாணிக்கு அந்தக் கிராமம் மிகவும் பிடித்திருந்தது. அங்கே ஓர் அழகான வீடு கட்ட வேண்டுமென்று ஆசைப்பட்டாள். கிராமத்திற்கு வெளியே வீடு கட்ட இடம் பார்த்தாயிற்று. தெருவுக்குள் பழைய வீட்டை இடித்துவிட்டுப் புதிதாகக் கட்ட அவள் விரும்பவில்லை, மேஸ்திரி, கண்டிராக்டர் எல்லாரும் அமர்த்தப்பட்டு விட்டார்கள், இந்த நிலைமையில், ஒரு நாள் காலு குண்டா, சிவநாத்தின் வீட்டிற்கு வந்தான். சிவநாத் துப்பாக்கியைத் துடைத்துக்கொண்டிருந்தான். 'சிவநாத்! நீங்கள் புது வீடு கட்டப் போகிறீர்களாமே?' என்று கேட்டான் காலு.

'ஆமாம்.'

'லல்லனுக்கு காண்டிராக்டு கொடுக்கக்கூடாது. என் [illegible] இரண்டு [illegible] செய்து, [illegible] படி [illegible] பயல் மறைந்து விட்டான். நான் வேறு ஆசாமியை ஏற்பாடு செய்கிறேன். செலவும் சல்லிசாக முடியும். நீங்களாவது இரண்டு தான் [illegible] செய்து கொடுங்கள்.'

20849.26



m.211, 13.02
MSS 20-11-95

'நான் லல்லனுக்கு நிச்சயம் செய்து விட்டேன். வாக்கு மாற முடியாது.

காலு மறுமுறையும் சொல்லிப் பார்த்தான். சிவநாத் தீர்மானமாக மறுத்து விட்டான். தோல்விக்கோபத்தில், 'சிவபிரானுக்கெதிரே உன்னுடைய இந்தத் துப்பாக்கி எதுவும் செய்ய முடியாது. ஞாபகமிருக்கட்டும்!' என்று சொல்லி விட்டுப் போனான், காலு.

சிவநாத் அலட்சியத்துடன் சிரித்துக் கொண்டே போய்விட்டான். உடனே கல்கத்தா வரும்படி தந்தி வந்தது; புறப்பட்டுப் போய்விட்டான்.

புதிய கட்டிடத்திற்காக செங்கல், சுண்ணாம்பு, சிமெட்டெல்லாம் வந்து சேர்ந்தன. பௌர்ணமிக்கு மறுநாள், கல்யாணி, கண்டிராக்டர் லல்லன், மற்றும் சில நண்பர்களுடன் வீடு கட்டுகிற இடத்திற்கு வந்தார்கள். அந்தி வேளை. பேச்சு சுவாரசியத்தில் பொழுது போவது தெரியவில்லை. பிறகு, கல்யாணி பாடினாள். பாட்டின் மயக்கில் பொழுதின் வளர்ச்சி தோன்றவில்லை. கடைசியில், எல்லோரும் வீடு திரும்பும்போது, இரவு அதிக நேரம் ஆகிவிட்டது.

தெரு முனைக்கு வந்ததும், கல்யாணி துணையாக வந்தவர்களை அனுப்பிவிட்டுத் தனியாக நடக்கலானாள். ஒற்றையடிப் பாதை. கொஞ்ச தூரம்கூட போயிருக்கமாட்டாள். யாரோ பின்னால் வந்து, கல்யாணியின் வாயைப் பொத்தினான். மறுகணமே, அவளை அப்படியே அலக்காகத் தூக்கிக்கொண்டு எதிர்ப்புறமாக ஓடினான். கல்யாணியால் வாயைத் திறக்க முடியவில்லை; கையும் காலும் அடித்துக்கொண்டன. தூக்கிப் போகிறவனை சரியாகக்கூடப் பார்க்க முடியவில்லை. கஞ்சா நாற்றம் மூச்சைத் தடைசெய்தது.

புதிய வீடு கட்டிக்கொண்டிருக்கும் இடத்தில் கொணர்ந்து, கல்யாணியைத் தரையில் போட்டுவிட்டு, அந்த அரக்கன் சிரித்தான். காலு குண்டாதான்.

பயங்கரச் சிரிப்பும், வெறியேறிய பார்வையுமாக முறைத்தபடியே, 'எங்கே போயிற்று உன் துப்பாக்கி? உன்னை இழுத்துக்கொண்டு, இந்தக்



கிராமத்தை விட்டே ஓடப்போகிறேன்' என்று குரூரமாகக் கத்தினான்.

அடுத்தகணமே, ஒரு பயங்கரச் சிரிப்பு அங்கே எதிரொலித்தது. பிரேதம்போல் ஓர் உருவம் அங்கே பாய்ந்து வந்தது. 'ஏய், யாரடா நீ? காமாந்த காரப்......' என்று கருவிய குரலை, காலு குண்டா மென்னியை அழுத்தி, அடக்கிவிட்டான். அப்படியும் பூரா வசனத்தையும் இழைந்த குரலில், அந்த உருவம் சொல்லித் தீர்த்தது. கல்யாணி அந்த ஆபத்துதவியைத் தெரிந்துகொண்டாள்; ஜடாயு!

கல்யாணி, கோர்ட்டாரிடம் குரல் தடுமாறச் சொன்னாள்: 'காலுக்குண்டன் கழுத்தை அழுத்திவிட்டதால், என்னால் நடக்க முடியவில்லை. ஒரு கையால் ஜடாயுவை விலக்கிக்கொண்டே, மறு கையால் இடுப்பிலிருந்து கத்தியை உருவ முற்பட்டான் காலு. ஆனால், ஜடாயுவின் பிடி, அவனது அடங்காக் கோபாவேசத்தைப்போலவே மிகக் குரூரமாக இறுகியிருந்தது. இருவருக்கும் பயங்கரப் போரே நிகழ்ந்தது. எனக்குக் கண்கள் இருண்டு வந்தன. மூர்ச்சித்துவிட்டேன்.

'நினைவு வந்து பார்த்தபோது, இரவு வெகு நேரம் ஆகிவிட்டிருந்தது. திங்கள் வட்ட வடிவுடன் தலைக்கு மேலே துலங்கியது. தோட்டத்துள் இருள் பிரிந்திருந்தது. சற்று அப்பால், ஒரு புறம் காலு குண்டாவும், மறுபக்கம் ஜடாயும் விழுந்து கிடந்தார்கள்.'

கல்யாணியால் தொடர்ந்து பேச முடியவில்லை. நெஞ்சை அடைத்தது. 'நான் மெல்ல வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். எல்லாரும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களிடம் உண்மையைச் சொல்லவில்லை. என் கணவர் வந்ததும், நடந்ததைச் சொன்னேன். இதுதான் உண்மை' என்றாள்.

சிவநாத் நெஞ்சு தழுதழுக்க, 'நான் ஜடாயுவின் சடலத்தை வாங்கிப் போக வந்திருக்கிறேன். நானே அந்திமச் சடங்குகளைச் செய்யப் போகிறேன்' என்று கோர்ட்டாரிடம் வேண்டிக் கொண்டான்.

*




## 11

'வாடியம்மா, வா! உன்னைப்பற்றித்தான பேசிக்கொண்டிருக்கிறோம்' என்று வரவேற்றாள், அங்கு வந்த மைதிலியை, காமுப் பாட்டி.

'நமஸ்காரம் செய்கிறேன். ஆசீர்வாதம் செய்யுங்கள்' என்று முதலில் காமுப் பாட்டியையும், பிறகு கமலா பாட்டியையும் நமஸ்காரம் செய்தாள் மைதிலி.

'தீர்க்க சுமங்கலியாக, மகாராஜியாக, நன்றாக இருக்கவேணும். வயதானதற்கு அந்த அதிகாரம் ஒன்று பூரணமாக இருக்கிறது என்னிடத்தில். சமத்தாக இரண்டு பிள்ளைகள், ஒரு பெண் பெற்றுக்கொள், போதும், அதற்கு மேல் வேண்டாம். 'நல்ல விவேகி, பரம சாது பாவம். அதற்குத் தகுந்த அகமுடையானைக் கடவுள் சங்கற்பிக்க வேண்டுமே' என்று உன் தகப்பனார் உன்னைப்பற்றி விசாரப்பட்டுக்கொண்டிருந்ததற்கு, நல்ல அகமுடையானை வந்து சேர்த்திருக்கிறான். உண்மையாகவே நல்லவர்களாக இருப்பவர்களுக்குக் கடவுள் ஒரு குறையும் வைக்கமாட்டார். பத்து நாளைக்கு இருக்கும்படியாக வந்திருக்கிறாயா? அல்லது உடனே போகவேண்டுமா?' என்றாள் காமுப் பாட்டி.

'நாளைக்கே போயாகவேண்டும், பாட்டி. தலைமை ஆபீஸிலிருந்து 'துரை' வருகிறானாம். ஆபீஸில் லீவே கொடுக்கமாட்டோமென்று சொன்னார்களாம். 'இவர்'தான் நாளைக்கு எப்படியும் திரும்பிவிடுவதாகச் சொல்லி, பிடிவாதமாக லீவ் வாங்கிக்கொண்டு வந்தார்' என்றாள் மைதிலி.

'இந்த ஒரு நாளைக்காக, இவ்வளவு நெருக்கடியில், பாவம் அத்தனை சார்ஜ் செலவு செய்துகொண்டு வரவேண்டுமா? அந்த ரூபாய்க்கு நல்லதாக ஒரு பட்டுப் புடவையோ, அல்லது ஒரு நகையோ வாங்கிக்கொள்ளலாமே!' என்றாள் கமலா பாட்டி.

'நான்கூட அதைத்தான் சொன்னேன் அவரிடம். 'போடி பைத்யமே! இந்தப் புடவையும், நகையும் நாளைக்கே வரும். தலைதீபாவளி என்பது மறுபடியும் வருமா? அதது நடக்கவேண்டிய காலத்தில் முறைப்படி நடந்தால்தான் அழகு. போய்த்தான் வரவேண்டும்' என்று சொல்லிவிட்டார். அதற்குமேல் நாம் சொல்ல என்ன இருக்கிறது பாட்டி?' என்றாள் மைதிலி.

'அவர் சொல்வதுதான்சரி. நாளைக்கே சம்பளம் உயரலாம். அல்லது இன்னும் எத்தனையோ வகையில் பணம் வரலாம். தலைதீபாவளி மறுபடி வருமோ? அந்தக் கடிதத்தைப்பற்றிக் கேட்டவுடனே, 'சரி, சரி! இது எல்லாரையும்போலச்

சாதாரண பிறவியல்ல. இது லக்ஷத்தில் ஒன்று. ஜன்மாந்திர சுகிர்தம் தவிர வேறொன்றும் சொல்வதற்கில்லை இதில்' என்று முடிவு செய்துவிட்டேன். இல்லாவிட்டால், ஒரு 'வயசுப் பிள்ளை' அதுவும் இந்தக் காலத்துப் பிள்ளை' அந்த மாதிரி ஒரு கடிதம் எழுதிற்று என்றால், அதைச் சாதாரணமாகக் கருதிவிட முடியுமா?' என்றாள் காமுப் பாட்டி.

'என்ன அப்படிப்பட்ட கடிதம் எழுதிவிட்டது? நான் கேள்விப்படவில்லையே' என்றாள் கமலா பாட்டி.

'சரிதான் போங்கள். அதற்குத் தங்க பிரேம் போட்டு, எக்ஸிபிஷன்களில் பார்வைக்கு வைக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோம். நீங்கள் என்னவென்றால் 'என்ன கடிதம்?' என்று கேட்கிறீர்கள்!' என்றாள் காமுப் பாட்டி.

'மைதிலியின் கலியாணத்திற்குச் சரியாக, பேத்தியின் பிரசவத்துக்கு நான் தான் பெங்களூருக்குப் போய்விட்டேனே, வந்ததும் சொன்னார்கள், 'மைதிலி ரொம்பவும் அதிர்ஷ்டசாலி, மாப்பிள்ளை தங்கமான பிள்ளை' என்று. கடிதத்தைப்பற்றி நான் கேள்விப்படவில்லை. யாரும் என்னிடம் சொல்லவும் இல்லை. யாருக்கு யார் எழுதினார்கள் கடிதம்?' என்றாள் கமலா பாட்டி.

'ஆமாம், ஆமாம், நீங்கள்தான் அவள் கலியாணத்தின்பொழுது ஊரிலில்லையே, உங்களுக்கு எப்படித் தெரியும்? ஆனால், எல்லோரும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய கடிதம் என்பதில் மட்டும் சிறிதும் சந்தேகமில்லை. அதிலும் நாகரிகம், நாகரிகம் என்று மார்தட்டுகிறதுகளே இந்தக் காலத்துப் பசங்கள், அதுகள் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டிய கடிதம் அது. கடிதமா அது? ஏதோ ரிஷிகள், லோகாசாரியர்களின் உபதேசம் போலல்லவோ இருக்கிறது' என்று காமுப் பாட்டி சொல்லிக்கொண்டிருக்கையில், 'சரி; சரி, ஆரம்பித்தாய் விட்டதா தோத்திர பாடம்......' என்று முணுமுணுத்தாள் கோகிலா,

'தெரியும், நீ பரிகாசம் செய்வாயென்று. அதென்னமோம்மா, அந்தக் கடிதத்தைப்பற்றி நினைத்துக்கொண்டாலே எனக்கு மனது அப்படி பூரித்துப் போகிறது' என்றாள் காமுப் பாட்டி.

'அது அப்படித்தான் எதையாவது சொல்லிக்கொண்டிருக்கும். நீங்கள் சொல்லுங்கள் மேலே' என்றாள் கமலா பாட்டி.

'மைதிலியின் அகமுடையான், அதன் பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளையாம். தகப்பனார் நல்ல உத்தியோகத்தில் இருக்கிறார். சொந்த வீடுகூட இருக்கிறதாம். கிராமத்திலும் பிதுரார்ஜிதமான நிலபுலன்கள் சுமாராக இருக்கிறதாம். பையன் பி. காம் பாஸ் செய்திருக்கிறான். பம்பாயில் நல்ல உத்தியோகத்திலிருக்கிறான். மூக்கும் முழியும் கண்ணுக்கு நன்றாக இருக்கிறான். கேட்கவேண்டுமா? கலியாணத்திற்குப் பெண்ணை வைத்திருப்பவர்கள் இந்த வரன் விஷயமாகப் படையெடுக்க ஆரம்பித்தார்கள். வரதக்ஷிணை, சீர், வரிசைபற்றிய பிரஸ்தாபங்களும் வந்தன. ஒரே பையன், அதுவும் நல்லவன், கேட்கவேண்டுமா? பெற்றோர்கள் மனதில் ஏதோ ஒரு 'புள்ளி' போட்டு வைத்திருந்தார்கள். எதற்கும் பையனையும் கலந்து கொண்டு தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட வேண்டுமென்று, பையனுக்குக் கடிதம் எழுதினார்களாம். அதில், இதுவரை வந்து கேட்டவர்களைப்பற்றியும், அவர்கள் கொடுக்க முன் வந்துள்ள வரதக்ஷிணை, சீர், வரிசைகளைப்பற்றியும் குறிப்பிட்டு, இதில் எதை முடிக்கலாம் என்பதைப்பற்றியும், எதற்கும் ஒரு பிரயாணம் வந்து போகுமாறும் எழுதியிருந்தார்களாம். இதற்கு அந்தப் பிள்ளை பதில் எழுதியிருந்ததாம்.

'நீங்கள்தானே எனக்குத் தெய்வம். என் விஷயத்தில் உங்களைவிட அதிக நல்லெண்ணம் உள்ளவர்கள் வேறு யார் இருக்க முடியும்? நீங்கள் சொல்கிறபடி கேட்க வேண்டியவன் நான். நீங்கள் சொல்வது எனக்கு நல்லதாகத்தான் இருக்குமென்பதில் சந்தேகம்



இருக்க முடியுமா? இருந்தாலும், என் அபிப்பிராயத்தையும் நீங்கள் கேட்டிருப்பதால், அதுபற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். என்ன இப்படிச் சொல்லுகிறதே என்று உங்களுக்குச் சிறிது ஆயாசத்தைக் கொடுக்கலாம். இருந்தாலும் என்னைப் பற்றியவரையில் என் கலியாண விஷயமாக நான் செய்துள்ள முடிவு இது தான்: அதாவது பெண் மேனகை, ரம்பை, ஊர்வசி, ஆ, ஊ என்று இருக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ரதிபோன்று இருந்தால் வேண்டாமென்றும் சொல்லவில்லை. அதாவது அழகுக்கு நான் அதிக முக்கியத்துவம் அளிக்கவில்லை. அதனால் குரூபியாக இருக்க வேண்டுமென்றும் சொல்லவில்லை. குலம், குணம், குடித்தனத்துக்கு ஏற்ற மனோபாவம் இவைதான் முக்கியம், இவற்றிற்குப் பிறகுதான் அழகுப் பிரச்னை. வரதக்ஷிணையைப் பற்றி வற்புறுத்த என் மனது இடந்தரவில்லை. இந்த வேளைக்கு கடவுள் புண்ணியத்தில் நீங்களும் நல்ல உத்தியோகத்தில் இருந்து நன்றாகச் சம்பாதிக்கிறீர்கள். நானும் சம்பாதிக்கிறேன். உசிதமான சொத்தும் இருக்கிறது. இது போதாமல், அவர்கள் கொடுக்கும் இரண்டாயிரம், மூவாயிரம் ரூபாய்தானா நம்மைத் தாங்கிவிடப் போகிறது? எதற்காக இதைச் சொல்கிறேனென்றால், பணத்திற்கு முக்கியத்துவம் அளித்துவிட்டால், குலம், குணம் முதலிய அம்சங்களெல்லாம் நாம் எதிர்பார்க்கிறபடி அமையாமல் போய்விடும். கடவுள் மனதுவைத்தால், நாளைக்கே எந்த வகையிலாவது மூவாயிரமென்ன, மூன்று லக்ஷம் நம்மைத் தேடி வருவதற்கான வழியைச் செய்து விடுவார்.

'ஆகையால், நான் குறிப்பிட்டவைகளை மனதிற்கொண்டு நீங்களே ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்து, முகூர்த்த





"மேஜையிலே இருந்த என் பேனாவை யாருடா சைஸு பண்ணினது?"

தேதியையும் முடிவு செய்துவிட்டு, எனக்குத் தெரியப்படுத்தினால், முகூர்த்த தினத்துக்கு முதல் நாள் நான் வந்து சேருகிறேன். நீங்கள் தேர்ந்தெடுப்பது நல்லதாக இல்லாமல், வேறு எப்படியிருக்க முடியும்? ஆகை யால், நான் வரவேண்டிய அவசிய மில்லை என்று நினைக்கிறேன்.

'ஏதோ, நீங்கள் கேட்டதனால் என் மனதிலுள்ளதை எழுதினேன். வேறு விதமாக நினைக்கவேண்டாம். பணத் தைப் பிரதானமாகக் கருதி முன்பின் தெரியாத இடங்களில் முடிவு செய்து விட்டுப் பின்னால் வருத்தப்படும்படி வைத்துக்கொள்ள வேண்டாம். இந்தக் காலத்தில்தான் 'திடீர்ப் பணக்காரர் கள்' ஆகும் கோஷ்டி நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகமாகிக்கொண்டு வரு கிறதே! அதனால்தான் சிறிது யோசித் துச் செய்யுமாறு எழுதுகிறேன். மன் னிக்கவும்'

—என்று எழுதியிருந்ததாம். எப்படி இருக்கிறது கடிதம்?' என்றாள் காமுப் பாட்டி.

'என்ன விவேகம் பார்த்தீர்களா? குட்டிச்சுவருக்கு ஆகிற மாதிரி நமக் கெல்லாம் வயதாகி இருக்கிறது. எவ் வளவோ அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. என்ன உபயோகம்? இந்த மாதிரி பக் குவ நிலை துளி ஏற்படவில்லையே. நீங் கள் சொல்கிற மாதிரி இதெல்லாம் சாதாரண பிறவியல்ல. லக்ஷத்தில் ஒன்று என்றுதான் சொல்லவேண்டும். அத்துடன் கடவுள் இதற்கெல்லாம் ஒரு குறையும் வைக்கமாட்டார். தியாக புத்தி அதிகம் ஏற்பட ஏற்படத்தான் மனிதனுக்குக் கௌரவம் அதிகம் ஏற் படுகிறது. ஆனால், அந்தத் தியாக புத்தி எல்லாருக்கும் அவ்வளவு சுலு வில் ஏற்பட்டுவிடக் கூடியதல்ல. அது ஜன்மாந்தர சுகிர்தம்தான்' என்றாள் கமலா பாட்டி.

'இல்லாமலென்ன. ஆகக்கூடி அது வரதக்ஷிணையை வற்புறுத்தியிருந்தால், இரண்டாயிரமோ, மூவாயிரமோ கிடைத்திருக்கப் போகிறது. அதை வாங்கியிருந்தால், எல்லாரையும்போல ஆகியிருக்கப்போகிறது. அதை வற் புறுத்தாமலிருக்கவேதானே, ஜனங் கள் அதை ஒரு விசேஷமாகப் பேசிக் கொள்கிறார்கள். இந்தப் பொத்து ரூபாய் வேறு எந்த வகையிலாவது வந்துவிடப்போகிறது. கௌரவம் வருமோ?' என்றாள் காமுப் பாட்டி.

'அந்தப் பணத்தையும் அது இழக்க வில்லை. மைதிலியின் தகப்பனார் ஆயி ரம் ரூபாய்தான் கொடுப்பதாக இருந் தார். அவர்கள் வரதக்ஷிணை விஷ யத்தை அவர் இஷ்டத்துக்கு விட்டு விடவே, இப்படிப்பட்ட வாறுக்குப் பின்னும் ஒரு ஐந்நூறு கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டுவிட்டது. ஏற்கெனவே, பக் கத்து வீட்டுப் பாங்குசம், பைசா கடன் கொடுக்க முடியாது என்று சொல்லிக்கொண்டிருந்தவர், அந்தப் பிள்ளையின் குணத்தைக் கண்டு வியப் புற்றவராய், 'இப்படிப்பட்டவர்களுக் குத்தான் சுவாமி அதிகம் கொடுக்க வேண்டும். பேரம் பேசுகிறவர்களுக்குக் காலணா கொடுக்கக்கூடாது. இதோ நாகும் இரண்டாயிரம் ரூபாய், நான் தரு



கிறேன். உமக்கு சௌகரியப்பட்ட போது திருப்பிக் கொடும்' என்று வலிய இரண்டாயிரம் ரூபாயைக் கொடுத்தார். ஆகக்கூடி மூவாயிரத் தைந்நூறு ரூபாய் வரதக்ஷிணை கொடுத்ததாகிவிட்டது. பேரம் பேசி யிருந்தால், ஆயிரத்தைந்நூறுதான் கிடைத்திருக்கும்' என்றாள் கோகிலா.

'சந்தேகமென்ன அதில். எதிலும் நிர்ப்பந்தம், கட்டாயம் என்று வந் தால், அங்கே இரக்கத்திற்கோ, அனு தாபத்திற்கோ இடமிராது. அவ்வள வென்ன, அதோ கோடி வீட்டுக் கோபு, அழகுதான் முக்கியம் என்று எத் தனையோ வருஷமாகக் 'கோடித்து' நல்ல அழகுள்ள ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்துக் கலியாணம் செய்து கொண்டது, சென்ற வருஷம் வைசூரி வந்து பாவம், அந்தப் பெண்ணை அடையாளமே தெரிந்துகொள்ள முடியாதபடி செய்துவிட்டுப் போய்விட் டது. இதற்கு என்ன சொல்கிறீர்கள்?' என்றாள் காமுப் பாட்டி.

'வாஸ்தவந்தான், எல்லாம் நம் இஷ் டத்தில் ஒன்றுமில்லை. இருந்தாலும் மனுஷ்யன் என்ற வகையில் அஞ்ஞானம் விடுகிறதோ? இதற்குத்தான் நல்ல சிந் தனா சக்தியும் விவேகமும் வேண்டு மென்று பெரியவர்கள் சொல்கிறார்கள். யார் யாருக்கோ சிலை வைக்கிறார்கள், உருவப்படம் திறந்து வைக்கிறார்கள், இப்படிப்பட்டவர்களுக்கு அதையெல் லாம் செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?' என்றாள் கமலா பாட்டி.


'உன் அப்பாவுக்குச் சந்தோஷத்தைச் சொல்லி முடியவில்லையடியம்மா! 'இதே தலைதீபாவளிக்குப் பெரிய மாப் பிள்ளை, வேஷ்டி நன்றாக இல்லை என்று அதை உடுத்திக்கொள்ளாமல் வீசி எறிந்துவிட்டு, கோபித்துக்கொண்டு அப்பொழுதே ரயிலேறிப் போய்விட் டது. இதோ சின்ன மாப்பிள்ளை, தங்க மான பிள்ளை பாவம், திடீரென்று ராத் திரி 'அவளுக்கு' (மனைவிக்கு) உடம்பு சரியில்லாமல் போய்விட்டது. சமையல் காரர் ஒருவரை ஏற்பாடு செய்யப் போனேன், 'சமையல்காரரும் வேண் டாம், ஒன்றும் வேண்டாம், அதெல் லாம் நாமே செய்து விடலாம்' என்று சொல்லிக் கூடஇருந்து சமையலைச் செய்துவிட்டது, கர்வம் என்பது மருந் துக்குக்கூட கிடையாது. என்னமோ, மைதிலி மகாசாது பாவம்! அதன் அதிர்ஷ்டம்தான் எல்லாம்' என்று சொல்லும்போது, அவர் கண்களி லிருந்து தாரை தாரையாக நீர் பெருக ஆரம்பித்துவிட்டது பாவம்' என்றாள் காமுப் பாட்டி.

'வேஷ்டியை வீசி எறிந்ததுதான் மிச்சம். இன்னும் ஒரு வேலைகூட நிலைக்காமல் அலைந்து கொண்டிருக் கிறது. என்ன உபயோகம்! விவேகமும் பொறுமையும் வேண்டும்' என்றாள் கமலா பாட்டி.

'நேரமாகிறது, நான் வருகிறேன், பாட்டி! 'அவர்' கோயிலுக்குப் போய் வர வேண்டுமென்றார். காத்துக்கொண் டிருப்பார்' என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள் மைதிலி.

★





மனோதத்துவ ரீதியில் சிகிச்சை செய்வதில் நான் நிபுணன் என்று பெயர் வாங்கிவிட்டேன். ஆகவே பல ஊர்களிலிருந்தும் 'கேஸ்'கள் என்னைத் தேடி வருவதில் வியப்பொன்றும் இல்லையல்லவா?...

வெங்கம்பட்டியோ, செங்கம்பட்டியோ, ஏதோ ஒரு ஊரிலிருந்துதான் வந்திருப்பதாகக் கூறினாள் அவள். அவளுடைய இடுப்பில் சுமார் ஐந்து வயதில் ஒரு ஆண் குழந்தை. பார்த்தால் அதிகம் பணக்காரியாக தோன்றாவிடினும் ஓரளவு செயலுள்ளவளாகவே காணப்பட்டாள். அவள் பெயர் கங்கா என்று சொன்னாள். குழந்தைக்குத்தான் உடம்பு சரியில்லையாம்.

குழந்தையை கீழே இறக்கி விட்டாள்.

'வா தம்பி' என்று கையைக் காட்டி அழைத்தேன் நான். சாதுக் கன்றுக் குட்டியைப் போல பையன் வந்தான். முகத்தில் அமானுஷ்யமானதொரு களை. நினைவு, உடலில் ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கும் ஒரு இரண்டுங் கெட்டான் களை...

குழந்தையை முதுகில் தட்டிக் கொடுத்தவாறே 'உன் பெயர் என்ன தம்பி?' என வினவினேன்.

'ஊய்...' என்று விகாரமாக ஒரு சப்தம்தான் பிறந்தது பதிலுக்கு.

வியப்பு மேலிட கங்காவை நோக்கினேன்.

அவள் கூறிய விவரம் இதுதான் :—

பையன் இரண்டரை வயது வரையிலும் சாதாரணமாகத்



தான் இருந்தானாம். அப்புறம் தான் ஏதோ பேயடித்தாற் போல நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வருகிறானாம். பசி இருக்கிறது. ஆனால் சாப்பிடத் தெரியவில்லை. யாராவது ஊட்டி விட்டால்,போதும் என்று சொல்லத் தெரியாமல் அதிகமாகவே சாப்பிடுகிறானாம். செய்யாத வைத்தியமில்லையாம்...

'எனக்கு ஒரே பிள்ளை டாக்டர்' என்று மருகினாள் பாசமுள்ள அந்த தாய்.

'உம்...' என்று ஒரு பெருமூச்சு விட்டேன் நான்.

'மற்ற டாக்டர்கள் என்ன அபிப்பிராயப்பட்டார்கள்?' என்று கேட்டேன், நச்சுக் குழாயை சுற்றியபடியே. என் பார்வை முழுவதும் அந்தப் பையனின் முகத்திலேயே பதிந்திருந்தது.

'அவர்களால் திட்டமாக ஒன்றும் கூற முடியவில்லை. குழந்தையின் மூளை பாதிக்கப்பட்டிருப்பதாகக் கருதுகிறார்கள். மனம் செயல்படுமளவுக்கு அறிவுத் திறன் இல்லையாம். ஏதோ நுண்ணிய நரம்பு அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டு விட்டதாம். அது சிகிச்சையால் குணமாகக் கூடியதல்ல...தானாகவேதான் சரியாக வேண்டும்...ஒருவேளை சரியாகாமலே இருந்தாலும் இருந்துவிடக் கூடும்...வேறு ஒன்றும் செய்வதற்கில்லை என்று கையை விரித்து விட்டார்கள். உங்களிடம் வந்தால் நிச்சயம் பரிகாரம் காண முடியும் என்று...'

'சரி; அதிருக்கட்டும். பையனுக்கு காது கேட்கிறதா?'

'காது கேட்கிறது...வாய்தான் பேச முடியவில்லை...'

நான் கையைத் தட்டினேன். பையன் திரும்பிப் பார்த்தான். வானொலிப் பெட்டியை முடுக்கினேன். உடனே ஓடி வந்து அதனடியில் உட்கார்ந்து கொண்டான்.

யாரோ கர்நாடக சங்கீதத்தை தேன் மழையாகப் பொழிந்து கொண்டிருந்தார்கள். குழந்தை மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தான்.

திடீரென்று வேறு நிலையத்தை திருப்பினேன். ஆர்கெஸ்ட்ரா முழங்கியது. இசையின் மாற்றத்தை அவன் நுட்பமாக கவனித்தான். உடனே அதற்கு தகுந்தபடி எழுந்து குதிக்க ஆரம்பித்தான்.

எனக்குத் திருப்தியாக இருந்தது. அவனால் எதையும் கிரகித்துக்கொள்ள முடிகிறது. ஆனால், வெளியிடத்தான் முடிவதில்லை என்பதைப் புரிந்துகொண்டேன்.

'ஏனம்மா' குழந்தையாயிருக்கும் சமயம் எந்த விதமாக இந்த கைய அதிர்ச்சி நிலை ஏற்பட்டது என்று கூற முடியுமா?' என்று கேட்டேன்.

'தெரியவில்லையே டாக்டர்.'

'எங்காவது விழுந்தானா?'

'இல்லவே இல்லை.'

'எதையாவது பார்த்து பயந்தானா?'


'நானறிந்த வரையில் ஒன்றுமில்லை...'

'விபத்துகள்?'

'கிடையாது.'

'உம்...சரி; ஜுரம் கிரம் ஏதாவது...'

'உண்டு...இரண்டரை வயது இருக்கலாம். திடீரென்று ஒரு நாள் ஜுரமாய் படுத்தான். ஒரு மாதமாயிற்று எழுந்திருப்பதற்கு. ஜுரமாக இருந்த அயர்வினால்தான் குழந்தை இப்படி இருக்கிறான் என்று எண்ணிக் கொண்டிருந்தோம்....ஆனால்



அந்த ஜுரத்திலிருந்து எழுந்த பின்தான் இப்படி ஆகிவிட்டான்.

'ஜுரம் வந்த காரணம்? மழையில் எங்காவது நனைந்தானா?'

'இல்லை. பார்க்கப்போனால் அன்று அவனை நான் தலை குளிப்பாட்டக்கூட இல்லை. எங்கள் வேலைக்காரப் பெண்ணிடம் அவனை விட்டுவிட்டு, வெள்ளிக்கிழமையாதலால் நான் கோவிலுக்குப் போயிருந்தேன்... திரும்பி வந்து பார்க்கையில் குழந்தையின் உடம்பு நெருப்பாய் கொதித்துக் கொண்டிருந்தது...'

'அந்த வேலைக்காரப் பெண் என்ன சொன்னாள்?'

'அவளுக்குப் பனிரண்டு வயதுதான் இருக்கும். குழந்தை தூங்குகிறான் என்று எண்ணி, பக்கத்தில் இருந்த கடைக்கு போய்விட்டு வந்திருக்கிறாள். வந்து பார்க்கையில்...'

'ஜுரமாக இருந்ததாக்கும்...'

'ஆமாம்.'

'அது சரி; உங்கள் கணவர்?'

'அவருக்கு பில்ம் ரிப்ரஸெண்டெடிவ் வேலை. சதா ஊர் ஊராக சுற்றிக் கொண்டிருப்பார். குழந்தைக்கு உடம்பு சரியில்லாத பொழுது அவர் ஊரிலேயே இல்லை...'

எப்படியாவது தன் மகனை, பிள்ளையாய் லட்சணமாய் பார்த்துவிட வேண்டுமென்ற



ஆதங்கம் அவளுடைய ஒவ்வொரு சொல்லிலும் ஒலித்தாலும், எனக்கென்னவோ, அவள் என்னிடம் எதையோ மறைப்பதாகவே தோன்றியது. அது என் சுபாவக் குற்றமாகவும் இருக்கலாம். எனக்குள் நான் ஒரு தீர்மானம் செய்து கொண்டேன். அதை அவளிடம் கூறவும் செய்தேன்.

'இதோ பாருங்கள்; எந்தக் கேஸையும் நான் நிராகரித்ததில்லை. உடனடியாக குணமாகுமா, ஆகாதா? என்பதையும் இப்பொழுது சொல்லிவிட முடியாது. அது என் சிகித்சை முறையுமன்று. நான் அவனுக்கு சிகித்சையை ஆரம்பிக்க வேண்டுமானால், அவனது இயல்புகளை நான் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு சில மாதங்கள் கூட ஆகலாம். அது வரையிலும் குழந்தை என்னிடம் இருக்க வேண்டும்...'

'அது எப்படி டாக்டர் முடியும்? அவனை நான் ஒரு விநாடி கூடப் பிரிந்ததில்லையே...'

தாய்மை வக்காலத்துப் பேசியது.

'அப்படிச் சொல்லிவிட்டால் என்னால் ஏதும் செய்வதற்கில்லையம்மா. குழந்தையின் உள்மனதை அதிர்ச்சி எவ்வளவு தூரம் பாதித்திருக்கிறது என்பதை நான் திட்டமாக அறிந்துகொள்ளாத வரையில் என் சிகித்சையை ஆரம்பிப்பதே தவறு'

என்று உண்மையை உள்ளபடியே கூறிவிட்டேன் நான்.

'சரி டாக்டர். அவன் இங்கேயே இருக்கட்டும். ஆனால், நான் அடிக்கடி வந்து பார்த்துக் கொள்ளலாமா?...'

'கண்டிப்பாகக் கூடாது. அவன் மனதைப் படிப்படியாக நான் விரும்பும் சூழ்நிலைக்கு மாற்ற வேண்டும். நீங்



கள் அடிக்கடி வந்தால் என் முயற்சி கலைந்துவிடக்கூடும்!'

'சரி டாக்டர்...' என்ற வார்த்தைகள் உணர்ச்சியின் சாரமாக வெளிப்பட்டன. தொடர்ந்து அவள் கேட்டாள்... 'உங்கள் பீஸ்...'

'அதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாமே' என்று எழுந்துவிட்டேன் நான்.

❖ ❖ ❖

அந்தப் பையன் கண்ணன் – அதுதான் அவன் பெயர் – என்னிடமே இருந்து வரலானான். என் நர்ஸிங் ஹோமில் இருந்த சில குழந்தைகளுடன் அவனைத் தனியாக விட்டிருந்தேன். முதலில் அவனை சமாளிப்பது சற்று கடினமாகத்தான் இருந்தது. ஒரு மூலையைப் பார்த்துக் கொண்டு திடீரென்று ஊளையிட ஆரம்பித்துவிட்டானானால் அவனை சமாதானப்படுத்துவது அரிதிலும் அரிதாகிவிடும். மற்றப்படி சாதுதான். ஆரம்பத்தில் அவன் சாப்பிட மறுத்தான். நாளாக ஆக தானாக ஒன்றிரண்டு கவளம் எடுத்து சாப்பிடத் தொடங்கினான். மற்றக் குழந்தைகள் பாடினால் தானும் ஏதோ சத்தமிட்டான். அவர்கள் சிரித்தால் சிரிப்பான். குதித்தால் குதிப்பான்...இசைக்கு அவன் எளிதில் மயங்கிவிடுவான். எனக்கு அவனுடைய அந்த நிஷ்டையை கலைக்கவே மனம் வராது. அச்சமயங்களில் கண்ணன் பார்ப்பதற்கு தேவலோகத்துக் குழந்தையைப் போல காட்சியளிப்பான்.

நாட்கள் நகர்ந்தன. நான் அவனை பத்தியத்திலும் நியமத்திலும் வைத்திருந்தேன். ஓரளவு தெளிவுக்கான மருந்துகளையும் கொடுக்க ஆரம்பித்தேன். சஸ்திர சிகித்சை செய்வதா? வேண்டாமா? என்பது தெரியவில்லை. ஏனெனில் 'எக்ஸ்ரே' படம் அவனை புத்திசாலியாகவே காட்டிவிட்டது...மூளையில் ஒன்றுமில்லை. கோளாறெல்லாம் மனதில்தான்...

அன்று காலை, காப்பி யருந்திவிட்டு வழக்கம் போல பேப்பரைப் பிரித்து பார்க்கும்பொழுது, பழைய கொலையைப் பற்றிய புதிய செய்தி ஒன்று வெளியாகியிருந்தது.

கொலை நடந்து ஏறக்குறைய இரண்டு வருடங்களுக்கு மேலாகியும், குற்றவாளி இன்னும் பிடிபடாத சாமர்த்தியசாலியாகவே இருந்தான். லக்ஷ்மணசாமி என்ற அவனுக்கு ஏதோ பண விவகாரத்தில் நண்பனுடன் குரோதம் ஏற்பட்டுவிட்டது. க்ஷணநேர வெறியில் முன்பின் யோசியாமல் க்ஷவரக் கத்தியை ஓங்கி, காரியத்தை முடித்துவிட்டு, பிரேதத்தையும் காரில் போட்டுக்கொண்டு ஊருக்கு சில மைல்களுக்கப்பால் ஒரு புதரில் எறிந்துவிட்டு ஓடிவிட்டான். போலீஸ் புலன் விசாரித்ததில் 'கதை'யைப் புரிந்து கொள்ள முடிந்ததே தவிர, 'கதாநாயகனை' கண்டுபிடிக்க முடியவில்லை...

பேப்பரில் வெளியாகியிருந்த செய்தி இதுதான்:—

சமீபத்தில் வெளியான பிரபல ஹிந்திப் படம் ஒன்றில் குற்றவாளி ஒருவன், வார்டனை கழுத்தில் க்ஷவரக் கத்தியால் அறுக்க திட்டமிடுகிறான். ஆனால் அன்பு அவனை தடுக்கிறது. மேற்படி காட்சி திரையில் நடந்து கொண்டிக்கையில், தியேட்டரில் படம் பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் தன்னை மீறி ஆவேசத்துடன் கூச்சலிட்டாராம்.



'கொலை!...இதே போல்தான்! இதே கொலை!...' என்று அவர் கூவினாராம்.

போலீஸார் அவனை கைது செய்து விசாரித்ததில் எதையும் கூற மறுத்துவிட்டாராம். ஆனால் லக்ஷ்மணசாமி கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட புள்ளி என்பது மட்டும் புலனாகிவிட்டது. மேற்கொண்டும் புலன் விசாரித்து வருகின்றனர் என்று வெளியாகியிருந்தது.

பேப்பரை மூடி எறிந்துவிட்டு சிந்தனையில் ஆழ்ந்தேன். கொலை செய்துவிட்டு ஓடி மறைந்துவிட்ட லக்ஷ்மணசாமியின் படத்தை நான் பேப்பரில் பார்த்திருக்கிறேன்...அந்த முகம்...என்னுள்ளத்தில் ஐயத்தை எழுப்பியது. பற்பல வினாக்களை தொடுத்தது.

மனத்தின் அந்தர் முகத்தில் ஒன்று பதிவாகிவிட்டால் அது லேசில் மாய்ந்துவிடுவதில்லை. ஆழ வகிர்ந்த வடுப் போன்ற அந்த உணர்ச்சி பகிர்முக மனத்திற்குத் தாவும் பொழுதெல்லாம் அறிவின் தீர்க்க நிலை கலைந்து அங்கு மனத்தின் ஆட்சியே வலுக்கிறது என்பது என் அனுபவத்திலும், படிப்பிலும் நான் உய்த்துணர்ந்த விஷயம். பிரக்ஞை ஸ்தூல சரீரத்தை மீறிய நிலையில் சூக்ஷ்மம் வெளிப்பட்டுத்தானே ஆகவேண்டும்.

அன்றே நான் சந்தேகப்பட்டேன்; கங்கா என்னிடம் எதையோ மறைக்கிறாள் என்று ...அதை இப்பொழுது உறுதிப்படுத்திக்கொண்டேன்.

வேலைக்காரன் ஒரு தட்டில் என்முன் முழு மாம்பழத்தையும் ஒரு சாத்துக் கொடியையும் கொண்டு வந்து வைத்தான். தட்டில் பளபளவென்று கத்தியும் மின்னியது. பக்குவமாக நானே தோல் சீவி ஒவ்வொரு துண்டாக அறுத்து சாப்பிடுவது என் வழக்கம்.

கூர்மையான கத்தி என்முன் கிடந்தது. 'கந்தசாமீ! கண்ணனை அழைத்து வா!' என்றேன் ஏதோ யோசனையுடன்.
கண்ணன் வந்தான்.

'வா கண்ணா, இப்படி என் பக்கத்தில் வா' என்றேன் கனிவுடன். கண்ணன் வந்தான்.

திடீரென்று கத்தியை எடுத்து ஓங்கி, முகத்தில் குரூரப்பார்வையுடன், விசையுடன் மாம்பழத்தை குத்தினேன். மேஜை மீதிருந்த சிவப்பு மைப்புட்டியை இடது கையால் தட்டினேன். கண்ணனின் மேனி முழுவதும் வாரியடித்தது அது...என் பார்வையின் பயங்கரம்!...

சர்வ விகாரமான—சகிக்க முடியாத பேரொலியை எழுப்பிய கண்ணன் சாய்ந்து விழுந்தான். அவனது மூடிய உள்ளம் படீரென திறந்துவிட்டதா என்ன?...

என் முகத்தில் புன்னகை அரும்பியது.

'எசமான்! என்னங்க இது?' என்ற கந்தசாமியின் குரலை நான் பொருட்படுத்தாமல் கண்ணனை என் இரு கரங்களினாலும் ஏந்தியெடுத்துக் கொண்டு சிகித்சை அறைக்குள் நுழைந்தேன்.

❖ ❖ ❖

அடுத்த நாளே கங்காவுக்குச் சொல்லியனுப்பினேன். அவள் வந்தாள். அவள் முகம் வழக்கம் போல் இல்லை. எதையோ பறிகொடுத்துவிட்ட ஏக்கத்தின் முத்திரையை அதில் கண்டேன்.

'வாருங்கள்' என்று அழைத்தேன். வந்து அமர்ந்து கொண்டாள். 'குழந்தைக்கு எப்படி

இருக்கிறது டாக்டர்' என்றாள் அவள் குரல்கூட நடுங்கியது. அது எதனாலோ?

'குழந்தைக்கு அப்படியே தானிருக்கிறது...ஆனால்...'

'என்ன டாக்டர்?'

'நீங்கள் என்னிடம் உண்மையை மறைத்துவிட்டீர்கள். ஆனால் உங்கள் மகன் விளக்கிவிட்டான்...'

'எந்த உண்மையை டாக்டர்! நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லையே.' அவள் நடிக்கவில்லை...ஆனால் முயன்றாள். வெற்றி கிடைக்கவில்லை.

'நீங்கள் லக்ஷ்மணசாமியின் மனைவி ஸரஸ்வதிதானே...' என் கேள்வி அவளை அயர வைத்தது.

'உங்களுக்கு எல்லாமேதெரிந்துவிட்டதா டாக்டர்' திடுக்கிட்டு எழுந்து, பீதியுடன் வினவினாள்.

'தெரியும். உங்கள் மகனே கூறிவிட்டான். ஸரஸ்வதியம்மா, உங்கள் மகனுக்கு குணமாகிவிட்டது. நீங்கள் கோவிலுக்குச் சென்றிருக்கையில் உங்கள் வீட்டு மாடியறையில் கொலை நடந்திருக்கிறது. எதிர்பாராமல் அங்கு சிக்கிக்கொண்ட குழந்தை அக்காட்சியை பார்த்துவிட்டான். அதுவே பிரமையாய் அவன் மனதில் பதிந்தும் விட்டது...என் திட்டப்படி ஒரு சிறு சோதனை நடத்தினேன்...வெற்றி கிடைத்துவிட்டது. பிறகு மீதி விஷயங்களைக்கண்ணனே திரைப் படம் பார்ப்பது போல் கூறிவிட்டான்...'உங்கள் கணவர் இப்பொழுது எங்கே இருக்கிறார்?' என்றேன் நான். என் குரல் ஓங்கியிருந்தது எனக்கே தெரிந்தது.

அவள் சிறிது நேரம் ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு விரக்தியுடன் சிரித்தாள்.

'போலீஸால் சாதிக்க முடியாததை, உங்கள் மனோதத்துவம் சாதித்துவிட்டது. தூண்டில் போட்டு பிடிப்பதைப் போல் பிள்ளையைக் காட்டி அப்பனுக்கு உலைவைத்து விட்டீர்கள்' என்றாள்.

'சிகித்சை எனது கடமை. சட்டத்திற்கும் சத்தியத்திற்கும் கட்டுப்பட்டவன் நான். நீதியே என் தெய்வம்...' என்றேன்... எனக்கும் அவளைப் பார்த்துப் பேச முடியவில்லை.

'சரி; உண்மையை நானே கூறிவிடுகிறேன். என் குழந்தைக்கு பேச்சைக் கொடுத்த உங்களுக்கு நான் எதைத்தான் செய்யக் கூடாது? என் கணவர் எங்கிருக்கிறாரோ எனக்குத் தெரியாது. ஆனால், ஒவ்வொரு மாதமும் அமாவாசையன்று அவர் மாறு வேடத்தில் என் வீட்டுக்கு வருவார்...'

விம்மினாள் அவள்.

'பேப்பரில் வந்த செய்தி?... அவன் யார்?'

'அவன் அவருடைய நண்பன். இனி அவர் பிடிபடுவதும் அதிக தூரத்தில் இல்லை...'

அவள் கை மாங்கல்யத்தை அணைத்துக் கொண்டது. கண்ணன் ஓடியே வந்தான், 'அம்மா' என்று கட்டிக்கொண்டான்.

தாயும் மகனும் ஒருமித்த அக்காட்சியின் நடுவே தூக்குக் கயிறு ஊசலாடியது. சரஸ்வதியம்மாள் விடைபெற்றுக்கொண்டு போன பிறகு, நான் டெலிபோன் டயலைச் சுழற்றினேன். என் கை நடுங்கியதை பொருட்படுத்தாமலேயே சுழற்றினேன். ஆம்! போலீஸுக்குத்தான். அன்று தானே அமாவாசை!...

☆



# கட்டடக் கலை

மா.ரா. இளங்கோவன்

மனிதன் நாகரிகமற்றவனாக வாழ்ந்த காலத்தில் விலங்குபோல வாழ்ந்தான்; இருக்க இடமும், உண்ண உணவும், உடுக்க உடையும் தேடிப்பெற முடியாமல் அலைந்து திரிந்தான்; படிப்படியாகத் தன்னுடைய தேவைகளை நிறைவாக்கிக் கொள்வதில் முனைந்தான்; நாகரிக வாழ்வைப் பெற்றான். நாகரிகமற்ற நிலையில் வாழ்ந்த மனிதன் நாகரிகமுடையவனாக மாறப் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தன. அவன் நாகரிகம் [illegible] துணையாயிருந்தவை படிப்படியாக அவன் கற்றுக்கொண்ட பல தொழில்களேயாகும். தன் நல்வாழ்வுக்குரிய பல தொழில்களைக் கற்றுக் கொண்டு நாகரிகமாக வாழத் தொடங்கிய மனிதன், உணவு, உடை, உறையுள் பெற்றமையோடு மன நிறைவு பெறவில்லை. அவன் மனம் இவற்றுக்கு அப்பால் வேறு இன்பத்தைப் பெறத் துடித்தது. அந்தத் துடிப்பின் விளைவுகளே கலைகள். மனிதனது உள்ளத்தில் நிறைந்து வெளிப்படும் ஆற்றலே கலை எனப்படும். மனிதனது கலையுணர்ச்சியால் தான் நமது தாயகத்தில் கண்டவர்கள் வியப்புறும் வண்ணம் எழில்மிக்க பல சிற்ப நிலையங்களை அமைக்க முடிந்தது. அஜந்தாக் குகைச் சிற்பங்களையும், எல்லோராக் குகைச் சிற்பங்களையும், காந்தார சிற்பங்களையும், சித்தன்னவாசல் சிற்பங்களையும் கண்டு வியவாதார் யார்?

தமிழகக் கலைகளாகக் கட்டடக் கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நடனக்கலை, இலக்கியக்கலை, நாடகக் கலை முதலியவற்றைக் கூறலாம்.

கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக் கலை முதலிய கலைகள் கண்ணால் கண்டு மகிழத்தக்கனவாகும். இசைக்கலை செவியால் கேட்டு இன்புறற்குரியது. நடனக்கலையும் நாடகக்கலையும் கண்ணால் கண்டும் காதால் கேட்டும் மகிழ்தற்குரியன. இலக்கியக்கலை கண்ணால் கண்டு மகிழமுடியாதது; காதால் கேட்டு மகிழலாம். ஆயினும் மனத்தால் உணர்ந்து மகிழும் சிறப்புடையதே இலக்கியக் கலையாகும். அதனால்தான் இலக்கியக் கலை கலைகளுள் சிறந்ததாகவும், நுண்மையுடையதாகவும் கருதப்படுகின்றது; 'நுண்கலை' எனப்படுகின்றது.

தமிழகக் கலைகளுள் முதலாவதாகக் கட்டடக் கலையைக் கூறலாம். கட்டடக் கலை சங்க காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்தமையும், சோழர் காலத்திலும் பல்லவர் காலத்திலும் மேலும் வளர்ச்சி பெற்ற நிலையையும் நாம் அறிதல் வேண்டும். சிந்து வெளி நாகரிகக் கண்டுபிடிப்புக்களாலும் கட்டடக் கலையின் சிறப்பு மிகுந்த நிலையை நாம் உணரலாம். கட்டடக்கலை காலத்திற்கேற்ப வளர்ச்சி பெற்றுள்ளது. ஒரு காலத்தில் நமது நாட்டுக் கோயில்கள் மரத்தினால் அமைக்கப்பட்டன; பின்னர்ச் செங்கல், சுண்ணாம்பு முதலியவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டன; அடுத்துப் பாறைகளைக் குடைந்து குகைக் கோயில்கள் அமைக்கப்பட்டன; இறுதியாகக் கருங்கற்களைக் கொண்டு கற்கோயில்கள் அமைக்கப்பட்டன; காலத்திற்கேற்பக் கலையும் வளர்ச்சி பெறுகின்றது என்பதை இதனால் உணரலாம்.

சங்க காலத்தில் இருந்த கோயில்களும் அரண்மனைகளும், மாடமாளிகைகளும் மண், மரம், சுண்ணாம்பு, செங்கல் முதலியவற்றால் கட்டப்பட்டன.

போரில் இறந்த வீரர்கட்கு அவர் தம் நினைவாக நடுகல் அமைக்கும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது; அவை

கோவில் வடிவினவாக அமைக்கப்பட்டன. சிவபெருமான், முருகன், திருமால், கொற்றவை முதலியவர்க்குரிய கோவில்களும் பத்தினித் தெய்வங்கட்குரிய கோவில்களும் இருந்தன. அவை யாவும் சிறியனவும், பெரியனவுமாய் இருந்தன.

'காடமர் செல்வி கழிபெருங்
கோட்டமும்
அருந்தவர்க் காயினும் அரசர்க்
காயினும்
ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க்
காயினும்
நால்வேறு வருணப் பால்வேறு
காட்டி



இறந்தோர் மருங்கில் சிறந்தோர்
செய்த
குறியவும் நெடியவும் குன்றுகண்
டன்ன
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக்
கோட்டமும்'
(சக்கரவாளக் கோட்டம் உரைத்த
காதை வரி)

அரசன் வாழும் மனைகள் நல்லநாள் குறித்து நாழிகை பார்த்து நேரறி கயிறிட்டுத் திசைகளையும் அவற்றில் நிற்கும் தெய்வங்களையும் நோக்கி வகுக்கப்பட்டன என்பதை,

'ஒருதிறம் சாரா வரைநாள்
அமையத்து
நூலறி புலவர் நுண்ணிதிற்
கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப
மனை வகுத்து'

என்னும் நெடுநல்வாடை அடிகளாலும் (75–78),


'அறக்களத் தந்தணர் ஆசான்
பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடும்
சென்று
மேலோர் விழையும் நூல்நெறி
மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக்
கோட்டம்'

என வரும் சிலப்பதிகார அடிகளாலும் (நடுகற்காதை, வரி 222–225)

காவிரிப்பூம் பட்டினத்தில் அரண்மனையிலிருந்த மண்டபம் ஒன்றுபற்றி மணிமேகலை கூறுகின்றது. அம்மண்டபம் மகதநாட்டு மாராட்டத்தைச் சேர்ந்த பொன்கம்மியர், அவந்திநாட்டுக் கொல்லர், யவனநாட்டுத் தச்சர், தமிழகத் தொழில்வல்லார் முதலியோரால் அமைக்கப்பட்டது. அம்மண்டபத்தின் தூண்கள் பவளத்தாலும், போதிகைகள் பலவகை மணிகளாலும் அமைக்கப்பட்டன. மண்டபத்தின் மேற்கூரை பொன்னால் வேயப்பட்டது. மண்டபத்தின் ஒவ்வொரு கோணத்திலும் முத்துமாலைகள் தொங்கவிடப்பட்டன. அது பொன் மண்டபம் ஆதலின் தரை சந்தனத்தால் மெழுகப்பட்டது. இம்மண்டபச் சிறப்பு சங்க காலக் கட்டடக் கலையின் சிறப்பை அறியத் துணை புரியும்.

'மகத வினைஞரும் மாராட்டக்
கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத்
தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடும்
கூடிக்





கொண்டினி தியற்றிய கண்கவர்
செய்வினைப்
பவளத் திரள்காற் பன்மணிப்
போதிகைத்
தவள நித்திலத் தாமந் தாழ்ந்த
கோணச் சந்தி மாண்வினை
விதானத்துத்
தமனியம் வேய்ந்த வகைபெறு
வனப்பிற்
பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன்
மண்டபத்து'

(மணிமேகலை, காதை 19, வரி–107–115)

சங்க காலக் கோயில்களைச் செங்கற் கட்டடங்களையும் மரவிட்டங்களையும் கொண்டு அமைக்கப்பட்டன. அவர் மேல் சுண்ணம் பூசப்பட்டது. கடவுளர்க்கென அமைக்கப்பட்ட கோவில்களும், அரண்மனைகளும், சுற்று மதில்களையும், உயர்ந்த கோபுரங்களையும், உயர்ந்த வாயில்களையும் பெற்றிருந்தன. கோபுரங்களில் பலவண்ணங்கள் தீட்டப்பெற்ற வடிவங்கள் அமைந்திருந்தன என்பதையும், வாயில்கள் துருப்பிடியாதவாறு செந்நிறம் பூசப்பட்ட இரும்புக் கதவங்கள் பொருத்தப்பட்டன என்பதையும் மணிமேகலையால் அறியமுடிகின்றது.

'சுடுமண் ஓங்கிய நெடுநிலை
மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர்
இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டுநிற் குநரும்'

(மலர்வனம் புக்க காதை, வரி 127–131)

கோவில்களின்மீது உலோகத் தகடுகளும் சாந்தும் வேயப்பட்டிருந்தன. மக்கள் வாழ்வதற்காகக் கட்டப்பட்ட மாடமாளிகைகளில் நிலா முற்றங்கள் அமைக்கப்பட்டன. கோவில்கள் செங்கற்களால் கட்டப்பட்டவை. ஆதலால், அவ்வப்போது அவற்றைக் கவனித்துச் செப்பனிடல் வேண்டும். அவ்வாறு

செய்யவில்லையாயின் அவை அழிவுறும். கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய அகநானூற்றுப் பாடலால் அழிவுற்ற செங்கற்கோவில் ஒன்றுபற்றி நாமறிய முடிகிறது.

'இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம்
வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மரஞ்சேர்
மாடத்து
எழுதணி கடவுள் போகலிற்
புல்லென்று
ஒழுகுபலி மறந்த மெழுகாப்
புன்றிணை'

(அகம், செ. 167)

கடைச்சங்க காலத்தின் இறுதிப் பகுதியில் வாழ்ந்த சோழப் பெருமன்னன் கோச்செங்கணான் என்பவன். இவன் சிவபெருமானுக்கு எழுபதுக்கு மேற்பட்ட கோவில்கள் கட்டினான். இவன் கட்டிய கோவில்கள் யாவும் மரத்தாலும் செங்கல்லாலும் அமைக்கப்பட்டனவாகும். இன்றும் திருவாங்கூரில் மரத்தால் கட்டப்பட்ட கோவில்களைக் காணலாம் என்றும், அவை கரிகாலன் காஞ்சிமாநகரக் கோவிலுக்குப் பொன்கூரை வேய்ந்து புதுப்பித்தமை போல செப்புத் தகட்டாலும் பொன் தகட்டாலும் வேயப்பட்டிருக்கும் என்றும் பேராசிரியர் பி. டி. சீனிவாச ஐயங்கார் கூறுகின்றார்.

கோச்செங்கணான் கட்டிய கோவில்களுள் சில மாடக் கோவில்கள் ஆகும். மாடக்கோவில்கள் என்பன மாடிபோல் அமைந்த கோவில்களாகும். சாய்க்காடு, நன்னிலம், பெருவேளூர் முதலிய இடங்களில் மாடக் கோவில்கள் உள்ளன. திருமங்கையாழ்வாரது பாடலால் திருநறையூர் என்னுமிடத்தில் கோச்செங்கணான் கட்டிய மாடக் கோவிலைப்பற்றி நாம் அறியலாம்.

'செம்பியன்கோச் செங்கணான்
சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம்
சேர்மின்களே'

திருவைகல் என்னுமிடத்தில் இருந்த மாடக்கோவில் திருவைகல் மாடக் கோவில் எனப்பட்டது. அதனைக் கட்டியவன் கோச்செங்கணானே என்று ஞானசம்பந்தர் தமது தேவாரத்தில் குறித்துள்ளார். இந்த மாடக் கோவில்கள் எத்தனை நிலையைக் கொண்டிருந்தன என்பது தெரியவில்லை என்றும், மூன்று நிலமாடக் கோவில்களாக அவை இருந்திருக்கவேண்டும் என்றும் அறிஞர் கூறுகின்றனர்.

சங்க காலத்திலிருந்த தெருக்கள் நீளமாகவும் அகலமாகவும் இருந்தன. இதனை 'ஆறு கிடந்தன்ன அகல்நெடுந் தெரு' என்னும் தொடரால் அறியலாம். தெருக்களினடியில் கால்களை அகழ்ந்து அவற்றின்மூலம் கழிநீரைப் போக்கினர். அக்கால்கள் கண்ணுக்குத் தெரியாதவண்ணம் அமைக்கப்பட்டமையின் அவை 'கரந்துபடை' எனப் பெயர் பெற்றன என்பதைச் சிலப்பதிகாரத்தால் அறியலாம்.

இதுகாறும் அறிந்த செய்திகளால், தமிழகத்தில் சங்க காலத்தில் கோவில்கள் இருந்தன; கோவில் மதில்கள் இருந்தன; கோபுரங்கள் இருந்தன; கோபுரங்களில் சுண்ணாம்பு, மண் இவற்றால் செய்யப்பட்ட வேலைப்பாடுகள் இருந்தன என்பதையும் அவை செங்கற்களாலேயே அமைக்கப்பட்டன, அவை குன்றுகள்போல உயர்ந்திருந்தன என்பதையும் நன்கு அறியலாம். கோவில்களே அல்லாமல் எழில்மிக்க மண்டபங்கள் இருந்தன என்பதையும் உயர்ந்த மாடமாளிகைகள் இருந்தன என்பதையும் அவை தேர்ந்த தொழில் வல்லுனர்களால் அமைக்கப்பட்டன என்பதையும் அங்கு வண்ணங்கள் தீட்டப்பட்ட வடிவங்கள் இருந்தன என்பதையும் அறியலாம்.






...ரும் கிருஷ்ணன் தயக்கத்துடன் நின்றான்.

'என்ன?...வழக்கப்படிதானா?'

கிருஷ்ணன் வெறுமே புன்முறுவலித்தான்.

'சரி, அப்படியானால் நான் போகிறேன். நீ ஊரைச் சுற்றிவிட்டு இஷ்டம்போல் வீட்டுக்குப் போ!...'

ரங்கநாதனின் சைகிள் சிவானந்தபுரத்தை நோக்கிக் கடுகிச் சென்றது.

கெடிலம் பாலத்தைக் கடந்து இடதுபுறமாகச் சைகிளைத் திருப்பினான் அவன். கிருஷ்ணனைப்பற்றிய நினைவும் அவனுள் ஒரு திருப்பத்தை உண்டு பண்ணிற்று.

இருவருக்கும் ஒரு பிரபல பாங்கில் உத்தியோகம். ரங்கநாதன் நாலைந்து வருஷமாகக் கடலூரிலேயே இருக்கிறான். ஊருக்கு வந்த புதிதில் திருப்பாதிரிப்புலியூரில் அறை எடுத்...

—பாங்குக்குச் செல்கையில் இருவரும் சேர்ந்துதான் போவார்கள். ஆனால், திரும்பும்போது மட்டும் தனித்தனியே வருவார்கள். காரணம், கிருஷ்ணனின் ஊர் சுற்றும் பழக்கம்தான்! பாங்க் முடிந்ததும் நேராக வீட்டுக்கு வரமாட்டான், அவன். ஹோட்டலில் சிற்றுண்டி அருந்திவிட்டுப் பூங்காவுக்குச் செல்வான். அரைமணிக்கு மேல் அங்கே அமர்ந்திருக்கமாட்டான். பின், வாசகசாலைக்குப் போய் ஒரு பத்திரிகையைக்கூட விடாமல் பொறுமையாகப் படிப்பான். சினிமாத் தியேட்டர்களின் வாசலில் இசைத்தட்டுச் சங்கீதத்தை அனுபவித்துக்கொண்டு அலட்சியமாக நிற்பான். ஆக, அவன் வீட்டுக்குத் திரும்பும்போது மணி ஒன்பதாகிவிடும்.

ஆனால், ரங்கநாதன் விஷயம் அப்படியில்லை. எல்லாச் செயல்களும் குறித்த காலத்தில், ஒரு ஒழுங்குப்படி நடந்தாக வேண்டும் அவனுக்கு.

ஆறு மணிக்குப் பாங்கிலிருந்து கிளம்பினால் சரியாக ஆறே காலுக்குத் தன் வீட்டு வாசலில் அவனை எதிர்பார்த்துக் கொண்டு நிற்கும் கமலாவின் முன் போய் இறங்குவான். அவள் அவனைக் கண்டதும் குதூகலத்துடன் புன்னகை புரிவாள். பின், தலையைச் சிறிது சாய்த்துக்

…மை — கேட்
…ஒரு நாளைக்காவது சீக்கிரம் வரக்கூடாதா?'

'பாங்கில் வேலை முடிய வேண்டாமா?'

சைகிளைத் தூக்கி, ரேழி ஓரமாக நிறுத்தி வைப்பான். ரேழியைக் கடந்ததும் பெரிய ஹால். நடுவே ஊஞ்சல். கீழ்ப் பகுதியில் குடியிருப்பவரின் மனைவி, அதில் அமர்ந்து பழைய பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருப்பார். ரங்கநாதனைக் கண்டதும் சடக்கென்று எழுந்து, சமையலறையில் இரண்டு நிமிஷம் தஞ்சம் புகுவார். அதைக் கவனியாமலே, கால் பூட்ஸ் ஒலிக்க, மாடிப்படி ஏறுவான், ரங்கநாதன். கமலா, அவனுக்குப் பின்னாலேயே, மானைப்போல் துள்ளியோடி வருவாள்.

'காப்பி கொண்டு வரட்டுமா?'

'இரேன். என்ன அவசரம்?... கை, கால் அலம்ப வேண்டாமா?'

அவள் காரணமில்லாமல் சிரிப்பாள். அவனுடனேயே அறைக்குச் சென்று, கழற்றிக் கொடுக்கும் சட்டையை வாங்கி உரிய இடத்தில் மாட்டுவாள்.

கொல்லைப்புறம் சென்று முகத்தைச் சுத்தம் செய்துகொண்டு ரங்கநாதன் திரும்புவான். சுவர்க் கடிகாரம் 'டிங்' என்று ஒலிக்கும்.

'மணி ஆறரை ஆகிவிட்டதே!'

'ஏன், எங்கே போகணும்?'

'எங்கேயும் இல்லை. பத்தரை மணியிலிருந்து ஆறரை மணி வரை நான் தனியாக இருந்தி



ஆ…
பேசுவது?...

அவள் நீட்டும் காப்பி…ளரை வாங்கிக்கொள்வான், ரங்கநாதன்.

'காப்பி எப்படி?'

'பிரமாதம்!'

'ஆமாம், எனக்காகப் பொய் சொல்லுங்கள்!...நான் கேட்டபின் தானே, சொல்கிறீர்கள்? நீங்களாகச் சொல்வதே இல்லை...'

அவள் செல்லமாகச் சிணுங்குவதை அவன் ரசிக்கவும் மாட்டான்; பொருட்படுத்தவும் மாட்டான். மேஜைமேல் கிடக்கும் வாரப் பத்திரிகையையோ, நாவலையோ எடுத்துப் படிக்க ஆரம்பித்துவிடுவான்.

'ஆரம்பித்து விட்டீர்களா?'

அவள் சொல் அவன் செவிகளில் விழாது. கதையில் ஆழ்ந்து போய்விடுவான். அவனுடைய கவனத்தைக் கவருவதற்கு அவள் வேண்டிய முயற்சிகள் செய்வாள்.

'பார்சல் கிளார்க் வீட்டுக் கல்யாணி அம்மாள் இருக்கிறாளே... இன்றைக்கு என்ன செய்தாள், தெரியுமோ?'

'உம்?'

'மத்தியானம் இரண்டு மணி இருக்கும். குழாயிலிருந்து தண்ணீர் எடுத்துவரப் போனாள்...'

'உம்...'

'குழாயண்டை அப்போது அதிகக் கூட்டமில்லை...என்ன, நான் சொல்கிறது காதில் விழுகிறதா?'

…

போகும். 'இவர் வ[...]' என்று ஏங்கிக்கொண்டிருந்தேன் நான். அவரோ முகத்தில் அறைந்தாற்போல் பதில் சொல்கிறார்'— ஒரு பெருமூச்சு. அடுத்த நிமிஷம், மௌனமாக எழுந்து, மெதுவாக மாடிப் படிகளில் இறங்கிச் செல்வாள். ஊஞ்சலில் அமர்ந்திருக்கும் அம்மாள் கமலாவுக்கு வரவேற்புக் கொடுப்பாள்!

மணி ஏழு ஆனதும், இரண்டு வீடுகள் தள்ளி, பெரிய திண்ணையில் நாலைந்து குரல்கள் உரக்கப் பேசிச் சிரிக்கும் சப்தம் ரங்கநாதனின் மோனத்தைக் கலைக்கும். கையிலிருக்கும் புத்தகத்தை மூடிவைத்து விட்டுப் பெரிய திண்ணையை நோக்கி நடப்பான்.

'ரங்கநாதன், வாப்பா. இன்றைக்குப் பேப்பர் பார்த்தாயோ?' என்று வரதசாமி முகமன் கூறுவார்.

'பார்த்தேன், ஸார்...'

'ரஷ்யாக்காரன் சந்திர மண்டலத்திலும் கொடி நாட்டிவிடுவான் போலிருக்கே...'

'ஹும், சுத்த ஹம்பக், அய்யா!...சும்மா பயமுறுத்துகிறான்...' என்று இடையில் வெட்டுவார், நித்திய சந்தேகப் பேர்வழி, மணிராவ்.

'அப்படிச் சொல்லிவிடாதேங்காணும்! அவன் லேசுப்பட்டவன் இல்லை'—இது வேதாந்தாச்சாரி.

…டிக
…ட்டையில் பொத்தான்களைக் போட்டுக்கொண்டிருப்பான், அவன்.

…அளவுக்குப் …கள். மணி எட்டரை ஆனதும் வராகசாமியின் கடைசி வாரிசு வந்து, 'அம்மா கூப்பிடறாள், அப்பா' என்று அவரை அழைப்பான். 'இதோ வந்துட்டேன்' என்று சொல்லிக்கொண்டே அவர் எழுந்திருப்பார். ஆனால், பேச்சை நிறுத்த மாட்டார். வீட்டை அடையும் வரை பேசிக்கொண்டே செல்வார்!

வராகசாமி இல்லாவிட்டால் பேச்சு சுகப்படாது. கூட்டம் கலைந்துபோகும். ரங்கநாதனும் வீட்டுக்கு நடையைக் கட்டுவான்.

அவன் மாடிப் படிகளில் ஏறும் போதே கமலா மென்குரலில் பாடிக்கொண்டிருப்பது செவிகளில் விழும். தோத்திரங்களை ராகம் போட்டுப் பாடிக்கொண்டிருப்பாள், ஒருவித பரவச நிலையில். 'சாப்பிடலாமா?' என்று ரங்கநாதன் கேட்டதும் அவள் உணர்வு பெறுவாள்.

சாப்பிட்டு விட்டுக் கை அலம்பினால், மணி எட்டு ஐம்பது. ஐந்து நிமிஷம் நாற்காலியில் அமர்ந்து சிரம பரிகாரம் செய்து கொள்வான். மணி, எட்டு ஐம்பத்தைந்து. அவனுடைய கை சட்டையை நாடும்.

'கிளம்பியாச்சா?' சுட்டு விடுபவள்போல் பார்ப்பாள், கமலா.

'பாதி ராத்திரிவரைக் கண் விழித்துவிட்டுக் காலையில் எட்டு மணிவரை தூங்குகிறது. தினமும் இப்படியே செய்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்?' மலைமேல் எறிந்த செங்கற்துண்டுகளைப் போல் அவள் சொற்கள் பொல பொலத்துப் போகும்.

'சரி, சரி. ராத்திரி வேளையில் கத்தாதே. கேட்கிறவர்கள் சண்டை என்று நினைத்துக் கொள்ளப் போகிறார்கள்…'

கமலாவைப் பார்ப்பதற்குத் தைரியம் இல்லாமல், குனிந்த தலையுடன் படிகளில் இறங்குவான், ரங்கநாதன். கண்களில் நீர் துளிக்க அவள் அலமாந்து நிற்பதையோ, உணவு கொள்ளப் பிடிக்காமல் இரண்டு பருக்கை கொறித்துவிட்டு அவள் இதய பாரத்தைத் தாங்காமல் படுக்கையில் விழுவதையோ அவன் அறியமாட்டான்.

பெரிய திண்ணையில் சீட்டாடி விட்டு, வீட்டுக்கு வந்து கதவைத் தட்டும்போது நடுநிசியாகியிருக்கும். கீழ்ப் பகுதிக்காரர் வாசற் கதவைத் திறந்துவிடுவார். அவன் மாடிக்கு வந்து பார்க்கும்போது கமலா ஆழ்ந்த நித்திரையில் இருப்பாள்! அநேக நாட்கள், அவனை எதிர் பார்த்து நாற்காலியில் உட்கார்ந்தபடியே மேஜைமேல் சாய்ந்து உறங்கிவிட்டிருப்பாள்…





ரங்கநாதன், வெள்ளிப் பிள்ளையார் கோவிலைக் கடந்தான். இன்னும் இரண்டு பர்லாங் தூரம் தான், சிவானந்தபுரம் வந்து விடும். அவன் வீட்டு வாசலில் கமலா நின்றுகொண்டிருப்பாள், வழிமேல் விழி வைத்து. 'ஏன், இவ்வளவு நாழி?' என்று கேட்பாள். வழக்கமான பதில், காப்பி, நாவல் படித்தல், பெரிய திண்ணை…

ஆனால்…?

'அட, கேட் அருகில் கமலாவைக் காணவில்லையே?'

அவளை அங்கே காணாதது ரங்கநாதனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

சைகிளிலிருந்து இறங்கி உள்ளே நுழைந்தான். ஊஞ்சலில், கீழ்ப்பகுதி அம்மாள் உட்கார்ந்திருந்தாள். ஆனால், கமலா கண்ணில் படவில்லை. மாடிப் படியேறி மேலே வந்தான். சாமான்கள் எல்லாம் அலங்கோலமாகக் கிடந்தன!

ரங்கநாதனுக்குச் சுரீரென்றது.

'கமலா நறுவிசாகக் காரியம் செய்பவளாயிற்றே? துணிமணிகளை நான் கண்ட இடத்தில் போட்டால், அவைகளைப் பொறுக்கி உரிய இடங்களில் வைத்துவிட்டு, என்னையும் கடிந்துகொள்வாள். அதோ முகம் பார்க்கும் கண்ணாடி பெஞ்சியின் மேல் வந்து கிடக்கிறது. பவுடர் டப்பா இடம் பெயர்ந்திருக்கிறது. கொடியில் உலர்த்தியிருந்த துணிகளில் சில கீழே

விழுந்து கிடக்கின்றன. ஊம்! தலையைக்கூடப் பெருக்காமல் இவள் எங்கே போய்விட்டாள்? ரொம்ப 'இடம்' கொடுத்துப் போய்விட்டது, இவளுக்கு. இனி, கொஞ்சம் கண்டிப்புடன்தான் நடந்துகொள்ள வேண்டும்...'

சட்டையைக் கழற்றி ஸ்டாண்டில் மாட்டினான். கீழேயிருந்து 'மாமோவ்' என்ற குரல் கேட்டது.

'யாரது?'

கீழ்ப் பகுதிக்காரரின் ஆறு வயதுப் பெண் மீனு படிக்கட்டுகளில் ஏறி வந்துகொண்டிருந்தாள்.

'மாமா...மாமி ஊருக்குப் போயிட்டா...'

'ஊருக்கா?'

'ஆமா. அந்த மேஜைமேலே தந்தி இருக்கு...'

ரங்கநாதனின் முகம் வெளிறிற்று. பறந்து சென்று தந்தியை எடுத்துப் படித்தான். 'அம்மாவுக்குத் திடீரென்று உடல்நிலை மோசமாகிவிட்டது. உடனே வருக. சேதுராமன்.'

மாயவரத்திலிருந்து கமலாவின் அண்ணன் கொடுத்திருந்த தந்தி, அது.

'மாமி எப்போது புறப்பட்டுப் போனாள்?'

'நான் பள்ளிக்கூடத்திலேருந்து மத்தியானச் சாப்பாட்டுக்கு வர்றதுக்கு முன்னாடியே போயிட்டாள்...'

இதற்குள் மீனுவின் தாய் கீழேயிருந்து அவளை அழைத்தாள்.

அலுப்பும் சலிப்பும் சேர்ந்து கொண்டு ரங்கநாதனை வாட்டியது. இனிமேல், பத்து நாளோ, இருபது நாளோ—கமலா வரும் வரை—ஹோட்டல் சாப்பாடுதான். இந்த நினைவே அவன் உள்ளத்தில் கசப்பைப் பரப்பியது.

மேலும், வீடு இருந்த அலங்கோலத்தை யார் ஒழுங்குபடுத்துவது? சேச்சேச்சே!...சாமான்களெல்லாம் இறைந்து...

கிணற்றிலிருந்து நீர் மொண்டு முகத்தைச் சுத்தப்படுத்திக் கொண்டான், ரங்கநாதன். சில்லென்று நீர் பட்டதும் வெறுப்பும் அலுப்பும் மறைந்து பச்சாதாபம் மேலோங்கியது. 'பாவம், கமலா. அவள் அம்மா போய் விட்டால்...'

மேல் துண்டால் முகத்தைத் துடைத்துக்கொண்டு, ஹாலைக் கடந்து, முதல் படியில் காலை வைத்தான்.

'மாமா...காப்பி.' மீனு டம்ளரும் கையுமாக வந்தாள்.

'அடேடே வேண்டாம் மீனு. நான் ஹோட்டலுக்குப் போகிறேன்...'

'மாமி போட்டுக் கொடுக்கச் சொன்னாளாம். ராத்திரி சாப்பாடும் வைத்திருக்காளாம்...அப்புறம், உரியிலே மோர் இருக்காம். ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் கடிதாசி போடுகிறதாகச் சொன்னாளாம்...'

ஒரு டம்ளர் காப்பியையும் இரண்டே வாயாகக் குடித்துவிட்டு மாடிக்கு வந்தான் ரங்கநாதன்.

ஒழுங்கு தவறிக் கிடந்த சாமான்கள் அவனைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தன.

அவனுக்கு என்றைக்குமே சாமான்களை ஒழுங்காக வைக்கும் பழக்கம் இல்லை. கல்யாணமாவதற்கு முன், அவன் குடியிருந்த அறையைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கும். நாலாபுறமும் துணிகள் காட்சிதரும். புத்தகங்களும் பத்திரிகையும், தரையில் கால்வைக்க இடமில்லா



மல் அடைத்துக்கொண்டிருக்கும்!...

கல்யாணமாகிக் குடித்தனம் வைத்த பின்புதான்—ஒன்றரை வருடமாகத்தான் — அவனுடைய பழக்கவழக்கங்கள் ஒரு ஒழுங்குக்கு வந்திருக்கின்றன. எல்லாம் கமலாவின் போதனைதான்.

ரங்கநாதனுக்கு என்னமோ, கல்யாணமான பின் வாழ்க்கை ரம்மியமாகத்தான் தோன்றிற்று. காலாகாலத்தில் நித்தியச் செயல்கள் நடந்தேறின. கமலா அவனுக்கு எந்தவிதமான தொந்தரவும் கொடுக்கவில்லை. குடும்பத்தின் பாரத்தை உணராமல் அதன் சுகத்தை மட்டும் அனுபவித்துக் கொண்டிருந்தான் அவன். பாரம் முழுவதையும் கமலா சுமந்து கொண்டிருந்தாள்!

நாற்காலியில் அமர்ந்து, சிந்தனைகளில் லயித்திருந்த ரங்கநாதனின் இதயம் தடக்தடக் என்று குற்றம் புரிந்துவிட்டவனைப்போல் அடித்துக்கொண்டது. தலையைப் பலமாக ஆட்டினான் சிந்தனைகளை உதறிவிடுபவனைப் போல!

கண்கள், எதிர்ச்சுவரில் ஒரு புகைப்படத்தில் பதிந்தன. அவனும் அவளும் மணக்கோலத்தில் நிற்கும் படம். குறுகுறுப்பும் அடக்கமும் குடும்பப் பாங்கும் ஒருங்கே நிறைந்த அவள் கண்கள்...

கமலா திடீரென்று தோன்றித் தன் கைகளில் அகப்பட்டுக் கொள்ள மாட்டாளா என்றிருந்தது ரங்கநாதனுக்கு. ஆனால், அவள் ஏறக்குறைய முப்பத்தைந்து மைல்களுக்கு அப்பால் அல்லவா இருக்கிறாள்?

கடிகாரம் ஏழு முறை அடித்து விட்டு ஓய்ந்தது. பெரிய திண்ணையிலிருந்து நாலைந்து பெரிய




"பெண்கள் ஆண்களைவிட அழகாக இருக்கிறார்கள்"!

அது "இயற்கை"!

"இல்லை! அது செயற்கை"!

குரல்கள் இடிமுழக்கம்போல் கேட்டன. ரங்கநாதன் நகரவில்லை. 'தலை ஆ...மாம். இவ...ளுக்கு வேறு வேலையில்லை. வெறும் பேச்சுப் பேசி, வெட்டிப் பொழுது போக்குகிறார்கள்.'

நாற்காலியிலிருந்து எழுந்து அறையில் மேலும் கீழும் நடந்தான். கால்கள் அவனைச் சுமக்க முடியாமல் சுமந்தன. உற்சாகமில்லாமல் அறைக்கு வெளியே பார்த்தான். ஒரே இருட்டு. பயந்து போய்ச் சட்டென்று விளக்கைப் போட்டான். மின்னொளியின் முதல் அலையில் கமலா நடந்து செல்வதுபோன்ற பிரமை உண்டாயிற்று. 'கமலா...' என்று அழைப்பதற்கு மனம் துணிந்து தயாராயிற்று. ஆனால், நாக்கு மேலண்ணத்துடன் ஒட்டிக் கொண்டு சொல்லைச் சிறைப் படுத்தி விட்டது!

அறைக்கு வெளியே நடந்தான். கடைசிச் சுவர்வரைப் போய்விட்டுத் திரும்புகையில், அவன் உள்ளத்தைக் கப்பென்று பயம் சூழ்ந்துகொண்டது. 'நான் இன்றிரவு இங்கே தனியாகவா இருக்கவேண்டும்?'

குடித்தனம் வைத்த நாளிலிருந்து அவளை விட்டுப் பிரிந்திருந்ததில்லை ரங்கநாதன். ஆகவே இப்போதைய பிரிவு சகிக்க முடியாததாக இருந்தது அவனுக்கு.

அவள் அவனுடைய செயல்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றி நின்றாள். அவன் சௌகரியங்களைக் கவனித்துக்கொண்டாள். அவனுடைய காரியங்களில் கட்டுப்பாடான ஒழுங்கையும் நியதியையும் புகுத்தினாள். அவன் அறியாமலேயே அவனது மிக அவசியத் தேவையாகத் தன்னை ஆக்கிக் கொண்டு விட்டாள் கமலா.

இன்றைக்கு அவள் ஊரில் இல்லை. உலகமே மாறிவிட்டதாகத் தோன்றிற்று ரங்கநாதனுக்கு!

'கமலா நீ அருகே இருக்கும்போது உன் அருமை எனக்குத் தெரியவில்லை. நீ இல்லாதபோது நான் நன்றாக அதை உணர்கிறேன்!...நீ என்னைப்பற்றிக் கவலைப்பட்டாய்; என் சௌகரியங்களைக் கவனித்துக்கொண்டாய். நான் உனக்கு என்ன செய்தேன்?...அரைமணி நேரம் சேர்ந்தாற்போல் உட்கார்ந்து உன்னோடு அளவளாவியதுகூட இல்லை! நீ பம்பரமாகச் சுழன்று வீட்டு வேலைகளைச் செய்ததைக் கண்டு இரக்கப்படவும் இல்லை...'

ரங்கநாதன் நின்றான். படியருகே வந்து நின்று குனிந்து பார்த்தான். பதினேழு படிகள்! கமலா இடுப்பில் குடத்தை வைத்துக்கொண்டு இத்தனை படிகளையும் கடந்து மாடிக்கு நீர் கொண்டு வருகிறாள். அரையணாவுக்குக் கொத்துமல்லி வாங்க வேண்டுமென்றாலும் பதினேழு படிகளிலும் இறங்கி ஏறியாக வேண்டும். வீதிப்புறத்தில் கறிகாய்க்காரி குரல் கொடுத்தால், 'என்ன வந்திருக்கிறது? பாருங்களேன்' என்பாள் அவள். அவன் பார்த்துப் பதில் சொல்லியதுண்டா ஒரு நாளாவது?

ரங்கநாதனின் இதயம் அழுதது. தான் இத்தனை நாட்களாகப் பாறாங்கல்லின் தன்மையுடன் இருந்ததற்காக நொந்துகொண்டது.

'சே கமலா இவ்வளவு சிரமத்துடன் குடும்பத்தை நிர்வகிப்பதை நான் உணராமல்கூட இருந்துவிட்டேனே? சில பெண்கள் கணவன்மார்களை எப்படியெல்லாம் ஆட்டிவைக்கிறார்கள்?... கமலா எனக்குத் தொந்தரவு கொடுத்ததேயில்லையே? என் விருப்பத்தை எல்லாம் அவள் நிறைவேற்றுகிறாள். அவளுடைய சின்ன அபிலாஷைகளைக்கூட நான் பொருட்படுத்தியதில்லை. ஏன், இந்தச் சீட்டாட்ட விவகாரத்தைத்தான் எடுத்துக் கொள்ளலாமே?...'

ரங்கநாதனின் தகப்பனார் பெரிய சூதாடி. பரம்பரையாக வந்த சொத்தையெல்லாம் சூதாட்டத்திலேயே தோற்றார். நல்ல வேளையாக, ரங்கநாதனுக்குக் காசு வைத்துச் சீட்டாடும் பைத்தியம் ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால், வெறுமே சீட்டாடும் பைத்தியம் பலமாகப் பிடித்திருந்தது! கமலா, அவனைத் திருத்துவதற்காகச் செய்த முயற்சிகள் அனைத்தும் வீணாகிவிட்டன. நயந்தும் பயந்தும் அவள் செய்த உபதேசங்கள் அவன் செவிகளில் ஏறவேயில்லை. 'நீங்கள் சீட்டாடுவதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், சீக்கிரம் திரும்பிவிடுங்கள் என்றுதான் சொல்கிறேன். தினந்தோறும் நடுநிசிவரைக் கண்விழித்தால் உடல்நலம் கெடாதா?' என்று ஆயிரம் முறை கெஞ்சியிருக்கிறாள். பலன்தான் பூஜ்யம்!

இன்றைய தினம், தனிமையில் இவைகளைப்பற்றி எண்ணிப் பார்க்கையில் ரங்கநாதனுக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது. தன் குற்றங்குறைகளை உணராத மூடனாகவா, அவன் இன்று வரை இருந்திருக்கிறான்?...

பாடலி தியேட்டர் அருகில் நகரசபை அமைத்திருந்த கால அறிவிப்புச் சங்கு 'ஊ...' என்று அலறிற்று. மணி எட்டு.

ஒரு வழியாகச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வந்துவிடலாமென்று தோன்றிற்று, ரங்கநாதனுக்கு. சமையலறைக்கு வந்தான். தட்டை எடுத்துப் போட்டுக்கொண்டு காமா, சோமாவென்று சாப்பாட்டை முடித்துக் கொண்டான். மடக்மடக்கென்று இரண்டு டம்ளர் தண்ணீர் எடுத்துக் குடித்தான். பின் சமையலறையின் ஒரு மூலையில் இருந்த சிறு முற்றத்தில், உணவுப் பண்டங்கள் வைத்திருந்த பாத்திரங்களைத் தேய்ப்பதற்காகப் போடும் போதுதான் அவனுக்குச் சிரமம் தெரிந்தது. 'சாப்பிட்டதும் சாப்பிடாததுமாக கமலா, எச்சிலிட்டு, அடுப்பை மெழுகி, துணி துவைத்து...எல்லாம் செய்வாளே? அவளுக்குச் சிரமம் தோன்றாதா?'

ஹால்போன்ற பெரிய அறையில் வந்து உட்கார்ந்தான் ரங்கநாதன். அவன் வழக்கப்படி புத்தகத்தைப் புரட்டும் வேளை அது. ஆனால், மனம் படிப்பை நாடவில்லை. அவன் வாழ்க்கைப் புத்தகத்தில் ஒரு புதிய ஏடு அவன் கவனத்தைக் கவர்ந்திருந்தது.




"என்னப்பா இந்த டாக்டரையா குடும்பக் கட்டுப்பாடு சங்கத் தலைவரா போட்டிருக்கு. இந்தப் பாவிக்குக் கைராசியே கிடையாதே..."

"அதனால்தான் இவரை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்."

'கமலா நீ வந்ததும் நான் முற்றிலும் மாறியிருப்பதைக் கண்டு ஆச்சரியப்படப் போகிறாய். இனிமேல் நீ சொல்கிறபடிதான் நான் நடக்கப் போகிறேன்!...எந்தச் சிறு விஷயமானாலும் உன் விருப்பத்துக்கு எதிராக நான் நடக்கமாட்டேன் என்ன?'

இந்தத் தீர்மானம் நெஞ்சில் உருவானதும் ரங்கநாதனுக்குச் சிறிதே மகிழ்ச்சி தோன்றிற்று. தான் செய்த தவறுக்குப் பிராயச்சித்தம் செய்யத் துணிந்துவிட்டவனைப் போல் மனத்தில் ஒரு வைராக்கியம் பிறந்தது.

'கமலா, எவ்வளவு நல்லவள்!'

சிந்தனையினூடே, ஏதோ ஒரு பத்திரிகையை எடுத்துப் புரட்டி

[illegible] அர்த்தமில்லாத சூன்ய வரிவடிவங்களாகக் காட்சியளித்தன. மனம் 'லல்லல் லல்லா...' என்று தெம்மாங்கு பாடிக்கொண்டிருந்தது.

திடீரென்று கீழே பேச்சுக் குரல் உற்றுக் கேட்டான். கமலாவின் குரல் போலிருந்தது.

அடுத்த நிமிஷம் மாடிப் படிகளில் காலோசை கேட்டது. ஆமாம். கமலாவேதான்!

'கமலா!...'

'நானேதான். தந்தி வந்ததும் ஊருக்குப் போனேனா? நான் போய்ச் சேர்ந்த சமயத்தில் அம்மாவுக்கு உடம்பு சரியாகிவிட்டது. வழக்கமாக வரும் ரத்த அமுக்கம்தான். இன்றைக்குக் காலையில் சற்று அதிகமாகப் போய்விட்டதாம். எல்லோரும் பயந்து போய், எனக்குத் தந்தி கொடுத்திருக்கிறார்கள்...'

'ஊம்?'

'அம்மா கூடத் தங்கிவிட்டுப் போ' என்றாள். அண்ணாவும் மன்னியும் ஒற்றைக் காலில் நின்றார்கள், இரண்டு நாட்கள் தங்கச் சொல்லி. நான் பிடிவாதமாய் வந்துவிட்டேன்!...'

'இந்தச் சமயத்தில் வண்டி ஏது, உனக்கு?'

'நான் பஸ்ஸில் வந்தேன். விடியற்கால வண்டியில் ஏற்றிவிடுவதாகக்கூடச் சொன்னான், அண்ணா. இங்கே நீங்கள் தடுமாறிக் கொண்டிருக்கப் போகிறீர்களே என்றுதான் பஸ்ஸிலேயே வந்துவிட்டேன். ஆமாம், சாப்பாடாகிவிட்டதா?... உரியில் வைத்திருந்த மோரில் உப்புப் போடாமல் போய்விட்டேன். ரயிலில் ஏறி உட்கார்ந்ததும் தான் ஞாபகம் வந்தது...'

ரங்கநாதன் சிரித்தான். உப்பு இருக்கிறதா, இல்லையா என்ற உணர்வு இல்லாமலேதான் சாப்பிட்டுவிட்ட நினைவு அப்போதுதான் தோன்றிற்று!

கமலா சமையலறைக்குள் நுழைந்தாள். தண்ணீர் டம்ளரும் நெய் ஜாடியும் மணைப்பலகையும் வைத்த இடத்திலேயே கிடந்தன. 'நல்ல மனிதர்!...சாமான்களை அதனதன் இடத்தில் வைக்கவேண்டும் என்பது கூடவா தெரியாது?'

அவள் புன்னகைத்துக் கொண்டே வெளியே வந்தாள். அவன் சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தான். திகைத்தாள், கமலா.

'எங்கே?'

ரங்கநாதன் அவளை நேருக்கு நேராகப் பார்க்கவில்லை. 'இப்படி ...கொஞ்ச நேரம்...'

'கொஞ்ச நேரமா?...அர்த்த ராத்திரிக்குத்தான் திரும்புவீர்கள். எனக்குத் தெரியாதா?'

அவளுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு சட்டையைச் சரிப்படுத்திக் கொண்டான்.

'பாதி ராத்திரிவரைக் கண் விழித்துவிட்டு...'

'சரி, சரி. ராத்திரி வேளையில் கத்தாதே...'

குனிந்த தலையுடன் இறங்கினான், ரங்கநாதன். கமலா விழிக்கடைகளில் பொங்கிய நீரைச் சுண்டியெறிந்தது அவனுக்குத் தெரியாது!

சரியாக ஒன்பது மணிக்கு, மற்றெல்லா நாட்களையும் போல் அன்றைக்கும், பெரிய திண்ணையில் முழு ஜமாவும் சேர்ந்துவிட்டது.

☆



# கத்தி முனையிலே...



ஜி.கே.பொன்னம்மாள்

ஆதவன் தன் பொற்கிரணங்களால் இந்த உலகத்தையே, தங்க முலாம் பூசிவிட்டு, அந்த நற்செய்தியைச் சொல்ல, மலைமகளை நெருங்குவது போல், மலைகளுக்கிடையே மறைய முயன்றுகொண்டிருந்தான். அந்த சின்ன ஊரில், புழுதியை வாரி இறைத்துக்கொண்டு, பெருமூச்சு விட்டவாறு, ஒரு பஸ் வந்து நின்றது. பிரயாணிகள் தங்கள் மூட்டை முடிச்சுகளுடன் இறங்கிக்கொண்டிருந்தார்கள், கையிலிருந்த பீடித் துண்டை தூர எறிந்துவிட்டு, பஸ்ஸிலிருந்து இறங்கினான் கிட்டான். பிரயாணக் களைப்பினால் அவன் முகம் வாடி, தலை மயிர் காற்றிலே பறந்துகொண்டிருந்தது.

அக்கா வீட்டுக்குப் போய், நன்றாகப் பச்சைத் தண்ணீரைவிட்டுக் குளிக்க வேண்டும். பிறகு அம்மா கையால் சமைத்த குழம்பை ஊற்றிக்கொண்டு சாப்பிட வேண்டும். அம்மாவின் சமையலைப்பற்றி நினைக்கும்போதே, அவன் வாயில் தண்ணீர் ஊறியது. வெங்காயக் குழம்பு, கத்தரிக்காய் கறி, மீன் குழம்பு இதெல்லாம் தன் தாயார் செய்தால் எத்தனை ருசியாக இருக்கும்? —என்று தனக்குள் எண்ணமிட்டான். இப்பொழுது அக்கா எப்படி இருப்பாளோ? தான் ஊரைவிட்டுக் கிளம்பும் போது, பாழடைந்த குடிசையில் தாயையும், சகோதரியையும் தவிக்கவிட்டுவிட்டுப் போனது அவன் நினைவுக்கு வந்தது. பிறந்ததிலிருந்து ஒரு நாளாவது, தான் ஒரு வேலை செய்து இரண்டு காசு சம்பாதித்துத் தாயார் கையில் கொடுத்ததுண்டா? எத்தனையோ கஷ்டப்பட்டு, பக்கத்து வீடுகளில் வேலை செய்தும், காய்கறி வியாபாரம் செய்தும், ஊரைச் சுற்றிவிட்டு, வீட்டுக்குப் போகும்போது, அம்மா தட்டை வைத்து சாப்பாடு போட்டு விடுவாளே! 'தம்பீ! ஏதாவது வேலை செய்து பிழையடா—இப்படிக் கெட்ட பசங்களுடன் ஊரைச் சுற்றிக் கெட்டுப் போகாதே' என்று அக்கா எத்தனை தடவை சொல்லியிருக்கிறாள். அந்தப் பேச்சை அசட்டை செய்துவிட்டு, இப்படி அலைந்ததனால்தான், கடையிலிருந்து சில்லறை திருடினான் என்ற அவச் சொல்லுடன் ஊரைவிட்டே ஓட வேண்டியிருந்தது. ஊரைவிட்டுப் போய் எத்தனை கஷ்டங்கள் அனுபவித்தாகிவிட்டது? எத்தனை ஏச்சுப் பேச்சுகள்? எத்தனை நாள் பட்டினி! உடல் வாடி, மனம் நொந்து, வெயிலிலும் மழையிலும் நனைந்து, அவஸ்தைப் பட்ட நாட்கள் அனேகம். மூன்று வருடங்கள் கஷ்டப்படுவதிலே ஓடிவிட்டன. கடைசியில் ஒரு ஹோட்டலில், எச்சில் இலை எடுக்கும் வேலை கிடைத்தது, கையிலும் ஐம்பது ரூபாய் சேர்ந்

தது. இனிமேலாவது அம்மா பேச்சைக் கேட்டு நல்லவன் என்ற பெயர் எடுக்க வேண்டும். நான் திருடிவிட்டு, வீட்டில் சொல்லிக்கொள்ளாமல் ஓடிவிட்டதை அம்மா மன்னித்தாலும் மன்னித்து விடுவாள். அக்கா ஒருபோதும் மன்னிக்கவே மாட்டாள். இப்படியெல்லாம் சிந்தனை செய்தவாறு நடந்துகொண்டிருந்தான் கிட்டான்.

அக்காளுக்குக் கல்யாணமாகி ஒரு குழந்தைகூட இருக்கிறது என்ற விஷயம் அப்பொழுதுதான் அவனுக்கு நினைவுக்கு வந்தது. குழந்தையைப் பார்க்க வெறும் கையுடன் போகக் கூடாது என்று பக்கத்துக் கடையிலிருந்து விளையாட்டுச் சாமான்களும், சட்டைக்கு சில்க் துணியுமாக நாற்பது ரூபாய்க்கு வாங்கிக்கொண்டான். அவன் நடத்தையில் இப்பொழுது வேகம் அதிகரித்தது. எப்படியோ வீட்டைக் கண்டுபிடித்து விட்டான். இருள் நன்றாகப் பரவிவிட்டது. வீட்டு முன் ஹாலில் பிரகாசமான விளக்கு எரிந்துகொண்டிருந்தது. விளக்கு வெளிச்சத்தில், சுமார் ஐம்பது வயது மதிக்கக்கூடிய ஒருவர் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்தது தெரிந்தது.

இந்தக் கிழவனை மணந்துகொண்டுதான் அக்கா—பானு—வறுமையிலிருந்து தப்பிக்கொண்டிருக்கிறாள் என்று நினைத்தான் கிட்டான். சமையற்கட்டிலிருந்து, மீன் குழம்பின் வாசனை மூக்கைத் துளைத்துப் பசியைக் கிளறியது. இன்று இரவு நமக்கு நல்ல விருந்து சாப்பாடுதான் என்று நினைத்துக்கொண்டே, கிட்டான் வாயில் ஊறிய நீரை விழுங்கினான்.

'யாரைக் கூப்பிடுவது? எப்படிக் கூப்பிடுவது?' என்று தெரியாமல், இருட்டிலேயே நின்றுகொண்டிருந்த கிட்டானை நெருங்கியது ஒரு ரிக்ஷா. அதிலிருந்து இறங்கியவளை ஒரே கணத்தில் அடையாளம் புரிந்துகொண்ட கிட்டான், 'அம்மா' என்று அலறினான்.

சேயைப் புரிந்துகொண்ட தாயும், 'வாடா மகனே! எத்தனை நாட்களாச்சு, உன்னைப் பார்த்து?' என்று மகனைக் கட்டிக்கொண்டு கண்ணீர் விட்டாள். இடுப்பில் குழந்தையுடன் வீட்டிலிருந்து வெளியே வந்த கிட்டானின் சகோதரி பானு, தன் தம்பியை அடையாளம் புரிந்துகொண்டு, 'கிட்டான்! வந்துவிட்டாயாடா? எத்தனை வருஷமாக இப்படி அலைந்துகொண்டிருந்தாய்? அம்மா உன் நினைவாலே இளைத்துவிட்டாள். வீட்டுக்குள்ளே வா—இதோ பாருடா கண்ணு. உன் மாமன் வந்திருக்கிறான்' என்று தன் குழந்தையிடம் பேசினாள்.

ஒரே தாவலில் குழந்தையை கையில் வாங்கிக்கொண்டான் கிட்டான். தன் சகோதரி தன்னை இத்தனை சீக்கிரத்தில் மன்னித்துவிடுவாள் என்று அவன் நினைக்கவே இல்லை. எல்லோரும் வீட்டு முன் ஹாலை நெருங்கியதும், 'யாரடி இவன்?' என்றார் நாற்காலியில் உட்கார்ந்திருந்தவர் தம் மனைவியிடம். 'இவன்தான் என் தம்பி. ஊரிலிருந்து திரும்பி வந்திருக்கிறான்' என்றாள் பானு கணவனிடம்.

'இவன்தானே பேட்டை சின்னசாமி கடையிலிருந்து பணத்தைத் திருடிக்கொண்டு ஓடினவன்? இந்த வீட்டில் திருட்டுப் பயல்களுக்கு எல்லாம் இடம் கிடையாது. இவன் என் குழந்தையைத் தொடவும் வேண்டாம்' என்று குழந்தையை வெடுக்கென்று கிட்டான் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டு, 'தூர எறிந்துவிடடா கண்ணு இந்தப் பொம்மையை. அதுவும் இந்தப் பயல் திருடிக்கொண்டு வந்ததாகத்தான் இருக்கும். ஊரைவிட்டு ஓடினவன் அங்கேயே இருக்கலாமே, திரும்பி வந்து ஏன் மற்றவர்கள் மானத்தை வாங்க வேண்டும்?' என்று எரிச்சலுடன் பேசினார். கிட்டானின் தாய் கதவு மறைவிலிருந்து இந்தப் பேச்சையும், மகன் ஆசையுடன் வாங்கி வந்த பொம்மைகள் முற்றத்தில் எறியப்படுவதையும் பார்த்துக் கண்ணீர்விட்டாள். அந்தக் கிழவியால் சோறு போட்டு, வயிறு வாடாமல் காப்பாற்றும் பணக்கார மருமகனை எதிர்த்து எதுவுமே பேச முடியவில்லை. கையிலிருந்த பொம்மையை வாங்கி எறிந்ததனால், விஷயம் புரியாத குழந்தை 'ஓ' என்று அழுதது. பானுவின் முகம் கோபத்தால் சிவந்தது. 'இதோ பாருங்கள்! என் தம்பியை அப்படி எல்லாம் சொன்



லாதீர்கள். அவன் ஒருமுறை தவறு செய்துவிட்டபடியால், நல்லவனாக மாறவே முடியாதா?' என்று கணவனிடம் தம்பிக்காகப் பரிந்து பேசினாள் பானு.

'பாம்புக்கு விஷம் உடன் பிறந்தது. விஷமில்லை என்று பாம்பை யாரும் தைரியமாக மடியில் வைத்துக் கொள்ள மாட்டார்கள். இந்தப் பயலுக்கு திருட்டுக் குணம் கூடப் பிறந்திருக்கிறது. நான் இந்த ஊரில் மானமாக வாழ்கிறேன். இவனை நாலு பேர் முன்னால் என் மைத்துனன் என்று சொல்லிக்கொள்ளவே வெட்கமாக இருக்கிறது. இந்த வீட்டில் என் மனைவியாக நீ வாழ வேண்டும் என்று உனக்கு ஆசை இருந்தால், இந்தப் பயலை உடனே விரட்டிவிடு; இல்லையேல், கணவனைவிட, தம்பி உயர்வாகத் தோன்றினால், என் குழந்தையை என்னிடம் விட்டுவிட்டு, தாயும் மகளும் வெளியே போகலாம்' என்று எரிந்து விழுந்தார்.

அவர் ஒவ்வொரு பேச்சும் கிட்டானின் இதயத்தில் ஆணிபோல் பாய்ந்தது. கோபத்தில் அவன் உடல் பதறியது. ஒரே அறையில் இந்தக் கிழவனின் மண்டையைப் பிளந்துவிட வேண்டும் என்று தோன்றியது. இருந்தாலும் பகுத்தறிவு அந்தச் செயலுக்கு தடை போட்டது. 'தாயும், சகோதரியும் வறுமையில்லாமல், மானமாக வாழ்வதை நான் ஒருவன் குலைக்கக் கூடாது. அவர்கள் நிம்மதியாக வாழட்டும்' என்ற எண்ணத்துடன், 'அம்மா! எனக்காக யாரும் கவலைப்பட வேண்டாம். உங்கள் ஆனந்த வாழ்க்கையில் நான் ஒருவன் புகுந்து பிளவு விளைவிக்க விரும்பவில்லை, நான் போகிறேன்' என்று நா தழுதழுக்கச் சொல்லிவிட்டு, இருளை நோக்கி வெளியே நடந்தான். தாயின் விம்மலும், சகோதரியின் அழுகைக் குரலும் லேசாக அவன் காதில் விழுந்துகொண்டுதான் இருந்தது. திரும்பிப் பார்க்கக் கூடாது என்ற வைராக்கியம் ஒருபக்கம் இருந்தாலும், கடைசி முறையாக ஒருகணம் அந்த வீட்டைத் திரும்பிப் பார்த்தான். எதுவுமே நடக்காததுபோல் கிழவன் பத்திரிகையில் மூழ்கியிருந்தான்.




வெளியூர்க்காரர்:—இந்த ரோடுகள் எங்கே போகின்றன?

கிராமவாசி:—அதுங்களா! அதோ அந்த ரோடு நேரே எங்க மாமியார் வீட்டுக்குப் போறுங்க. இந்த ரோடு என் மவ வீட்டுக்குப் போகுதுங்க! அதுக்கும் பக்கத்து ரோடுலே போனா என் வீட்டுலே கொண்டு விட்டுடுங்க!

வெளியூர்க்காரர்:—? ? ?

---

செதுக்கி வைத்த சிற்பத்தைப்போல், அவன் போன வழியே பார்த்துக்கொண்டு தாயும், மகளும் நின்றிருந்த காட்சி, அவன் உள்ளத்தை உருக்கியது. இனிமேல் இந்த வீட்டில் காலெடுத்து வைக்கக் கூடாது என்ற தீர்மானத்துடன், இருளைக் கிழித்துக்கொண்டு தன் வாழ்க்கைப் பாதையை நோக்கி நடந்தான் கிட்டான்.

மனதைக் கவலை அழுத்தியது. சற்று முன்பு இருந்த பசி இப்பொழுது எங்கோ போய்விட்டது. அவன் கால்கள் அவனைக் கடைத் தெருவுக்கு இழுத்துச் சென்றது. கடைகளில் வியாபாரம் துரிதமாக நடந்துகொண்டிருந்தது. டீ கடைகளில், காப்பியும், டீயும், பணியாரமுமாக வந்தவர்கள் வயிற்றை நிரப்பக் காத்துக்கொண்டிருந்தன. 'டீ' கடை மொஹிதீன், பலசாக்குக் கடை நாராயணன் எல்லோரும் அன்று பார்த்

ததுபோலவே இருந்தார்கள். தான் ஊரைவிட்டுப் போன இந்த நாலு வருஷத்தில், அந்த ஊரில் எந்தவிதமான மாற்றமும் ஏற்பட்டதாகக் கிட்டானுக்குத் தோன்றவில்லை. அவனுக்கு லேசாகத் தலையை வலிப்பதுபோலிருந்தது. 'ஸ்டிராங்காக' ஒரு 'டீ' சாப்பிட்டுவிட்டு, இன்று இரவை எப்படியாவது தள்ளிவிட்டு, நாளை மற்ற சங்கதிகளைப்பற்றி யோசிக்கலாம்' என்று ஜேபியில் கைவிட்டான். அப்பொழுது தான் மீதி ஜேபியிலிருந்த பத்து ரூபாயும் காணாமல் போய்விட்டதை உணர்ந்தான்.

அவன் வருத்தப்படவில்லை. தன் உறவினர்களுக்கே, தான் வேண்டாதவனாகிவிட்டபொழுது, எங்கும் ஒட்டாமலும், நிரந்தரமாக எந்த இடத்திலும் இருக்காததுமான இந்த நன்றி கெட்ட பணமா நம்மிடம் உறவுகொள்ளப் போகிறது?—என்று நினைத்ததும் ஒரு சோகச் சிரிப்பு அவன் இதழ்களில் களியாடியது. தெரு ஓரமாக, மூடியிருந்த ஒரு கடையின் முன்பக்கத்துப் பெஞ்சியில் தன் உடலைக் கிடத்தினான் கிட்டான். அவன் மனம் சிந்தனையில் லயித்தது. தூரத்தே டீ கடையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த ரேடியோ கீதமும், ரஸ்தாவில் ஜன நடமாட்டத்தால் ஏற்படும் சத்தமும் அவன் சிந்தனையைக் குலைக்கவில்லை.

இனிமேல் எப்படிக் காலம் தள்ளுவது? என்ன வேலை செய்வது? இந்த மாதிரி யோசனைகளிலே இரவு பன்னிரண்டு மணி ஆகிவிட்டது. எப்பொழுது கண்ணயர்ந்தானோ தெரியாது. பொழுது விடியும் தருணம்; தன்னை யாரோ தட்டி எழுப்புவதை உணர்ந்து திடுக்கிட்டு விழித்துக் கொண்டான் கிட்டான். 'யாரய்யா அது? கடைத் திண்ணையில் படுத்திருப்பது? பொழுது விடிந்து வெயில் முகத்தில் தட்டினாலும் எழுந்திருக்கமாட்டாய்போலிருக்கிறதே. நல்ல சோம்பேறி நீ' என்று அதட்டிய குரல் எங்கோ முன்பு கேட்டதுமாதிரி இருந்தது கிட்டானுக்கு. கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். காண்பது கனவல்ல. தன் பழைய சிநேகிதன் கேசவன்தான் அப்படி எழுப்பியது என்று தெரிந்ததும், அந்த நிலையிலும் கிட்டானுக்கு சற்று மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்தது. தனது பால்ய சிநேகிதன் கிட்டானைக் கேசவனும் தெரிந்துகொண்டுவிட்டான். 'அடே! நம்ம கிட்டானா? எப்பொழுது ஊர் திரும்பினாய்? எல்லாம் விவரமாகச் சொல்லு. முதலில் ஹோட்டலுக்குப் போய் டிபன் சாப்பிடுவோம். எத்தனை நாட்களாயிற்று உன்னுடன் சாப்பிட்டு?' என்று வலுக்கட்டாயமாக நண்பனை இழுத்துக்கொண்டு ஹோட்டலுக்குள் நுழைந்தான் கேசவன்.

'ராமன் ஹோட்டலில்' வழக்கம் போல் வியாபாரம் நடந்துகொண்டிருந்தது. ஒரு பெஞ்சியில் உட்கார்ந்துகொண்டு 'சூடாக இரண்டு தோசையும் தேங்காய் சட்னியும், டீயும் வேண்டும்' என்றான் கேசவன்.

தன் முன்னாலிருந்த முறுகல் தோசையை சட்டினியில் தோய்த்து ரசித்துச் சாப்பிட்டான் கிட்டான். கிளாசில் மணத்தைப் பரப்பிக்கொண்டு நுரையுடன் இருந்த டீயையும் ஒரே மூச்சில் சாப்பிட்டு முடித்தான். வயிறு நிறைந்துவிட்ட திருப்தியுடன் தன் நண்பன் முகத்தைப் பார்த்தான் கிட்டான். இந்த சமயம் இவர்கள் பக்கம் வந்த ராமன், 'அட கிட்டான்தானே இது? திரும்பி வந்துவிட்டானா? நான் யாரோ என்று நினைத்தேன். பழைய தொழிலை விட்டுவிட்டானா? இல்லை, அதையே நடத்துகிறானா? எதற்கும் கேசவன்! நீ ஜாக்கிரதையாக இரு. ஏதோ ஒழுங்காகப் பீடி கடை வைத்திருக்கிறாய். நல்ல பிள்ளையாக உன் வேலையைக் கவனித்துக்கொண்டிரு. கிட்டானுடன் சேர்ந்து கெட்டுப்போகாதே!' என்று உபதேசம் செய்தான். அவன் பேச்சில் நிரம்பி வழிந்த கேலியும், குறும்பும் கிட்டானைக் கோபம் அடையச் செய்தது. அங்கிருந்தவர்கள் எல்லோரும் தன்னையே கவனிப்பதை உணர்ந்த கிட்டான், யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல், தாங்க முடியாத அவமானத்துடன் விருட்டென்று வெளியே எழுந்து போய்விட்டான். பின்னால் சென்ற கேசவன், 'கிட்டான், வா. என் கடைக்குப் போகலாம். இந்த ராமன்



பேச்சையெல்லாம் மனதில் போட்டுக் கொள்ளாதே' என்று சமாதானம் செய்தான். கேசவனின் பீடிக் கடையில் உட்கார்ந்தான் கிட்டான். அவன் முகத்தில் கவலை நிறைந்திருந்தது. பேச முடியாமல் துக்கம் தொண்டையை அடைத்துக்கொள்ளக் கண்களில் நீர் பெருகியது. 'கேசவன், நான் யாருக்கும் வேண்டாதவனாகிவிட்டேன். ஒரு முறை திருடன் என்ற பட்டம் வந்தவனுக்கு, அந்தப் பெயர் நிலைத்துவிடுகிறது. நான் எத்தனை உண்மையாக நடந்துகொண்டாலும், என்னை எல்லோரும் சந்தேகக் கண்களுடனே பார்க்கிறார்கள். இந்த ஊரில் நான் எப்படிப் பிழைக்க முடியும்?' என்றான் கவலையுடன்.

இதைக் கேட்கக் கேசவனுக்கும் வருத்தமாகத்தான் இருந்தது. தன்னால் கூடியவரை நண்பனைத் தேற்றினான்.

தன்னுடன் ஓடி ஆடி விளையாடி, தான் செய்யும் குறும்புக் காரியங்களிலெல்லாம் பங்குகொண்டு, இரண்டாவது போக்கிரி என்று பெயர் வாங்கியிருந்த கேசவன், இப்பொழுது எத்தனை நல்லவனாக, பொறுப்புள்ளவனாக மாறிவிட்டான்? உழைத்துச் சம்பாதிக்கிறான்.

இப்பொழுது, கேசவன் பேச்சிலும், பார்வையிலும், செயலிலும் எல்லாம் பொறுப்பு நிறைந்திருக்கிறது என்று எல்லாம் நினைத்து, பேச்சுக்கு நடுவே கேசவன், வியாபாரத்தையும் கவனிப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தான் கிட்டான். கடையில் பீடி வாங்க வந்த ராமு, ஒரு பீடியைப் புகைத்தவாறு, ஊர் விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு கத்தி வைத்துக்கொண்டிருந்தான். அழகான 'தந்த' பிடி போட்ட கத்தியின் விலை பத்து ரூபாயாவது இருக்கும் என்று கிட்டான் கணக்குப் போட்டான்.

முதலில் ஒரு சலூனில் புகுந்து முக க்ஷவரம் செய்துகொள்ள வேண்டும். பிறகு நன்றாகக் குளித்து, சலவை சோப்பினால் சட்டை, வேஷ்டியைச் சுத்தமாகத் தோய்த்துக் கட்டிக்கொள்ள வேண்டும். அடுத்தபடியாக வேண்டியது நல்ல சாப்பாடு. பிறகுதான் வேலை தேடுவதைப்பற்றி யோசிக்க முடியும். இதற்கெல்லாம் முதலில் பணம் தேவை. யார் நமக்குக் கடனாகத் தரப் போகிறார்கள்?—என்று யோசித்தான் கிட்டான். அவனுக்குப் பளிச் சென்று ஒரு யோசனை தோன்றியது. அந்தக் கத்தியை எடுத்து விற்றால் எட்டு ரூபாயாவது கிடைக்கும். இந்த எண்ணம் எழுந்ததும், ஒரே தாவலில் ராமுவின் கத்தியைப் பிடுங்கிக் கொண்டு ஓட்டம் பிடித்தான் கிட்டான்.

ராமு, 'என் கத்தியைக் கொடுடா' என்று துரத்திக்கொண்டே பின்னால் ஓடினான். தெருவில் நடப்பவர்கள் கத்தியை வைத்துக்கொண்டு ஒருவன் ஓடி வருவதைப் பார்த்துவிட்டுப் பயந்து ஒதுங்கினார்கள்.

நாலு தெருவையும் தாண்டி ஊருக்கு வெளியே வந்தான் கிட்டான். ராமுவால் அவனுடன் ஓட முடியவில்லை. திரும்பிவிட்டான். என்ன செய்வது என்று தெரியாமல், 'இந்த கிட்டான் இனிமேல் திருந்தமாட்டான். இவனை நல்லவனாக்கிவிடலாம் என்று கோட்டை கட்டிய என் புத்தியைத் தான் சொல்ல வேண்டும்' என்ற அதிருப்தியுடன் தன் வேலையில் முனைந்தான் கேசவன்.

தெரு ஜனங்கள் 'யாரோ ஒருவன் கத்தியை வைத்துக்கொண்டு ஓடி வருகிறான். ஜாக்கிரதை. அவன் தோற்றத்தைப் பார்த்தால், யாரையாவது குத்திவிட்டுத்தான் அடங்குவான்போலிருக்கிறது' என்று பயத்தைக் கிளப்பிவிட்டார்கள்.

கிட்டான் ஊர் எல்லையிலிருக்கும் மாரியம்மன் கோயில் பக்கம் வந்தான். கோயிலருகே இளநீர் விற்றுக்கொண்டிருந்தவன் கத்தியும் கையுமாய் ஒருவன் வருவதைப் பார்த்துவிட்டுப் பயந்து எழுந்தான். 'டேய்! ஒரு இளநீர் கொடு' என்றான் கிட்டான் கத்தியைச் சுழற்றியபடி. மறுபேச்சுப் பேசாமல் இளநீரைக் கொடுத்தான் வியாபாரி. தாகத்தைத் தணித்துக்கொண்டு 'பணம் வேண்டுமா, உன் உயிர் வேண்டுமா?' என்று மிரட்டினான் கிட்டான்.

'எனக்குப் பணம் வேண்டாமய்யா' என்று உளறினான் வியாபாரி.

நிம்மதியாக யாரும் இல்லாத ஒரு மண்டபத்தில் உட்கார்ந்துகொண்டு, பள பளக்கும் அந்தக் கத்தியைப் பார்த்து சிரித்தான் கிட்டான். 'கத்தியே! எனக்கு உதவிக்கு நீ கிடைத்துவிட்டாய். நீ என்னிடம் இருக்கும்வரை சாப்பாட்டுக் கவலையில்லை. என்னைப் பார்த்தாலே எல்லோரும் பயந்து நான் கேட்டதைத் தந்துவிடுகிறார்கள்! பிழைப்புக்கு இனி உன் உதவியே போதும்' என்று கத்தியை மார்புடன் அணைத்துக்கொண்டான்.



மறுநாள் காலை தனது கத்தியுடனும், நிமிர்ந்த நடையுடனும் மொஹிதீன் டீ கடைக்கு வந்தான் கிட்டான். அவனையும், அவன் கத்தியையும் பார்த்த மொஹிதீன் 'பயபக்தியுடன் 'வாங்க அண்ணே; டேய் ரஹீம், அண்ணனுக்குச் சூடாக புட்டும், கடலையும் எடுத்து வை. முட்டையும் வேண்டும். டீ ஸ்பெஷலாக இருக்கட்டும்' என்று பையனுக்கு உத்தரவிட்டான். கிட்டான் நிமிர்ந்து வெற்றி பெருமிதத்துடன் உட்கார்ந்துகொண்டு தன் முன்வந்த தட்டுக்களைக் காலி செய்ய ஆரம்பித்தான்; சாப்பிட்டு முடிந்ததும், இரண்டு சிகரட்டும், நெருப்புப் பொட்டியும் அவன் முன்னால் வந்தன. 'பணம்' என்று கிட்டான் ஆரம்பிப்பதற்குமுன் மொஹிதீன், 'அண்ணன் அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. தினமும் இந்தக் கடைபக்கம் வந்து போகவேண்டும். உங்களைப் பார்த்தாலே என் கடையில், கலாட்டா எதுவும் இல்லாமல் மற்றவர்கள் சாப்பிட்டு விட்டு ஒழுங்காகப் பணத்தைத் தந்து விட்டுப் போவார்கள். நீங்கள் கடைக்கு வருவதே எனக்குப் பெருமை. இன்று பகல் சாப்பாட்டையும் இங்கேயே வைத்துக்கொள்ள வேண்டும். கோழிக் கறியும், பிரியாணியும், இன்றைய ஸ்பெஷல்' என்று குழைந்தான்.

கிட்டானுக்குத் தன்னைபற்றியே ஒரு பெருமை ஏற்பட்டது. தன் கத்தியை அன்புடன் ஒருமுறை பார்த்துக் கொண்டான். கிட்டான் அந்தக் கடையிலிருக்கும்போது டீ சாப்பிட வந்தவர்கள் அரட்டை அடிக்காமல் சாப்பிட்டுவிட்டு, கடன் சொல்லாமல் பணத்தையும் கொடுத்துவிட்டுப் போனதை மொஹிதீன் கவனித்துக்கொண்டான். கிட்டானின் சகவாசம் தன் வியாபாரத்துக்கு நல்லதுதான். எப்படியும் கிட்டானை தனக்கு சாதகமாக்கிக்கொள்ள வேண்டும் என்று திட்டம் போட்டுக் கொண்டான் அந்தப் பிழைக்கத் தெரிந்தவன்.

நாட்கள் ஓடி மறைந்தன. இப்பொழுதெல்லாம், கிட்டானின் வாசம் மொஹிதீன் டீ கடையிலேதான் என்றுதான் சொல்லவேண்டும். இப்பொழுது கிட்டானின் உருவத்திலும் பலத்த மாறுதல் ஏற்பட்டிருந்தது. நல்ல போஷகமான சாப்பாட்டினால், உடல் சதை பிடித்து, 'சாண்டோ'போல் இருந்தான். மெல்லிய அரும்பு மீசை அவன் முகத்தின் கௌரவத்தை இன்னும் அதிகமாக்கியது. தலைமயிரை நெற்றியில் புரளும்படி வாரிவிட்டிருந்தான். முண்டா பனியனுக்கு மேல், மெல்லிய ஜிப்பா. இடையில் பட்டு கைலி; கையில் கத்தி. இப்படிப் பார்ப்பவர்கள் பயப்படும்படி இருந்தான் கிட்டான். தன்னைக் கண்டால் எல்லோரும் பயப்படுகிறார்கள், தனக்கு நிகர் எவருமில்லை என்ற ஒரு தற்பெருமை அவனுள்ளே எழுந்தது. அது அவன் பேச்சிலும், செய்கையிலும், நன்றாகத் தெரிந்தது. மொஹிதீ



னும் தன் டீ கடைக்குச் சாப்பிட வருகிறவர்களிடமெல்லாம் கிட்டானின் பெருமையைப் பறைசாற்றிக்கொண்டே இருந்தான். அதில் உண்மையைவிடப் பொய்யே அதிகமாக இருந்தது. 'நேற்று பாருங்கள். நம்ம கேளன் மகளுக்குக் கல்யாணம். தாலி கட்டப் போகும் சமயம் இன்னும் இருநூறு ரூபாய் தந்தால்தான் கல்யாணம் நடக்கும் என்று மாப்பிள்ளை வீட்டார் அடம் பிடித்தார்கள். இது அநியாயம், என்னிடம் காலணா இல்லை என்று கேளன் கதறிக்கொண்டிருந்தான். நல்லவேளை, அந்த வழியே கிட்டான் அண்ணன் போக நேர்ந்து விஷயத்தைத் தெரிந்துகொண்டு, கிட்டான் அண்ணன் மாப்பிள்ளையை ஒருமுறை முறைத்தார்; அவ்வளவுதான். கத்தியைக்கூட கையில் எடுக்கவில்லை, மாப்பிள்ளை வீட்டார் அலறி அடித்துக்கொண்டு கிட்டான் அண்ணனிடம் மன்னிப்புக்கேட்டுவிட்டு மாப்பிள்ளையைத் தாலி கட்டச் சொன்னார்கள்; அப்படி எல்லாம் நம்ம அண்ணன் இருக்கும்போது, எந்த அநியாயமும் நடந்துவிடாது. அவருக்கு கோபம் வந்து பார்க்க வேண்டுமே! அப்பப்பா! நானே எத்தனையோ முறை பயந்திருக்கிறேன். நேற்று பஸ்ஸில் ஏறி உட்கார்ந்த அண்ணனிடம் 'டிக்கட்டு' என்று கேட்டு விட்டான் புது கண்டக்டர். இந்தப் பயல் ஆளைத் தெரியாமல் டிக்கட்டு கேட்கிறானே என்ன நடக்கப் போகிறதோ—என்று பயந்துகொண்டிருந்தேன். அண்ணன் சட்டைக் கையை மடித்து விட்டுக்கொண்டு எழுந்து விட்டார். நான் இடையே புகுந்து, கண்டக்டரிடம் விஷயத்தை விளக்கி, அண்ணனை சமாதானம் செய்வதற்குள், போதும்போதும் என்றாகிவிட்டது. இப்படி எத்தனையோ கதை அளப்பான் மொஹிதீன். பேச்சுவாக்கில் சாப்பிடுபவர்களை உபசரித்து, புட்டு, ஆப்பம், முட்டை என்று தன் கடைச் சரக்குகளையும் தள்ளுவான். இதுதான் அவன் வியாபார தந்திரம். எப்பொழுதும் கிட்டானைச்சுற்றி ஒரு கும்பல் இருந்துகொண்டே இருக்கும். அவன் தலை நிமிர்ந்து, தெருவில் ராஜநடை போடும்போது, பெண்கள்கூட மறைவாக நின்று அவனைப் பார்ப்பார்கள். அப்படி அவனுக்கு ஒரு வசீகர சக்தி ஏற்பட்டுவிட்டது.

காலையில் பாதம் அரைத்துப் பாலுடன் கலந்த பால் ஒரு கோப்பை. நாலு கோழி முட்டை. பிறகு எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு, புட்டு, தோசை, காப்பி. பின்னால் பகல் ஒரு மணிவரை ஊரைச் சுற்றிவிட்டு, பல வகைக் கறிகளுடன் சாப்பாடு. பகல் தூக்கம். மாலையில் 'டீ' சாப்பிட்டுவிட்டு, தெருவில் ராஜநடை போடுவான். இரவு எட்டு மணிக்கெல்லாம், மொஹிதீன் கடை பின்பக்கம், இரண்டு சாராய பாட்டில்கள் ரகசியமாக வந்து சேரும். அதைக் கிட்டானும் அவனைச் சுற்றி ஸ்துதி பாடும் நண்பர்களுமாகக் காலிசெய்து விடுவார்கள். பிறகு, பிரியாணி, வாத்து முட்டை என்று சாப்பாடு. இப்படியாக வெகு குஷியாக ஓடிகொண்டிருந்தது கிட்டானின் வாழ்க்கை.

கிட்டானின் உதவியால் மொஹிதீன் கடையில் நல்ல வியாபாரம் நடந்துகொண்டிருந்தது. இதனால் அதே தெருவில் உள்ள ராமன் கடையில் வியாபாரம் குறைய ஆரம்பித்தது. ராமன் கிட்டானை—கேசவன் முன்னால் அவமானப்படுத்தியதைக் கிட்டான் நினைவு வைத்துக்கொண்டு பொருமியவாறுதான் இருந்தான். இதையெல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டிருந்த மொஹிதீன் 'பார்த்துக்கொண்டே இருங்கள்' ஒருநாள் கிட்டான் அண்ணன் கத்திக்கு ராமன் இரையாகத்தான் போகிறான். முன்னமேயே ராமன் கிட்டான் அண்ணனைக் கேவலமாகப் பேசியிருக்கிறான். அண்ணன் எப்பவுமே யானை குணம் படைத்தவன். எதையும் மனதில் வைத்துகொள்வார். அவருக்கு கோபம் மட்டும் வந்துவிட்டால் எதிரிகள் யமன் உலகத்துக்கு போகவேண்டியதுதான். ராமனுக்கு, இன்னும் எத்தனை நாள் இந்த உலக வாழ்க்கையோ! தெரியவில்லை' என்று ரகசியமாக ஒரு வதந்தியைக் கிளப்பிவிட்டிருந்தான்.

அந்த சின்ன ஊரில் எத்தனையோ காரியங்களுக்குக் கிட்டானின் உதவியும் வேண்டித்தான் இருந்தது. கடன் கொடுத்தவன் பணம் கேட்டு தொந்தரவு செய்கிறான் என்றால், கிட்டானை வீட்டில் வைத்துகொண்டால், பணம் கேட்க வந்தவன் வந்த வழியே திரும்பிவிடுவான். நியாயமோ—அநியாயமோ கிட்டான் எந்தப் பக்கத்தில் இருந்தாலும் அந்தப்பக்கம் ஜெயித்துவிடும். இதுவரையில் கிட்டான் யாரையும், அடித்ததோ கத்தியால் குத்தியதோ கிடையாது. அவன் உருவத்தைப் பார்த்துவிட்டுத்தான் ஊர் ஜனங்கள் அப்படி பயந்தார்கள். கிட்டானும், யாருடனும் அதிகம் பேசாமலும், பழகாமலும் தன் மதிப்பைக் காப்பாற்றிக்கொண்டான்.

அன்று மாரியம்மன் கோவிலில் திருவிழா நடந்துகொண்டிருந்தது. கிட்டானும் சிகரெட்டை புகைத்துக்கொண்டு, திருவிழா கும்பலில் ஒரு பக்கமாக நின்றிருந்தான். ஜனங்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். அங்கு அமைதி நிலவ வைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த போலீஸ் கான்ஸ்டபிள், வேலாயுதன்கூட 'வணக்கம் தம்பீ' என்றான் கிட்டானைப் பார்த்து. கிட்டான் தலைநிமிர்ந்து பெருமையுடன் அந்த வணக்கத்தை ஏற்றுக்கொண்டு, தலையை அசைத்து மறு வணக்கம் தெரிவித்தான். கூட்டத்துக்கு நடுவே, தன் அக்காளும், குழந்தையை எடுத்துகொண்டு அவள் கணவனும் போவதைப் பார்த்தான் கிட்டான். சட்டென்று—தன் சகோதரி கண்ணில் பட்டுவிடாமல், அருகிலிருந்த ஒரு ஆலமரத்தின் மறைவில் மறைந்துகொண்டான். கோபத்தால் அவன் இதயம் துடித்தது. கத்தியால் அன்று தன்னை அவமதித்த அந்தக் கிழவனைக் குத்திக் கொன்றுவிடவேண்டும் என்ற எண்ணம் எழுந்தாலும், தன் சகோதரிக்காக அந்த எண்ணத்தை அடக்கிக்கொண்டான். இத்தனை சமீபத்தில் அக்காவைப் பார்த்தும், பேசமுடியாமல் குறுக்கிட்ட விதியை நினைத்து, அவன் இதயம் உருகியது. கண்ணீர் பெருகியது. அந்த இடத்தை விட்டே நகர்ந்துவிட்டான்.

மறுநாள் பொழுது விடிந்ததுமே, கிட்டானுக்கு அலுப்பாக இருந்தது. 'என்ன வாழ்க்கை இது? தன்னிடம் உண்மையான அன்பு காட்டுபவர்கள் யாருமில்லையே, தன்னையும் கத்தியையும் பார்த்து பயப்படுகிறார்களே தவிர, அன்பு யாருக்குமே இல்லையே' என்று நினைத்தான். இப்படி அவனுக்கு வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்பு பகல் வேளையிலும், தாராளமாகச் சாராயம் குடிக்கும் கெட்ட பழக்கத்தில் வந்து நின்றது. 'டீ' கடை மொஹிதீன்கூடக் கிட்டானின் இந்தப் பழக்கத்தைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு, நிறைய சாராயம் வாங்கிக்கொடுத்து, கிட்டானை தன் வசமாக்கிக்கொண்டிருந்தான். மளிகைக் கடையிலிருந்து, சாமான் வாங்கினால் பணம் கொடுப்பது கிடையாது, பால்காரனுக்குப் பணம் கொடுக்காமல் மிரட்டிப் பால் வாங்கிவிட்டு, அவன் பணம் கேட்டால், கிட்டானைக் காட்டி பயம் காட்டுவான். இப்படி எத்தனையோ விதத்தில் பணம் சம்பாதித்து வந்தான் மொஹிதீன், அவனுக்குச் சொந்தமாக இருந்த ஒரு வீட்டைத் தவிர இப்பொழுது இரண்டு வீடுகள் சொந்தமாகிவிட்டிருந்தன. கையில் பணமும் புரண்டுகொண்டிருந்தது. பணக்கார மொஹிதீன் முதலாளி இப்பொழுது, எந்தக் கெட்ட செயலும் புரிவதற்குத் தயாராகத்தான் இருந்தான்.

●

அந்தத் தெருவில் திடீரென்று 'கணபதி விலாஸ்' என்ற ஹோட்டல் முளைத்ததைப்பற்றி எல்லோரும் அதிசயப்பட்டார்கள். அதன் சொந்தக்காரர் நீலமேகமும், அவர் மனைவி மீனாக்ஷியுமாகத்தான் ஹோட்டலை நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் பெயர் கமலம். பெயருக்கேற்ப வெகு அழகாக இருந்தாள். சுமார் இருபது வயதை எட்டிப் பிடித்துக்கொண்டிருந்த கமலம் பார்ப்பவர்கள் மனதைப் பரவசப்படுத்தும் எழில் வாய்ந்தவளாக இருந்தாள். ஹோட்டலில் நீலமேகத்தின் மனைவியே சமையல் வேலைகளைக் கவனித்துக் கொள்வாள். வருபவர்களை அன்பாகப் பேசி உபசரிப்பதில் நீலமேகம் ஒரு தனித் திறமை பெற்றிருந்தார் என்றுதான் சொல்லவேண்டும். சாம்பார், ரசம், கூட்டு என்று ருசி மிகுந்த சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டு புகழ்ந்தார்கள் ஜனங்கள். இந்த செய்தி மொஹிதீனைத் திடுக்கிட

... கடைக்குச் சாப்பிட வரு(வ)... செய்தது. மோஹிதனைப் பொருட்படுத்தாமல் எத்தனையோ வாடிக்கைக்காரர்கள் கணபதி விலாசத்துக்குள் நுழைந்து விட்டார்கள்.

கிட்டான் இந்த விஷயத்தையெல்லாம் பொருட்படுத்தவே இல்லை. அவனுக்கு வேண்டியது சாராயம், சாப்பாடு. மற்ற எந்த விஷயத்தைப் பற்றியும் அவன் கவலைப்படவே இல்லை. ஜாடையாக, கிட்டானிடம்' அண்ணே, நமக்குப் போட்டியாக, ஒரு ஹோட்டல் கிளம்பியிருக்கிறது பார்த்தீர்களா, நீங்கள் ஒன்று மிரட்டினால் நீலமேகம், தானாகவே மூட்டை கட்டிவிடுவான். அவன், கடை சாப்பாட்டில் ஜனங்களுக்கு ஒரு பிரீதி இருக்கிறது. அவனை வளரவிட்டால் நாம் தொலைந்தோம். அண்ணன் ஏதாவது வழி செய்யவேண்டும்' என்று குழைந்தான். மோஹிதீன் இதைக் கேட்டுக் கிட்டான் சிரித்தான்.

'நீலமேகத்தை வீழ்த்துவது உன் கையில்தான் இருக்கிறது மோஹிதீன் நம் கடையிலும் சாப்பாட்டின் தரத்தை உயர்த்தவேண்டும். தாராளமாகப் பரிமாறவேண்டும். அதை விட்டுவிட்டு, குற்றம் எதுவும் செய்யாதவனை மிரட்டுவது நன்றாயிராது. எதற்கும் பார்ப்போம்' என்று சுரத்தில்லாமல் சொல்லிவிட்டு, சாராய கிளாஸில் தன் கவனத்தைத் திருப்பினான் கிட்டான்.

கிட்டானின் இந்த செய்கை மோஹிதீனுக்குப் பிடிக்கவில்லை. 'நம் சோற்றைத் தின்றுவிட்டு நாம் சொன்ன வேலையைச் செய்யமாட்டேன் என்கிறானே! மகாயோக்கியன்போல், நியாயம் பேசுகிறான். அதட்டிச் சொன்னால் கத்தியை நம்மிடமே நீட்டிவிடுவானோ என்று பயமாயிருக்கிறது. 'இப்படியெல்லாம் நினைத்து, எதற்கும் கிட்டானை விட்டுத்தான் பிடிக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தான் மோஹிதீன். தன் கடைக்குச் சாப்பிட வருகிறவர்களிடமெல்லாம், நீலமேகத்தைப்பற்றி அவதூறாகப் பேச ஆரம்பித்தான் மோஹிதீன்.' 'வயதுவந்த ஒரு பெண் இருப்பதனால்தான் நீலமேகத்துக்கு இப்படி வியாபாரம் நடக்கிறது. டீ கோப்பையைக் கொடுத்து, அந்த அழ

அப்படி அவனுக்கு ஒரு வசீகர சக்தி

கான பெண்ணைக் கடையில் உலாவ விடுகிறான். அவளைப் பார்த்துக் கொண்டே, இலையில் மண்ணைப் போட்டாலும் நம்ம பசங்கள் சாப்பிட்டு விடுவார்கள்' எங்கள் வீட்டுப் பெண்களை நான் கடைப் பக்கமே வர விடமாட்டேன். 'வியாபாரம் நடக்க வேண்டும்,என்று எந்தக் கீழ்த்தரமான செய்கைக்கும், நீலமேகம் தயாராகியிருக்கிறான்.' இந்தத் தோரணையில் இருக்கும் மோஹிதீனின் பேச்சு.

அன்று இரவு நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. கிட்டான் லேசாகக் கண் அயர்ந்திருந்தான். பட-பட-வென்று ஏதோ ஒருவித ஓசையும், யாரோ நடப்பதுபோன்ற சத்தமும் கேட்டு விழித்துக்கொண்டு, வெளியே வந்து பார்த்தான். மோஹிதீன், தன் சகாக்களுடன் இருளில் மறைந்து கொண்டு, நீலமேகத்தின் ஹோட்டலை நோக்கிக் கல்லை எறிந்து கொண்டிருந்தான். படபடவென்று கல் பறந்து சென்று, ஹோட்டல் கூரைமேல் விழுந்தது. கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே இருந்தார்கள் நீலமேகத்தின் குடும்பத்தார். பொறுமையிழந்தால்மோஹிதீன் செய்யும் இந்தக்காரியம் கிட்டானுக்குப் பொறுக்கவில்லை. 'மோஹிதீன்' என்று கத்தினான் கிட்டான். அந்தச் சமயம் மோஹிதீன்கிட்டானை அங்கு எதிர்பார்க்கவில்லை ஆதலால், மலைத்து நின்றுவிட்டான். அவன் கையிலெடுத்த கல் அப்படியே இருந்தது. அவனால் பேசவும் முடியவில்லை. தான் செய்யும் காரியம் கிட்டானுக்குப் பிடிக்காது என்பதே அவன் பயத்துக்குக் காரணம். 'இது அநியாயம் மோஹிதீன்! அவர்கள் உன்னை என்ன செய்துவிட்டார்கள்? உனக்குப் போட்டியாக வந்துவிட்டார்கள் என்று தானே நீ பொறுமைப்படுகிறாய்? நிறுத்து கல் எறிவதை!' என்று உத்தரவிட்டான் கிட்டான். மோஹிதீனும் துணிச்சலாகவே, 'எல்லாம் தெரியும் தம்பீ. என் சோற்றைத் தின்று கொழுத்துவிட்டு எனக்கே உபதேசம் செய்ய வந்திருக்கிறாய். தின்ற சோற்றுக்கு நன்றியிருந்தால், இவர்களை உடனே இந்த இடத்தைவிட்டு விரட்டு பார்க்க

லாம்'என்று சவால் விட்டான் மோஹிதீன். இவர்கள் பேச்சுக்குரலை கேட்டு கதவைத் திறந்துகொண்டு காப்பாற்ற வந்த... அண்ணே!நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. ஏதோ வயிற்றுப் பிழைப்புக்காக ஹோட்டல் நடத்துகிறேன். இரவெல்லாம் இப்படி கல் எறிகிறார்கள். என் மகளைக் கோயில், குளம் எந்த இடத்திலும் நடமாடவிடாமல்,மோஹிதீனின் ஆட்கள் தொந்தரவு செய்கிறார்

அண்ணே! கத்தியை எடுக்காதீங்க. ... சண்டையில் ...வேறு வாருங்கள் போகலாம்' என்று திரும்பி விட்டான்.

'அப்பொழுதுதான் நீலமேகத்துக்குப் பயம் நீங்கியது. எங்களுக்காக, நன்றாக மழையில் நனைந்து விட்டீர்கள். இந்த சமயம் நீங்கள் தெய்வம்போல் வந்திருக்காவிட்டால், அந்த மோஹிதீன் எங்களுக்கு மிகவும் தொந்தரவு கொடுத்திருப்பான். தயவுசெய்து



கள்' என்று கிட்டானிடம் முறையிட்டான். கதவு மறைவிலிருந்து எட்டிப் பார்த்த கமலத்தின் முகம் ஒரு கணம் கிட்டானின் இதயத்தை நெகிழச் செய்தது. அவள் கண்களில் தோன்றிய பயமும் கவலையும் அவன் இதயத்தை உருக்கிவிட்டது. மரியாதையாகப் போய்விடு. இல்லையேல் நான்' என்று முடிக்காமல் கிட்டான் கத்தியில் கை வைக்கவே, மோஹிதீன் பயந்துவிட்டான். பிழைக்கத் தெரிந்த மோஹிதீன் 'ஐயோ-இதென்ன விளையாட்டு

உள்ளே வாருங்கள். 'கமலம்' சூடாக இரண்டு கிளாஸ் காப்பி தயார் செய்' என்று மகளுக்கு உத்தரவிட்டார் நீலமேகம்.

அந்தக் குளிர்ந்த இரவு வேளையில் சூடான காப்பி, அதுவும் கமலத்தின் கையால் தயாரித்தது வெகு ருசியாக இருந்தது கிட்டானுக்கு. மங்கிய சிம்னி விளக்கின் வெளிச்சத்தில் 'பயந்த கண்களுடன் வெட்கத்தால் சிவந்த தன் அழகு முகத்தை பாதி கதவின்பின் மறைத்துக்கொண்டு 'தந்த விக்கிரகம்'

[illegible] வப்படி அவனுக்கு ஒரு வசீகர சக்தி போல் கமலம் நின்றிருந்தது அவன் கண்களுக்கு விருந்தாக [illegible]. கமலமும், ஆஜானுபாகுவாகப் பரந்த மார்புடனும், கம்பீரம் நிறைந்த முகத்துடனும், ஆணழகனாகக் காட்சி அளித்த கிட்டானின் உருவத்தை மனதால் படம் பிடித்துக்கொண்டாள். அவர்கள் கண்கள், அவர்களுக்குமட்டும் புரியும்படியாக எத்தனையோ கதைகள் பேசிக்கொண்டன. கமலத்தின் மலர் முகம் கிட்டானின் இதயத்தில் நிரந்தரமான ஒரு ஸ்தானத்தைப் பிடித்துக் கொண்டது.

மறுநாள் கிட்டான் நீலமேகத்தின் ஹோட்டலில் மேஜையருகே உட்கார்ந்திருந்த காட்சி தெரு ஜனங்களை வியப்புக்குள்ளாக்கியது. ஹோட்டலில் உட்கார்ந்தவாறு 'இங்கே வந்து காப்பி சாப்பிடுங்கள் என்று கிட்டானின் உத்தரவுப்படி எத்தனையோ பேர்கள் 'கணபதி விலாஸ்'ல் நுழைந்துவிட்டார்கள். அன்று மாலை நீலமேகம் மன நிறைவுடன் சில்லறையும் ரூபாய் நோட்டுக்களுமாகப் பணத்தை எண்ணி பத்திரப் படுத்தினான். மொஹிதீன் கடையால் யாரும் சாப்பிடாமல் ஈ மொய்த்துக் கொண்டிருந்த, வெந்த வாத்து முட்டைகளையும், ஆப்பத்தையும், எடுத்துக் கோபத்துடன் ரோடில் எறிந்தான். எத்தனையோ நாட்களாக உபவாசத்தைக் கடைபிடித்துக்கொண்டிருந்த ஒரு சொறி நாய்க்கு, அன்று அதிருஷ்டம் அடித்தது. லபக் லபக், என்று சாப்பிட்டு முடித்துவிட்டு, மன நிறைவுடன் மொஹிதீனின் காலைச் சுற்றி வந்தது. 'இந்த நாய்க்கு இருக்கும் நன்றிகூட மனிதனுக்கு இல்லாமல் போய்விட்டதே. என் சோற்றைத் தின்று வளர்ந்தவன், என் முதுகிலேயே கத்தியை நீட்டிவிட்டான். இவனை நான் பழி தீர்த்துக்கொள்ளாமல் விடப் போவதில்லை' என்று பொருமினான் மொஹிதீன்.

பஸ் வந்து நிற்பதெல்லாம் இப்பொழுது நீலமேகத்தின் கடை வாசலில்தான். அவனுக்கு நல்ல வரும்படி. நாட்கள் கிட்டானைப் பொறுத்தவரையில் இன்பமாகத்தான் ஓடிக்கொண்டிருந்தது. கமலத்துடன் பொழுது போவது தெரியாமல் பேசி மகிழ்வான். நீலமேகம் புத்திசாலித்தனமாகக் கிட்டானை மாப்பிள்ளையாகவே ஆக்கிக் [illegible] அந்தக் கத்தியை எந்த நிமிஷமும் [illegible] மாட்டான் கிட்டான். 'அந்தக் [illegible] வீசி எறிந்துவிட்டு நல்லவராக ஏதாவது தொழில் செய்யுங்களேன். இந்தப் போக்கிரி வாழ்வுக்கு இனிமேலாவது ஒரு முடிவு கட்டிவிடுங்கள். இன்னும் சில நாட்களில் நீங்கள் ஒரு குழந்தைக்குத் தந்தையாகப் போகிறீர்கள்' என்றாள் ஒருநாள் கமலம் கிட்டானிடம் உல்லாசமாகப் பேசிக்கொண்டிருக்கும்போது. கிட்டான் துள்ளி எழுந்தான் 'இதோபாரு, என் சொந்த விஷயங்களில் நீ தலையிடக்கூடாது. என்னைப் பற்றி எனக்குத் தெரியும். உன் யோசனை தேவையில்லை' என்று எரிந்து விழுந்தான். கமலம் உண்மையாகவே பயந்துவிட்டாள். இது நடந்த பிறகு கிட்டானிடம் அவள் இந்த மாதிரி விஷயத்தைப் பேசவேமாட்டாள்.

அன்று குளித்துவிட்டு 'டீ' அருந்திக் கொண்டிருக்கும்போது, ஒரு பையன் வந்து கடிதம் ஒன்றைக் கிட்டானிடம் கொடுத்தான். கிட்டானுக்கு இதுவரையில் யாரும் கடிதம் அனுப்பியது கிடையாது. ஆவலுடன் கடிதத்தைப் பிரித்தான்.

'தம்பி கிட்டானுக்கு'

நீ நல்லவனாக மாறவேண்டும் என்று நான் கடவுளை வேண்டிக் கொண்டிருக்கிறேன். உனக்கு வரப் போகும் ஆபத்தைத் தெரிவிக்கவே இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். நான் இப்படி ஒரு கடிதம் எழுதினேன், என்று தெரிந்தால், என் கணவர் என்னைக் கொன்றுபோடுவார் என்றாலும், சகோதர பாசத்தினால் இந்தக் கடிதம் எழுதுகிறேன். நீ திருட்டுச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கு உடந்தையாக இருக்கிறாய் என்றும், தெருவில் நடமாடுபவர்களை மிரட்டி நீலமேகத்தின் கடையில் காப்பி சாப்பிட வற்புறுத்துகிறாய் என்றும், உன்னால் அமைதி குலைகிறது என்றும், இன்னும் எத்தனையோ மெய்யும் பொய்யுமான



புகார்கள் உன்னைப்பற்றிப் போலீஸ் அதிகாரிகளுக்குப் போயிருக்கிறது. புகார் செய்தவர் [illegible]ம்தான். நேற்று [illegible] கடிதம் போலீசுக்குப் போயிருக்கு. போலீஸ் உன்னை எந்த நேரமும் தேடி வரலாம்; ஜாக்கிரதை! சட்டத்திலிருந்து, உன் கத்தி உன்னைக் காப்பாற்றிவிடும் என்று நான் நினைக்கவில்லை

இப்படிக்கு,

பானு.

என்று கடிதத்தில் எழுதியிருந்தது. தன் சகோதரியின் அன்பை நினைத்து 'கிட்டானின்' இதயம் பாகாய் உருகியது. அவன் கண்களில் நீர் நிறைந்தது. என்றாவது ஒருநாள் தான் போலீசாரிடம் சிக்கிக்கொள்ளத்தான் போகிறோம் என்று அவன் உள்ளுணர்வு உணர்த்திக்கொண்டே இருந்தது. இந்தக் கடிதத்தைப் பார்த்த பின்தான் கிட்டானுக்கு, மொஹிதீனும், தன் அத்தானும் சில நாட்களாக இணைந்து பழகுவதன் ரகசியம் புரிந்தது; மொஹிதீன் டீக் கடையை மூடிவிட்டு ஏதோ ஜவுளி வியாபாரம் செய்யப் போகிறான்,—என்ற வதந்தி அவன் காதில் விழு[illegible]கொண்டு இருந்தது; அதில் தன் அத்தானும் பங்கு கொள்ளுவார் என்று அவன் நினைக்கவே இல்லை. மொஹிதீன் பொல்லாதவனாயிற்றே! தன் அத்தானை வியாபாரத்தில் மோசம் செய்துவிடுவானே—என்று அத்தானுக்காக இல்லாவிட்டாலும், தன் சகோதரி 'பானு'வுக்காகக் கவலைப்பட்டான், கிட்டான்.

கிட்டானுக்கு அன்று சந்தோஷமான நாள், கமலம் ஒரு குழந்தைக்குத் தாயான நன்னாள். சிவந்த நிறத்தில் துணியில் கிடத்தியிருந்த, அந்த சின்னஞ் சிறு குழந்தையைப் பார்த்து மகிழ்ந்தான் கிட்டான். பெற்ற பாசம் அவனைப் பிடித்து உலுக்கியது. மன நிறைவுடன், தெருவில் நிமிர்ந்து நடந்துகொண்டிருந்தான் கிட்டான். மாலை தென்றல் காற்று அவன் உடலில் பட்டு மெய்சிலிர்க்கச் செய்தது. தெருவைத் தாண்டி ஊர் கோடியி




இவன் என்னை "மடையன்", "முட்டாள்", "புத்தியில்லாதவன்" அப்படின்னு திட்டினுங்க......

உண்மையாகவா?

ஆமாங்க! அதை தான் நிரூபிக்க முடியுங்க!

! ! !

லிருக்கும் மாரியம்மன் கோயில் பக்கம் வந்து, ரஸ்தாவுக்கு ஒரு பக்கத்தில் இருந்த குளத்தங்கரையில் உட்கார்ந்தான் கிட்டான். ரோடிலும், ஜன நடமாட்டம் அதிகமில்லை. மாலை மறைந்து லேசாக இருள் பரவ ஆரம்பித்த சமயம், நீல வானத்தில், நட்சத்திரக் கூட்டங்களுக்கிடையே முகிலால் தன்னை மறைத்துக்கொண்டே, நடு நடுவே, குளத்திலிருக்கும் அல்லி நங்கைகளைப் பார்த்துப் புன்னகை புரிந்தான் சந்திரன். ஜேபியிலிருந்து ஒரு சிகரெட்டைப் புகைத்துக் கொண்டே, யோசனையில் ஆழ்ந்தான் கிட்டான். நிலவு வெளிச்சத்தில் அவன் கத்தி பளபளத்துக்கொண்டிருந்தது. யோசனையில் பொழுது போனதே தெரியவில்லை. ஏதோ ஒருவிதமான இன்பம் அவன் இதயத்தில் நிறைந்திருந்தது. தூரத்தில் மாட்டு வண்டி ஒன்று ஆடி அசைந்துகொண்டு வந்

தது. காளைகளின் சதங்கை ஒலி நன்றாகக் கேட்டது கிட்டானுக்கு. நோக்கினான். நிலா வெளிச்சத்தில் அந்த வண்டி தன் அத்தானுடையது தான் என்று அவனுக்குத் தெரிந்தது. அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. ஒரு குற்றமும் செய்யாமலிருக்கும் தன்னைப்பற்றி மோஹிதனுடன் சேர்ந்துகொண்டு, போலீசுக்குப் புகார் செய்த அந்தக் கெட்ட மனிதனை ஒரே குத்தில் தன் கத்திக்கு இரையாக்கிவிட வேண்டும் என்று தோன்றியது. சட்டென்று எழுந்தான். கத்தியில் கை வைத்தான். அதேசமயம், 'அய்யோ! காப்பாற்றுங்களேன், இந்தப் பாவியிடமிருந்து' என்ற ஓலக்குரல் அந்த வண்டியிலிருந்து கிளம்பியது.

கிட்டான் ஒரே தாவில் வண்டியை நெருங்கினான். வண்டியில் மோஹிதன் தன் சகோதரியிடம் தகாத முறையில் நடந்துகொள்ளத் துணிந்ததையும், அவள் கூப்பாடு போட்டதையும் தெரிந்துகொண்ட கிட்டானின் கண்களில் அனல் பறந்தது. ஆத்திரத்தால் உடல் பதறியது. முழுவேகத்துடன் கத்தியை மோஹிதனின் மார்பில் பாய்ச்சப் பாய்ந்தான். மோஹிதனும் தற்காப்புக்காக, கிட்டானின் தோளில் தன் கத்தியால் குத்தினான். கிட்டானின் தோளிலிருந்து ரத்தம் பெருகியது. அடிபட்ட வேங்கை போல், தன் முழுபலத்துடன் மறுபடியும் மோஹிதனின் மார்பில் கத்தியால் குத்தினான் கிட்டான். குருதி வெள்ளம் வண்டியெல்லாம் பெருகி ஓடியது. இந்தக்கோரக் காட்சியைக் காணச் சகியாமல் வண்டிக்காரன் பயந்து ஓடிவிட்டான். கிட்டானின் சகோதரி பானு பயத்துடன் கண்களை மூடிக்கொண்டாள். பழைய நண்பர்கள் இருவரும் ரத்த வெள்ளத்தில் குளித்தார்கள். மோஹிதன் தன் தகாத செய்கையினால், இந்த உலகத்தில் எத்தனையோ ஆசைகளை விட்டுவிட்டு, மறு உலகத்தைப் பார்க்கப் போய்விட்டான். கிட்டானின் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. அதிகமான ரத்தப் போக்கினால் அவன் மிகவும் தளர்ந்துவிட்டிருந்தான். 'அய்யோ தம்பீ! உன் அத்தான் பணத்தாசை பிடித்து, இந்த மோஹிதனுடன் சேர்த்து, வியாபாரம் என்று ஆரம்பிக்கும்போதே எனக்குத் தெரியும் என்று விபரீதம் நடக்கப் போகிறது தானே நம்பிவிட்டாங்க. இந்த மோஹிதனும், பணத்தாசை காட்டி, அவரை மோசம் செய்துகொண்டே வந்தான். நானும், அவருமாகத்தான் டவுனுக்குப் போயிருந்தோம். இவன் மனதில் கெட்ட எண்ணத்துடன் உன் அத்தானை அங்கேயே தங்க வைத்துவிட்டான். எனக்குத் தெரியாமல், பின்னால் வந்து வழியில் என்னை தொந்தரவு செய்ய வந்தான். நல்ல வேளை, சமயத்தில் நீ உதவினாய். என் மானம் காப்பாற்றப் பட்டது. நீ சீக்கிரம் ஓடி விடு. போலீசார் வந்துவிடுவார்கள். இந்த பழியை நான் ஏற்றுக்கொள்கிறேன். கத்தியை இப்படிக் கொடு' என்றாள் பானு கண்ணீர் வழிய.

அந்த நிலையிலும் கிட்டான் ஒரு வறண்ட சிரிப்புச் சிரித்தான். குற்றம் செய்துவிட்டு ஒரு பெண் பிள்ளையைக் காட்டிக் கொடுக்கும் அளவுக்கு என்னை கோழையாக்கிவிடவில்லை இந்தக் கத்தி. நீ வீட்டுக்குப் போய் விடு அக்கா. நான் என்னை கவனித்துக் கொள்கிறேன். உன் வாயால் நீ ஒரு முறை 'தம்பி நீ நல்லவனடா' என்று சொன்னால் போதும், என் மனம் நிம்மதி அடைந்துவிடும். இந்த உலகமோ என்னை போக்கிரி என்று சொன்னாலும், அம்மாவும், நீயும் என்னை நல்லவன் என்றால் அதுவே போதும் எனக்கு என்றான் கிட்டான். உணர்ச்சிப் பெருக்கில், பானுவின் இதயம் படபடத்தது. 'தம்பீ, என்னை மன்னித்து விடு. நீ நல்லவனாகிவிட்டாய். எனக்காக கொலை செய்யவும் துணிந்த உன் அன்புக்கு முன்னால் நான் தலை வணங்குகிறேன். இந்தக் கத்திதான் உன்னைக் கெட்டவனாக்கிவிட்டது. இனிமேல் அது உனக்கு வேண்டாம்' என்று ஆவேசம் வந்தவள்போல், கிட்டான் கையிலிருந்து அந்த ரத்தம் தோய்ந்த கத்தியை பிடுங்கி ஆழமான குளத்தை நோக்கி எறிந்தான். 'களிங்' என்ற சத்தத்துடன் அந்தக் கத்தி, 'குளத்து ஜலத்தில் வீழ்ந்து



அலைகளைக் கிளப்பிவிட்டு, தண்ணீருக்கடியில் மறைந்தது.

தன்னுடன் பல நாட்களாக உறவாடி, தனக்கு வாழ்க்கையில் துணைபுரிந்த கத்தி போனதும் கிட்டானுக்குத் தன் உயிரே போய்விட்டதுபோல இருந்தது. 'அக்கா! என்ன காரியம் செய்தாய்? அந்தக் கத்திதானே என் உயிர்! அதில்லாமல் நான் எப்படி பிழைக்க முடியும்? கத்தியில்லாத கிட்டானை யாராவது மதிப்பார்களா?' என்றபடி என்ன செய்கிறோம் என்று தெரியாமல் தண்ணீரில் குதித்தான் கிட்டான். எப்படியும் தண்ணீரில் மூழ்கிக் கத்தியை எடுத்துவிட வேண்டும் என்ற வேகம் அவனுள் நிறைந்திருந்தது. இரண்டு வாய் தண்ணீர் குடித்த பிறகுதான் அவனுக்கு நீச்சல் தெரியாது என்ற உண்மை அவனுக்கே புரிந்தது.

மறுநாள் காலையில் டவுனிலிருந்து போக்கிரி கிட்டானைப் பிடிக்க வந்த போலீஸ் படை மாரியம்மன் கோயில் குளத்தில் மிதந்த அவன் சடலத்தையும், குளத்தருகே இறந்து கிடந்த மோஹிதனின் பிணத்தையும் கண்டு எடுத்தது. தன் சகோதரன் சடலத்தின் மீது விழுந்து அழுதாள் பானு. கிட்டானின் மனைவி 'அதிருஷ்டம் கெட்ட குழந்தை பிறந்ததும் அப்பனை விழுங்கிவிட்டது' என்று ஒப்பாரி வைத்தாள். நேற்று வரையில் எதிரியாயிருந்த பானுவின் கணவன் கண்களில் பெருகிய நீரை மேல் துண்டால் துடைத்துக்கொண்டதுதான் எவருக்கும் புரியாத, ஒரு புதிராக இருந்தது. ஆஜானுபாகுவான கிட்டானின் உடல் கிடப்பதைப் பார்த்த எவரும் 'இவன் எப்படி இறந்தான்?' என்று நினைத்து மலைத்து நின்றுவிட்டார்கள். மோஹிதனும், கிட்டானும் இரு போக்கிரிகள். சண்டை போட்டுக் கொண்டு இருவரும் இறந்தார்கள் என்று உலகம் தீர்ப்புக் கூறியது. 'கிட்டானை தெரிந்தவர்கள் எல்லாம், அவனுடன் இணைபிரியாதிருந்த கத்தியைக் காணவில்லையே என்று நினைத்தார்கள். போலீசாரும் தேடிப் பார்த்தார்கள். கிட்டானின் வாழ்வுக்கும், தாழ்வுக்கும் உதவியாயிருந்த, அந்த உயிரைக் கொல்லும் கத்தி மாரியம்மன் கோயில் குளத்துக்கடியில் கிடக்கிறது என்ற ரகசியம் பானுவைத் தவிர, வேறு எவருக்கும் தெரியாது. தன் சகோதரனுக்காக, அந்த ரகசியத்தை தன் இதயத்திலேயே பூட்டி வைத்திருந்தாள் பானு. இப்பொழுதெல்லாம் சண்டையை மறந்து, பானுவின் குடும்பமும், கிட்டானின் குடும்பமும் உறவாடிக்கொண்டிருக்கிறது. எத்தனையோ நாட்களுக்குப் பிறகு 'எங்கள் ஊரில் கிட்டான் என்ற ஒரு போக்கிரி இருந்தான்' என்று ஊர் ஜனங்கள் அவனையும், அவன் கத்தியையும்பற்றிக் கதையாகச் சொல்லிக்கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லை அல்லவா?




நான் சினிமாவுக்கும் போகலை, டிராமாவுக்கும் போகலை. ஒரு சினேகிதரோடே இவ்வளவு நேரம் பேசிண்டிருந்துட்டு நேரே வரேன்!

அதெல்லாம் என்கிட்டே சொல்லாதீங்கள்! உங்க கதையெல்லாம் நான் நம்பவே மாட்டேன்!

? ? ?

# மாதுளையும் மக்குத் துரையும்



பாலர் மலர்:

ஒரு நாள் ஒரு ஆங்கிலத்துரையானவன் காட்டுப்பாதை வழியாக போய்க் கொண்டிருந்தான். அவனுக்கு நல்ல பசி. மிகுந்த களைப்படைந்து விட்டான். ஏதாவது தின்பதற்குக் கிடைக்காதா என்று ஏங்கிக்கொண்டே சென்றான். செல்லும் வழியிலே, ஒரு நாட்டுப்புறத்தான் மாதுளம் பழங்களை வைத்து விற்றுக் கொண்டிருந்தான். அதைப் பார்த்ததும் துரைக்கு ஆசை தாங்கவில்லை. அப்பாடா! இங்கே ஏதோ பழங்கள் இருக்கின்றன; இவற்றையாவது வாங்கித் தின்று பசியாறலாமென்று, பழக்காரனிடம் போய் பழங்களை எடுத்துக் கொண்டு, என்ன விலை என்று கேட்டான். அதுவும் ஆங்கிலத்தில் கேட்டான். அது நாட்டுப்புறத்தானுக்குப் புரியவில்லை. அதனாலே அவன் தமிழ் மொழியில் பதில் சொன்னான். அதுவோ அந்த துரைக்குப் புரியவில்லை... அவனுக்கோ கடும் பசி. அதனால் விலை 'என்ன என்ன' என்று மேலும் மேலும் ஆங்கிலத்திலேயே கேட்டான்.

நாட்டுப்புறத்தானோ, அவன் ஏதோ உளறிக்கொட்டிக் கிளறி மூடுகிறான் என்று நினைத்துக் கொண்டு, இதன் விலை ஐந்து அணைக்கள் என்று தமிழிலே சொன்னான். அதுவோ அந்த துரைக்குப் புரியவில்லை. பசியோ வயிற்றைக்கிள்ளியது. எப்படியாவது, பழம் கிடைத்தால்போதும் என்று நினைத்து, ஒரு ரூபாயை கொடுத்தான். கொடுத்தவன் சில்லரை வாங்கத் தெரியாமல் விறுவிறுஎன்று நடையைக்கட்டினான். நாட்டுப்புறத்தானோ, ஐந்தணா பழத்திற்கு ஒரு ரூபாய் கிடைத்ததே என்று அளவிலா மகிழ்ச்சி அடைந்தான்.

அதற்கு முன்பு அந்தத் துரை மாதுளம் பழத்தை பார்த்ததில்லை. அதனால் அதை எப்படித் தின்பது என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆகவே மாம்பழத்தைத் தின்பது போல்; மேல் தோலோடு சேர்ந்து மாதுளம் பழத்தைக் கடித்துத் தின்றான். மாதுளம் தோலோ ஒரே துவர்ப்பாகத் துவர்த்தது. அதனால் அவனுக்கு ஆத்திரம் கிளம்பிவிட்டது. 'அடடா! இந்தப் பழம் நன்றாக இனிக்கும் என்றல்லவா ஏமாந்து வாங்கிவிட்டேன்! சே! சே! மனம் குமட்டி வாந்தி பண்ணும்படியாகத் துவர்க்கிறதே சனியன்!' என்று கோபமாக வீசி எறிந்தான்.

அந்தப் பழமோ அருகில் இருந்த ஒரு பாறைமீது பட்டு உடைந்தது. அதன் உள்ளே மறைந்திருந்த மாதுளை முத்துக்கள், நாலா பக்கமும் சிதறி ஓடிப் பளபளவென்று மின்னின! அதைக் கண்ட அந்தத் துரை ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டு நின்றான்.

'ஆகா! என்ன புதுமை! இவ்வளவு அழகான முத்துக் குவியல்கள், ஏன் இந்தப் பழத்துக்குள் வந்து, இப்படி ஒளிந்து கொண்டு இருக்கின்றன?' என்று மேலும் மேலும் வியப்பாகப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அப்பொழுது சில சிறுவர்கள் வேகமாக ஓடி வந்து, சிதறிக் கிடந்த மாதுளை முத்துக்களைப் பொறுக்கித் தின்று கொண்டு இன்பமாகப் பாடினார்கள்! அதைப் பார்த்த அந்தத் துரையும் ஆசையாக ஓடிப் போய், அந்த முத்துக்களைப் பொறுக்கிப் பொறுக்கித் தின்றான். தின்னத் தின்னத் தேனைப் போல் இனிக்கவே, ஓடி ஓடிப் பொறுக்கித் தின்று உற்சாகமாகப் பாடினான். அதனைக் கண்ட சிறுவர்கள் எல்லாம் மகிழ்ச்சி கொண்டு தானைத் தானைப் பாடித் தாளம் போட்டுக் குதித்து ஆடினார்கள்!

துரைக்கு ஒரே குதூகலமாகத் தான் இருந்தது! இருந்தாலும் கொஞ்சம் வருத்தப்பட்டான்.



'மாதுளம் பழத்தின் உள்ளே இருந்த இனிப்பான முத்துக்களைத் தின்னத் தெரியாமல் அதன் தோலைத் தின்று விட்டுத் துவர்க்குது என்று சொல்லி இகழ்ந்தேனே! என்ன அறியாமை! ஆகா! இந்த மாதுளம் பழம் எவ்வளவு இனிப்பாக இருக்கிறது! பாலைவிட மிகவும் இனிப்பாக இருக்கிறதே! அடடா! எவ்வளவு இனிப்பான பழம்!' என்று புகழ்ந்து மகிழ்ந்தான்.

உண்மையைத்தான் பொய்மை மூடி
உலகில் நம்மை ஏய்க்கும்!
திண்மையாக அதனைத் தேடித்
தெரிந்து நன்கு வாழ்வோம்.

# திருவெம்பாவை

சங்கீதகலாநிதி செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர் ஸ்வரப்படுத்தியது


கோழி சிலம்ப, சிலம்பும் குருகு எங்கும்;
ஏழில் இயம்ப, இயம்பும் வெண் சங்கெங்கும்;
கேழில் பரஞ்சோதி, கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம்; கேட்டிலையோ!
வாழி! ஈதென்ன உறக்கமோ? வாய்திறவாய்!
ஆழியான் அன்புடைமை ஆம்ஆறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை,
ஏழை பங்காளனையே பாடேலோ ரெம்பாவாய்! (8)

ராகம்: பிஹாக்.] [ஆதி தாளம். (1 களை)
(29 மேளத்தில் ஜன்யம்.)

| | | |
|---|---|---|
| 1 ; ஸமா கமா பா ; நீஸ்ா | x நீ, தபபா, பம | காமா ரீகா |
| கோ ழி சி லம் பச்சி | லம் பும் கு | ரு கு எங்கும் |
| ; கமா பமா கா, ரி ஸா நீ | ஸா, ஸா, பம | கா, ரி ஸநி ஸா |
| ஏ ழி லி யம் . ப இ | யம் பும் வெ | ண் சங் கெங்கும் |
| 2 ; ஸமா கமா பா ; நிதரிஸ் | x நீதபபா பம | காமாரீகா |
| கோ ழி சி லம் ப . ச்சி , | லம் பும் கு . | ரு கு எங்கும் |
| ; கமா தப மா கா, ரிஸா நீ | ஸா, ஸா, தப | மகரி மகரிஸநி |
| ஏ ழி லி யம் . ப இ | யம் பும் வெண் | சங் . கெங் கும். |
| 1 ,,, மா கமா பாநி தநீ நீ | ,,, ஸ்ா ஸ் நீ | ஸ்ா, ஸ் ஸ்ா ஸ்ா |
| கேழில்ப ரஞ் சோ தி | கேழில்ப | ரங் க ரு ணை |
| 2 ,,, ஸ்ா ஸ் ஸ்நி தநீ தபபா, பா | ,,, நீ த நீ | ஸ்ா, ஸ் ஸ்ா ஸ்ா |
| கேழில் ப . ரஞ் சோ.. தி | கேழில்ப | ரங் - க ரு ணை |
| ,,, நீ நி ஸ்ா ஸ்தா நிபா தா | x பமதா பம பா | பகா ம ரீ கா |
| கேழில்வி ழு ப்பொருள்கள் | பா . டி னோம் | கே ட்டிலையோ |
| x ,,, ஸமகமா பா ; பா பம | கா, மகா ; | ரிகா ரி ஸா ஸா |
| வா ழி ஈ தென்ன உ . | ற க்கமோ | வாய் தி ற வாய் |
| ,, நி ஸா நி பா ஸா, நி ஸா ஸா | ஸாம கா, மா | பாம பா, பா |
| ஆ ழியான் அன் புடைமை | ஆ . மா றும் | இவ் வா றோ |
| ,,, ஸ்ா நி ஸ்ா தநீ தபபா, பா | ,,, பநி த நீ | ஸ்ா ஸ்ா ஸ்ா ; |
| ஊ ழி மு தல் வ . னாய் | நின் ற ஒ | ரு வ னை |
| x ,,, ஸ்ா நி ஸ்ா ஸ்தா நி மா தா – | நிரிஸ் ஸ்நிதபப | மதப மகம கா |
| ஏ ழைப்ப ங்கா ள னையே | பா.. டே லோர் | எம்.. பா.. வாய் |

(கோழி சிலம்ப)

(X இந்த அடையாளம் தீவ்ர மத்யமத்தைக் குறிக்கும்)



'கல்யாணப் பரிசு' கதை, வசனம் எழுதி டைரக்டும் செய்த ஸ்ரீதருக்கு சமீபத்தில் செங்கற்பட்டு திருமலை டாக்கீஸில் நடைபெற்ற பாராட்டு விழாவில் வீனஸ்' கிருஷ்ணமூர்த்தி பேசுகிறார்.



சென்னையில் சமீபத்தில் அணிவகுத்த ஆடை அழகியரிடையே நடிகையர் பத்மினி, ராகினி

Printed and published By N. Rajagopalan at The "Swadesamitran" Press, House, Mount Road, Madras. Editor : C. R. Srinivasan, B. A.

**Regd. No. 2514.** The Swadesamitran Weekly
Registered as a Newspaper in CEYLON






தென்னாடெங்கும் வெற்றிகரமாய்
நடைபெறுகிறது




விநியோகஸ்தர்கள்: சென்னை நகரம்: கோல்டன் பிலிம்ஸ் (பிரைவேட்) லிமிடெட், சென்னை-17. ● வட ஆற்காடு, தென் ஆற்காடு செங்கற்பட்டு (பாண்டிச்சேரி): ஆனந்தா பிக்சர்ஸ், வேலூர் (வ. ஆ.) ● திருச்சி & தஞ்சாவூர் (புதுக்கோட்டை காரைக்கால் உள்பட) ராமனாதன் பிக்சர்ஸ், திருச்சிராப்பள்ளி ● மதுரை-ராமநாதபுரம், திருநெல்வேலி: ராமனாதன் பிக்சர்ஸ், மதுரை ● சேலம், கோயம்புத்தூர் & நீலகிரி: சந்திர பிரபா பிக்சர்ஸ், கோயம்புத்தூர் ● கேரளா (கன்யாகுமரி உள்பட): அசோசியேட்டட் பிக்சர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் எர்ணாகுளம். ● மைசூர் சமஸ்தானம்: தல்லம் பிக்சர்ஸ், பெங்களூர். ● சிலோன்: சிலோன் தியேட்டர்ஸ் லிமிடெட் கொழும்பு ● எப்.எம்.எஸ்: இந்தியன் பிலிம்ஸ் கம்பைன் (பிரைவேட்) லிமிடெட், பம்பாய்-4.

BEE BEES.



# பொருளடக்கம்

Vol: XXX] [No 45
விகாரி௵ கார்த்திகை௴ 27உ — 1959௵ டிசம்பர்௴ 13உ

ஒழுங்கீனம் ஒழிய வழி 3
மக்கள் மன்றம் 5
அரசியல் துக்கடா 7
காற்றுவாக்கிலே —அரட்டை 9
துப்பாக்கிப் பிடித்த கை தூரிகையும் பிடிக்கும் 14
நட்சத்திரப் பேட்டி 16
சதித் திட்டம் —பக்தன் 18
மழை —'ஆர்வி' 25
மாதர் மகாசபை —குங்குமம் 33
மூடிக்கிடக்குதே உன் நெஞ்சம் —தமிழ்வாணன் 37
விந்தைக் கிழவி —பூவார் கணேசன் 46
வீரமாதகா வீர மாதர் —எம். எஸ். எஸ். 51
ஈடு 'தபஸ்வி' 58
திரும்பிய உயிர் —புஷ்கலா 65
நாராயணீயம் —சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் 73
துணைப் பறவை —எஸ். விஜயராகவன் 77
திருவெம்பாவை —செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர் 83
அன்பும் அறிவும் —பத்மாஸனி தேசிகன் 84

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.




வாழிய செந்தமிழ் — வாழ்க நற்றமிழர்

★

## ஒழுங்கீனம் ஒழிய வழி

மாணவர்களிடை அதிகரித்து வரும் ஒழுங்கீனம் ஆழ்ந்த வேதனைக்குரியது. பள்ளிக்கூடங்கள், அல்லது கல்லூரிகளுக்குள்ளே மட்டுமல்ல—அவைகளுக்கு வெளியிலும் பலவிதக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு அவர்கள் தங்கள் அரிய நேரத்தை வீணாக்குகின்றனர். ஸினிமாவுக்குள் தங்களை இலவசமாக விடவேண்டுமென்று ஆர்ப்பாட்டம் செய்யும் இளைஞர்களும் உண்டு. பரீட்சைக் கேள்விகள் கடினமென்று காரணம் சொல்லி பள்ளிக்கூடத்திலிருந்து மாணவர்கள் 'வெளி நடப்பு' செய்வது குறிப்பாக வங்காளத்தில் வெகு சகஜமாகி விட்டது. அலகாபாத் சர்வகலாசாலையில் சில தினங்களுக்கு முன் நடந்த சம்பவம் இன்னும் வெட்கக்கேடானது. ஒரு மாணவனை உயரிய வகுப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக அந்த சர்வகலாசாலை மாணவர்கள் எல்லோரும் வேலை நிறுத்தத்தில் இறங்கிவிட்டார்கள். ஒரு மாணவன் ஒரு குறிப்பிட்ட வகுப்புக்கு இலாயக்கா, அல்லது பரீட்சைக் கேள்விகள் எப்படியிருக்க வேண்டும் என்பதை யார் முடிவு செய்வது? மாணவர்களா? அப்படியாயின், எதையும் படிக்க வேண்டிய சிரமம் இல்லாமலேயே அவர்களுக்கு வேண்டிய பட்டங்களை வாரி வழங்கிவிட்டு, எல்லாக் கல்விச்சாலைகளையும் மூடிவிடலாம். நமது ராஜ்யத்திலும் தேர்வு முறையை வரவரத் தாழ்த்துவதற்கான கிளர்ச்சிகளுக்குக் குறைவில்லை.

மாணவர்களிடை இவ்வாறு ஒழுங்கீனங்கள் அதிகரித்து வருவதேன்? கல்விச் சாலைகளில் கூட்டம் அதிகரித்து விட்டதை

ஒரு காரணமாக பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார். நமது கல்லூரிகளைப் பற்றியவரை, தற்போது அக்காரணம் பொருந்தாது. ஒவ்வொரு வகுப்பிலும் பல இடங்கள் காலியாகக் கிடப்பதாக அவற்றின் நிர்வாகிகள் புகார் செய்கின்றனர். ஆனால், கீழ் வகுப்புகளில் கூட்டம் விசேஷமாகப் பெருகிவிட்டதென்பதில் சந்தேகமில்லை. இது காரணமாக ஆசிரியர்கள் மாணவர்களின் படிப்பு அல்லது நடத்தை விஷயத்தில் தனிப்பட்ட கவனம் செலுத்த முடியவில்லை. கூட்டம் சேருமிடத்தில் தரம் குறைவது இயற்கை விதி. அதோடு ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் முன்பிருந்த உறவு முறையும் இப்போது விசேஷமாக மாறிவிட்டது. தங்கள் பொறுப்பிலுள்ள இளைஞர்களை எப்பாடு பட்டாவது முன்னுக்குக் கொண்டு வருவது தங்கள் புனிதக் கடமை என்று எண்ணும் ஆசிரியர்கள் தற்போது எவ்வளவு பேர்? அவ்வாறே ஆசிரியர்களிடம் மாணவர்களுக்கு இருக்க வேண்டிய மதிப்பும், அச்சமும் மறைந்து விட்டன. இங்கு 'அச்சம்' என்பதை கோழைத்தனம் என்ற பொருளில் நாம் உபயோகிக்கவில்லை. தெரிந்து தப்பு செய்வதில் இருக்க வேண்டிய அச்சத்தையே குறிப்பிடுகிறோம். இப்போது பல இளைஞர்களுக்கு கல்விச் சாலைகளிலும் அத்தகைய அச்சமில்லை. வீட்டிலும் அவர்கள் மீது இருக்க வேண்டிய மேற்பார்வை தளர்ந்து வருகிறது.

இதுவரை படிப்பு வாசனையேயில்லாத குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் இப்போது பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் சேர்ந்திருப்பது ஒழுங்கீனங்களுக்கு இன்னொரு காரணம் என்று பண்டித நேரு கூறுகிறார். ஆனால், ஒழுங்கீனங்கள் இவ்வளவு பரவலாக உள்ள நிலையில் அத்தகைய பாகுபாடு செய்வதற்கில்லை. பொதுவாக பழைய வாழ்க்கை நியதிகளை எதிர்க்கும் உணர்ச்சி எங்குமே அதிகரித்து வருகிறதென்றும் நமது பிரதம மந்திரி குறிப்பிட்டுள்ளார். பழைய நியதிகள் அனைத்துமே தர்மானவை யென்று யாரும் சொல்லவில்லை. ஆனால், பழையவை என்பதற்காக அவை அனைத்தையுமே ஒழித்துக் கட்டிவிட வேண்டுமென்பதும் அவிவேகம். உண்மையில் அத்தகைய கண்மூடித்தனமான பிரசாரமும் தற்போது மாணவர்கள் நெறிதவறி நடப்பதற்கு ஒரு முக்கிய காரணம். தனி நபர் வாழ்வும், அதன் மூலம் சமுதாய வாழ்வும் சீர்பெற எந்நிலையிலும் சில அடிப்படையான நெறிகளைக் கடைப்பிடிப்பது அவசியம். ஆசிரியர்களிடம் மரியாதை, நமது உள்ளத்துக்கும் ஒளிதரும் சக்தியிடம் பக்தி, இதற்கு ஆதாரமான மத நம்பிக்கை முதலியவை காலமாறுபாட்டால் கைவிடக்கூடிய பண்புகளன்று. அவை எக்காலத்துக்கும் பொருத்தமானவை, அவசியமானவை. அவை நம் இளைஞர்களின் நெஞ்சில் உரம்பெற வகை செய்யத்தக்க நிலையிலேயே தற்போதைய கோளாறுகளுக்கு ஒரு முடிவு காண்பது சாத்தியம்.

# மக்கள் மன்றம்

ஒவ்வொரு பத்திரிகையும் 'இந்திய — சீன எல்லைப் பிரச்னை'பற்றி பத்தி பத்தியாக தலையங்கம் எழுதும் சமயத்தில், தாங்கள் அப்பிரச்னையை 6-வது இதழ் அட்டைப் படத்தில் போட்டு உள்ள உண்மையைப் படம் பிடித்து காட்டிவிட்டீர்கள்!

தற்போது 'மித்திரனி'ல் சரித்திரத் தொடர் கதை இல்லை. வரும் பொங்கல் இதழிலாவது பிரபல கதாசிரியரின் சரித்திரத் தொடர் கதை எதிர்பார்க்கலாமா? 'வீட்டில் — ஆண் நட்சத்திரம்' பகுதியை ஆரம்பியுங்களேன்!

கோவாடி-என் உபாமாறு. என். உமா.
ஆர். எஸ். புரம். கோயம்புத்தூர்.

ஃ ஃ ஃ

29-வது இதழில் 'புதையல், பண்பா... பணமா..., காளையின் காதலி' என்ற மூன்று கதைகளும், 'நாகரீகமா' என்ற கவிதையும் போற்றக்கூடியவை. அட்டைப்படம் எங்கள் மனதைக் கவர்ந்தது. ஒவ்வொரு இதழிலும் அட்டைப்படம் பிரமாதமாக வருகிறது. உங்கள் முயற்சியைப் பாராட்டுகிறேன்.

என். எச். எஸ். சுல்தான்,-கே. பாலு.
நாகூர்

ஃ ஃ ஃ

29-வது இதழில் 'வரதட்சிணை ஒழிய வழி' என்ற தலையங்கத்தை வரவேற்கிறேன். 'ஏழைக் குடும்பங்கள் கடன் வாங்கியே விவாகச் செலவுகளை நடத்த வேண்டியுள்ளதால், அவர்கள் இம் மசோதாவை வரவேற்பது இயற்கை' என்று எழுதினீர்கள். வரதட்சிணையின் தொகை அதிகமாக அதிகமாக ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களின் கதி என்னவது? அவர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் நிலை என்னவது? இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்குங்கால் யாராயினும் சரி, மசோதாவை மீறினால், பரிசீலனைக் கமிட்டி அங்கத்தினர் தெரிவித்தாற்போல், எவ்வித பாரபட்சமும் இன்றிக் கொடுந்தண்டனைக்குட்படுத்தினால் ஒழிய இக்கேவலமான வரதட்சிணை முறை நம்மைவிட்டு நீங்காது. வானம் பொழிய பூமி வளர, நாடு நலம் பெற, பெண்டிர் சமூகம் வாழ இச்சட்டம் அவசியமானது.

எஸ். கிருஷ்ணமூர்த்தி.
மேலூர்.

ஃ ஃ ஃ

29-வது இதழில் 'ஓ...ஓ...சாரதா' என்ற கதை கருத்தின் மேன்மை கொண்ட கதை, பெண்ணின் பெருமையையும் புலப்படுத்தியிருக்கிறது. ஆயினும் இந்தக் கதையில் பைத்தியமாயிருக்கச் செய்து, பின்னர் அதெல்லாம் வெறும் நடிப்பு என்று காட்டப்படுகிறது. இது நம்பத் தகுந்தல்ல. பத்து மாத காலம் பைத்தியமாய் நடிக்கிறான் என்றால் உண்மையில் அவன் பைத்தியமாகவே மாறிவிடுவான். கற்பனைக்கும் ஒரு அளவு உண்டு என்று நினைக்கிறேன்.

சே ம்பத்.
வேலூர்.

ஃ ஃ ஃ

29-வது இதழில் வெளியான பண்பா பணமா, வாழப் பிறந்தவள், ஓ...ஓ... சாரதா என்ற கதைகள் மிகவும் நன்றாக அமைந்துள்ளன. இக்கதைகளை எழுதிய ஆசிரியர்களுக்கு என் நன்றி. தாங்கள் இம்மாதிரியான கதைகளை மேன்மேலும் வெளியிடக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வெ. வசந்தன்.
குணசீலம், டிசிறி.

ஃ ஃ ஃ

29-வது இதழில் 'கீதா கோவிந்தக் காட்சி' ஒன்றுக்கு விளக்கம் தருகிறது அட்டைப்பட ஓவியம். வர்ண

மும், தூரிகையும் கொண்டு 'பேசும் பொற்சித்திரம்' சமைத்திருக்கிறார் ஓவியர். வர்ணச் சேர்க்கைகள் சிறப்பாக அமைந்து விட்டன. 'கலைமகள்' அருள் பெற்ற அந்தக் கலாமேதைக்கு எனது ஆசிகள்!

ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தி,
புதுடில்லி-3.

❀ ❀ ❀

29-ம் 'மித்திரனி'ல் கே. ஆர். மீனாட்சி எழுதிய 'பண்பா? பணமா?' என்ற கதை பணம் பெரிதல்ல, பண்புதான் சிறந்தது என்பதையும், சகோதரர்களின் ரத்த பாசத்தையும் சித்தரிக்கிறது. கந்தசாமி எழுதிய 'நாகரீகம்' என்ற கவிதை காலத்திற்கேற்ப நன்கு உள்ளது. இவ்விருவருக்கும் என் பாராட்டுதல்கள்.

சி. ராகவேந்திரன்,
சென்னை-11.

❀ ❀ ❀

'மித்திரன்' வாரப் பதிப்பில் வரும் கதைகள் மிகவும் நன்றாய் உள்ளன. ஆனால், சித்திரங்கள் அவற்றுக்கேற்ப அமையவில்லை. நன்றாய் எழுதக்கூடிய சித்திரக்காரர்களை தாங்கள் பயன்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறோம். 'ஆதித்தன் காதல்' எங்களை மிகவும் கவர்ந்தது. அதுபோல் மீண்டும் எங்களுக்கு ஒரு சரித்திரத் தொடர் நாவலை விரைவில் துவக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

கே. சுந்தரராஜன். கே. சீதாபதி.
கே. ஆர். ஜெயராமன் —திருச்சி-3

❀ ❀ ❀

29-ம் இதழ் அட்டைப்படம் மனதைக் கவர்ந்து விட்டது. 'பண்பா பணமா' என்ற கதை உயர்ந்த கருத்தோடு தெளிவான முறையில் அமைந்திருந்தது. அண்ணன் தம்பி ஒற்றுமைக்கு இக்கதை ஒரு எடுத்துக்காட்டு. கே. ஆர். மீனாட்சிக்கு என் நன்றி. எல்லார்வி எழுதிய 'வாழப் பிறந்தவள்' என்ற கதை மிகவும் பாராட்டத்தக்கது.

மீனாட்சி-நடராஜன்.
அல்லூர்

'மித்திரன்' தீபாவளி மலரில் கமலம் என்ற குறுநாவலைப் படித்து மிக்க மகிழ்ச்சி கொண்டோம். சமூக வாழ்க்கையை எளிய நடைமுறையில் எடுத்துக் காட்டிய ஆசிரியர் தி. ஜானகிராமன் அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுகள்.

பி. ராஜேந்திரன்.
கர்நூல்.

❀ ❀ ❀

29-ம் இதழ் இன்பச் சோலை...... சுவை மிக்கதாயிருந்தது. கதைகள் கருத்து நிறைந்து களிப்பு ஊட்டுவனவாய் இருந்தன. தாமிருந்து தமிழ்நாட்டில் தாரகைபோல் திகழும் வாரப் பத்திரிகை 'சுதேசமித்திரன்' தான் என்று கூறத் தயக்கம் தேவையில்லை.

வெ. ச. அநந்தபத்மநாபன்.
சென்னை-5.

❀ ❀ ❀

29-ம் வி. ஆர். பாலன் எழுதிய 'ஓ...ஓ...சாரதா' என்ற கதையும், 'காளையின் காதலி' என்ற கதையும் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. இக்கதைகளைத் திரும்பத் திரும்பப் படித்து மகிழ்ந்தேன்.

இ. சுப்பையா,
பரமக்குடி.

❀ ❀ ❀

29-ம் இதழில் 'வரதட்சணை ஒழிய வழி' என்ற தலையங்கம் வரதட்சணையினால் வாழ்க்கையைப் பாழாக்குவோருக்கு ஓர் சவுக்கடி. எஸ். ஜி. ஆர். எழுதிய 'காளையின் காதலி' என்ற கதை நன்றாக இருக்கிறது. சே. மி. நீலமணி எழுதிய 'பைரவி பாலாமணி' என்ற கதையில் விறுவிறுப்பு இல்லை. ப. ராதாகிருஷ்ணன் எழுதிய 'புதையல்' என்ற கதை சுவை குன்றாமல் தனி நளினத்துடன் செல்லுகிறது. குங்குமம் எழுதும் 'மாதர் மகாசபை' பலே ஜோர்!

மு. மு. நடேசன்.
அறந்தாங்கி.



# அரசியல் துக்கடா

மத்ய சம்பள கமிஷன் சிபாரிசுகள் சர்க்கார் ஊழியர்களுக்கு அதிருப்தி தருவனவாக இருந்தாலும் நாட்டின் அரசியல் பொருளாதார நிலைமை கருதி அவர்கள் வேலை நிறுத்தம் செய்ய மாட்டார்கள்.

—ஒரு செய்தி

நாட்டின் இன்றைய நிலைமையில், ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ய மாட்டார்கள் என்ற தைரியத்தின்மேல் தான் இத்தகைய சிபாரிசுகளை சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கவேண்டும்!

❀ ❀ ❀

ஆர்ப்பாட்டங்கள் செய்வதாலும் கோஷங்கள் எழுப்புவதாலும் விலைவாசிகள் குறையா.

—காமராஜர்

விலைவாசிகள் குறையவேண்டாம்! மேலும் மேலும் ஏறுவதையாவது இந்த ஆர்ப்பாட்டங்களும், கோஷங்களும் தடுக்கக் கூடுமல்லவா?

❀ ❀ ❀

ராஜ்ய மண்பாண்ட உற்பத்தியாளர் மகாநாடு டிசம்பர் மாத இறுதியில் சென்னையில் நடைபெறும்.

—ஒரு செய்தி

சென்னையின் ஒரு பகுதியான சூளையில் இந்த மகாநாடு நடைபெறுமென நம்புகிறோம்!

❀ ❀ ❀

நீண்ட சிறை தண்டனை அனுபவித்த நபர் ஒருவருக்கு முதன் முறையாக இங்கு சர்க்கார் உத்தியோகம் அளிக்கப்பட்டுள்ளது.

—லக்ஷ்மணபுரி செய்தி

நீண்டகாலம் சிறைவாசம் செய்தவர்கள் மந்திரிகளாக ஆட்சி செய்யும் போது இத்தகைய புதுமைகள் எதிர்பார்க்கப்பட வேண்டியவையே!

வடகிழக்கு எல்லையில் வெளிநாட்டு விமானங்கள் சில பறந்தபோது அவை ஏன் சுட்டு வீழ்த்தப்படவில்லை என்று மக்கள் சபையில் சில அங்கத்தினர்கள் பிரதம மந்திரியைக் கேட்டனர்.

—செய்தி

அப்படிச் சுட்டு வீழ்த்தினால் நமக்கும், பாகிஸ்தானுக்கும் என்ன வித்தியாசம்?

❀ ❀ ❀

கிண்டி ரேஸ் நாட்களில் மின்சார ரயிலின் எல்லாப் பெட்டிகளிலும் போலீஸ் பந்தோபஸ்து இருக்கும். ஜேபடிக்காரர்கள் தங்கள் கைவரிசையை மக்களிடம் காட்டக்கூடாது என்பதற்காகவே இந்த ஏற்பாடு.

—சென்னைச் செய்தி

கிண்டிக்குச் செல்லும் மக்களுக்கு இத்தகைய பாதுகாப்பு அவசியம்தான். ஆனால் கிண்டியிலிருந்து திரும்புகிறவர்களை ஜேப்படிக்காரர்கள் என்ன செய்யமுடியும்?

❀ ❀ ❀

நாட்டில் என்ஜினீயர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறதே தவிர குறையவில்லை.

—நந்தா


என்ஜினீயர்களின் திறமைதான் குறைந்து வருகிறதுபோலும்!

❀ ❀ ❀

உள்ளங்கையைக் குண்டூசியினால் குத்தி எடுத்த ரத்தத்தில் பேனாவைத் தோய்த்து, 'சீனரை விரட்ட உயிரைத் தருவோம்' என்று மாணவர்கள் எழுதிக் கையெழுத்திட்டு நேருஜிக்கு அனுப்பியுள்ளார்கள்.

—பீகார் செய்தி

சீன ஆக்கிரமிப்பினால் நம் நாட்டு இளம் உள்ளங்கள் துடிதுடிப்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல இச்செய்தி காட்டுகிறதல்லவா?




# ஊர்ப் பராக்கிலே!

## கூடுவிட்டுக் கூடுபாய்தல்!


சம்பிரதாயமான சடங்கு. ஆனாலும் விறுவிறுப்பான விவகாரம். சென்னை மாநகர மேயர் தேர்தல் வழக்கம்போல் இனிது நடந்தேறியது. ஒரே வருஷ வாழ்வு. இருந்தாலும் கடுமையான போட்டி. கட்சிகளுக்கெல்லாம் தலை வலி. எத்தனையோ பாகப் பிரிவினைத் தகராறுகள், பலப்பல பேரங்கள், நகர சபையில் 45 உறுப்பினர்கள் கொண்ட தி. மு. கழக அபேட்சகருக்கு 52 வோட்டுகள் கிடைத்தன! கூடுவிட்டுக் கூடு பாய்ந்ததாகக் கதைகள் படித்தி ருக்கலாம். நம் ஊர் தேர்தலில் சர்வ சாதாரணமான சம்பவம். கூட்டல், கழித்தல் கணக்கு, லாப நஷ்டக் கண க்கு போட்டுப் பார்த்தால் விஷயம் விளங்கும். திரைமறைவில் நடந்தவை அனந்தம். கட்சியும், கொள்கையும் குப்பையிலே; பணம் பந்தியிலே; புது மொழி மீண்டும் ஊர்ஜிதமாகியது.

எவர் வந்தால் என்ன, என்ன? எவர் போனால் என்ன, என்ன? சென்னை நக ரம் பழைய திருமேனி குலையாது, குப்பை, கூளம் கலையாது சகல (அவ) லட்சணங்களுடன் நீடித்து வருகிறது. பல இடங்களில் குடி தண்ணீர் வசதி இல்லை; சரியான சாலைகள் இல்லை; குடி யிருப்பு வசதியில்லை; பொழுது போக்க இடமல்லை; நடைபாதை வாசிகளுக்கு ஏற்றமில்லை; சேரிகளைச் சீரமைக்க உறுதியில்லை, இப்படியாக இல்லை, இல்லை என்ற பட்டியலை நீட்டிக் கொண்டே போகலாம். வசதியில்லாத பெருநகரம், வாரிவாரி வரிப் பண த்தை வழங்கியும் மக்கள் அல்லல் படும் மாநகரம், ராஜ்யத்தின் தலைநகரம்.

நகராண்மைக் கழகத்துக்கே 'குப் பைத் தொட்டி' என்று அருமையான ஒரு பட்டப்பெயர் உண்டு. அந்த விசேஷப் பெருமையைப் பகிர்ந்து கொள்ளும் நோக்கத்துடன் ஊரையே ஒரு பெருங் குப்பைத் தொட்டியாக்கி விட்டனர் நகராட்சி மன்றத்தவர். சுகாதார மந்திரி சும்மாயிருந்திருக்க லாம். தேகாரோக்கியத்துக்காகக் காத தூரம் நடக்கும்போது கண்களை இறுக மூடிக்கொண்டு போயிருக்கலாம். இரண் டும் செய்யாமல், 'சுந்தரமான' சென்னை மாநகரில் அசுத்தமே அதிகரித்திருப்ப தாகச் சுட்டிக்காட்டியிருப்பது நியாயமா? அதுவும் நகரசபையில் தங் கத் தம்பிமார்கள் நிர்வாகம் நடத்தி வரும் காலத்திலா இப்படிக் குறை சொல்வது? பாதசாரிகளுக்காகப் பரி ந்து பேசுவதுபோல் போலீஸ் கமிஷன ரும் தலைநகர ரஸ்தாக்களின் அவல நிலையை அம்பலப்படுத்தியுள்ளார். வரிப் பணத்தையெல்லாம் இந்த வேலை களில் செலவிட்டு விட்டால் அப்புறம் கார்ப்பொரேஷனின் கதி என்ன ஆவது? சுகாதார அதிகாரிகளும், துப்புரவுத் தொழிலாளரும் ஏராள மாகப் பெருகிவிட்டார்களென்றால் வேலை வாய்ப்புகள் அதிகரித்துள்ள னவே என்று ஆனந்தப்படவேண்டும். சாதாரண நாட்களில் அவர்களைத் தெருக்களில் காண்பது அரிதாக இருக் கிறதா? பொறுத்திருங்கள், பண்டிகை நாட்கள் வரும். அப்போது பாருங்கள்.

அவசியமானால் உயர்தர அதிகாரி களும்கூட 'சப்ராஸி' வேலையைச் செய்ய வெட்கப்படக்கூடாது என்கிறார் பண்டித நேரு. அமெரிக்கா, ருஷ்யா போன்ற நாடுகளில் பெரிய பெரிய என்ஜினீயர்களும் சாமான்யத் தொழிலாளருடன் சேர்ந்து வேலை செய் வதை இழிவாகக் கருதுவதில்லையாம். சீனாவில் ஒரு குறிப்பிட்ட காலத் திற்கு குமாஸ்தாக்களையும் நிலங்கள், தொழிற்சாலைகளில் உழைக்க சர்க்கார் நிர்ப்பந்திக்கிறதாம். ஆனால் இது இந்தியா. சுதந்திர ஜனநாயக நாடு. யார் யாரை முடுக்குவது?

ஊழியர்கள் உபரியும், உழைப்பில் பற்றாக்குறையும் இங்கு மட்டுமா? சாதாரணமாக நம் சர்க்காரையே பிடித்துக் கொண்டிருக்கும் ஒரு தொத்து நோய். மத்திய சர்க்காரில் மட்டும் இருபது லட்சம் சிப்பந்திகள். ரயில்வே ஊழியர்கள் மட்டும் பத்து லட்சம். யார் யார் என்னென்ன வேலை செய்கிறார்கள் என்று தெரியாமல், புரியாமல் அண்மையில் ஒரு சுற்றறிக்கை விடுக்கப்போய் நிர்வாகிகள் பாடு ரொம்ப சங்கடமாகி விட்டது. இப்படியெல்லாம் எக்கச்சக்கமாகக் கேள்வி கேட்பதா என்று சிப்பந்திகள் சீறினர். உடனே வழக்கம் போல் நிர்வாகிகள் பதுங்கினர் சுற்றறிக்கை சடுதியில், வெற்றிகரமாக வாபஸ்பெறப்பட்டது. குப்பைத் தொட்டியை அலங்கரித்தது. நாட்டில் வசூலாகும் வரிப் பணத்தில் பெரும் பகுதியை விழுங்கிவிடுகிறது நிர்வாக யந்திரம். சென்ற சில ஆண்டுகளில் சர்க்கார் சிப்பந்திகளின் எண்ணிக்கை பெருகி வந்திருக்கும் வேகத்தில் அபிவிருத்தி வேலைகளும் முன்னேறியிருந்தால் இந்தியாவில் இன்று தேனும், பாலும் ஆறாக ஓடியிருக்கும்.



"நரை மயிர் கருக்கும் தைலம் வேணுமா ஸார்?"

இன்னும் ஒரு வருஷத்திற்குப் புதிய நியமனங்கள் கூடாது என்று காங்கிரஸ் பார்லிமெண்டரி கமிட்டி கூடத் துணிந்து கூறிவிட்டது. அவர்களுக்கு வேறு வேலையில்லை! ஆட்சி பீடத்தை அலங்கரிப்போர் வேண்டியவர்களுக்குச் சலுகை காட்ட வேறு வழியென்ன?

அன்றாட வேலையில் சுறுசுறுப்பு வேண்டாம். ஆனால் வரி வசூலிலாவது உஷாராக, தீவிரமாக இருக்கலாம் அல்லவா? மத்திய சம்பளக் கமிஷன் நியமித்து 16 கோடி ரூபாய் அதிகப்படி ஊதியம் வழங்க சர்க்கார் இசைந்தும் சிப்பந்திகளுக்குத் திருப்தி இல்லை. வாஸ்தவந்தான். ஏராளமானவர்களிடையே அத்தொகையைப் பகிர்ந்து கொடுத்தால் தலைக்குக் கிடைப்பது அதிகமில்லை. பாவம்! கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை. ஒரே வழி. சட்டியிலிருந்தால்தான் அகப்பையில் வரும். நம் நாட்டில் மிகப் பெரிய மனிதர்கள் வரி 'டிமிக்கி' கொடுத்த தொகை சுமார் 200 கோடி ரூபாய் என்று ஒரு நிபுணரது மதிப்பீடு. தியாகி கமிட்டியும் மறுக்கவில்லை. அதில் பெரும் பகுதியையாவது வசூலிக்க முடியுமானால்...? வெறும் பகற்கனவு. பெருமளவில் வரி ஏய்ப்புக்குக் காரணமென்ன? சட்டத்திலுள்ள பொத்தல்கள் மட்டுமல்ல. வசூல் திறமையும் போதாது. ஆராய்ச்சிக் கமிட்டி அறிந்து, தெளிந்து கூறும் உண்மை. சட்டம் வழங்கியுள்ள அதிகாரத்தைப் பிரயோகிக்கத் தயக்கமேன்? திட்டமிட்டு ஏமாற்றுவோர் யார் என்று தெரியாதா? தெரியும். இருந்தும் கண்டிக்க வகையில்லை; வக்கில்லை. அரசாங்கம் தண்டிக்கும் என்ற பயம் கொள்ளை லாபக்காரர்களுக்கும், பதுக்கல்காரர்களுக்கும் வரி 'டிமிக்கி' கொடுப்போருக்கும் இருக்குமானால் அவர்கள் அப்படி நடந்துகொள்வார்களா? பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்றவாறு அபிமான அமைச்சர்களும் நடந்துகொள்ளும்போது சிப்பந்திகள் என்ன செய்வர்? தாய் வேலியைத் தாண்டினால் மகள் மதிலையே தாண்டமாட்டாளா?

—அரட்டை

★



# இலங்கை விசித்திரம்

★

## மதுரைக்கு விமான சேவை

இலங்கை இந்திய வர்த்தகச் சங்கத்துக்கு மறுமுறையாகவும் ஏகமனதாகத் தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ கே. எஸ். வைத்தியநாதன் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் இவ்வாரம் பேசியபொழுது கொழும்புக்கும் சென்னைக்குமிடையில் நடைபெறும் ஏர் இந்தியா வைகவுண்ட் விமான சேவையை மதுரைக்கும் விஸ்தரித்து வைக்க வேண்டுமென்பதை முக்கியமாக வற்புறுத்தினார். இலங்கையிலிருக்கும் இந்திய வர்த்தகர்களில் பெரும்பாலோர் திருச்சிக்குத் தெற்கே மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி முதலான இடங்களிலிருந்து வந்தவர்களென்றும் ஏர் இந்தியா சேவை இப்பொழுது திருச்சிக்கும் இல்லாது போய் விட்டபடியால் அவர்கள் நிலைமை மிகக் கஷ்டமாக இருக்கிறதென்றும் கொழும்பு-சென்னை விமான சேவையை மதுரைக்கும் விஸ்தரிப்பது பிரயாணிகளுக்கு மிக்க சௌகரியமாக இருக்குமென்றும் சொல்லி இது சம்பந்தமாக இந்திய அதிகாரிகளுக்கு வர்த்தகச் சங்கம் ஒரு விஞ்ஞாபனத்தை அனுப்பி வைத்திருப்பதாக அவர் வெளியிட்டார். இத்துடன் இம்மாத ஆரம்பத்திலிருந்து மண்டபத்திலிருந்த விஸா வழங்கும் காரியாலயத்தை இலங்கை அரசாங்கம் மூடிவிட்டது. இதனால் இலங்கைக்கு வர விரும்பும் இந்தியப் பிரயாணிகள் இனி திருச்சி அல்லது சென்னையிலுள்ள இலங்கை அரசாங்க அதிகாரிகளிடமே விஸா வாங்கியாக வேண்டும். இது மதுரை திருநெல்வேலி பகுதிகளிலுள்ள பிரயாணிகளுக்கு மிகுந்த கஷ்டத்தைக் கொடுப்பதாக இருக்கும். இந்த நிலைமையைச் சீர்திருத்த மதுரையில் ஒரு விஸா காரியாலயத்தைத் திறக்க வேண்டுமென்று இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருப்பதாயும் ஸ்ரீ வைத்தியநாதன் தமது தலைமைப் பிரசங்கத்தில் கூறினார். தனிப்பட்ட வர்த்தகத்தை ஆதரிப்பதுதான் தனது கொள்கையென்று சொல்லிக்கொண்டே தனியார் துறைகளை படிப்படியாக அரசாங்கம் ஒடுக்குவதையும், எதேச்சாதிகாரமான பல சட்டதிட்டங்களைப் புகுத்துவதையும் அவர் அழுத்தமாகக் கண்டித்தார்.

## அம்மா பேச்சுக்கு அடுத்த பேச்சு ஏது?

ஸிலோன் தியேட்டர்ஸில் ஓடும் வீர பாண்டிய கட்டபொம்மனின் 100வது நாள் விழாவுக்காக பிரபல தென்னிந்திய நடிகர் சிவாஜி கணேசன் இவ்வாரம் கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார். அவரிடம் 'நீங்கள் அமெரிக்காவுக்குப் போகத் திட்டமிட்டிருப்பது உண்மைதானா?' என்று விசாரித்த பொழுது 'ஹாலிவுட்டிலிருந்து எனக்கு அழைப்பு வந்திருப்பது உண்மைதான். ஆனால் நான் அமெரிக்கா செல்வதை என் அம்மா விரும்பவில்லை. அம்மா அப்படிச் சொல்லிய பிறகு அம்மா பேச்சுக்கு அடுத்த பேச்சு ஏது?' என்றார் சிவாஜி கணேசன்.

## முற்பகல் செய்தது

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையு மென்பார்கள். அதைப்போல அரசாங்கத்தின் இன்றைய தடுமாற்றத்துக்கெல்லாம் சிறுபான்மை மக்களான தமிழர்களுக்கு அவர்கள் செய்த அநீதிகள் தான் மூலகாரணமென்று தமிழரசுக் கழகப் பிரமுகர் ஸ்ரீ எஸ். ஜே. வி. செல்வநாயகம் யாழ்ப்பாணத்தில் பேசிய ஒரு கூட்டத்தில் கூறினார். சிறுபான்மை மக்களுக்கு அநீதி இழைத்த அரசாங்கங்கள் உலக சரித்திரத்தில் ஒரு நாட்டிலும் நிலைத்ததில்லை. அதே போலத்தான் இலங்கையிலும் பலம் பொருந்திய நிலைமையில் பண்டாரநாயகா அமைத்த அரசாங்கம் இன்று ஒரு ஓட்டில் உயிர் ஊசலாடும் நிலைமைக்கு வந்துவிட்டதென்றால் அதற்கு அந்த அரசாங்கத்தின் வினைப் பயனே காரணமென்றார் ஸ்ரீ செல்வநாயகம்.


# கண்ணம்மாவின் உரிமை

அண்ணாவையும் மன்னியையும் ரெயிலேற்றி அனுப்பிவிட்டு வீட்டுக்கு வந்ததும், கட்டிக்கொண்டிருந்த புடவையைக் கழற்றி வைக்க மனமின்றி நின்றேன். என் மன்னி கண்ணம்மாவின் ஞாபகம் அதிலே பளிச்சிட்டது. தங்கியிருந்த ஒருவார காலத்தில் சிட்டுக் குருவி போல எப்படியெல்லாம் வீட்டு வேலைகளுக்கு அவள் ஒத்தாசையாயிருந்தாள் என்பதை நினைவூட்டியது அம் புடவை. குறிப்பாக, ரெயிலுக்குப் புறப்படுவதற்கு சற்று முன்பு..........

★ ★ ★

...அது சமயம், என் ரவிக்கைக்குப் பொருத்தமான புடவைக்காகப் பெட்டியில் தேடிக்கொண்டிருந்தேன். சில மாதங்களுக்கு முன்பு அண்ணா அனுப்பியிருந்த 'வரிக்குதிரை'ப் புடவை கண்ணில் படவே, அதை வெறுப்புடன் ஒதுக்கினேன், வேறு புடவையே இல்லையோ என்று துணுக்குற்றபோது நல்லவேளையாக எனக்கு ரொம்பவும் பிடித்தமான பெங்களூர் தலைப்புப்போட்ட அரக்குக்கலர்ப் புடவை அகப்பட்டது. ஆனால் அதைப் பிரித்ததும் அந்த ஏமாற்றத்தை என்னவென்பது! நாலு விரற்கடையளவுக்குக் கிழிசல் வாயைப் பிளந்திருந்தது!

"மத்த புடவையெல்லாம் அழுக்குலே கிடக்கேம்மா. இனிமேலே அந்தப் புலிவேஷப் புடவைதான் பாக்கி!" என்று முனகினேன்.



"அதுக்கு என்ன குறை, மீனா? எனக்காக 'அவர்' பொறுக்கியெடுத்த ஜோடியிலேதான் ஒண்ணு அனுப்பினோம் உனக்கு" என்றாள் மன்னி.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. இனிமேல் நான் உடுத்தவேண்டிய புடவைகளை என்னைத் தவிர வேறு யாரும் தேர்ந்தெடுக்க விடமாட்டேன்"

"ஏதேது, மீனா, நாளைக்கு உனக்குக் கலியாணமாகி, ஆசையோட உன் அகத்துக்காரர் உனக்கொரு புடவை பொறுக்கியெடுத்தால் கூட......"

"...வேண்டாம்னுடுவேன், ஆமாம். நான் உடுத்தற புடவைகளைத் தேர்ந்தெடுக்கிற உரிமை என்னோடதே!" என்றேன்.

"தேர்ந்தெடுக்கற உரிமை நிச்சயம் உண்டு. ஆனால் பாதுக்காக்கற உரிமை?"

"அப்படின்னா?"

"எந்த மாதிரி சோப் போட்டு எப்படிப்பட்ட வழியிலே துவைக்கறதுங்கற உரிமை உனக்குக் கிடையாதா, மீனா? இதோ நீயே பார், உனக்குப் பிடித்த இந்தப் புடவைக்கு நேர்ந்த கதியை! சரியான சோப் போட்டு சரியான வழியிலே துவைத்திருந்தா துணியைக் காப்பாத்தியிருக்கலாம் இல்லையா?"

"துணியைக் காப்பாற்றும் சோப்" என்றால் என்னவென்று எனக்குப் புரிபடவில்லை; அதற்குக் கண்ணம்மா பதிலளித்தாள்:




"சுத்தமான சோப் எதுவோ, அடித்துத் துவைக்காமலேயே அழுக்கை அடியோடு போக்கும்படி கொள்ளை கொள்ளையாக நுரை தருகிற சோப் எதுவோ அதுவே துணிகளைப் பாதுகாக்கிற சோப். ஸன்லைட் சோப்பாலே சலவை செய்தால் துணிகளை அது கிழியாதபடி வெகு காலம் காப்பாற்றும்!"

இது என் சிந்தனையைத் தூண்டியது: துணிகளின் மோஸ்தர், நெசவு, நிறம் முதலியவற்றைத் தேர்ந்தெடுப்பதோடு எனது உரிமை தீர்ந்துவிடுவதில்லையென்றும், துணிகளைக் காப்பாற்றும் உரிமையும் எனக்கு உண்டென்றும் உணர்ந்துகொண்டேன். பார்க்கப்போனால், என் துணிகளுக்கு உகந்த சோப் எது என்பதைத் தீர்மானிப்பதுகூட நானல்ல, வேறு யாரோ!

உடுத்துவதற்கு வேறு துணியில்லாமல் நான் விழித்த நிலையில், புன்னகை முகத்துடன் மன்னி "இந்தப் புலி வேஷப் புடவை உனக்கு வேண்டாமானால் விடு. அதோ அந்த அலமாரியில் பார் உன் புடவைகளை!" என்று அலமாரியைக் காண்பித்தாள். பார்த்த மாத்திரத்தில் பிரமித்தே போனேன். அழுக்கு மூட்டையிலிருந்த என் துணிகளெல்லாம் பளிச்சென்று சலவையாகி கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் வீற்றிருந்தன. மன்னி சொன்னாள்:

"அழுக்குத் துணிகளை ரெயிலில் சுமப்பானேன் என்று எங்கள் துணிகளை நேற்று நான் துவைத்தேனல்லவா? அப்படியே கையோடு கையாக உன்




னோட துணிகளையும் துவைத்தேன்!"......

★ ★ ★

.....ஆச்சரியமும் மகிழ்ச்சியும் நன்றியுணர்ச்சியும் பொங்க, அப்போது தான் உடுத்திய புடவை! இப்போது அதைக் கழற்றி வைக்க மனமின்றி நின்றேன், ரெயில் வண்டி நகர்ந்து மறையும்வரை அவள் கையில் ஊசலாடிய கைக்குட்டையின் ஒளி என் நினைவிலே பளிச்சிட்டது. அலமாரியிலிருந்த துணிகளில் அந்த ஒளி பளிச்சிட்டது; நான் உடுத்தியிருந்த புடவையில் பளிச்சிட்டது; என் உள்ளத்தில் பளிச்சிட்டது!

அலமாரியில் மன்னியின் சாமான்கள் வைத்திருந்து இப்போது காலியாகியிருந்த அந்த இடத்தை நோக்கினேன். சதுர வடிவமாக ஏதோ ஒரு பொருள்! ஒரு வேளை ஸன்லைட் சோப்பின் வில்லையா? ஆம், அதுவேதான்! அவ்வளவு துணிகளை வெளுத்தபிறகு சோப் மிச்சமிருக்காது என்று நான் நினைத்ததற்கு மாறாக ஒரு பாதி வில்லை இன்னும் பாக்கியிருந்தது. அளவு கடந்த நுரை கொழிக்குமாதலால் சிறிதளவு சோப் ஏராளமான துணிகளை வெளுத்துவிடுமென்றும் அடித்துத் துவைக்காமலேயே வெண்மையும் பிரகாசமும் தரும் என்றும் உணர்த்தியது அவ் வில்லை; வீட்டுத் துணிகள் அதிக காலம் உழைத்து அதிக சிக்கனம் அளிக்கப்போவதற்கு இது எத்தகைய சுப சூசகம்!




இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

# துப்பாக்கி பிடித்த கை — தூரிகையும் பிடிக்கும்

அப்பொழுது இரண்டாவது உலகப் போர் நடந்து கொண்டிருந்தது. பிரதம மந்திரி வின்ஸ்டன் சர்ச்சில், ஜெனரல் டுவைட் டி. ஐஸன்ஹாவர் இருவருக்கும் கவலை நிறைந்த கடினமான வேலை. சிறிது நேரமாவது கவலையை மறந்திருக்க வழி என்ன என்ற எண்ணம் உண்டாயிற்று. ஓவியம் தீட்டி ஓய்வு பெறலாம் என்று சர்ச்சில் ஒரு வழி சொன்னார். இக்கலையில் அவருக்கு நெடுநாள் ஈடுபாடு உண்டு; கவலை போக்கும் கைகண்ட மருந்து இது எனக் கண்டவர் அவர். ஐஸன்ஹாவரும் அவர் சொல்வது சரி என ஒப்புக்கொண்டார். எனினும், 1947 வரை அவரால் சர்ச்சில் மருந்தை . உட்கொள்ள முடியாமல் போய்விட்டது.

அன்று ஜெனரல் ஐஸன்ஹாவர் அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் ராணுவத் தலைமைத் தளபதியாக இருந்தார். அப்பதவியில் இருப்பவர்களின் உருவப் படத்தை வரைந்து வைக்க வேண்டியது முறை. அதற்காக ஓவியர் தாமஸ் இ. ஸ்டீபென்ஸ் வந்திருந்தார். ஐஸன்ஹாவரை உட்கார வைத்து, ஓவியர் தம் வேலையைத் தொடங்கினார். ஐஸன்ஹாவர் முகத்தைப் பார்ப்பதும், தாளில் வரைவதுமாக இருந்த ஓவியர், அவரை மேலும் மேலும் கூர்மையாகப் பார்க்கத் தொடங்கினார். சர்ச்சில் சொன்னது ஐஸன்ஹாவருக்கு நினைவு வந்திருக்கவேண்டும். திடீரென்று, 'நானும் இதுபோல் செய்து பார்க்க வேண்டும்' என்றார் அவர்.

## பெரும்பாடு

பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் இருந்தது ஓவியருக்கு. 'எனக்கும் ஓய்வு வேண்டியிருந்தது; ஜெனரல் உருவத்தைப் பார்த்து வரைவது எனக்கும் பெரும்பாடாகப் போய்விட்டது. ஏனென்றால், அவர் முகக் குறி அடிக்கடி மாறிற்று. அவர் ஸ்ரீமதி ஐஸன்ஹாவரைப் பார்த்து வரையும்படி செய்தேன். எப்படி வரைவது என்று நான் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. அவர் மிக்க கூர்மையாகப் பல மணி நேரம் அந்தத் திரைச் சீலையில் தீட்டலானார். ஸ்ரீமதி ஐஸன்ஹாவரைப் பார்த்து, அவர் வரைந்த அப்படம் சிறப்பான ஒன்று.' இது ஓவியர் தாமஸ் ஸ்டீபென்ஸ் வார்த்தை.

இன்று ஜனாதிபதி ஐஸன்ஹாவர் போகுமிடமெல்லாம் அவர் ஓவியக் கருவிகளும் அவர் கூடவே போகும். ஜனாதிபதி மாளிகையில் அவர் படுக்கையறைக்கு அடுத்த அறைதான் அவர் படம் வரையும் ஓவியக்கூடம். அவர் விடுமுறைக் கால இல்லம் ஜார்ஜியா என்னும் ராஜ்யத்தில் அகஸ்டா என்னும் ஊரில் உள்ளது; அங்கும் இவ்வாறு தான் படுக்கையறையை அடுத்து ஓவியக்கூடம் உள்ளது. படம் வரைவதற்கு வசதியான அறை இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர் பொருட்படுத்தமாட்டார். மேற்கு ராஜ்யமாகிய கொலராடோவில் மலைகளில் ஒரு மரக் குடிலிலும் படம் வரைந்துள்ளார்.

## சரியாக முடிந்தால்...

ஜனாதிபதி படம் வரையும் முறையே ஒரு தனி. முதலில் குறிப்பெடுத்துக் கொண்டு பிறகு வர்ணம் தீட்டுவது என்பது அவரிடம் கிடையாது. நேரே வர்ணம் தீட்டத் தொடங்கி விடுவார். விரைந்து மளமளவென்று தீட்டுவார். படம் சரியாக வந்தால் முகம் மலரும். இல்லையோ, படத்தைக் குத்துவது போல் கூர்ந்து பார்த்துக் கொண்டேயிருப்பார். படம் வரைவதுபற்றிப்



பறந்த இந்த பஞ்சாட்சரத்துக்கு உன்னுடைய உழைப்பை கேவலம் சிறு சம்பளத்துக்கு தானமாக்கி லட்ச லட்சமா சம்பாதித்து கொடுத்துவிட்டு, நீ பழைய கோவணாண்டி கோதண்டமாக ஊரைவிட்டுக் கிளம்ப உத்தேசித்துவிட்டாயாக்கும்...'

கோதண்டம் மௌனமாக கார் மேகத்தைப் பார்த்தான்.

'சக வியாபாரியான நான் 'பொறாமையினால் பேசுகிறேன்' என நீ நினைத்தால் நான் பேசவில்லை...'

'நான் அப்படி எதுவும் உங்களை தவறாக நினைக்கவில்லை...' என கோதண்டம் குறுக்கிட்டான்.

'ஆமா, நீ போகணும் என்கிற விஷயத்தைக் கேட்டதும் பஞ்சாட்சரம் என்ன சொன்னான்?'

நான் சொன்னதற்கு அவர் பதில் ஒன்றும் சொல்லவில்லை. 'பார்க்கலாம்' என்றுமட்டும் பதில் சொன்னார்...'

தனக்குப் பின் வியாபாரத்தில் போட்டியாக முளைத்து செல்வாக்குடன் நடக்கும் பஞ்சாட்சரம் கமிஷன் மண்டியின்மேல் வெறுப்பும், குரோதமும்கொண்ட கார்மேகம் 'இதுதான் தக்க சமயம்' என பஞ்சாட்சரம் கமிஷன் மண்டி முன்னேற முக்கிய காரண கர்த்தாவான கோதண்டத்துக்கு தூபம் போட்டார்.

'சுத்த சுயநலக்காரன்! எப்படிப் பதில் தருவான்? 'பார்க்கலாம்' என்றுமட்டும் சொன்னானாக்கும்! கண்டிப்பாக உன்னை ஒரு கை பார்த்தே விடுவான்!'

'நீங்க என்ன சொல்லுறீங்க..?'

'கசாப்புக்காரனால் விலை பேசப்பட்ட ஆடு அவனை நம்பி பின் பற்றிப் போவதுபோல் நீ இந்த பஞ்சாட்சரத்தை நம்பிவிட்டாய்! பாவம்! அவன் மண்டியில் பாடுபட்ட அளவு நீ என்னிடமோ அல்லது வேறு யாரிடமாவது பாடுபட்டிருந்தால், லாபத்தில் ஒரு பங்கு போட்டுக் கொடுத்து உன்னை இந்த ஊரிலேயே ஒரு வியாபாரப் புள்ளியாக ஆக்கிவிட்டிருப்போம். வெகுளியான நீ இன்னும் ஆடி ஓடி அவனுக்கு சம்பாதித்துக் கொடுக்கிறாய்! என்ன பிரயோஜனம்? நூற்றைம்பது ரூபாய் சம்பளம் தருவதாகச் சொல்லி உன் கையில் ஐம்பதோ அறுபதோ தானே தருகிறான். லாபத்தில் அள்ளி தராவிட்டாலும் கொடுக்கும் சம்பளத்தையாவது சரிவரத் தரவேண்டாமா? அந்த மோசக்காரன்! அப்பா கோதண்டம். நீ இன்னும் உலகம் தெரியாத பிள்ளையாக இருக்கிறாய். உனக்கு அனுபவம் போதாது...'

கோதண்டம் பெருமூச்சு விட்டான்!

'இந்தாப்பா கோதண்டம் உன் நன்மையைக் கருதி சொல்லுகிறேன். பஞ்சாட்சரத்திடம் சொல்லிக்கொள்ளாமல் ஊரைப் பார்க்க ஓடிவிடு. அவனது வியாபாரத்தின் நெளிவு சுளிவுகளை விவரமாகத் தெரிந்த உன்னை 'எப்படி வெளியே அனுப்புவது' என ஏதாவது சதித் திட்டம் வகுத்து உன்னை தீர்த்துக் கட்டி விடுவான்!'

கோதண்டம் 'ஹா' என அலறி விட்டான்.

'பஞ்சாட்சரம் வெளிக்கு நல்லவன்போல்வேஷம்போடுகின்றான். படுமோசக்காரன் அவன். தன்

'பங்காளி ஒருவனை தீர்த்துக் கட்டி அதன்மூலம் சொத்து சேர்த்து வியாபாரத்தில் முதல் வைத்து, அப்பாவியான உன் உழைப்பினால் இன்று பல லட்சங்களுக்கு அதிபதி ஆகிவிட்டான்! உனக்கு அவன் வலை விரித்து தீர்த்துக் கட்ட பிளான் போடுவதற்குள் நீ தப்பி விடு. ஏதோ என் மனதில் பட்டதைச் சொன்னேன். பிறகு உன் இஷ்டம்!'

சென்ற வாரம் பட்டணம் போய் வந்த செலவில் பத்து ரூபாய் அதிகமாகிவிட்டதற்கு நம்மை ஏன் அப்படி கண்டித்து சத்தம் போட வேண்டும்? ஏதோ 'சினிமா, பீச்' என சற்று உல்லாசமாகச் சுற்றிவிட்டோம். ஆயிரக் கணக்கில் லாபம் சம்பாதித்துக் கொடுக்கும் நமக்கு பொழுது போக்காக செலவு செய்யக் கூடவா சுதந்திரம் இல்லை? இப்படி பணத்தில் கஞ்சத்தனம் செய்யும் மனுஷன் கார்மேகம் சொல்லுவதுபோல் கொலைக்காரத்தனம் செய்யவும் செய்யலாம்...கோதண்டம் மனத்துள் யோசனை செய்தபடி இருந்தான்.

'என்னப்பா கோதண்டம். என்ன யோசனை செய்கின்றாய்?' என கார்மேகம் உஷார் குரல் கொடுத்தார்.

'ஆமாங்க, அவர் போக்கு சரியில்லைதான்! 'நான் போகணும்' எனக் கேட்டதிலிருந்து ஒரு மாதிரியாக இருக்கின்றார்...' என்று கோதண்டம் முனகினான்.

திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வந்துவிடவே அதில் இடம் பிடிக்கும் நோக்கத்துடன் பிரிந்துவிட்டனர்!

## 2

சென்னை சென்று திரும்பிய கோதண்டம் தனது முதலாளி பஞ்சாட்சரத்தைக் குரோதமும், சந்தேகமும்கொண்ட மனப்பான்மையுடனே பார்த்துப் பேசினான்!

'என்னப்பா கோதண்டம் ஏன் ஒரு மாதிரி இருக்கின்றாய்?' பஞ்சாட்சரம் விசாரித்தார்.

'என் கணக்கைப் பார்த்து தீர்த்துக் கொடுத்து விடுங்கள்... 'நான் ஊருக்குப் போவது' என முடிவு செய்துவிட்டேன்...' கோதண்டம் எங்கோ பார்த்துக் கொண்டு பேசினான்.

'கணக்கு தீர்ப்பானேன்? ஒரு மாசம் லீவு எடுத்துக்கிட்டுப் போய் வாயேன். உன் சம்பளத் தொகை என்னிடம் மூவாயிரம் சேர்ந்து இருக்கு! அதில் ஒரு ஆயிரமோ ஐந்நூறோ வாங்கிக் கொண்டு போய் வா...'

'தயவு செய்து என் சம்பளப் பாக்கி முழுவதையுமே கொடுத்து விடுங்கள். ஊருக்குப் போனால் திரும்புவதாக உத்தேசமில்லை...'

'சரி. உன் இஷ்டம்! பார்க்கலாம்!'


'நாளை மறுநாள் நான் ஊருக்கு புறப்படப்போகின்றேன். 'பார்க்கலாம்' என காலம் கடத்த வேண்டாம்...தயவு செய்து என்னைப் போக விடுங்கள்...'

'ஆகட்டும் நாளைக்கு நிச்சயமான பதிலை தருகின்றேன். ஒரு விஷயம் இன்று இரவு ஒன்பது மணி சுமாருக்கு கடை மூடியதும் என்னை வீட்டில் வந்து பார். உன்னிடம் ஒரு விஷயமாக கலந்து பேசணும் என்ன...?'



'ஆகட்டும் வர்றேன்...' என தலை அசைத்தான் கோதண்டம். பஞ்சாட்சரம் எழுந்து வீட்டைப் பார்க்க நடந்துவிட்டார்.

'நம்மை வீட்டுக்கு வரச் சொன்னாரே ஏன்?' என யோசித்தான். 'பஞ்சாட்சரம் உன்னை தீர்த்துக் கட்டிவிடுவான். உஷாராக இரு' என கார்மேகம் எச்



சரித்தது நினைவுக்கு வந்ததும், கோதண்டம் விழிப்படைந்தான்!

இரவு எட்டு மணி சுமாருக்கு பஞ்சாட்சரத்தின் வீட்டை அடைந்த கோதண்டம் வெளி வாசலில் சற்று தயங்கி நின்றான். பஞ்சாட்சரத்தின் பேச்சுக் குரல் கேட்கவே சந்தடி செய்யாமல் காம்பவுண்டு கேட்டைக் கடந்து வராந்தாவின் இருளில் ஒதுங்கி நின்று, காது கொடுத்துக் கேட்டான்! பஞ்சாட்சரமும் மண்டிக் கணக்கப் பிள்ளை செந்திவேலும் பேசிக்கொண்டிருந்தனர்.

'நான் என்னவெல்லாம் நினைத்துக்கொண்டிருந்தேன். என் எண்ணக் கோட்டையைத் தகர்த்து விட்டு ஓடப் பார்க்கின்றானே! இவனை என்ன செய்வது?'

'தானாக கனியாததை தடிகொண்டுதான் கனிய வைக்க வேண்டும்! கோதண்டத்தை நீங்கள் தப்ப விட்டீர்களானால், உங்க வியாபாரம் படுத்துவிடும்.. உங்க பிளானும் நடைபெறாது...'

கோதண்டத்துக்கு 'திக்' என்றது. படபடக்கும் நெஞ்சை தடவி விட்டுக்கொண்டான். 'கார்மேகம் சொன்னது சரியாகப் போய்விட்டது! நம்மை தீர்த்துக் கட்ட சதித் திட்டம் உருவாகின்றது. இவர்கள் செயலாக்க முயற்சிக்கும்முன் நாம் ஊரை விட்டு ஓடிவிட வேண்டும்' என தனக்குள் தீர்மானித்துக் கொண்டு மேலும் 'என்ன பேசுகின்றார்கள்' என கவனித்துக்கேட்டான்!

'நல்லது கணக்குப் பிள்ளை, நமது திட்டம் ரகசியமாகவே இருக்கட்டும். கோதண்டத்தை இங்கே வரச் சொல்லி இருக்கேன். வந்ததும் நான் அவனைக் கலந்து ஒரு முடிவு செய்து விடுகின்றேன்....'

'ஆசாமி ஒரு மாதிரி இருக்கின்றான். சொல்லிக்கொள்ளாமல் கம்பி நீட்டினாலும் நீட்டி விடுவான். எது ஒன்றிற்கும் நபர் மேல் கண்காணிப்பு வையுங்கள்...'

'அந்த கவலை வேண்டாம்! இரண்டு பேரை நியமித்துவிட்டேன். கோதண்டம் தப்ப முடியாது' என சொல்லிவிட்டு பஞ்சாட்சரம் சிரித்தார்.

கோதண்டத்துக்கு நடுக்கம் கண்டுவிட்டது. சந்தடியின்றி தெருவுக்கு வந்தவன் 'தன்னை யாரும்கவனிக்கின்றார்களா?'என இருபுறமும் கவனித்தான். சற்று தூரத்தில் தெரு விளக்கு கம்பத்தடியில் யாரோ இருவர் நிற்பது தெரிந்தது. தாமதிக்காமல் 'விரு விரு'வென ஹோட்டலைப் பார்க்க நடை போட்டான். விளக்கு வெளிச்சத்தில் நின்று பீடி புகைத்துக்கொண்டிருந்தவர்களைக் கவனித்தான். தனது மண்டியில் கைவண்டி இழுக்கும் அந்த இரண்டு கூலிகளைப் பார்த்ததும் கோதண்டத்துக்கு நெஞ்சு 'திக்' என்றது. கோதண்டத்தைப் பார்த்த அவர்களில் ஒருவன் 'என்னங்க முதலாளி வீட்டுக்குப் போயிட்டு வர்ரீங்களா?' என வலிய விசாரித்தான். 'ஆமாம்' என்ற பாவனைக்கு தலை ஆட்டிவிட்டு ஹோட்டலைப் பார்க்க ஓட்டமும் நடையுமாய் போய்ச் சேர்ந்தான் கோதண்டம்.

ஹோட்டலை அடைந்த பின்னரே கோதண்டத்துக்கு உயிர் வந்தது. 'பஞ்சாட்சரத்திடம் எதிர்ப்படாமல் நாளை விடிந்ததும் விடியாததுமாய் ஊரை விட்டுக் கிளம்பினால்தான் உயிர் தப்பினோம்' என தன்னுள் தீர்மானித்துக்கொண்டு தூங்க முயற்சித்தான்.

## 3

'அதிகாலை வண்டிக்கே ஊருக்குப் புறப்பட வேண்டும்' என்ற தீர்மானத்துடன் படுத்த கோதண்டம், நன்றாக அயர்ந்து தூங்கிவிட்டான். விழித்தெழுந்து மணி பார்த்தவன் 'மணி ஏழரை ஆகிவிட்டதே' என முனகிக்கொண்டான். 'பரவாயில்லை நாலு ஜன நடமாட்டம் இருக்கும்போதுதான் நாம் நழுவ வேண்டும். யாரும் நம்மை தாக்கும் நோக்கத்துடனோ அல்லது பிடிக்கும் நோக்கத்துடனோ நெருங்கினால் கூச்சலிட்டு கும்பலைக் கூட்டிவிடலாம்' என தனக்குத் தானே சமாதானமான பதிலை தந்தபடி மாடி வராந்தாவில் நின்று பல் துலக்கியவன் ஹோட்டலுக்கு எதிர்புறத்தில் உள்ள சிறிய டீக்கடையில் டீ குடித்துக்கொண்டிருந்த கை வண்டிக் கூலிகளைக் கண்டவன் திடுக்கிட்டான்.

'படுபாவி பஞ்சாட்சரம் நம்மை உயிரோடு ஊர் திரும்ப விடமாட்டான் போலிருக்கே! ஆள் வைத்து கண்காணிக்க ஆரம்பித்துவிட்டான். பெட்டி படுக்கை எடுத்துக்கொண்டு கிளம்பினால் நமது புறப்பாடு தெரிந்துவிடும். பெட்டி படுக்கை போனால் போகிறது. கட்டிய வேஷ்டி சட்டையுடன் கிளம்பினால்தான் தப்பித்தோம்!' என எண்ணியபடி தனது அறைக்குத் திரும்பி ரயில்வே அட்டவணையைக் கவனித்தான். மண்டிப் பக்கம் போகாமல் மத்தியானம் வரை ஹோட்டலில் தனது அறையிலேயே அடைபட்டுக் கிடந்தான் கோதண்டம்.

மண்டியிலிருந்து எடுபிடி வேலை பார்க்கும் பையன் ஒருவன் வந்து முதலாளி கூப்பிடுவதாக கோதண்டத்திற்குத் தகவல் கொடுத்தான். 'உடம்பு சரியில்லை' என பதில் கொடுத்து அனுப்பினான் கோதண்டம். சீக்கிரம் கிளம்பிவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் மத்தியான சாப்பாட்டை அரைகுறையாக முடித்துக்கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்கு குதிரை வண்டி ஒன்றை அமர்த்திக்கொண்டு அவசர அவசரமாய் ஸ்டேஷனை அடைந்து பத்து நிமிஷத்தில் புறப்பட இருந்த பாஸஞ்சருக்கு டிக்கட் எடுத்தான்.

'என்ன தம்பி எங்கே டிக்கட் எடுக்கிறாய்? ஊருக்குக் கிளம்பிவிட்டாயா?' என்ற கணக்குப் பிள்ளையின் குரல் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பிய கோதண்டம், கணக்குப் பிள்ளை இரண்டு அதே கைவண்டி கூலிக்காரர்கள் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்ததும் தலை சுற்ற மயக்கமடைந்தான்.

மயக்கம் தெளிந்த கோதண்டம் கண் விழித்து பரக்கப் பரக்கப் பார்த்தான். மயக்கத்தில் தன்னை யாரோ கத்தியால் தாக்குவதுபோல் கனவு கண்டான். கண் விழித்த பின்னும் அவனுக்கு அதே பீதி! 'நாம் எங்கே இருக்கின்றோம். நம்மைச் சுற்றிலும் ஏன் இத்தனை பேர் கூடியிருக்கின்றனர். டாக்டர் ஏன்நம்மை பரிசோதிக்கின்றார்? இதோ நம் பக்கத்தில் கணக்குப் பிள்ளை பஞ்சாட்சரம் முதலியோர் நின்றுகொண்டிருக்கின்றார்களே. நாம் படுத்திருப்பது ஆஸ்பத்திரியா அல்லது பஞ்சாட்சரத்தின் வீடா? ஆமாம். பஞ்சாட்சரத்தின் வீடுதான்...' கோதண்டம் தன்னுள் பலவிதமான கேள்விகளைக் கிளப்பிக்கொண்டு ஒன்றும் புரிந்துகொள்ள முடியாத நிலையில் படுத்துக் கிடந்தான்.

டாக்டர் பஞ்சாட்சரத்திடம் ஏதோ சொல்லுவதைக் கவனித்த கோதண்டம் காது கொடுத்து கேட்டான்.

'பயப்பட ஒன்றுமில்லை. மனம் அதிர்ச்சி அடைந்ததன் காரண



'ஏண்ணே! ஒரே கவலையா இருக்கே......"
"அதையேன் கேட்கிறே! ஆபீஸிலேயாவது நிம்மதியா இருக்கலாம்னு என் சம்சாரத்துக்கு பெண் போலீஸ் வேலை கிடைச்சுடும் போலிருக்கு...."

மாகவே இந்த மயக்கம். நல்ல ஓய்வு கிடைத்தால் சரியாகி விடும்...நான் சாயந்திரம் ஒரு முறைவந்து பார்க்கின்றேன்...!'

டாக்டரைத் தொடர்ந்து பஞ்சாட்சரம் ஹாலைவிட்டு வெளியேறிச் சென்றார். கோதண்டம் சற்று தெளிவடைந்து சுற்றுமுற்றும் பார்த்தான். ஒரு பக்கமாக கணக்குப் பிள்ளை நின்றுகொண்டிருந்தார். உள்பக்க வாசலின் திரை மறைவில் இருந்து பஞ்சாட்சரத்தின் குமாரி காஞ்சனையின் குரல் கேட்டது.

'கணக்குப் பிள்ளை ஐயா, இந்தாங்க இந்த ஓவலை அவருக்குக் கொடுங்க' என்ற இனிமையான குரல் வந்த திசையை கோதண்டம் திரும்பிப்பார்த்து விட்டு, 'நாம் நினைத்தது என்ன நடப்பது என்ன?' என ஒன்றும் புரிந்துகொள்ள முடியாமல் தவித்தான்.

'இந்தாங்க தம்பி!' என ஓவல் கலந்த பாலை வாங்கி வந்து கோதண்டத்திடம் நீட்டினார் கணக்குப் பிள்ளை.

'ஓவலில் விஷம் கலந்தாலும் கலக்கப்பட்டிருக்கும்' என்ற ஒரு நினைப்பு வந்துவிடவே கோதண்டம் 'வேண்டாம்' என்ற பாவனைக்கு தலை அசைத்தான்.

'சும்மா சாப்பிடு தம்பி...'

'எனக்கு ஒன்றும் வேண்டாம். நான் ஊருக்குப் போகணும். என்னைப் போக விடுங்கள்...' என முனகியபடி எழுந்தான்.

'ஊருக்குத்தானே போகலாம். நம்ம முதலாளி அய்யா உங்களுக்கு என்னவெல்லாம் செய்ய திட்டமிட்டுக்கிட்டு இருக்காரு. நீங்களாகல் சொல்லாமல் கொள்ளாமல்...'

'முதலாளி போட்டிருக்கும் 'சதித் திட்டம்' எனக்குத் தெரியாது' என நினைத்துக்கொண்டீர்களா? எல்லாம் எனக்குத் தெரியும்' என கோதண்டம் குறுக்கிட்டுப் பேசினான்.

'என்ன தம்பி நீங்க பேசறது. வாரிசு இல்லாத தனது சொத்துக்கு உங்களை அதிபதி ஆக்கி, தன் ஏக புத்திரியை உங்களுக்குத் திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்வது வந்து சதித் திட்டமா? ஆமா, நீங்க சொல்வதும் ஒரு விதத்தில் சரிதான். முதலாளி தன் பெண்ணை உங்களுக்கு 'சதி' ஆக்க ஏற்பாடு செய்வது நிச்சயம் 'சதித் திட்டம்'தான்...' என சொல்லிவிட்டு கணக்குப் பிள்ளை சிரித்தார். கணக்குப் பிள்ளை சொன்னதைப் புரிந்துகொள்ள கோதண்டத்துக்கு நிமிஷ நேரமாயிற்று. 'பஞ்சாட்சரத்தை நாம் தவறாக நினைத்தோமே' என மனத்துள் வெட்கமடைந்தவனாய் மறுபடியும் படுக்கையில் சாய்ந்து கொண்டு ஓவலை ருசி பார்த்தான்.

'கணக்குப் பிள்ளை ஐயா... அவர் கொஞ்சம் தூங்கி ஓய்வு எடுக்கட்டும்...' என்ற காஞ்சனையின் குரல் கேட்டு 'ஆகட்டும்மா' என கணக்குப் பிள்ளை நழுவி விட்டார்.

அசைந்து விலகிய திரைச் சேலையைக் கவனித்தான் கோதண்டம். காஞ்சனையைக் கண்டவன் ஓவலை ருசி பார்க்க மறந்துவிட்டான். நடந்தது 'சதித் திட்டம்'தான் என்ற நினைப்புடன் காஞ்சனையைக் கண்டு புன்முறுவல் பூத்தான்.

★





ஆர்வி

# மழை

காலைப் பொழுதுதான் எத்தனை வேகமாகப் போகிறது! அதுவும் மழைக்காலத்தில் எழுந்திருக்கும்போதே மணி ஏழுக்குமேல் ஆகிவிடுகிறது. இருட்டோடு மப்பு கலந்து இருக்கிற நேரத்தில் காலம் ஒரு பகுதியை விழுங்கி விட்டது.

மணி ஏழேகால் ஆனதைக் கண்ட குஞ்சுவுக்குக் கோபம் வந்தது. கடிகாரத்தைக் கோபித்துக் கொள்வதா, ஓடுகிற பொழுதைக் கோபித்துக்கொள்வதா? இன்னும் சரியாக இரண்டு மணி நேரம்கூட இல்லை. சரியாக எட்டரைக்காவது புறப்பட்டால் தான் ஒன்பது மணிக்குள் எழும்பூர் போய்ச் சேரலாம். அதாவது பஸ்ஸோ, டாக்ஸியோ சரியாகக் கிடைத்தால்!

இன்றைக்கு என்று தன்னை மறந்து தூங்கிப் போய்விட்டதற்காக அவளுக்குத் தன்மீதே கோபம் வந்தது. அம்மாவின் மீது கோபம் வந்தது. அவள் இரண்டு, மூன்று தடவை தன்னைக் கூப்பிட்டு எழுப்ப முயன்றது சரிதான்; ஆனால், இதை அத்துடன் விட்டுவிடுவதா? சீக்கிரமாக எழுப்பி விட்டுவிடும்படி அவள் முதல், நாள் இரவே படித்துப் படித்துச் சொல்லியிருந்தாள். அம்மாவுக்கு அவ்வளவுதான் தெரியும்; அவ்வளவுதான் முடியும். அவளைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. மழை நாட்களில் விடியற்காலை நேரம்தான் சுவாரஸ்யமான வேளை, கும்மென இழுத்துப் போர்த்திக்கொண்டு அடக்கமாகப் படுத்துக்கொண்டு விட்டால் என்ன சுகமான தூக்கம் வரும் தெரியுமா? ஒன்பது மணிக்கு 'இண்டர்வியூ' இருந்தால் என்ன, அதைவிட முக்கியமான ஒன்று இருந்தால்தான் என்ன? ஒன்பது மணிக்குத் தானே! அடேயப்பா, அதற்கு எத்தனையோ நேரம் கிடக்கிறதே! ஒரு பக்கம் தூக்கத்திலும் இப்படி ஒரு நினைப்பு.

'குஞ்சு!'

'ம்...'

'எழுந்திரு அம்மா! ஒன்பதுக்கெல்லாம் ஓடணுமே!'

'ம்...ங்...ங்...ம்'—ஒரு புரளல். கைகளை மார்பிலே நன்றாகப்

புதைத்துக்கொண்டு மீண்டும் தூக்கம்.

மறுபடியும் அரைமணி கழித்து அம்மாவின் குரல் கேட்கிறது.

'குஞ்சு, குஞ்சு!'

'உம்?'

'மணி ஆறரை அடிச்சுட்டுது!'

'ம்ம்...' ஒரு முனகல்; எழுந்திருக்க வேண்டியதுதான். ஆனால் எழுந்திருக்குமுன் கண்கள் தூக்கத்தில் சிக்கிக்கொண்டு விட்டன.

மூன்றாவது முறை அம்மா எழுப்புகிறாள். அவள் வெகுண்டெழுந்து ஜன்னல் வழியாக வெளிச்சத்தைப் பார்க்கிறாள். இன்னும் கருக்கல் பிரியவில்லையே! அம்மாவுக்கு என்ன அவசரம்?

இருந்தாலும் பாதி கலைந்த விழிப்பில் ஒரு சந்தேகம்; சட்டென்று விசைபோல் துள்ளியெழுந்து, கடிகாரத்தைப் பார்த்தால் பெரிய முள் பன்னிரண்டைத் தாண்டிக்கொண்டிருந்தது. சின்ன முள் ஏழாவது எண்ணைச் சுட்டிக்காட்டிக்கொண்டிருந்தது.

குஞ்சுவுக்குத் தூக்கம் பறந்துவிட்டது. அதற்குப் பதில் அவசரமும் அதனோடு கோபமும்தான் வந்தன. அம்மாவைச் சொல்லிக் குற்றமில்லை; கடிகாரத்தைச் சொல்லிக் குற்றமில்லை. அவளையேதான் குற்றம் சொல்ல வேண்டும். இத்தனை நாள் பட்ட துன்பங்களுக்கு ஒரு விடிவுகாலம்போல் வந்த அந்த நாளில் போய், விடிந்தது தெரியாமல் ஒருத்தி தூங்கிக்கொண்டிருந்தால், அது யாருடைய குற்றம்?

அவசரம் அவசரமாகப் பல்லைத் துலக்கிக் குளித்துவிட்டு வந்தாள். அம்மாவின் அன்பைப்போல் குளிருக்கு இதமான வெந்நீர். வறுமையைக் காட்டாமல் பெண்ணை வளர்த்து வந்ததைப்போல, குளிர் தெரியாதபடி வெந்நீர் போட்டு வைத்திருந்தாள் அவள்.

குஞ்சு கூடுமான வரையில் முன்னேற்பாடாகத்தான் இருந்தாள். சாதாரணமாக எதை உடுத்துக் கொண்டாலும் அவளுக்கு அது அழகாகத்தான் இருக்கும். இருந்தாலும் இப்படி அவசியமான சமயத்துக்கு என்று அவளிடம் ஒரே ஒரு செட் ஆடைதான் இருந்தது. அதை அவள் வெளியில் எடுத்துக் கசக்காமல், மடிப்போடு வைத்திருந்தாள். அது இன்று பயன்படப் போகிறது. அது இருப்பதே அவளுக்குப் பாதி தைரியத்தையும், உற்சாகத்தையும் கொடுத்தது. அந்தச் சிற்றாடையும் பிளவுசும் அவளுக்கு எத்தனை அழகாக இருந்தன என்பது அவளுக்கே தெரியும். மற்றவர்களும் அதன் வண்ணத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அழகுக்கு அழகு செய்யும் வண்ணப்பொருத்தம். அதைப் பிரிக்கவே அவளுக்கு மனம் வரவில்லை; சொகுசாகப் பிரித்துக் கொசுவி லட்சணமாகக் கட்டிக்கொண்டாள். 'பிளவுஸ்' உடலின் மென்மையோடு போட்டியிடுவதுபோல இருந்தது; திண்மையின் கவர்ச்சியோடும் அது விளங்கியது. கழுத்துப் பட்டைகளையும், கைகளையும் அவள் மெல்ல வருடிப் பார்த்தாள். அவள்மீதே அவளுக்கு ஆசை உண்டாவதுபோல் உணர்ந்தாள்.

தலையை வாரி, நெற்றிக்குப் பொட்டு வைத்துக்கொண்டு வந்து நின்றபோது அவளுடைய அம்மாவுக்குப் பெருமையாகத்



தான் இருந்தது. அது அவளுடைய கண்ணிலேயே தெரிந்தது. இந்த மட்டிலாவது அம்மாவின் மகிழ்ச்சிக்குக் காரணமாக இருக்க முடிந்ததே!

மணி எட்டேகால் ஆகிவிட்டது. இதைவிடத்தான் எப்படி வேகமாக ஒவ்வொன்றையும் செய்துகொள்ள முடியும்? ஆயிற்று; ஒரு வாய்ச் சாதத்தை அள்ளிப்போட்டுக்கொண்டு புறப்பட வேண்டியதுதான்; வேறு ஒன்றும் வேலையில்லை.

'மெதுவாகச் சாப்பிடு!' என்றாள் அம்மா, எதிரில் உட்கார்ந்துகொண்டு. மெதுவாகவும் சாப்பிட வேண்டும்; நேரத்திலும் போய்ச் சேர வேண்டும். அம்மாக்களே இப்படித்தான்!

'உம்...ம்...'

'அவசரமாகச் சாப்பிட்டால் அரை வயிறுகூட நிறையாது!'

'சரி சரி.'

'நசநசவென்று தூற்றல் போடுகிறதே, சனியன்!'

'அதுதான் குடையிருக்கிறதே!'

'சரியாக ஒன்பதுக்கெல்லாம் அங்கே இருக்கணுமோ?'

'க்கும்.'

'போனதும் கூப்பிட்டுக் கேள்வி கேட்பார்களோ?'

குஞ்சுவுக்குச் சிரிப்பு வந்தது. 'ஐயோ—அம்மாவே!' போனதுமேயா கேள்வி கேட்பார்கள்? அப்படி இருக்காது. இதுதான் அவளுக்கு முதல் அநுபவம். ஆகவே அவளுக்கே என்ன செய்வார்கள் என்று தெரியாது. என்ன செய்வார்களோ? என்ன கேட்பார்களோ?

மணி எட்டரை. குஞ்சு கையில் குடையும், சின்ன பிளாஸ்டிக் பர்ஸுமாகப் புறப்பட்டு விட்டாள்.

'பார்த்துப் போ!'

'ஆகட்டும்.'

இருந்தாலும் அம்மா அவளுக்கு முன்னால் வாசலை வந்து எட்டிப் பார்த்தாள். வாசலில் கிடந்த வாழையிலையைப் பார்த்து ஒரு பசுமாடுதான் வந்துகொண்டிருந்தது.

'ம்ம்...புறப்படு!'

அம்மாவுக்குச் சகுனத்தில் எல்லாம் நம்பிக்கை இருந்ததோ, இல்லையோ, பயம் மட்டும் இருந்தது. தூற்றல் சிறிது நின்றிருந்த நேரம்; பசுமாடு எதிரே வருகிறது. அதனால்தான் அவள் அவசரப்படுத்தினாள்.

குஞ்சு பஸ் நிற்குமிடத்தை நோக்கி நடந்து சென்றாள். புதிதாக அமைந்த சாலை அது; இன்னும் ஒரு பர்லாங்கு தூரமாவது இருக்கும், பஸ் வந்து நிற்கும் இடம். இந்த இடங்களையெல்லாம் யார்தான் தீர்மானிக்கிறார்களோ? நடக்கிறவர்களுடைய கஷ்டம் தெரியாத எந்தப் புண்ணியவான் தத்துகிற தவளைமேல் கல்லால் அடிக்கிற சிறுவனைப் போல் சீண்டி விளையாடிக் கொண்டிருக்கிறார்களோ? பஸ் வந்து நிற்கவேண்டிய இடம் நாளுக்கு ஒருவிதமாக மாறிக் கொண்டிருந்தது. சாதாரண ஜனங்களுக்கு எத்தனை இடஞ்சல் செய்ய முடியுமோ அத்தனையையும் செய்வதில் அவர்களுக்கு ஒரு திறமை இருந்தது. ஏழைகளுக்கும் தள்ளாத வயதினருக்கும் பஸ் என்ன கேடு என்பது அவர்கள் கருத்தோ என்னவோ, யார் கண்டது? அர்த்தமற்ற போக்குவரத்துக் கட்டுப்பாடு

களை எண்ணிச் சிரித்துக்கொண்டே அவள் நடந்தாள்.


பொசபொசவென்று மீண்டும் தூற்றல் தொடங்கியது. சாலை நீண்டு நனைந்து கிடந்தது. எதிரே பஸ் நிற்கும் இடம். குஞ்சு எதிரே பார்த்துக்கொண்டே சாலையைக் கடக்க முயன்றாள். முதலில் அவள் அதைக் கவனிக்கவில்லை. பின்னால் சளசளவென்று வந்துகொண்டிருந்தது ஒருசின்ன மோட்டார். பிறகுதான் வண்டித் தடத்தில் தண்ணீர் தேங்கியிருப்பதைப் பார்த்துவிட்டு அவள் ஒதுங்க முயன்றாள்.

ஆனால், சரக்கென்று சேற்றுத் தண்ணீரை வாரியடித்துவிட்டது சக்கரம். வண்டி என்னவோ மெதுவாகத்தான் வந்தது; நிதானமாக, ஆனால் வன்மையாக, குறி பார்த்தது போல் சேற்றுத் தண்ணீர் அவளுடைய ஆடையில் வந்து அடித்தது. குஞ்சுவின் முகத்தில் கோபம் தாண்டவமாடியது. சேற்றுத் தண்ணீர் அவளுடைய அழகிய வண்ண ஆடையை ஒரு நொடியில் பாழ்படுத்திவிட்டது. அவள் மெல்லத் திரும்பி முழங்கால் பக்கத்தைக் கவனித்தாள். அந்தக் கொடுமையை அவளால் பொறுக்க முடியவில்லை. எத்தனை நல்ல சிற்றாடை! கண்ணைப் பிடுங்கியதுபோல் யாருடைய கண் பட்டதோ அதன்மேல்! திரும்பி வீட்டுக்குப் போகலாம். ஆனால், வீட்டில் வேறு புதிய ஆடை ஏது? அப்படியே இருந்தாலும் போக நேரம்தான் ஏது?



கண்ணாலேயே சுட்டு எரித்துவிடுபவளைப்போல அவள் சேற்றை வாரியடித்த வண்டியைப் பார்த்தாள். அது என்னவோ வழக்கத்துக்கு விரோதமாகத்தான் இருந்தது. காரிலே போகிறவர்கள் நடையில் செல்பவர்களை மனிதர்களாக மதிக்கிறார்களா, என்ன? சேற்றை வாரியடித்துவிட்டு, அலட்சியமாகச் சவாரி செய்யும் உத்தமர்களைத்தான் இந்த ஊரில் பார்க்கலாம். 'வசதி இல்லாத மனிதர்கள்மீது இப்படி வாரியடித்துவிட்டுப் போகிறீர்களே?' என்று கேட்டால், சாலை விதிகளைப் போதிக்க வரும் நீதிமான்கள் மலிந்துவிட்ட இந்தக் காலத்தில், வண்டியை நிறுத்திவிட்டு, பாதிக்கப்பட்டவர்களைப் பார்க்க எண்ணுகிற பைத்தியக்காரர்களும் இருக்கிறார்களா, என்ன?

குஞ்சு கோபத்தோடுதான் பார்த்தாள். ஆனால் வண்டியிலிருந்து எட்டிப் பார்த்துக்கொண்டிருப்பவன் இளம் வாலிபனாக இருப்பதைக் கண்டதும், கோபத்தைவிடக் கூச்சம்தான் அதிகமாக உண்டாயிற்று. யாருமில்லாத சாலையில், சேற்றை வாரி



அடித்தவனும் சேற்றை வாரிப் பூசிக்கொண்டவளும்— அவன் காரிலும், இவள் தரையிலுமாக— நின்று என்ன கேட்பது, என்ன சொல்வது?

பஸ் ஸ்டாப்பில் எந்த வேளை பார்த்தாலும் ஐந்து பேர்களாவது நின்று பஸ்ஸுக்குத் தவம் செய்து கொண்டிருப்பதுதான் வழக்கமான காட்சி. இன்று நல்ல வேளையாக அப்படிப்பட்ட தபசிகளைக் காணவில்லை. இந்த அலங்கோலத்தை இன்னொருவர் பார்க்கவா வேண்டும்? குஞ்சு கவண் கல்லால் அடிபட்டு விழுந்த பறவையைப்போல, நடைபாதை ஓரமாக இருந்த கம்பத்தில் போய்ச் சாய்ந்துகொண்டாள்.

அவளுடைய உற்சாகம், தெம்பு, அதனால் உண்டான நம்பிக்கை, நேரத்துக்குப் போய்ச்சேர வேண்டும் என்கிற துடிப்பு எல்லாம் இற்றுப்போய்விட்டன. யாரை நோவது என்று புரியாமல் அவள் நெஞ்சம் வருந்தியது.

பஸ்ஸை எதிர்பார்த்து நிற்பதா, இல்லை, போகாமலே திரும்பி விடுவதா என்ற அளவுக்குப் போய்விட்டது அவள் நினைப்பு. ஆனால் இதென்ன? வண்டி பின்னால் வந்து நிற்கிறதே!—குஞ்சு முகத்தை வெறுப்போடு வேறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

'சாரி, சாலை ரொம்ப மோசம்!' என்றான் வண்டியில் வந்த வாலிபன்.

அவள் கண்கள் அவனை ஒரு முறை பார்த்துவிட்டுத் திரும்பின. அப்படிக் கோபித்துக் கொள்ள வேண்டிய முகமாக இல்லை, அவன் அதற்கு மாறாகக் கண்களுக்குக் குளிர்ச்சியாக, கம்பீரமாக, கவர்ச்சியாக இருந்தான்.

'வருந்துகிறேன்; என்மேல் கோபமாகத்தான் இருக்கும். ஆனால்...'

அவள் புன்சிரிப்பை வரவழைத்துக்கொள்ள முயன்றாள். ஆனால் முடியவில்லை. பஸ்ஸைக் காணோம்; தூற்றல் வேறு மழையாக வலுத்துக்கொண்டிருந்தது. இந்த அழகில் வயிற்றெரிச்சல் விசாரணை; மன்னிப்பு; வருத்தம்; சமாதானம். எப்படிப் புன்னகை புரியமுடியும்? 'கோபமாகத்தான் இருக்குமாமே! இல்லாவிட்டால் இந்த மனிதரிடம் கொஞ்சிக் கொண்டு நிற்பார்களாமோ?'

'மழை வலுக்கிறது. என் வண்டியில் ஏறிக்கொள்ளலாம்; எங்கே போகவேண்டுமோ கொண்டுபோய் விட்டுவிடுகிறேன். வேறு ஆடை...'

'ரொம்ப தாங்ஸ்!' என்றாள் அவள், அசையாமல்; முகத்தைத் திருப்பாமல்; மேலே பேசவிடாமல்.

ஆனால் அவன் அத்துடன் விடுகிற வழியாக இல்லை.

'சற்றுமுன்தான் ஒரு பஸ் போயிற்று. இப்போதைக்கு அடுத்த பஸ் வராது!' என்றான் அவன்.

குஞ்சுவிடம் கைக்கடிகாரம் இல்லை; இருந்தாலும் தன் கைமணிக்கட்டைப் பார்த்துக் கொண்டாள்.

'மணி எட்டு, நாற்பத்தெட்டு!' என்றான் அவன்.

குஞ்சுவுக்குக் கொஞ்ச நஞ்சம் இருந்த நம்பிக்கையும் போய் விட்டது. இந்த மழையில் எப்படி, எவ்வளவு நேரம் நிற்பது? எப்படி ஒன்பது மணிக்கெல்லாம் 'இண்டர்வியூ'வுக்குப் போய்ச் சேருவது?

அவள் முகத்தையே கவனித்துக்கொண்டிருந்த அந்த வாலிபன், ஒன்றையும் பொருட்படுத்தாதவன்போல், கையைப் பின்புறமாக நீட்டி, பின்கதவைத் திறந்துவிட்டான்.

'மழையில் நிற்பானேன்? ஏறிக் கொள்ளலாம்!'

குஞ்சு ஒருகணம் தயங்கினாள். மழைத் தாரையில் அவன் முகம் மங்கலாகத் தெரிந்தது. நிற்கவோ, யோசிக்கவோ நேரமில்லை. வண்டிக்குள் மழைச் சாரல் அடித்தது. அவள் அதற்கு மேல் யோசிக்காமல் குடையை மடக்கிக்கொண்டு, பின்பக்கமாக ஏறிக்கொண்டாள். இந்த வண்டியில் நேரே போவதானால் ஒன்பதுக்கெல்லாம் போய்விடலாம். பஸ்ஸுக்கோ, டாக்ஸிக்கோ நின்றால், நின்றுகொண்டிருக்க வேண்டியதுதான்! 'இண்டர்வியூ'வுக்குப் போகிற பேச்சுக்கே அவசியமிருக்காது.

'எங்கே போக வேண்டும்?'

'எழும்பூருக்கு!'

'சரி...'

வண்டியைக் கிளப்பி, மிதித்தான் அவன்.

செயின்ட் மேரீஸ் ரோடு திரும்பியது. வண்டியில் இருந்த நீண்ட சதுரக் கண்ணாடி வில்லையில் அவன் அவள் முகத்தைக் கண்டான். பளிச்சென்ற முகத்தில் அவசரமும், விசாரமும் கலந்திருந்தன. அவள் அவனைக் கவனிக்கவில்லை. வண்டிக்கு வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள். வண்டியின் பின்சீட்டில் ஒரு சிறு தோல் பெட்டி, ஒரு பிளாஸ்க் எல்லாம் வைக்கப்பட்டிருந்தன. அவள் ஒருபுறமாக ஒதுங்கித்தான் உட்கார்ந்துகொண்டிருந்தாள். பக்கவாட்டில் அந்த வாலிபனின் அழகிய தோற்றம் தெரிந்தது. ஆனால் ஆடவர்களை அப்படியெல்லாம் ஆராய்ந்து பார்க்கலாமா?

**அட்டைப் படம்:**

**இந்தக் கதையில் ஒரு கட்டத்தைத்தான் இவ்வார அட்டைப்படம் சித்திரிக்கிறது.**

'மழை வந்தாலே கஷ்டம்தான். இருந்தாலும் சாலையில் நடக்கிறவர்கள் முன்னால் பின்னால் பார்த்துப் போகவேண்டாமா?' என்றான் அவன், நிதானமாக.

குஞ்சு தன் ஆடையில் படிந்த கறையைப் பார்த்துக்கொண்டே இதற்குப் பதில் சொல்ல வேண்டாம் என்று இருந்தாள். அந்தப் பொறுப்பு வண்டி ஓட்டுகிறவர்களுக்கு மட்டும் இல்லையா? வண்டியில் 'ஹார்ன்' என்று ஒன்று எதற்காக இருக்கிறதாம்?

'இன்னும் கோபம் தணியவில்லை போலிருக்கிறது!' என்று அவன் புன்னகையோடு திரும்பி அவளைப் பார்த்தான்.

குஞ்சு முகத்தைத் திருப்பிக் கொண்டு, 'கோபம் என்ன, கோபம்! வண்டி வைத்துக் கொண்டிருப்பவர்களிடம் கோபித்துக்கொண்டு என்ன லாபம்?' என்றாள்.

'அதுதான் கேட்டேன்! தனியாக, பஸ்ஸுக்கு எத்தனை நேரம் இந்த மழையில் நிற்பது?'

'எத்தனையோ பேர் நிற்கிறார்களே!'

'அவர்கள்மீது நான் சேற்றை வாரியடிக்கவில்லையே!'

வண்டி மெதுவாகவே போய்க் கொண்டிருந்தது. மழை பெரிதாகப் பெய்துகொண்டிருந்தது.

'அவசரமோ?' என்றான் அவன்.

'ஆமாம்; ஒன்பதுக்கெல்லாம் நான் அங்கே இருக்க வேண்டும்.'

'எழும்பூரில் எங்கே?'

'ஸ்பர்டாங்க் ரோட்டில்!'

'அங்கே யார் இருக்கிறார்கள்?'

'ஒருவருமில்லை; ஒன்பதுக்கெல்லாம் 'இண்டர்வியூ'. அதற்குத்தான் போகிறேன்!'

அவன் உடனே திரும்பி அவளுடைய முகத்தைப் பார்த்தான். அவளும் அவன் கண்களைப் பார்த்தாள். அவன் பார்த்த விதம் அவளுக்கு ஒரு வியப்பைத் தந்தது: தன்னைப்போல அதே இண்டர்வியூவுக்குப் போகிற ஆள் தானோ?

ஆனால் இருவரும் அதற்குமேல் பேசிக்கொள்ளவில்லை. வண்டி கூவம் பாலத்தைத் தாண்டி மியூஸியத்துக்கு முன்னாலேயே, இடதுபுறமாகச் சென்ற சாலையில் திரும்பியது. இன்னும் இரண்டு மூன்று நிமிஷங்களில் 'லேக்வியூ' வந்துவிடும். அவள் அங்கேதான் இறங்க வேண்டும். ஆனால் அவள் மனத்தை ஏதோ அலைத்துக் கொண்டிருந்தது. அவள் எதிர்பார்த்ததுபோல் அவன் கலகலப்பாகப் பேசவில்லை. பேசினால், அவனுக்குத் தன்னுடைய நன்றியை எப்படியாவது தெரிவித்துக்கொள்ளலாம்.

திடீரென்று அவன், காரை நிறுத்திக்கொண்டு, 'அடுத்த பங்களாதான் லேக் வியூ. ஆனால் நான் இப்படியே அங்கே வருவதற்கில்லை. மழை அவ்வளவாக இல்லை. அதனால் நடந்துபோகலாம் என்று நினைக்கிறேன்! சரிதானே?' என்று அவள் பதிலை எதிர்பார்க்காமலே பின்கதவைத் திறந்துவிட்டான்.

'ரொம்பத் தாங்ஸ்! நீங்கள் வராவிட்டால் இந்த இண்டர்வியூவுக்கே நான் வந்திருக்க முடியாது!' என்றாள் அவள்.

'ஆமாம்; அதற்குள் நன்றி சொல்ல வேண்டாம்! நாம் மறுபடியும் சந்திக்கும்படியாக இருக்கும்!' என்றான் அவன்.

அவள் வியப்போடு அவன் முகத்தைப் பார்த்தாள்.

'அதற்குப் பிறகு நன்றி சொல்லும்படி இருக்குமோ; மறுபடியும் கோபித்துக்கொள்ளும்படி இருக்குமோ, எனக்குத் தெரியாது. என்ன இருந்தாலும் சாலையில் மழையில் நடப்பது எப்படி என்று கேள்வி வரும். அதற்குப் பதில் சொல்லாமல் மழுப்ப முடியாது!' என்றான் அவன்.

குஞ்சுவுக்கு ஒன்றும் புரியவில்லை.

'இதெல்லாம்கூடக் கேட்பார்களா, என்ன?'

'மற்ற இரண்டு பேரும் கேட்பார்களோ, என்னவோ! நான் கேட்பேன்!—அதாவது நான் அங்கே இருந்தால்!' என்றான் அவன்.

குஞ்சு குழம்பிய உள்ளத்துடன் 'லேக் வியூ' பங்களாவுக்குள் நுழைந்துகொண்டிருந்தாள். பின்னால் 'ஹாரன்' சத்தம் காதைத் துளைத்தது. அவள் ஏறி வந்த வண்டி, அவளைத் தாண்டிக் கொண்டு முன்னால் சென்று, போர்ட்டிகோவில் போய் நின்றது.

(தொடரும்)





# மாதர் மகாசபை

## குங்குமம்

### 12

'நினைத்துக்கொண்டால் சிரிப்புத்தான் வருகிறது' என்றாள் காமுப் பாட்டி.

'நமக்கென்னமோ சிரிப்பாய் இருக்கிறது. பாவம், இன்னமும் அதற்கு நடுக்கம் விட்டபாடில்லை' என்றாள் கமலா பாட்டி.

'இராதோ பின்னே! அச்சான்யம் மாதிரி, ஒருத்தி திடுதிப்பென்று எடுத்துப் போட்ட மாதிரி கழுத்தைக் கட்டிக் கொண்டாளென்றால், அதுவாக இருக்கவே இவ்வளவாவது சமாளித்துக் கொண்டது. இன்னும் யாராவதாக இருந்திருந்தால் அதிர்ச்சியில் அப்படியே மூர்ச்சை போட்டிருப்பார்கள்' என்றாள் காமுப் பாட்டி.

'என்ன விஷயம்? புதிர் போடுகிற மாதிரி நீங்களே சொல்லிக்கொண்டிருந்தால், நாங்களும்தான் கொஞ்சம் கேட்டு ரசிக்கிறோம். விவரமாய்ச் சொல்லுங்களேன்' என்றாள் விமலா.

'ஓகோ, விஷயம் தெரியாதா உங்களுக்கு?' என்றாள் காமுப்பாட்டி.

'தெரிந்திருந்தால், ஏன் இப்படி கம்மென்று உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். உங்களுடன் வார்த்தையில் கலந்துகொண்டிருக்க மாட்டோமா?' என்றாள் சரோஜா.

'பக்கத்துத் தெரு பத்மநாபன் இறந்துவிட்டான், தெரியுமோலியோ?' என்றாள் காமுப்பாட்டி.

'கேள்விப்பட்டேன், பாவம், அநியாயச் சாவு. ஐந்தாறு குழந்தைகள், தாயார், தகப்பனார் இருக்கிறார்கள், பட்டுக் கொடிமாதிரி அகமுடையாள், ஏழை சம்சாரம். சொற்ப சம்பளம். இத்தனை ஜீவன்களும் இவன் ஒருவனையே நம்பிக்கொண்டிருந்தார்கள். பாவம். நினைத்துக்கொண்டால் ஒரே கஷ்டமாயிருக்கிறது' என்றாள் வனஜா.

'இந்தச் சென்னைப் பட்டினத்தில் இந்தமாதிரி எத்தனையோ குடும்பங்கள். அதற்கென்ன, பேண்டும், ஹாட்டும் போட்டுக்கொண்டு 'டக்காக'ப் போய்க் கொண்டிருக்கிறதுகளேயொழிய, அடுத்த வேளைக்கு வீட்டில் சாப்பாட்டிற்குத் தகராறு. சம்பாதித்துக்கொண்டு வந்து போட்டால்தான் உண்டு', என்றாள் காமுப்பாட்டி.



நடிகர்:—ஸ்டூடியோவில் இன்னிக்கு 'கால்ஷீட்' இருக்கு.

"ஏன்? அங்கே 'முழு ஷீட்'டாக இருக்காதுங்களா?"

---

'இந்த லட்சணத்தில் டிராமா, சினிமா, எக்ஸிபிஷன், ஒன்று தவறுவதில்லை' என்றாள் கமலா பாட்டி.

'தவறுவதில்லை மாத்திரமா? இதற்கெல்லாம் டாக்ஸியில்தானே பயணம்! அத்துடன் 'கொத்தவால்சாவடி வாடி' மாதிரியா போகிறதுகள்! ஏதோ ஐ. சி. எஸ். அதிகாரிகள், கோடீசுவரன் குடும்பம்மாதிரியல்லவோ 'டிரெஸ்' செய்துகொண்டு வந்து இறங்குகிறதுகள்!' என்றாள் காமுப்பாட்டி.

'ஆனால், பத்மநாபனோ அவனுடைய அகமுடையாளோ இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களில்லை' என்றாள் கமலா பாட்டி.

'சே! சே! பாவம், சொன்னால்கூட தோஷம் உண்டு. அன்றொருநாள், ஒரு நல்ல படம் வந்திருந்தது. அதற்கு வருகிறாயா என்று சுசீலாவைக் (பத்மநாபனின் மனைவி) கூப்பிட்டேன். 'சினிமாவா? அதற்கெல்லாம் நமக்கு எங்கே அத்தனை பாட்டி! குழந்தைகளைப் பட்டினி போடாமல் காப்பாற்றி வந்தால் போதாதா? ஒரு சமயம் இல்லாவிட்டால் ஒரு சமயம், குழந்தைகள், சினிமா, எக்ஸிபிஷன் போக வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்குங்கள். பக்கத்து வீட்டில் ஒரு மாமி இருக்கிறார். ரொம்பவும் நல்லவர். அவருடைய அகத்துக்காரருக்கு ஏதோ ஸ்டூடியோவில் உத்தியோகமாம். அவர் சில சமயங்களில் பாஸ் வாங்கிக் கொண்டு வருவார். அதில் அந்த மாமி, குழந்தைகளை அழைத்துக்கொண்டு போய் வருவார். பாவம், அதுகள் என்னத்தைக் கண்டதுகள். புது வீசை மூன்று ரூபாய் விற்கிறதன் எதிரொலி அதுகளுக்குத் தெரிகிறதா? எல்லாக் குழந்தைகளும் போகிறதுகளே, நாம் மட்டும் போகாமலிருப்பதா, என்றுதான் அதுகளுக்குத் தோன்றும். நான் கூட நினைக்கிறதுண்டு. எதிர் வீட்டு எச்சுமியின் அகத்துக்காரருக்கு 'இவரை'விட சம்பளம் குறைவு என்று கேள்வி. ஆனால், அவள் ஒரு சினிமா, டிராமா, ஒரு எக்ஸிபிஷன் தவறுவதில்லை. இது தவிர அவ்வப்பொழுது தினுசு தினுசாகப் புடவை வாங்கிக் கட்டிக்கொள்கிறாள். அது எப்படித்தான் முடிகிறதோ தெரியவில்லை. நம்மால் தீபாவளிக்குக்கூட ஒரு புதுச் சேலை எடுக்க முடிகிறதில்லை. இதெல்லாம்கூட ஜாதக விசேஷம்தான்' என்றாள் சுசீலா. எதற்குச் சொல்கிறேனென்றால், அவ்வளவு பொறுப்பு தெரிந்தவள்' என்றாள் வனஜா.

'அது கிடக்கட்டும் விஷயத்தைச் சொல்லுங்கள்' என்றாள் ருக்கு.

'பத்மநாபன் ஆபீஸிலிருந்து வந்ததும் மார்பு வலிக்கிறது என்று சொன்னானாம். அவ்வளவுதான். அரைமணிக்கெல்லாம் இறந்துவிட்டானாம். பாவம்! கேட்கிறவர்களுக்கு எப்படியிருக்கும்! டவுனில் சுசீலாவின் அத்தை ஒருத்தி இருக்கிறாளாம். அவளுக்குக் குழந்தை குட்டிகள் ஒன்றும் கிடையாதாம். சிறு வயதில் சுசீலா கொஞ்சநாள் இந்த அத்தையின் வீட்டிலேயே வளர்ந்தாளாம். ரொம்ப நல்ல பெண் என்று அத்தை, அத்திம்பேர் இரண்டு பேருக்கும் சுசீலாவின்மீது அசாத்திய ஆசையாம். பத்மநாபன் இறந்துவிட்ட தகவல் எட்டியதும் இந்த அத்தை இடி விழுந்தவள்போல் ஆகிவிட்டாளாம்' என்று காமுப்பாட்டி சொல்கையில் 'ராதே! பின்னே! நமக்கே, கேட்டதும் தூக்கிப் போட்டமாதிரி இருக்கிறதே' என்றாள் விமலா.

'மேலே சொல்கிறேன் கேள். சுசீலா குடி இருக்கும் வீட்டில் பத்து குடித்தனங்கள். அதில் சுசீலா ஒரு சமையலறையும், ஒரு படுக்கை அறையும் வைத்திருந்தாள். பத்மநாபன் பிரேதம் படுக்கையறையில் விடப்பட்டிருந்தது. உள்ளே வெளிச்சமே கிடையாது. ஒரே இருட்டு. அந்த வீட்டில் சாந்தா என்று ஒரு பெண் குடி இருக்கிறது. இந்த வேளைக்கு அதன் அகமுடையான் கொஞ்சம் சுமாரான உத்தியோகத்தில் இருக்கிறான். அகமுடையானும் பெண்டாட்டியும் மனமொத்து சரியாக, நாலு பேருக்குக் கௌரவமாகக் குடும்பத்தை நடத்தி வருகிறதுகள். சுசீலாவும் சாந்தாவும் ரொம்ப கூட்டாளிகள். மாதக் கடைசியில் பண வாட்டியாயிருக்கிற சமயத்தில் சுசீலாவுக்குச் சாந்தா, பத்து, எட்டு கொடுத்து உதவி செய்து, பின்னிட்டு சம்பளத்தில் வாங்கிக் கொள்வாள். கொஞ்சம் உபகாரச் சிந்தை உள்ள பெண்பாவம். அத்துடன் சாந்தா அதிகமாக வீண் வம்பு தண்டாக்களுக்குப் போகிறதில்லை. சுசீலாவும் அதே போக்குள்ளவளானபடியால் ஒழிந்த வேளையில் இது இரண்டும் மாத்திரம் பொழுது போக்காகப் பேசிக் கொண்டிருக்குங்கள். அகமுடையானின் திடீர் மரணமாகிற பேரிடியை சுசீலாவால் தாள முடியவில்லை. நிலையில் நிற்காமல் புழுபோல் துடித்தது பாவம். சாந்தா அவளுக்கு ரொம்பவும் வேண்டியவளானபடியால் கூட இருந்து சுசீலாவுக்கு ஆறுதல் மொழிகள் கூறிக் கொண்டிருந்தாள். இந்த சமயத்தில்தான் டவுனிலிருந்து சுசீலாவின் அத்தை அங்கு வந்து சேர்ந்தாள். வெளியே வெளிச்சத்திலிருந்து உள்ளே வந்தால், வெளிச்சமாக இருக்கிற இடமே ஒரே இருட்டாகத் தெரியும். சுயமாகவே இருட்டாக உள்ள அறையைப் பற்றிக் கேட்கவேண்டுமா? அத்துடன் மனதில் மிகுந்த துக்கத்துடன் வேறு வந்திருக்கிறாள். சுசீலாவின் அத்தையைத்தான் சொல்கிறேன். வந்



த்தும் வராததுமாக குடு குடுவென்று ஓடிப்போய், சாந்தாவை சுசீலா என்று எண்ணிக்கொண்டு, சாந்தாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, 'அடி என் செல்வமே! இவ்வளவு சீக்கிரத்தில், இந்தப் பாழும் தெய்வம், உன்னை இப்படி ஆக்கிவிட்டதேடியம்மா. ஐயோ, நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லையேடி!' என்று 'பிலாக்கணம்' பாட ஆரம்பித்து விட்டாள். 'சுசீலா அதோ இருக்கிறாள்' என்று சாந்தா என்ன கூறியும், 'ஐயோ! அத்தை, தெய்வம் என்னை சோதித்துவிட்டது அத்தை' என்று கதறியும் சாந்தாவின் கழுத்தை அத்தை விடவே இல்லை. தனது 'பிலாக்கணத்திலும்', மனக் கஷ்டத்திலும் இவர்கள் சொல்வது அவள் காதில் விழுந்தால்தானே! என்னென்னவோவெல்லாம் சொல்ல ஆரம்பித்து விட்டாள். அப்புறம் அவள் பிடியினின்றும் சாந்தாவை விடுவித்தது உண்டு இல்லை என்றாகிவிட்டது. அதிலிருந்து சாந்தாவுக்கு ஒரே திகில் பாவம்!' என்றாள் காமுப்பாட்டி.

'இராதோ பின்னே! திடுதிப்பென்று எதிர்பாராமல் ஒருத்தி அச்சானியம் மாதிரி பிலாக்கணம் பாடினால் யாருக்குத்தான் பயமாக இராது?' என்றான் வனஜா.

'இந்த அத்தை மாத்திரம் இப்படி என்று சொல்லவேண்டாம். இந்த மாதிரி எத்தனையோ 'சமத்துகள்' இருக்கிறதுகள். நேற்று தெருவில் போய்க்கொண்டிருந்தேன். இடிஒன்று எடுத்துப் போட்டமாதிரி 'என்னடியம்மா! உன் தம்பி போய்விட்டானாமே! பாவம்! நல்ல பையன்!' என்று என் பின்னால் வந்து என்னை யாரோ விசாரிப்பதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். பார்த்தால் கோடி வீட்டு அசடு பிச்சுமணி நின்றுகொண்டிருக்கிறது. 'கோகிலாவாடி! கனகா' என்று நினைத்துவிட்டேன்' என்று முகத்தில் அசடு சொட்ட, முப்பத்திரண்டு பற்களையும் காட்டியது. என்ன செய்கிறது அதை? ஒரு பார்வை பார்த்துவிட்டுப் பேசாமல் போய்க்கொண்டிருந்தேன். அவசரக் குடுக்கை என்று சொல்கிறார்களே, இது களைத்தான். கொஞ்சம் நிதானித்தால் குடி முழுகியா போய்விடும்! இதனால் எத்தனை சங்கடம். பிச்சுமணி கேட்டது கூடப் பரவாயில்லை. சாந்தாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அந்த அத்தை 'பிலாக்கணம்' பாடியது ரொம்ப மோசம்! பாவம்! சாந்தாவின் மனது எப்படித் தானிருக்கும்!' என்றாள் கோகிலா.

'அவசரக் குடுக்கைகளின் செய்கை எல்லாம் இப்படித்தான்' என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள் கமலப் பாட்டி.




"என்னங்க! நீங்கள் வாங்கிக் கொடுத்த வீடு மகா மோசமா இருக்குங்க! மழை பெய்தால் வீட்டைச் சுற்றித் தண்ணீர் ஏரி மாதிரி தேங்கி நிக்குதே!"

"அதனாலென்னங்க! நாங்க படகு கூட வியாபாரம் செய்யறோங்க! ஒன்றை வாங்கிப் போடுங்க! விலை மலிவா கொடுக்கிறோம்!"





## 8

உலகையா, உணர்ச்சி வசப்பட்டு, 'நான் ஒரு மனிதனைக் கொன்றுவிட்டேன்!' என்று சொன்னதும்—

இன்பநாயகம் ஓரடி பின் வாங்கி நின்றார். மாணிக்கம் வியப்புடன் உலகையாவைப் பார்த்தான்.

டாக்டர் எழுந்து உட்கார முயன்ற உலகையாவை மீண்டும் தலையணையின்மீது சாய்ந்து படுக்க வைத்து, 'எழுந்திருக்காதீர்கள், அப்படியே சாய்ந்து படுத்துக்கொண்டு பேசுங்கள்' என்றார்.

இன்பநாயகத்தால் பேசவே முடியவில்லை! உலகையா ஒரு மனிதனைச் சுட்டுக் கொன்றுவிட்டிருப்பார் என்பதை நம்பவே முடியவில்லை! உலகையாவுக்கு அடிபட்டு மூளைக் கோளாறு ஏதாவது ஏற்பட்டிருக்குமோ என்ற ஐயம் எழுந்தது! அப்படி ஏதாவது மூளைக் கோளாறு ஏற்பட்டிருந்தால் டாக்டர் சொல்லியிருப்பாரே?

டாக்டர் மெல்லக் கேட்டார்: 'அமைதியுடன் நான் கேட்பதற்குப் பதில் சொல்லுங்கள். நீங்கள் ஒரு மனிதனைச் சுட்டுக் கொன்றதாகச் சொல்லுகிறீர்;

கள்! எதற்காக அவனைச் சுட்டுக் கொன்றீர்கள்? எவன் அவன்?'

'அவன் எவனென்று எனக்குத் தெரியாது! இருளில் அவன் முகத்தைச் சரியாகப் பார்க்க முடியவில்லை என்றால்! நான் அவனைச் சுட்டுவிட்டது உண்மை தான்!' என்றார் உலகையா! அவருடைய மனம் நடந்துபோன நிகழ்ச்சிகளை மெல்ல நினைவு படுத்திக்கொண்டிருந்தது.

'நீங்கள் சொல்லுவது எங்களுக்குப் புரியவில்லை! தெளிவாக நடந்ததைச் சொல்லுங்கள். உங்கள் டிரைவர் காரைத் தவறான வழியில் செலுத்திவிட்டான், இல்லையா?' என்று கேட்டான் மாணிக்கம்.

'ஆமாம்' என்றார் உலகையா. அவர் மனம் இப்போதுதான் தெளிவாகிக்கொண்டிருந்தது.

'பிறகு என்ன நடந்தது?' என்று கேட்டான் மாணிக்கம்.

'பெட்ரோல் இல்லாமல் காரை எப்படிக் கிளப்ப முடியும்? என்னுடைய மூத்த மகள் பூமகள் பெட்ரோல் வாங்கி வரும்படி சொல்லி டிரைவரிடம் பணத்தைக் கொடுத்தாள். சாலைக்கு வந்து, ஏதாவது ஒரு காரையோ பஸ்ஸையோ பிடித்துப் போய்ப் பெட்ரோல் வாங்கி வருவான் என்று எதிர்பார்த்து அவனை அனுப்பினேன். கொட்டும் மழையில் அவன் இறங்கிப் போய்விட்டான். அவன் போன சிறிது நேரத்துக்கெல்லாம் 'ஐயோ!' வென்று அவன் அலறும் ஓசை கேட்டது!'

இதைச் சொல்லிவிட்டுப் பேசாமல் இருந்தார் உலகையா!

'பிறகு?' என்று ஆவலுடன் கேட்டார் டாக்டர்.

'மேலே சொல்லுங்கள்' என்றார் இன்பநாயகம்.

மாணிக்கம், அவர் அருகில் நெருங்கி மேலே, அவர் என்ன சொல்லப் போகிறார் என்று உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தான். ஆனால்—

உலகையா வாயைத் திறக்கவில்லை!

ஆழமில்லாத கிணற்றில், கண்ணாடிபோல் தெளிவாகத் தெரியும் நீரில் மீன்கள் பல உலவுவதைக் கண்டு, அவைகளை வலை ஏதுமின்றி எளிதில் பிடித்துவிடலாம் என்று எண்ணி ஒருவன் நீரில் கைகளை விட்டதும், தண்ணீர் கலங்கிப்போய், மீன்கள் இருந்த இடம் தெரியாமல் ஒளிந்துகொள்ளும்போது எப்படியிருக்குமோ, அப்படியிருந்தது உலகையாவின் மன நிலை! அவர் நினைவுக்கு வந்த நிகழ்ச்சிகள், மீண்டும் அவர் மனத்தை விட்டுப் புரண்டுவிட்டன!

உலகையா கண்களை மூடிக்கொண்டு மீண்டும் சிந்தனையுள் ஆழ்ந்தார். நேரம் ஓடிக்கொண்டிருந்தது. எல்லாரும் அவரையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் கழித்து மீண்டும் அவர் பேசினார்: 'டிரைவர் கத்தியதும், கொட்டும் மழையில், சுழலும் காற்றில், கைத் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு நான் இறங்கிப் போனேன். டிரைவர் சென்ற திக்கில் ஓடினேன். சிறிது தொலைவு ஓடியதும், இருளில் ஒரு மனிதன் ஓடிவருவதைக் கண்டேன். அவன் கையிலே ஒரு தடி இருந்தது! அவன் பாய்ந்து என்னைத் தாக்க வந்தான்! அவன் என்னை நெருங்கி வந்ததும், நான் கொதிப்படைந்து அவனைச் சுட்டுவிட்டேன்! அவன்மீது குண்டு பட்டதும், அவன் கீழே சுருண்டு விழுவதை என் கண்களால் நான் பார்த்தேன்!'

உலகையா பேச்சை நிறுத்திவிட்டு, தனக்குப் பக்கத்தில் நின்று மூவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

'எத்தனை தடவை சுட்டீர்கள் நீங்கள்?' என்று கேட்டான் மாணிக்கம்.

'ஒரே தடவைதான்! அவன் விழுந்து விட்டான்! அதே நேரத்தில் பின்னாலிருந்து என் மண்டையின்மீது பலமான அடி ஒன்று விழுந்தது! என்னால் திரும்பிக்கூடப் பார்க்க முடியவில்லை! அப்படியே மயக்கமுற்று நான் விழுந்து விட்டேன்!' என்றார் உலகையா!

'சாலையில் அல்லவா வந்து விழுந்து கிடந்தீர்கள்? சாலைக்கு எப்படி நீங்கள் வந்தீர்கள்?' என்று கேட்டார் இன்பநாயகம்.

உலகையா மீண்டும் தமது நினைவுகளைத் தெளிவுபடுத்திக் கொண்டு சொன்னார்: 'மழை பெய்துகொண்டிருந்ததால், சிறிது நேரத்துக்கெல்லாம் எழுந்து நிற்க முயன்றேன். தலை தெறிப்பதைப் போலிருந்தது! கலக்கத்துடன் சுற்றிலும் பார்த்தேன். துப்பாக்கிக் குண்டு பட்டவனைக் காணோம். அவன் அடிபட்டு வேறு எங்கேயாவது போய் விழுந்து செத்துப் போயிருப்பானோ என்று ஐயமும், அச்சமும் எனக்கு எழுந்தன! எனக்கு அப்போதிருந்த நிலையில் என்ன செய்வது என்றே புரியவில்லை! தள்ளாடிக் கொண்டே நடக்கத் தொடங்கினேன்!'

'மீண்டு நீங்கள் காரை நிறுத்திவிட்டு வந்த இடத்துக்குப் போகவில்லையா?' என்று கேட்டான் மாணிக்கம்.

'இல்லை! ஒருவனைச் சுட்டுக் கொன்று விட்டோமே என்ற அச்சம்தான் என் மனத்தில் எழுந்து நின்றது! சாலைக்குச் சென்று, ஏதாவது ஒரு காரைப் பிடித்து, போலீசுக்கு உடனே நடந்ததைத் தெரிவிக்க வேண்டும் என்று சாலையை நோக்கி நடந்தேன். எப்படி நான் சாலைக்கு வந்தேன் என்று எனக்கே வியப்பாக இருக்கிறது! அப்போது தான் இருந்த நிலையில் நான்கு கல் தொலைவு நான் நடந்திருப்பேனா என்று எனக்கு ஐயமாக இருக்கிறது! சாலைக்கு வந்து விழுந்து விட்டிருக்கிறேன்! மீண்டும் என் நினைவு தவறிவிட்டிருக்கிறது!' என்றார் உலகையா.



"இதுக்கு என்ன வர்ணம் சாமி"

"கல்யாணி வர்ணமாவது இல்லே, மோஹன வர்ணமாவது...,"


'நீங்கள் சொல்வது உண்மையாக நடந்தது தானா, அல்லது கற்பனை செய்து சொல்லுகிறீர்களா என்று வியப்பாக இருக்கிறது! அச்சத்தால் இப்படியெல்லாம் நடந்திருக்கும் என்று எண்ணுகிறீர்களோ என்னமோ?' என்றார் இன்பநாயகம்.

'நான் சொன்னவைகள் அனைத்துமே உண்மையில் நடந்த நிகழ்ச்சிகள்! துப்பாக்கியால் நான் சுட்டதும், என் எதிரே ஒரு மனிதன் சுருண்டு விழுந்ததும் உண்மை! நன்றாக நினைவு இருக்கிறது?' என்றார் உலகையா.

'துப்பாக்கியால் அவனைச் சுட்டது குற்றமில்லை! எவனோ ஒருவன் உங்களைத் தாக்க வந்திருக்கிறான், தற்பாதுகாப்புக்காக நீங்கள் அவனைச் சுட்டுவிட்டீர்கள்! அதற்காக நீங்கள் அஞ்ச







வேண்டியதில்லை! போலீசாருக்கு நாம் விளக்கிச் சொல்லிவிட்டால் போகிறது!' என்றார் டாக்டர்!

'இப்போதே சொல்ல வேண்டும்! தாமதிக்கவே கூடாது! உடனே நாம் சொல்லாவிட்டால், தவறு என்மீதுதான் என்று எண்ணிவிடுவார்கள்!' என்றார் உலகையா.

'அவசரப்படாதீர்கள்! உங்களுக்காக நானே போலீசில் எல்லாவற்றையும் தெளிவாகச் சொல்லி விடுகிறேன். ஆனால், இதுவரையில் நீங்கள் சொன்னவைகள் தெளிவாக இல்லையே!' என்றான் மாணிக்கம்.

உலகையா மாணிக்கத்தை உற்றுப் பார்த்தார்.

மாணிக்கம் மெல்லிய குரலில் கேட்டான்: டிரைவர் காரை விட்டு இறங்கிச் சென்றதும் 'ஐயோ' வென்று கத்தினான். உடனே நீங்கள் துப்பாக்கியுடன் ஓடினீர்கள். நீங்கள் போனபோது, டிரைவர் எங்கேயிருந்தான், என்ன செய்து கொண்டிருந்தான்?'

'டிரைவரை அங்கே காணோம்! வேறு மனிதன் ஒருவன் தடிக்கம்புடன் என்னை நோக்கி ஓடி வந்தான்! உடனே அவனைச் சுட்டுவிட்டேன்! அவன் அங்கேயே விழுந்து செத்து விட்டான்!'

'அவன் அங்கேயே விழுந்து செத்து விட்டான் என்று ஏன் சொல்லுகிறீர்கள்? அவன் அடிபட்டு விழுந்திருக்கலாம்! அவன் செத்துப்போனான் என்பதை உங்களால் உறுதியாகச் சொல்ல முடியுமா?' என்று மடக்கினான் மாணிக்கம்!

'துப்பாக்கிக் குண்டு பட்ட அனைவருமே செத்துப்போவதில்லை!' என்றார் டாக்டர்.

‘அவன் கீழே விழுந்து ஆடாமல் அசையாமல் கிடந்தானே?’ என்றார் உலகையா!

‘துப்பாக்கிக் குண்டு பட்டதும் ஒரு மனிதன் கீழே விழுந்து ஆடாமல் அசையாமல் கிடப்பது நடக்கக்கூடியதுதானே! அதனால் அவன் செத்துப்போனான் என்று சொல்லிவிட முடியாது!’ என்றார் டாக்டர்.

‘என்னால் நம்ப முடியவில்லை! அவனை நான் சுட்டுக் கொன்றுவிட்டேன் என்பது உண்மை! என்னுடைய அச்சத்தைப் போக்குவதற்காக நீங்கள் இப்படிப் பேசுகிறீர்கள்!’ என்றார் உலகையா!

‘உண்மையைத்தான் சொல்லுகிறேன்! நீங்கள் ஓர் ஐ. சி. எஸ். அதிகாரி! நீங்கள் உறுதி கொண்ட மனமுள்ளவராக இருப்பீர்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை!’ என்றார் டாக்டர்.

மாணிக்கம் தொடர்ந்து கேட்டான்: ‘நீங்கள் மீண்டும் எழுந்தபோது நீங்கள் சுட்ட அந்த மனிதன் அங்கேயே கிடந்தானா?’

‘இல்லை!’ என்றார் உலகையா.

‘டாக்டர் சொன்னது தெளிவாகி விட்டது! அவன், நீங்கள் உணர்வு பெற்று எழுந்திருக்கு முன் அந்த இடத்தை விட்டுப் போயிருக்க வேண்டும்!’ என்றான் மாணிக்கம்.

உலகையாவின் உதட்டில் கேலிச் சிரிப்புத் தோன்றியது. ‘வேறு விதமாகவும் இருக்கலாம் இல்லையா?’

‘சொல்லுங்கள் என்றான் மாணிக்கம்.

‘மற்றொரு மனிதன் என் பின்னாலிருந்து மண்டையில் அடித்திருக்கிறான். அந்த மனிதன், துப்பாக்கிக் குண்டு பட்டவனைத் தூக்கிக்கொண்டு போயிருக்கலாம்!’

‘உண்மைதான்!’ என்றார் இன்பநாயகம். இப்போதுதான் அவருக்கு நடந்ததெல்லாம் உண்மையாக இருக்குமாவென்று தோன்றியது!

‘உங்கள் மண்டைமீது பின்னாலிருந்து தாக்கியவன் டிரைவராக இருக்குமோ?’

‘டிரைவர் ஏன் என்னைத் தாக்க வேண்டும்? அதுதான் எனக்குப் புரியவில்லை! காரை டிரைவர் பெட்ரோல் இல்லாமல் வேண்டுமென்றே அங்கே கொண்டுபோய் நிறுத்தி இருக்கிறான் என்பதில் ஐயமில்லை! ஆனால், எதற்காக அவன் இப்படியெல்லாம் செய்ய வேண்டும் என்றுதான் எனக்குச் சிறிதும் விளங்கவில்லை!’ என்றார் உலகையா! பிறகு—

‘உடனே போலீசாருக்குத் தொலைபேசியில், நடந்ததைச் சொல்லி விடுங்கள்; டாக்டர் என்றார் உலகையா!

‘இப்போது வேண்டாம்!’ என்றான் மாணிக்கம்.

‘என்னைத் தயவு செய்து போக விடுங்கள்! பூமகளையும், கட்டழகியையும் உடனே நான் பார்த்தாக வேண்டும்!’ என்றார் உலகையா!

‘நீங்கள் இப்போது போக முடியாது!’ என்றார் டாக்டர்!

‘ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள், உலகையா. மாணிக்கத்தை இப்போதே நான் அனுப்பி வைக்கிறேன். உங்கள் கார் எங்கேயும் போய்விடாது! உங்களுடைய பெண்கள் இருவரும் காரிலேயே உங்கள் வருகைக்காகக் காத்திருப்பார்கள். இல்லாவிட்டால், அந்தப் பக்கத்திலிருக்கும் வீடுகளில் கேட்டுப் பார்த்தால் தெரிந்துவிடும்!’ என்றார் இன்பநாயகம்.



‘இப்போதே நான் புறப்படுகிறேன். நான் திரும்பி வந்ததும் உண்மைகளைப் போலீசாரிடம் சொல்லிவிடலாம்! அதுவரையில் பொறுத்திருங்கள்!’ என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான் மாணிக்கம்.

இன்பநாயகம் வெளியே வந்து அவனை வழியனுப்பினார்.

மாணிக்கம், கெடிலாக் காரில் ஏறி உட்கார்ந்து விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

‘விழிப்புடன் போய்விட்டு வா. அந்தப் பெண்கள் இருவரும் இருந்தால் அவர்களை நம்முடைய காரில் அழைத்து வந்துவிடு. நீ வரும்வரையில் நான் இங்கேயே இருக்கிறேன்!’ என்றார் இன்பநாயுகம்.

‘ஆகட்டும் அப்பா’!

‘உலகையா நல்லவர், நல்லவர்கள் வாழ்க்கையில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்பட வேண்டாம்! அவர் சுட்ட மனிதன், உண்மையிலேயே செத்துப் போயிருந்தால், அந்தப் பக்கம் போகும்போதே உண்மை தெரிந்துவிடும்!’ என்றார் இன்பநாயகம்.

மாணிக்கம் காரைச் செலுத்தினான்.

## 9

கதிரவன் மேற்கே சாய்ந்து, இறங்கிக்கொண்டிருந்தான்.

மாணிக்கம், காரின் மீது சாய்ந்து நின்றுகொண்டு, குன்றின் மீதிருந்த வீட்டைப் பார்த்தான்.

உலகையாவின் கார் அந்தப் பக்கத்தில் எங்கேயுமில்லை! அந்தப் பெண்களையும் காணோம்!



"என்னுடைய கையெழுத்து நோட்டில் ஏதோ கிறுக்கி இருக்கிறீர்களே அது என்ன ஸார்?"

"போடா மண்டு! அதுகூடவா தெரியவில்லை? கையெழுத்தை தெளிவாக எழுது என்றல்லவா எழுதி இருக்கிறேன்!"

ஆகையால், தனித்திருந்த அந்த வீட்டில் கேட்டுப் பார்த்துவிடலாம் என்று முடிவு செய்துகொண்டு, மெல்ல நடந்தான்.

அந்த வீட்டை அடைந்தபோது, வாயிற்படியிலேயே நின்றிருந்த கிழவி அவனையே விழுங்கி விடுவதைப்போல் பார்த்தாள்!

மாணிக்கம் அவளிடம், ‘கோயமுத்தூரிலிருந்து வருகிறேன். நேற்றிரவு இந்தப் பக்கம் ஒரு கார் வந்து நின்றுவிட்டதாமே?’ என்று கேட்டான்.

பதில் இல்லை.

‘காரிலிருந்து இரண்டு பெண்கள் இங்கே வந்தார்களா?’

பதில் இல்லை. கிழவி பேசாமல், அவனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள்!

'காரைக் காணோமே! மீண்டும் எப்படி அவர்கள் காரில் சென்றார்கள்?' என்று சற்று உரக்கக் கேட்டான் மாணிக்கம்.

அப்போதும் கிழவி பேசவில்லை! ஆனால்—

'யாரது?' என்று கேட்டுக்கொண்டே வெளியே வந்தான் தேவமணி!

கிழவி, கதவின் ஓரத்தில் நின்று கவனித்துக்கொண்டிருந்தாள்.

மாணிக்கம் மீண்டும் சொன்னான்: 'கோயமுத்தூரிலிருந்து வருகிறேன். நேற்றிரவு இங்கே ஒரு கார் வந்து நின்று விட்டது. அதில் ஐ. சி. எஸ். அதிகாரி உலகையாவின் பெண்கள் இருவர் இருந்தனர். அவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை! இங்கே வந்தார்களா?'

'உள்ளே வாருங்கள்' என்றான் தேவமணி.

'நன்றி' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றான் மாணிக்கம். அவன் கிழவியைத் தாண்டிச் சென்றபோது கிழவி அவனைப் பார்த்த பார்வை அவனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை! 'இவள் ஏன் பேயைப்போல் பார்த்துக் கொண்டு நிற்கிறாள்?' என்று எண்ணியது அவன் மனம்!

மாணிக்கத்தை உட்கார வைத்து, 'நீங்கள் யார்?' என்று கேட்டான் தேவமணி.

'என் பெயர் மாணிக்கம். உலகையா கோவையில் ஒரு மருத்துவ விடுதியில் இருக்கிறார். அவர் நினைவற்ற நிலையில் கிடந்தார். நினைவு வந்ததும் நடந்ததைச் சொன்னார். அவருடைய பெண்கள் இருவரையும் அழைத்துச் செல்ல வந்தேன்.'

'அந்தப் பெண்கள் இருவரும் நேற்றிரவு இங்கேதான் வந்து தங்கியிருந்தார்கள். அதோ அந்த அறையில்தான் இருவரும் தங்கியிருந்தார்கள்!' என்று பக்கத்திலிருந்த அறையைச் சுட்டிக் காட்டினான் தேவமணி.

'இப்போது இங்கே இல்லையா?' என்று வியப்புடன் கேட்டான் மாணிக்கம்!

'இல்லை! விடிந்ததும் பார்த்தால் இருவரையுமே காணோம்! சொல்லிக்கொள்ளாமல் போய் விட்டார்கள்! என்னிடம்கூடச் சொல்லவில்லை!'

மாணிக்கம் எழுந்து அந்த அறைக்குள் பார்த்தான். உள்ளே அறையில்—

இரண்டு காலணிகள் விழுந்து கிடந்தன! பெண்களின் காலணிகள் அவை!

'போகும் அவசரத்தில் காலணிகளைக்கூட விட்டுச் சென்றிருக்கிறார்கள்!' என்றான் தேவமணி.

'இந்தப் பக்கத்தில் வேறு வீடு எதுவும் இல்லையா?'

'மலைச்சரிவில் இன்னொரு வீடு இருக்கிறது. அதுவும் எங்களுடையதுதான். ஆனால், அங்கே எவரும் இல்லை! அங்கே போய் இருப்பார்களோ என்று போய்ப் பார்த்தேன். அங்கேயும் அவர்களைக் காணோம்!' என்றான் தேவமணி!

மாணிக்கம் ஒன்றும் புரியாமல் விழித்தான்'

(தொடரும்)




# போனசு ஆண்டு

# 1959

## இன்றே 'இலாபத்துடன் கூடிய' பாலிசியினைப் பெறுவீர்

## விரைவில் இரண்டாம் மதிப்பீடு

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷனின் இரண்டாவது மதிப்பீடு 31 டிசம்பர் 1959ல் செய்யப்படும். மதிப்பீட்டு நாளில் உள்ள 'இலாபத்துடன் கூடிய' நடைமுறையில் இயங்கும், தகுதியான பாலிசிகள் அனைத்தும், அந்த மதிப்பீட்டின் விளைவாக வெளியாகின்ற இலாபத்தில் பங்குபெற உரிமை உள்ளவை ஆகும்.

31 டிசம்பர் 1957 அன்று வரை செய்யப்பட்ட கார்ப்பொரேஷனின் முதல் மதிப்பீடு காட்டிய மிகுதித்தொகை, கீழ்க்காணும் விதப்படி கார்ப்பொரேஷன் வழங்கிய 'இலாபத்துடன் கூடிய' பாலிசிகளுக்கு போனசாக உதவப் போதுமானதாக இருந்தது.

என்டௌமென்ட் காப்புறுதிகள் (Endowment Assurances) : காப்புத்தொகை (Sum Assured) ஆயிரத்திற்கு ஆண்டுக்கு ரூ. 14

முழு ஆயுள் காப்புறுதிகள் (Whole Life Assurances) : காப்புத்தொகை ஆயிரத்திற்கு ஆண்டுக்கு ரூ. 17½

*முக்கியமானது :* 31 டிசம்பர் 1959 க்குள், குறைந்த தொகைக்குக் 'கட்டி முடிப்பு'ச் செய்த பாலிசிகள் (Paid-up Policies) அல்லது காலாவதி யான பாலிசிகள் போனசு பெறத்தகுதி உடையனவாகா.

பாலிசியைப் பாதுகாப்பாக வைத்துப் பேணுங்கள். அப்போதைக்கு அப்போது செலுத்தவேண்டிய பிரீமியங்களைத் தப்பாது ஒழுங்காகச் செலுத்துங்கள். இரண்டாவது மதிப்பீட்டின் விளைவாகக் கிடைக்க இருக்கும் போனசுக்கு உங்கள் பாலிசியைத் தகுதியுள்ளதாக்க உறுதிகொண்டு வழிகாணுங்கள்.

*நினைவிலிறுத்துங்கள் 1959 போனசு ஆண்டு!*

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

# விந்தைக் கிழவி

பூவார் கணேசன்



எங்கள் ஊரான தலைஞாயிறிலிருந்து, மன்னார்குடிக்கு கிளம்பும் அந்த காலை 8-மணி பஸ். இரண்டு முறை வழக்கம்போல் தன் குரலை உயர்த்திக் கூவி அழைத்துவிட்டுக் கிளம்புவதற்கும், என் மனைவி சுமதி தோளில் குழந்தை முரளியைச் சாய்த்து அணைத்தபடி வந்து அதில் ஏறி அமர்வதற்கும் சரியாக இருந்தது.

டிக்கட்டுகள் முன்னதாகவே நான் வாங்கிவிட்டதால் இடத்தைப்பற்றிய பிரச்னைக்கே இடமில்லை.

நல்லவேளை...! இவ்வளவு சீக்கிரம் கிளம்பினோமே...! முரளிக்கு இரண்டு நாட்களாக ஜுரம் அனலாக அடிக்கிறது. வீட்டில் ஒரே வைத்திய வாடைதான்...! இன்று காலை 7½ மணிக்குத்தான் முடிவு செய்தோம், மன்னார்குடி நாட்டு வைத்தியரிடமாவது சென்று காண்பித்து வருவோமென்று. அதற்குப் பின் மளமளவென்று குளித்துவிட்டு, 'பால சாஸ்தா விலாஸி'லிருந்து வாங்கிவந்த இட்லி எனப்படும், புரதமும், மாவுப் பொருளும் பச்சையாகக் காணப்பட்ட உணவுப் பொருளை விழுங்கிவிட்டு, அவசர அவசரமாக பஸ்ஸுக்குக் கிளம்பினோம்.

புதிதாகப் போடப்பட்ட கரிய நெடுஞ்சாலையில், பிரிஞ்சுமூலை 'கறுங்கை'த் தாண்டி, ஆலமரத்தடி முடுக்கில் தவழ்ந்து சென்று கொண்டிருந்தது, நாங்கள் செல்லும் பஸ்.

காடன்தேத்தி அய்யனார் கோயில் உண்டியல்தான் அடுத்த 'ஸ்டாப்'.


தினசரி அவ்வழியே போய், வரும் பஸ்கள் அங்கு சற்று நிற்காமல் செல்லவில்லை. அய்யனாரின் மீது பஸ் கம்பெனியாருக்கு ஏற்பட்ட கருணைபோலும்! நின்றவுடன் நன்கு மழிக்கப்பட்ட பளபளக்கும் தலையுடனும் (தினசரி 'முடி'யோ, என்னவோ) பஞ்சமில்லாமல் அள்ளிப் பூசிய திருநீற்றால் மறைக்கப்பட்ட நெற்றியுடனும், சிறுவன் ஒருவன் ஒரு கையில் உண்டியற் செம்புடனும், மறு கையில் விபூதியுள்ள தகர டப்பாவுடனும் பஸ்ஸில் ஏறிவரும் காட்சி, கண்கொள்ளாதது! அவனுக்கு 'இடது கையிலிருக்கும் உண்டியற் செம்பைக் குலுக்குகின்றோமா? வலது கையிலிருக்கும் விபூதி டப்பாவைத்தான் குலுக்கி, சிலருடைய கண்களில் அந்த அய்யனார் திருநீற்றைப் புகுத்துகின்றோமா?' என்பதைப் பிரித்தறிய மாட்டாத இளம் பிராயம்...!

'உண்டியலடி'யில் பஸ் நின்றது.

பிரயாணிகளிற் பலர் சிறிது தூரத்தில் தென்புறம் தோன்றிய அச்சிறு அய்யனார் கோயிலைப் பார்த்து அவசரமாகக் கும்பிட்டனர்.

உண்டியற் செம்பில் 'டிங்... டின்...' என்று நாணயம் விழும் ஒலி... இடை இடையே குலுக்கப்படும் உண்டியல் எழுப்பும் 'ச்சல்...ல...ல்...'என்னும் சதங்கையொலி...

பஸ்ஸிலிருந்த அநேகரின் நெற்றியில் திருநீற்றுக் கீற்று தென்பட்டது. நானும் உண்டியற் செம்பில் இரண்டணாவைப் போட்டுவிட்டு, விபூதியைப் பையன் நீட்டிய டப்பாவினின்று எடுத்துப் பூசிக்கொண்ட


ஆபீஸ்கள், வீடுகள்,
ஹோட்டல்கள், கிளப்புகள்
பள்ளிக்கூடங்களுக்கு
உகந்த
ஸ்டீல் மடக்கு
நாற்காலிகள்

அடிஸன் & கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்

சென்னை — பெங்களூர்

தோடு மட்டுமின்றி, சுமதியிடமும் தந்தேன்.

தான் இட்டுக்கொண்ட பின் முரளியின் நெற்றியிலும் அந்நீற்றைத் தடவினாள் சுமதி.

அதுவரை கண் திறக்காமல் கிழித்த நாராய் கிடந்த அவன் 'வீல்...' என்று அழ ஆரம்பித்தான்.

சுமதியின் மடியினின்று துள்ளி விழுந்து விடுபவனைப் போல், உடலை முறுக்கிக் கொண்டு அவன் அழுததைப் பார்த்து பயந்து விட்டோம் நாங்கள்.

முடிந்தவரை அமர்த்திப் பார்த்தோம். பலனில்லை. எதை யெதையோ 'அதோ...இதோ...' வென வேடிக்கை காட்டிப் பார்த்தாள் சுமதி. முரளியின் அழுகை ஓயவில்லை. பஸ்ஸின் பேரரவத்தோடு, குழந்தையின் அழு குரலும் கலந்தொலித்துக்கொண்டு தானிருந்தது.

பஸ்ஸிலிருந்த பலரும் முகம் சுளிப்பதைக் காணுமலிருக்க வில்லை நான். வேறு எங்கோ பார்த்தவண்ணம் எங்களை வசை மாரிப் பொழிந்து தள்ளிக் கொண்டிருந்தனர் சிலர்.

இரண்டொருவர் நெருப்பாகத் தங்கள் கண் வீச்சை வாரிக் கொட்டினர், எங்கள் மீது.

'ஸார்...! நீங்களாவது வாங்கி சமாதானப்படுத்துங்க, குழந்தையை...' இது கண்டக்டரின் கண்ணியமும், கட்டுப்பாடும் கலந்த ஆலோசனை.

'இல்ல... சார்... உடம்பு சௌகர்யமில்லை... அதுதான்...' என்றிழுத்தவாறே முரளியை சுமதியிடமிருந்து அடைந்தேன், நான். 'ஒடம்பு சௌகர்யமில்லாத கொழந்தையை இது மாதிரி பஸ்ஸிலே எடுத்துக்கிட்டு வந்தா, வீணா அதுக்கும் இந்தக் குலுக்கல் தொந்தரவு, எங்களுக்கும் தொந்தரவு...' என்று கூறிவிட்டு அருகிலிருந்த நண்பரின் தோளில் விரலை அமுக்கினார், ஒரு நாகரீக பாணியிலிருந்த நபர்.

எதையும் பொறுத்துக்கொள்ளும் இதயத்துடன் அப்பேச்சுக்களை எல்லாம் அலட்சியம் செய்துவிட்டு முரளியை ஆசுவாசப்படுத்துவதில் முனைந்தேன், நான்.

பயன்?...விநாடிக்கு விநாடி முரளியின் அழுகையின் ஸ்தாயி உயர்ந்துகொண்டே இருந்தது.

என் மனதில் ஏற்பட்ட கலவரம் எவ்வளவு என்பதைச் சொல்ல முடியவில்லை. 'பஸ்ஸை விட்டே இறங்கிவிடுவோமா?' என்றுகூட எண்ணினேன்.

ஏதும் புரியாமல் திணறிக் கொண்டிருந்த தருணத்தில், 'இங்கே கொண்டாங்க அய்யா, கொளந்தையை...' என்று தன் கைகளை என் பக்கம் நீட்டினாள், சுமதிக்கு அருகில், அதே சீட்டில் அமர்ந்திருந்த கிழவியொருத்தி.

அனுபவத்தால் ஏற்பட்ட அலட்சியத்தை அக்கிழவியை நோக்கில் கண்டேன். மறுமொழியின்றி உடனே முரளியை அக்கிழவியின் கரங்களிடை விட்டேன்.

என்ன மாயமோ...? ஏதோ...? முன்பின் தெரியாத அக்கிழவியின் மடியில் அமர்ந்த முரளியின் அழுகை படிப்படியாகக் குறைந்து மறைந்தது.





திருத்துறைப் பூண்டி சமீபித்துக்கொண்டிருந்தது.

அக்கிழவியின் மடியில் தலையை வைத்து, சுமதியின் மடியில் காலை நீட்டியபடி அயர்ந்து தூங்கிவிட்டான் முரளி.

நன்றிப் பெருக்கோடு, 'எந்த ஊருக்கு அம்மா போறீங்க, நீங்க...?' என்று அக்கிழவியை வினவினேன்.

'பூவனூருக்குங்க... மன்னாருகுடி போயி நீடாமங்கலந்துக் காருலே மாறணும்...' 'ஆமா... கொளந்தைக்கி என்னா ஒடம்பு...' என்று பேச்சைத் திருப்பினாள், கிழவி.

'ரெண்டு நாளா ஜுரம்...' என்று ஆரம்பித்து நிலைமையை விளக்கினாள் சுமதி.

திருத்துறைப்பூண்டி பேருந்து நிலையத்தில் பஸ் நின்றுகொண்டிருந்தது.

ஒரு நாளும் இல்லாத திருநாளாக அன்று யாரோ ஒரு கிழவன், பசேலென்ற வெள்ளரிப் பிஞ்சுகளைக் கூடை தாளாமல் சுமந்துகொண்டு, கூவி விற்றான் அங்கே.

அந்தக் கிழவி அவனை அழைத்து நாலு அணாவிற்கு பிஞ்சுகள் வாங்கிக்கொண்டாள். அவள் காசை எடுப்பதற்காக மடியிலிருந்து சுருக்குப் பையைத் தேடுவதற்குள், நானே காசைக் கொடுத்து அக்கிழவனை போகச் செய்தேன்.

'இருங்க...பையிலே இருந்து எடுத்துத் தாரேன்...' என்றாள் கிழவி.

'வேண்டாம்...சும்மா இருக்கட்டும்...' என்று கூறிய என் சிந்தையில், காசை எடுப்பதற்காகக் கிழவி அசையும்போது, எங்கே முரளி எழுந்து, மீண்டும் ரகளை பண்ணத் துவங்கிவிடுவானோ என்ற எண்ணம்தான் மேலோங்கி நின்றது.

மன்னார்குடியில் வைத்யர் வீட்டின் முன் 'பஸ்' நின்றது. நானும், சுமதியும் முரளியுடன், கிழவியிடம் விடை பெற்றுக்கொண்டு இறங்கினோம்.

உள்ளே பலர் குழந்தையை வைத்தியரிடம் காட்டிக்கொண்டிருந்தனர்.

சற்று கூட்டம் கலைந்தவுடன் உள்ளே செல்லலாம் என்று திண்ணையில் உட்கார்ந்தோம்.

'அந்தக் கிழவிகிட்ட வெள்ளரிப் பிஞ்சு வாங்கிக் கொடுத்ததற்கு 4 அணா காசு வாங்க மறந்துவிட்டேனே...?' என்று ஆதங்கப்பட்டாள், சுமதி.

'போனாப் போகட்டும்...பஸ்ஸுலே இன்னிக்கி நம்ம முரளியின் அழுகையை நிறுத்தினதற்கு 'நாலு அணா என்ன, நாலு ரூபா வேணுமின்னாலும் கொடுக்கலாம்' என்று பதிலளித்த என் பார்வையில் சாலையில் பரக்கப் பரக்க வரும் கிழவியின் தோற்றம் தட்டுப்பட்டது.

சந்தேகமே இல்லை... எங்களுடன் பஸ்ஸில் வந்த அதே கிழவியேதான்.

இரைக்க, இரைக்க ஓடிவந்த அவள், என்னிடம் 'இந்தாங்க மடியிலே கொளந்தை படுத்துக் கிட்டிருந்தபோது, கயண்டுவுளுந்துட்டுப்போல இருக்குது. காரை வுட்டு எறங்கும்போது எம்மடியிலேயிருந்து வுளுந்திச்சு...' என்றபடியே அறுந்த தங்கச் சங்கிலியை நீட்டினாள்.

முரளியின் கழுத்தில் சங்கிலியில்லாததை அப்பொழுதுதான் கவனித்தேன் நான்.

'கொக்கிக் கிட்டே கொஞ்சம் விட்டிருந்தது...' என்று முணுமுணுத்தாள், சுமதி.

அந்தக் கிழவிக்கு எப்படித்தான் நன்றிசெலுத்துவது என்று திணறிக் கொண்டிருந்த நான், சங்கிலியைப் பெற்றுக் கொண்டேன்.

'வெள்ளரிப் பிஞ்சுக்கி காசு வாங்கிக்க மறந்திட்டீங்களே... இந்தாங்க காருவா...' என்று நாலணாவை திண்ணையில் வைத்தாள், அக்கிழவி....

'வேண்டாம்மா... கொளந்தைக்கித்தானே... யாரு காசு குடுத்தா என்ன...' என்று தடுமாறினேன்.

'எம் பேரப்புள்ளைக்கி நான் தாங் வாங்கித் தாரனும்...வைச்சுக்குங்க... நான் வர்ரேன் கொளந்தையை சாக்கிரதையாப் பாத்துக்கங்க... நான் வர்ரேம்மா...' என்று கூறியபடியே திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு, கலியுகத்தின் ஒரு அபூர்வப் பிறவியாக, நாணயத்தின் சுடராக, நம்பிக்கையின் சொரூபமாக, நேர்மையுள்ளங் கொண்ட அக்கிழவி எங்களை விட்டு அகன்றாள்.

பொன் மனம் கொண்ட அவ்விந்தைக் கிழவியின் செயல் என் நெஞ்சகத்தை விட்டு அகலவே இல்லை.

*

காரணம் தெரிந்தது!



"நேத்து பிகார்லே திடீர்னு 'பூமி அதிர்ச்சி' ஏற்பட்டதாம்......காரணம்......"

"பிகார்லேயா! எங்கம்மா அங்கே போயிருக்கிறதாக எங்கப்பா 'லெட்டர்' போட்டிருந்தார் எனக்கு......"

"ஓஹோ......அப்படியா சமாச்சாரம்!......"



# வீரமாநகர வீரமாதர்

எம். எஸ். எஸ்.

பாஞ்சாலங்குறிச்சியின் மறு பெயர் வீரமாநகரம். அதனையடுத்த படுகளம், நள்ளிரவு நேரம். நாய்நரிகளின் ஊளை அரவம். அது கேட்டதுதான் தாமதம், அயல் கிராம மகளிர் ஓடிவந்தனர். எதற்கு? படுகளத்தின் கிடப்போருக்குப் பணிபுரிய! எத்தகைய பணி?

இன்றே பூரிப்பு:-போரும் பயங்கொள்ளும் புகையிருள் வந்த ஒருத்தி தனது காந்தனது உடலத்தைத் தேடினாள். கண்டதும் மடிமீது அமர்த்திக்கொண்டாள். முதுகுப்புறத்தை மெல்லெனத் தடவினாள். அங்கே காயம் ஏதேனும் உண்டோ? என்று பார்த்தாள். புண் எதுவும் தென்படவில்லை. வீர புளகாங்கிதம் எய்தினள்.

மற்றொரு மாது தனது அருமை மைந்தனது சடலத்தை எடுத்தாள். மார்போடு அணைத்துக்கொண்டாள். பட்டுள்ள புண்களைக் கண்டு பெருமகிழ்வு பூத்தாள். 'மகனே! பெற்றெடுத்த அன்றையினும் இன்றே பெரிதும் பூரிக்கிறேன்' என்று கூறி மீண்டும் கட்டியணைத்தனள்.


வீரரின் பான்மை:--வேறொரு மாது தனது சோதரனது சடலத்தை நாடி எடுத்தாள். புண்முறுவலைக்கண்டு உயிருளது என எண்ணினாள். நாசியிலே கை வைத்து நோக்கினாள். உயிரில்லை என்று கண்டு ஏங்கினாள். 'போர்முகத்துக்கு நானும் புறப்படவில்லை என்னும் கோபமோ?' என்று கதறினாள்.

அதுகண்ட ஒருத்தி, 'என் தங்காய்! வீரரின் பண்பு அறியாயோ நீ? செத்த பின்பும் அன்னாரின் முகத்திலே ஓர் ஒளி தோன்றும். அந்த ஒளியின் அடையாளமே புன்னகை. நோய் நொடி கொண்டு சாவோரின் முகத்தில்தான் பிணக்களை காணலாம்' என்று பேசினாள். அவ்வளவிலே, சோதரனது உடல் மீது சாய்ந்தாள் அவள். அவளது உயிரும் போய்விட்டது.

யாது உரைப்பாய்?— மற்றுமொரு மாது தனது தம்பியின் யாக்கையை நோக்கினாள். 'தம்பீ! உனக்குக் கடிமணம் புரியப் பரிசமும் போட்டேன். அந்த அத்தை மகள் கட்டழகி ஆயிற்றே. அரம்பை மகளிரே வனப்பு வாய்ந்தோர் என்று கருதி வீர சுவர்க்கம் போயினையோ? நன்று நன்று' என்று நவின்றாள்.

வேறொரு மாது தனது மைத்துனனது சடலத்தைத் தனது மடிமீது தாங்கிக்கொண்டாள். 'மச்சான்! நம் கறுத்தையாவைத் தூக்கில் போட்ட பின்பு, நமது பகைவரைப் பழிவாங்கி விட்டு, நமது ராஜாவைக் காணச் சென்றனையோ? அவரிடம் யாது உரைப்பாய்? வீரமாநகரைச் சார்ந்த அத்தனை பெயரும் வைரிகளை வதைக்கவே வஞ்சினம் பூண்டுளர் என்றே இயம்புக.

நல்ல தம்பி :— 'உனது தமையனை, எனது காந்தனை இழந்த பின்பு நீயே தஞ்சமென இருந்தேன். என்னைப் பறக்கவிட்டுப் போயினை என்று பேசமாட்டேன். அன்று உனது மூத்தோன் தனது உயிரைப் புகழுக்கு விற்ற நாள். இன்று தம்பியும் நல்லதம்பி, வீரத்




"இது தெரியறதா பாருங்க!"

தம்பி ஆயினன். இதுகொண்டு ஆறுதல் அடைவேன்' என்றனன்.

மாலையிட நின்ற மங்கை வந்து, தனது நாதனது உடம்பினைக் கண்டு, 'அன்ப! இம் மண் உலகிலே என்னை கைபிடிக்கக் கருதாமல், தேவருலகில் கைபிடிக்கவேண்டும் என்று போனாய் போலும். உனது கருத்தினுக்கு இணங்கவே இதோ வந்தேன். அங்கு நாமிருவரும் காந்தன், காந்தையாகத் திகழ்வோம்' என்று கூறிக் கண் மூடினள் அவ்விடத்தே.

**மனம் வெடித்தல்:**-இருபதே வயது நிரம்பிய எழில் மகளொருத்தி, எங்கும் தேடினள் தனது துணைவனது சடலத்தை. பல்லைக் கடித்து உறுமும் நிலையில் அச்சவத்தைக் கண்டதுதான் தாமதம். மனம் வெடித்து மாண்டு வீழ்ந்தனள் அச்சவத்தின்மீது.

அவ்விதம் படுகளம் குறுகிய மாதரில் ஒருத்தி மிகவும் தொண்டு கிழவி. யாதொரு திக்கும் இல்லாதவள். ஆருக்கென அவள் அழுவாள்? பட்டுக் கிடப்போருக்கும் உரிய பணி புரிய அவள் முற்பட்டனள். மாண்டாரில் பலரையும் ஓரிடத்திலே கொண்டு சேர்த்தாள். என் மக்காள் என்று பொருமினள்.

**நீவிர் என் மக்கள்:**—'நமது வீரமா நகரின் மானங் காக்க முனைந்தீர்கள் மொய்ம்புடன் சமர் செய்து முடிந்தீர்கள். அரம்பை மாதர் அவ்வுலகிலே உங்களை விரும்பி வரவேற்பர். அந்தகைய உங்களது உடலங்களை நாய் நரிகள் எட்ட நின்று முகரவும் ஒண்ணுமோ? எனவே அக்கினிக் கடவுளுக்கு உங்களது உடலங்களை அர்ப்பணம் செய்வேன். நான் ஆருமற்ற பாவி அல்லள். நீவிர் அனைவரும் எனது இனிய மக்கள்' என்று ஆனந்தக் கண்ணீர் வடித்தனள்.

பின்னர் அப்பொட்டலிலே கிடந்த சுள்ளிகளை எல்லாம் அத்தொண்டு கிழவி சேகரித்தாள். இலை, தழைகளையும் வாரிவந்தாள். சகிமுகிக் கல் கொண்டு தீ மூட்டினள். அந்நெருப்பிலே ஒவ்வோர் உடலமாக எடுத்துப் போட்டாள். ஆனால், கடவுள் அந்நீன உடலங்களையும் உவப்புடன் ஏற்றுக் கொண்டனன். தீயோ கொழுந்துவிட்டு எரியத் தலைப்பட்டது.

**ஈமச்சடங்கா?**—'அக்கினி தேவா! உனது கருணையே கருணை? மேலுலகம் போவோருக்கு வழிகாட்ட விரும்பினாய்போலும்; ஆதலினால்தான் அந்தர வழியிலே பிரகாசம் வீசுகின்றாய். நன்று நன்று உனது சேவை. நானிலம் உன்னைப் போற்றும்' என்று அக்கிழத் தேவி கை கூப்பிக் கூறி நின்றனள்.

தொலைவிலே அயர்ந்து கிடந்த பகைவர் அத்தீக்கொழுந்தின் வேகம் கண்டனர். உடனே வெடுக்கென எழுந்தனர். மாண்டு மடிந்தோருக்கு இங்கே ஈமக்கடன் செய்வோர் யாவர்!' என்று தொகுப்பு மிகுந்தனர். கருங்கச் சோலை நால் அவ்விடம் நோக்கி ஓட்டமும் நடையுமாக விரைந்து வந்தனர். செத்துப்போன பாஞ்சாலங்குறிச்சியாருக்கு ஈமச் சடங்கா?' என்று ஆரவாரித்தனர்.

**கிழவியின் துதி:**-'தள்ளாத கிழவிக்கு இவ்வளவு வீரமா? பக்தியா? பரிவா?' என்று அவ்வீரர் கொதித்தது கொஞ்சமா? நஞ்சமா? கிழவியை நெருங்க நெருங்க அவர்களின் கொதிப்பும் தெழிப்பும் தலைமிஞ்சிவிட்டன உதாரணமாக,



ஒரே வீச்சில் இவளை வெட்டி வீழ்த்த வேண்டும் என்று கொக்கரித்தான் ஒருவன். வாள் வீச்சு எதற்கு? இத்தீயிலே தூக்கி எறிந்தால் போதும் என்றான் வேறொருவன். 'கிழவியின் பரவசத்தைப்பார். கண்ணிறுக மூடிக் கடவுளைத் துதிக்கின்றாள் இவள். நல்ல மரணச் சடங்கு இது' என்றான் இன்னொருவன்.

**வீரரின் பிதற்றல்**:—வீரரின் அட்டகாசங் கேட்டதும், சற்றே கண் திறந்தாள் அக்கிழவி. உடனே கூரிய உடைவாளை உருவினன் ஒருவன்; குத்தீட்டியை எடுத்தான் ஒருவன்; துப்பாக்கியை நீட்டினான் ஒருவன். கல்லை எடுத்தான் ஒருவன். அவ்வளவையும் பார்த்துச் சிரித்தனள் அத்தொண்டு கிழவி.

'கிழவியா இவள்? என்ன மனவலி இவளுக்கு? நம்மைப் பார்த்து நகைக்கின்றாளே. இவளைச் செந்தூக்காய்த் தூக்கித் தீயில் போடத்தான்வேண்டும்' என்று சீறினன் எட்டயபுரத்துப் படைஞரில் ஒருவன். 'ஆம். அதுவே தகும் என்றான் தொப்பி தரித்த பறங்கியொருவன். அப்போதும் அவள் புன்னகையே புரிந்து நின்றனள்.

**மன வலி:**-வாள் வீச்சு, குத்தீட்டி, துப்பாக்கிக் கட்டை, பருத்தகல் இவை கண்டும் அவளது உடலம் சலிக்கவில்லை. உள்ளம் சலித்தால் அல்லவா உடலம் சலிக்கும்! அப்போது பறங்கி வீரரில் ஒருவன், 'இக்கிழவிக்கு என்ன



மலவலி! பாஞ்சாலங்குறிச்சியான் அல்லவா?' என்று வியந்து பேசினான்.

சாகப் போகும் கிழப் பிண்டத்துக்குச் சிரிப்பு ஒரு கேடா?' என்று பதறினான் எட்டயபுரத்து வீரனில் ஒருவன். 'சாவா! யாருக்கு? எனக்கா? யாரால் சாவு? ஒருநாளுமில்லை. என்மீது நீங்கள் படைவீச முடியாது. படைகள் என் உயிரை வாங்க அவற்றிற்கு வலி ஏது?' என்று வீறு பேசினாள் அத்தேவி.

சிங்காரதமா?-கிழவியின் தோற்றமும் மாற்றமும் கண்டு, அவர்களின் கைகள் வெலவெலத்தன. கைகளிலிருந்த படைக்கலன்களோ கீழே நழுவி வீழ்ந்தன. 'இது பேயா? தெய்வமா? கூரிய ஆயுதங்களைக் கண்டும் அசையாது இருக்கின்றதே' என்று திகைத்தனர், வந்த படைஞரில் பலரும்.

அவ்வேளை ஒருவன், 'வீரர்களே! வீறு பேசிவந்த சூரர்களே! இக்கிழவியின் சிங்கநாதம் கேட்டு, அஞ்சிப் போனீர்களா? இக்கிழப் பிணத்தை இதோ தீயில் வாரி எறிகிறேன் பார்' என்றான் ஓர் எட்டயபுர வீரன்.

சத்தியப் பேச்சு:— 'கிழப்பிணமா? வாரி எறியப் போகிறாயா?' என்று கலகல என்று அக்கிழவி நகைத்தாள். 'எட்டயபுர வீரனே! மட்டித்தனமாகப் பேசாதே. தன்மானம் இன்றி, நாட்டைக் காட்டிக்கொடுத்தீர், பறங்கியருக்குத் துணை புரிகின்றீர். என்ன பலன் கிட்டும்? சிறிது மண் கிடைக்கலாம்.

'சத்தியம் பேசுகின்றேன். பறங்கியர் நெடுநாள் நிலைக்கார் இம்மண்ணிலே. ஆற்காட்டு நவாபும் இன்னாளில் செத்துப் போவான். ஆனாலும் எட்டயபுரத்தார் பாஞ்சாலங்குறிச்சியைக் காட்டிக்கொடுத்த பழி உங்களைவிடாது. தமிழகத்திலுக்குத் துரோகம் புரிந்த பாவமும் உங்களை விட்டகலா' என்றாள் அவள்.

தீயில் வீசல்:— உள்ளதைச் சொன்னால் யாருக்கும் உடம்பு எரியும் அல்லவா? ஒருவன் சினந்துவந்து அவளை வாரித் தூக்க முயன்றான்.

முடியவில்லை. கிழம் பிணமாகிவிட்டது போலும் என்று அவன் திகைத்தனன். 'பிணம் ஆனால் என்ன? பெருந் தீயில் வேகும். வேகாமற் போகாது' என்று தூக்கி வீசினான் தீயிலே. வீசவே, தீயோ படல் படலாகப் பற்றி எரிந்தது.

இந்த 1801-ஆம் ஆண்டு மே மாதம் 24-ந் தேதி நிகழ்ந்ததாகும். கட்டபொம்முவைத் தூக்கில் போட்டபின், பாளையங்கோட்டைச் சிறையில் கிடந்த ஊமைத்துரை தந்திரமாக வெளியேறுகிறான். இரவிலேயே வீரைமாநகரம் சேருகிறான். ஆறே நாளில் புதிய கோட்டை கட்டிப் போருக்கு அழைக்கிறான் ஆங்கிலக் கும்பினியாளர்.


பீரங்கி வெடி:—இடித்துத் தள்ளிய கோட்டை மீண்டும் கிளம்பிவிட்டதே யென ஆங்கிலப் படைகள் முழுப் பலமும் கொண்டுவந்து அக்கோட்டையைத் தாக்குகின்றன. பீரங்கி வெடியினால் அக்கோட்டையிலே சந்து உண்டாகிறது. அதன் வழியே உள்ளே புக ஆங்கில வீரர் முனைகின்றனர்.

அச்சந்தின் முகப்பிலே நின்று கொண்டு ஊமைத்துரை உயரிய சமர் செய்கிறான். குண்டு மழையைத் தாங்க முடியவில்லை. கோட்டைச்சுவர் சூகளுகிறது. அப்போது பின்வாங்குவது போல காட்டி பின் வாங்குகிறான் ஊமைத்துரை. பின்வாங்குகையில்தான் இரவிலே போர் மூளுகிறது.

ஜக்கம்மா தேவி:-அப்போரிலே பலர் செத்து வீழ்கின்றனர். உயரிய வீரன் ஊமைத்துரை உயிர் பிழைத்து, மருது சோதரரின் துணையை நாடுவது வேறு கதை. பின்வாங்கியபோது நிகழ்ந்த போரின் வேற்றுப் படுகளத்தைத்தான் அவ்வீர மாதர் வந்து பார்க்கின்றனர். அக்கிழவியும் வந்தனள் பணி புரிய.

தீயிலே நிகழ்ந்த அத்தொண்டு கிழவியின் பெயர் ஜக்கம்மா தேவி என்பர்.







# ஈடு

"தபஸ்வி"

இரவில் உலகம் இருண்டு கிடந்தாலும் எண்ணற்ற கோடி உயிரணுக்களின் பொருமல் ஓசை இரவின் அமைதியை வருடுவதைப் போன்று சன்னமாக ஒலித்துக் கொண்டிருந்தது. அர்த்தஜாம பூஜை வேளையை அறிவிக்கும் வண்ணம் ஆலயங்களின் மணியோசை அலையாக எழுந்து காற்றினூடே கலந்து மழுங்கிக் கொண்டிருந்தது. இருளரசியின் இந்தச் சர்வாதிகார ஆட்சியை எத்தனை உயிர்கள் விழித்திருந்து வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும்?...ஏனோ அவள் இப்படி நினைத்தாள்.

விரித்திருந்த பாயில் கிடந்த தலையணையை இலேசாகத் தட்டிவிட்டு ஒருக்களித்துப் படுத்துக் கொண்டாள் ஜானகியம்மாள். படுத்த மாத்திரத்திலேயே தூக்கம் வரக்கூடிய வயது இல்லை அவளுக்கு. இன்றைய சூழ்நிலையும் அதற்கு இடம் தரவில்லை.

கல்யாணத்துக்கு வந்திருந்த விருந்தினர்கள் எல்லாம் பதினொரு மணிவரை ஏதேதோ வம்பளந்து கொண்டிருந்துவிட்டு, வராந்தாவிலும், கூடத்திலும், பக்கத்திலுள்ள அறையிலுமாக வெட்டி சாய்த்த வாழை மரங்கள் போன்று உருண்டு கிடந்தனர்.

ஜானகியம்மாளுக்கு இன்னும் தூக்கம் வரவில்லை. அவளுக்குப் பக்கத்திலே போடப்பட்டிருந்த கட்டிலில் அவளது அருமை மகள் வனஜா புதுமணக் கோலத்துடன் நித்திரா தேவியின் இன்ப அணைப்பில் ஐக்கியப் பட்டுக் கிடந்தாள். கூரைத் தலைப்பின் அடிபாகத்தில் பொற்சரடு ஒன்றைச் சுற்றினால் எத்தனை அழகாக இருக்குமோ அதைவிடப் பன்மடங்கு சோபிதமாய் சுற்றி வளைந்து கிடந்தது வனஜாவின் கழுத்திலே புது மஞ்சள் கயிறு! இந்த இன்பக் காட்சியைக் கண்ட ஜானகியம்மாளுக்கு என்றுமே அனுபவித்தறியாத ஒரு இனிமையும், பரவசமும் அவள் இதயத்தைக் கவ்வியது.



விடிந்தால்?...

கண்ணன் வனஜாவின் தளிர்க் கரங்களைப்பற்றி அழைத்துக் கொண்டு போய்விடப் போகிறான். பிறகு தாய்க்கும் மகளுக்கும் இருக்கும் பாசம் தாரை வார்க்கப்பட்டுவிடும். எவ்வளவு பயங்கரமான சட்டம் மனிதர்களை ஆட்கொள்கிறது!...இப்படி நினைத்ததும் ஜானகியம்மாளின் மனத்திற்கு என்னவோ போலிருந்தது. மீண்டும் தனது மகளின் முகத்தை உற்று நோக்கினாள். வனஜா தூங்கிக்கொண்டு தான் இருந்தாள். ஆனால், தூங்கும் பாவனையாக விழித்துக் கொண்டிருப்பதுபோலிருந்த அவள் முகம், 'ஏன் அம்மா, என்றைக்கு இருந்தாலும் ஒரு நாள் தான், ஒருவருக்கு வாழ்க்கைப் பட வேண்டியவள்தானே? அந்த வாழ்க்கையை என் மனம்கவர்ந்த கண்ணனுடன் பகிர்ந்து கொள்வதில் உனக்கும் பூர்ண சம்மதந் தானே? பிறகு ஏன் வருத்தப்படுகிறாய்?' என்று கேட்பதுபோன்ற பிரமை அவளுக்கு ஏற்பட்டது.

அவள் உணர்ந்துகொண்டாள்: ஆம். தோட்டக்காரன் பூஞ்செடிகளைத் தனது உயிர்போல வளர்த்து வருகிறான். செடி வளர்ந்து மலர் பூக்க ஆரம்பித்ததும் சொந்தமானவர்களோ அன்றி, வேறு யாரோ அம்மலரைப் பறித்து உரிமையாக்கிக் கொள்வது இல்லையா? அதனால் அந்தத் தோட்டக்காரன் உள்ளம் நோவதில்லை. பிறகு எனக்கு மட்டும் ஏன் இந்த அர்த்தமற்ற கவலைகள்?...கண்ணனுக்கு வனஜா முறைப் பெண் இல்லைதான். ஆனால், அவன் செய்திருக்கும் மகத்தான உதவிக்கு இந்தக் கைம்மாறு அணுவளவும் ஈடாக முடியாதுதான். இன்று வனஜா உயிரோடிருப்பதற்கே அவனல்லவா காரணம்?

ஜானகியம்மாள் புரண்டு படுத்துக்கொண்டாள். ஆனால், அவள் மனக்குரங்கு பிடிவாதமாக எழுந்து நின்று அவளது சிந்தனைக் கயிற்றைப் பின்னோக்கி இழுத்துக்கொண்டு ஓடிற்று. கண்களை மூடிக்கொண்டாள். அகக் கண்கள் மூடியதும் புறக்கண்கள் மலர்ந்தன.

இளமைப் பருவம் முதல் ஜானகியும், சுபாவும் இணைபிரியாத் தோழிகள். அவர்கள் இருவருக்கும் இடையே மிக நெருங்கிய நட்பு. இருவரையும் எப்பொழுதும் ஒன்றாகவே பார்க்கலாம். உருவத்திலும் உடையிலும் கூட ஒற்றுமை திகழும். அவர்களை முன்பின் கண்டறியாதவர்கள் ஒரு அன்னையினுடைய வயிற்றில் பிறந்த இரட்டைச்



சகோதரிகள் என்றே நினைத்துவிடுவார்கள்.

கால ஓட்டத்தின் விசையிலே எத்தனையோ மாறுதல்கள் ஏற்படுகின்றன அல்லவா? ஜானகியும், சுபாவும் ஆறுவது பாரத்தோடு படிப்பை நிறுத்திவிட்டனர். திருமணம் என்னும் பந்தத்திலே பிணைத்து வைக்க அவர்களது பெற்றோர்கள் வரன் வேட்டையில் இறங்கினார்கள். முயற்சி பலன் கொடுத்தது. அதன் விளைவாக இருவருக்கும் சற்று முன்பின் கல்யாணமான போதிலும் அதிருஷ்டவசமாக அவர்கள் இரண்டு பேருடைய கணவன்மார்களும் ஒரே ஊரிலே உத்தியோகம் வகித்தனர்.

ஏற்கெனவே திட்டமிட்டிருந்தபடி இரண்டு பேரும் அடுத்தடுத்த வீடுகளில் குடிபுகுந்து, அவர்களுடைய உல்லாஸ ரம்மியமான புது மண வாழ்க்கையைத் தொடங்கினர்.

வருடங்கள் குதூகலமாக ஓடின. கண்ணனின் தாயானாள் சுபா. கண்ணைச் சொட்டும் அவன் அழகு வடிவம் எல்லோரையும் களிப்புக்கடலில் ஆழ்த்தியது. சுபாவைவிட ஜானகிதான் சதா, 'குருகுரு'வென்று ஏதேனும் விஷமம் செய்ய அலையும் அவனை அதிகம் தூக்குவதும் கொஞ்சுவதும் வழக்கம்.

வயது ஆக ஆகக் கண்ணனுடைய விளையாட்டுச் செயல்களும் அதிகரித்தன. அவனது பயங்கர விளையாட்டுக்களில், எங்கே நெருப்புப் பெட்டியைக் கண்டாலும் குச்சிகளை ஒவ்வொன்றாகக் கிழித்து அவைகள் எரிவதை உற்சாகத்துடன் வேடிக்கைப் பார்ப்பதும் ஒன்றாகும். அந்த விபரீத விளையாட்டை விளையாடக் கூடாதென்று எவ்வளவோ தடவை நயத்தினாலும் பயத்தினாலும் அவனைக் கண்டித்திருந்தனர். என்னதான் செய்தென்ன? அவன் நெருப்புப் பெட்டியைக் கீழே கண்டுவிட்டால் ஒருவித வெறியோடு அந்த விஷம விளையாட்டை விளையாடாமல் விடுவதில்லை.

கண்ணனுக்கு நான்கு வயது நடக்கும்பொழுது, ஜானகிக்கு ரகு பிறந்தான். நல்ல அழகு. கரிய பெருவிழிகள். கொழு கொழுத்த மேனி. இவைகளோடு அவனைக்கண்ட அவள் தாயுள்ளம் பூரித்துவிட்டது. இப்பொழுதெல்லாம் கண்ணன் அவளுக்குத் தேவையில்லை. அவனைக் கண்டாலே எரிந்து விழுந்தாள். அவனையும் தன் குழந்தையையும் தனித்துவிடவே பயந்தாள். இம்மாறுதல்களையெல்லாம் சுபா கவனித்திருந்தாள். 'வாஸ்தவம் தானே! அவளுடைய முழு அன்பையும் அவள் குழந்தை ரகுவே கவர்ந்துவிட்டான்' என்பதை உணர்ந்துகொண்டாள் அவள்.

அன்று அவர்களுடைய சிநேகிதி ஒருத்தியின் குழந்தைக்கு ஆண்டு நிறைவு. விருந்து முடிந்து விட்டது. அவர்கள் வெற்றிலைப் பாக்கைச் சுவைத்துக் கொண்டு வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தனர். ஒரு சிறுமி பரக்கப் பரக்க ஓடிவந்து, 'மாடியிலே ஒரு அறைபற்றி எரிகிறது!' என்று மூச்சு இரைக்கக் கூறினாள். ஜானகி, 'எங்கே, எங்கே?' என்று உடல் பதற, நெஞ்சு தடுமாற எல்லோருக்கும் முன்னால் விரைந்தோடினாள். மாடியில்தானே அவள் குழந்தை ரகு தூங்கிக்கொண்டிருந்தான்? தலைதெறிக்க மாடியை அடைந்த ஜானகி, 'ஐயோ, என் கண்ணே!



ரகு!' என்று கோரமாக அலறினாள். எந்த அறையில் அவள் குழந்தை தூங்கிக்கொண்டிருந்தானே, அதே அறையல்லவா செந்தீயிலே வெந்துகொண்டிருந்தது!

இதற்குள் அங்கே பெருங்கூட்டம் கூடிவிட்டது. 'ஐயோ என் குழந்தையைக் காப்பாற்றுவார் யாருமில்லையா?' என்று அரற்றினாள்.

குற்றுயிராக வெளியே கொண்டுவரப்பட்ட தன் குழந்தையைக் கண்டு வாய்விட்டுக் கதறினாள்; மூர்ச்சையானாள். வைத்திய விடுதிக்கு எடுத்துச் செல்லப்பட்ட ரகு சிறிது நேரத்துக்கெல்லாம் உலகை மறந்துவிட்டான்!

தீப்பற்றியதன் காரணத்தை எல்லோரும் விசாரிக்கத் தொடங்கினர். அதற்குள் ஒரு சிறுவன் முந்திக்கொண்டு, 'இந்தக் கண்ணன்தான் . மேஜைமீதிருந்த நெருப்புப் பெட்டியை எடுத்துக் கிழித்து விளையாடிக்கொண்டிருந்தான்' என்று விளக்கினான். கண்ணனின் விபரீத விளையாட்டின் விளைவுதான் இவ்வளவு அலங்கோலமும் என்பது புலப்பட ஜானகிக்கு நேரம் பிடிக்கவில்லை. அனல் கக்கும் அகன்ற விழிகளை உருட்டி அவள் கண்ணனையும், சுபாவையும் எரித்துவிடுவதைப்போல் நோக்கினாள். அவள் வயிற்றில்—இல்லை, அவளையே பற்றியுள்ள தீயை எவ்விதம் அவிப்பதென்று விளங்காமல் ஜானகியின் சீற்றம் பொங்கும் முகத்தையும் ஏறிட்டுப் பார்க்க அஞ்சி சுபா, கூண்டில் நிற்கும் குற்றவாளியைப்போல் தலைகுனிந்தாள்!

குழந்தை ரகுவையிழந்த புத்திர சோகத்தில் ஆழ்ந்துபோய், ஊண், உறக்கத்தையும் மறந்து இரவு பகலின்றி அழுதழுது மாய்ந்தாள் ஜானகி. அவளைச் சுபா பலவிதங்களிலும் உருக்கமாக வேண்டி தேற்ற முயன்றாள். தன் பிள்ளையின் மன்னிக்கமுடியாத குற்றத்திற்காகத்தான் எத்தகைய பிராயச்சித்தமும் ஏற்கக் கடமைப்பட்டிருப்பதாக மன்றாடினாள். 'சுபா, போதும் உன் பசப்பல்! பிள்ளையாம் பிள்ளை ராக்ஷஸப் பிள்ளை! உன் பிள்ளை வைத்த நெருப்பு என் உயிருள்ளவரை அணையாது. பசுமையாக இருந்த என் வாழ்க்கைச் சோலையை வரண்ட பாலைவனமாக்கி விட்டான்!' என்று வார்த்தைகளைப் பொரிந்து கொட்டினாள் ஜானகி. சுபாவின் நெஞ்சம் வெடித்துவிடும் போலிருந்தது.


கண்ணன் பேரில்கொண்ட விஷ வித்து ஜானகியின் மனத்தில் நன்றாக வேரூன்றி விருட்சமாக வளர்ந்தது. சுபாவிடம் நெருங்கிப் பேசிப் பழகுவதையே நிறுத்திவிட்டாள். கண்ணனையோ விஷம்போல் வெறுத்தாள். நாளடைவில் அந்த வீட்டை விட்டே போய்விட வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு ஏற்பட்டுவிட்டது. அநியாயமாகப் பலியான அவளுடைய ஆசைப் புத்திரனுடைய மறைவினால் உண்டான துக்கத்தினால் மனம் போன விதமெல்லாம் நிலைதடுமாறினாள். இருபது வருஷ இடையறாத நட்பையும் முறித்துக்கொண்டு வெளிக் கிளம்ப முற்பட்டாள். இதைக் கணவனிடம் கூறியபோது அவன், 'ஜானகி, இது என்ன பேதைமை? இன்று பசுமையாக இருக்கும் உன் துயரம் நாளடைவில் கருகிக் காய்ந்துவிடும். கால

வெள்ளம் அதைக் கரைத்துவிடும். இதற்காக இருபது வருஷ நட்பை நீ அறுத்துக்கொண்டு போவது நல்லதல்ல! விவரம் தெரியாத ஒரு குழந்தையின் அறியாச் செய்கைக்கு நீ இவ்வளவு பகைமைப் பாராட்டுவது வருந்தத்தக்கது!' என்று பலவாறு அவளுக்குப் புத்திமதிகள் கூறினான். ஆயினும் அவள் பிடிவாதமே வென்றது.

ஜானகி புதிய வீட்டில் குடிபுகுந்தாள். அதற்குப்பின் விளையாட்டுப்போல் பத்து வருடங்கள் ஓடிவிட்டன. காயம், காலப்போக்கில் ஆறிவிட்டது என்றாலும் அது விட்டுச் சென்ற வடு மட்டும் அழியவில்லை. இதற்கிடையில்தான் அவளுக்கு வனஜா பிறந்தாள்.

இப்பொழுது எல்லாம் ஜானகி சுபாவின் நினைவையே மறந்துவிட்டாள். ஒவ்வொரு சமயம் அவள் மனச்சாட்சி அவளை, 'ஒரு குழந்தையின் அறியாக் குற்றத்தைக்கூட மன்னிக்க முடியாத எத்தகைய வைர நெஞ்சம் படைத்தவளாகிவிட்டாய் நீ!' என்று இடித்துக் கூறும். ஆனால், மறு விநாடி, 'அன்றிருந்த என் நிலையில் எந்தப் பெண்ணும் அப்படித்தான் நடந்துகொள்வாள்' என்று தனது மனதைத் தேற்றிக் கொள்வாள்.

அவளது செல்லப் பெண் வனஜாவுக்கு வயது ஒன்பது நடந்துகொண்டிருந்தது. கான்வெண்டில் படித்துக்கொண்டிருந்தாள். அந்தப் பள்ளியிலே கிறிஸ்துமஸ் விடுமுறைக்கு முன்பு வருடா





வருடம் நாடகம் ஒன்று நிகழ்வது வழக்கம். அழகும் ஆற்றலும் கொண்ட வனஜாவிற்கு அவ்வருட்த்திய நிகழ்ச்சிகளிலே நிறைய பங்கிருந்தது.

விழாத் தினத்திலே வனஜாவின் விருப்பத்திற்கு இணங்க ஜானகியும் சென்றிருந்தாள். பின்னணி சங்கீதம் முழங்க, பன்னிரண்டு வயதிற்குட்பட்ட சிறுமிகள் கருநீல உடையணிந்து, கையிலே எரியும் மெழுகுவர்த்தியுடன் ஆடிய நடனம் கண்களுக்குத் தெவிட்டாத விருந்தாக அமைந்தது. மின்சார விளக்குகளின் வர்ண ஒளியிலே, கண் மூடிக் கண் திறப்பதற்குள் அவர்கள் முடுக்கிவிட்ட பதுமைகள்போல் நடனம் செய்தது சபையோர்களை மெய்சிலிர்க்க வைத்தது. வனஜாவின் நடனம் வந்த சந்தர்ப்பத்திலே பலத்த கரகோஷம் செய்து சபையோர் ஆரவாரித்தனர். மேடைக்கு ஓடிப்போய் வனஜாவை அப்படியே அணுகி ஆசையுடன்



அணைத்து முத்தமிட வேண்டுமென ஜானகியின் மனம் துடிதுடித்தது.

நாட்டியம் முடிந்த பிறகு 'குறவன் குறத்தி' நாடகம் என்று நிகழ்ச்சிக் குறிப்பில் கண்டிருந்தது. நாடகத்தில் ரசமான பகுதி நடந்துகொண்டிருந்தபோது நான்கு புறங்களினின்றும் 'தீ, தீ!' என்று பயங்கர சப்தம் எழுந்தது. குழப்பம் மிகுந்த ஜனக் கும்பல் சிதற ஆரம்பித்தது. அவரவர் குழந்தைகளை அவசரமாகவும், ஆவலுடனும் தேட ஆரம்பித்தனர்.

உடை மாற்றும் அறையிலே, ஒரு சிறுமி மெழுகுவர்த்தியை அணைக்காமல் மறந்துபோய் வைத்துவிட்டாளாம். உபாத்தியாயினிகளும், மாணவிகளும் அடுத்துவரும் நிகழ்ச்சிக்கு ஆயத்தம் செய்துகொண்டிருக்கையிலே அதை ஒருவரும் கவனிக்கவில்லையாம். எங்கு பார்த்தாலும் துணிகளாக நிறைந்திருந்த அவ்வறையில் சட்டெனத் தீ பரவிவிட்டதாம்.

பல சாரணச் சிறுவர்கள் சுறுசுறுப்பாகத் தண்ணீர் கொண்டு வருவதிலும், பீதியடைந்த ஜனங்களின் கும்பலை வெளியேற்றுவதிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். புகை நாற்புறமும் சூழ்ந்திருந்த அந்த அறைக்கு எவ்விதம் போவதெனத் தெரியாமல், செய்வதின்னதெனப் புரியாமல் திகைத்து நின்றாள். தங்கள் குழந்தைகளைக் கண்டுபிடித்த பெற்றோர்கள் 'தட தட'வென வெளியேறினர். ஆனால், அவள் வனஜாவை எங்குமே காணோம். தீப்பற்றியுள்ள அறையிலே அவள் அகப்பட்டுக் கொண்டுவிட்டாள் என நிச்சயமாகத் தெரிந்துகொண்ட ஜானகி, துக்கம் நெஞ்சை அடைக்க, 'ஐயோ, கடவுளே! யாரிட்ட சாபம், என் குழந்தைகள் ஒவ்வொன்றும் இவ்வாறு அக்கினிக்குப் பலியாகின்றன!' என்று வெதும்பினாள். அரை உயிராக வெளியேற்றப்பட்ட குழந்தைகளை ஏற்றிக்கொண்டு 'ஆம்புலன்'ஸுகள் பறந்தன. விஷயமறிந்த வனஜாவின் கணவன் அலுவலகத்திலிருந்து ஓடோடியும் வந்தான். ஜானகியும், அவனும் ஆஸ்பத்திரிக்கு விரைந்தோடினர்.

அந்த வார்டு நிறைய தீக்காயம்பட்ட குழந்தைகள் நிரம்பி இருந்தனர். வனஜாவின் அருகில் பரபரப்புடன் ஓடினாள் ஜானகி. ஒரு நர்ஸ் அவளைத் தடுத்து, 'தயவு செய்து, அக் குழந்தையைத் தொந்தரவு பண்ணாதீர்கள்!' என்றாள்.

'நர்ஸ், குழந்தைக்கு ஒன்றுமில்லையே! பிழைத்துவிடுவாளா?' என்று பீதி நிறைந்த ஆவலுடன் நாக்குழறக் கேட்டாள் அவள்.

'இந்தக் குழந்தைக்கு ஒன்றும் இல்லை. ஆனால், இந்தக் குழந்தையைக் காப்பாற்றிய சாரணச் சிறுவன் ஒருவனுக்குத்தான் மிக அபாயகரமாக இருக்கிறது!' என்றாள்.

மறு நிமிடம் ஜானகியும், அவள் கணவனும் ஸ்மரணையற்றுக் கட்டிலில் கிடந்த சாரணச் சிறுவனின் அருகே வந்தனர். கவலை தோய்ந்த முகத்துடன் நின்ற சுபாவைக் கண்டவுடன் பிரமித்து நின்றுவிட்டாள், ஜானகி. கண்ணனின் தீரச் செய்கைதான் அவள் பெண்ணைக் காப்பாற்றியது என்பதை அறிந்தவுடன் ஜானகியின் இடைக்



திடீரென வரும் விருந்தாளிகளுக்கு...



...இணையற்ற விருந்து

மிட்சலின்
கிஸான் பானங்கள்※

என்றும் வீட்டிலொரு பாட்டில் இருக்கட்டும்.

※பழம், காய்கறி பொருள்கள் தயாரிப்பில், இந்திய சர்க்காரால் நடத்தப்பட்ட இரண்டாவது அகில இந்தியப் போட்டியில் கிஸான் ஸ்க்வாஷ்கள் முதல் மற்றும் இரண்டாவது பரிசுகள் பெற்றன.

கிஸான் ப்ராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், பெங்களூர்.



காலத்து விரோதம் ஒரேகணத்தில் மறைந்துவிட்டது. 'சுபா, இது என்ன?' என்று பதறினாள். பீறிட்டு வரும் துக்கத்தை அடக்கிக்கொண்டு 'ஜானகி, அறிவு தெரியாத பருவத்திலே அவன் செய்த குற்றத்துக்கு இன்று தகுந்த பிராயச்சித்தம் கிடைத்துவிட்டது. பத்து வருஷங்களாக விடை காணாமலிருந்த என் மனப் போராட்டத்துக்கு விதி விடையளித்துவிட்டது! கண்ணன் இறந்தாலும் பாதகம் இல்லை; வனஜா எப்படியாவது பிழைத்துவிட வேண்டும்!' என உள்ளம் வெடிக்கக் கூறினாள்.

ஜானகியின் நயனங்களில் நீர் மல்கிற்று. பல வருடங்களுக்குப் பிறகு, கண்ணனுக்காகவும், சுபாவுக்காகவும் பரிதாபகரமாகக் கதறினாள் ஜானகி. அவள் கண்கள் திறந்தன. பச்சாத்தாபத்தினால் அவள் நெஞ்சு விம்மிற்று. கண்ணனின் உயிருக்காக இடைவிடாது ஜானகி செய்த பிரார்த்தனைகள் இறுதியிலே வீண் போகவில்லை.

கண்ணன் அபாயத்தைக் கடந்து படிப்படியாகக் குணமடைந்தான். வனஜாவும் பிழைத்தெழுந்தாள். அறுந்துபோன இரு குடும்பத்தின் நட்பை ஒன்று சேர்த்து முடிச்சிடவே அந்தச் சம்பவம் நிகழ்ந்ததென அவர்கள் சமாதானம் அடைந்தனர்.

காலம் ஓடியது. வனஜாவும் கண்ணனும் பருவ நிலையின் எல்லைக் கோட்டிலே வந்து நின்ற போது, அவ்விரு உள்ளங்களையும் ஒன்று சேர்க்க விரும்பினர் பெரியோர்கள். வனஜாவும் கண்ணனும் ஏற்கனவே ஒருவர் அழகில் ஒருவர் மனக்கண்ணைப் பறிகொடுத்துவிட்ட நிலையில் ஆட்சேபணைக்கு இடமில்லை. ஆகவே, இனிது முடிந்தது அவர்கள் திருமணம்!...

ஜானகியம்மாள் சிந்தனையின் சோர்வால் தூங்கிப் போய்விட்டாள்.

'அம்மா!'

துடித்துப் பதறி எழுந்திருந்தாள் ஜானகியம்மாள். பொழுது நன்றாகப் புலர்ந்துவிட்டது. வாசலில் இரு காளைகள் பூட்டப்பட்டிருந்த வண்டி பிரயாணத்திற்கெனத் தயாராகக் காத்துக் கொண்டு நின்றிருந்தது!




"என்டா! ஒரு பெரிய மனுஷனை ஒரு காரியமாகப் பார்த்துட்டு வான்னு சொல்லி அனுப்பினால் அந்த இடத்துலே இப்படியாடா நடந்துக்கிறது? ஒரு முட்டாள் மாதிரி நடந்துண்டிருக்கியே? உன் கிட்டே என்னடா சொல்லி அனுப்பினேன்?"

" 'உங்கள் பிரதிநிதி'யாக நடந்துகொள்ளச் சொன்னீங்க......"





# திரும்பிய உயிர்

புஷ்கலா

ஜமீந்தார் கனகசுந்தரத்தின் பங்களாவில் ஏகக் கலவரம்; ஒரே குழப்பம். வேலையாட்கள், முகத்தில் பீதியுடன் இங்கும் அங்கும் ஓடியவண்ணம் இருந்தனர். ஜமீந்தாரிணி பங்கஜாட்சியின் முகமோ அழுதழுது சிவந்து போய், கடைசியாக பிரமை பிடித்தாற்போல் உணர்ச்சியற்ற நிலையில் இருந்தது. சிலையாகி விட்டாளோ ஜமீந்தாரிணி!

ஜமீந்தார் கனகசுந்தரமோ வென்றால், கேட்கவே வேண்டாம் அவரது நிலை. திடீரென உண்டான இந்தப் பெரிய அதிர்ச்சியில் மாரடைப்புடன் மயக்கமுற்றிருந்தார் அவர். டாக்டர், அருகிலேயே இருந்துகொண்டு, ஜமீந்தாரின் மயக்கத்தை தெளிவிக்க பலவித முயற்சியும் செய்துகொண்டிருந்தார்.

அது மாத்திரமா? பங்களாவின் வாயிலில் போலீஸ் இன்ஸ்பெக்டர். நாலாபுறமும் போலீஸ் ஜவான்கள். ஒரே அமர்க்களம் தான் அங்கு.

இவ்வளவிற்கும் காரணம்தான் என்ன? ஜமீந்தாரின் குழந்தை நளினாவைக் காணவில்லை! எட்டு வயதே நிரம்பிய அழகு பிம்பத்தை, இரவு கட்டிலில் சயனித்திருந்த குழந்தையை பொழுது விடிந்து பார்த்தால் காணவில்லை! எத்தனையோ வருடங்

களாக மக்கட்பேறுக்கு ஏங்கியிருந்த ஜமீன்தார் தம்பதிகளுக்கு குழந்தை நளினி புதையலைப் போன்றல்லவோ கிடைத்தவள்! அக்குழந்தையை, கண்ணை இமை காப்பதேபோல் காத்து வந்த குழந்தையைக் காணவில்லை என்றால், அது என்ன, சாதாரண அதிர்ச்சியா?

முதல் நாள்தான் அக்குழந்தையின் நாட்டிய அரங்கேற்றம் நிறைவேறியது. வைரத்தால் கவசம் செய்ததேபோன்று குழந்தையின் தலையிலிருந்து கால்வரை. விதவித வண்ணங்கள் வாரிக் கொட்டும் வைர அணிகள். சரி கையாலேயே நெய்த நாட்டிய உடைகள். தன் சின்னஞ்சிறு கால்களில் தாளம் சிறிதும் பிசகாமல், செந்தாமரையோ என்று வியக்கும்படியுள்ள தன் பிஞ்சுக் கைகளால் அபிநயம் பிடித்து, தனது மாயக்கண்களால் காண்போரின் நெஞ்சத்தைக் கொள்ளை கொள்ளும் விதம் ஒவ்வொரு உணர்ச்சியையும் பிரதிபலிக்கச் செய்து, அலாரிப்பிலிருந்து, பாம்பு நடனம், மற்றும் குற்றாலக் குறவஞ்சி நடனம் வரை சபையைக் கல்லாகச் சமையச்செய்து ஆடிய அந்த ஆட்டத்தை என்னவென்று சொல்வது! ஆட்டம் முடிந்து திரும்பி வரும்பொழுது, ஆடிய களைப்பால் காரிலேயே தூங்கின குழந்தையை, ஜமீந்தார் எழுப்பக்கூடாது என்று இட்ட கட்டளையின்பேரில் அப்படியே கொணர்ந்து பஞ்சணையில் கிடத்தினார்கள். இரவு பனிரண்டு மணிக்கு குழந்தை கண் விழித்தபொழுது பாதம்கீரும், பழங்களும் சாப்பிடச் செய்து தூங்கப் பண்ணினார்கள். நகைகள்கூட கழற்றப்படவில்லை. குழந்தை சயனித்திருக்கும் அழகையே ஜமீந்தார் தம்பதிகள் நெடுநேரம் அருகில் அமர்ந்து பார்த்து மனமகிழ்ந்து பிறகுதான் கண் அயரச் சென்றார்கள்.

அக்குழந்தையை பொழுது விடிந்து பார்த்தால் ரூபாய் ஐம்பதினாயிரம் பெறுமானமுள்ள நகைகளுடன் காணவில்லை!

'காணாமற்போன குழந்தையைக் கண்டுபிடித்து கொடுப்போருக்கு ரூபாய் ஐயாயிரம் இனாம்' என்று பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்தாகிவிட்டது.

அவ்வூரே பரபரப்பில் நெளிந்து கொண்டிருந்தது. போலீஸ் டிபார்ட்மெண்டைப் பற்றியோ கேட்கவும் வேண்டாம். அவர்கள் அதிகாரம்தான் எங்கிலும்!

ஜமீன்தாருக்கு கொஞ்சம் நினைவு வந்த உடனே புலம்ப ஆரம்பித்துவிட்டார். 'நளினி... என் கண்ணே! நீ எங்கேயம்மா சென்றுவிட்டாய்? நீயில்லாமல் எப்படி நான் உயிருடன் இருப்பேன்! உன்னை மீண்டும் காண்பேனா, நளினி...நளினி...'

'ஸார்' இன்ஸ்பெக்டர்தான் ஜமீன்தாரின் அருகில் வந்து அழைத்தார்.

'என்ன இன்ஸ்பெக்டர், ஏதாவது தகவல் கிடைத்ததா?' பரபரப்புடன் எழுந்தார் ஜமீன்தார்.

'இதுவரை ஒன்றும் கிடைக்கவில்லை ஸார். ஒரு விஷயம் தெரியுமா உங்களுக்கு? மூன்று நாட்கள் முன்பு பெரிய சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டானே பக்கிரிசாமி, அவனுக்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ என்று...'

'ஐயையோ! என்ன இன்ஸ்பெக்டர்! அந்த மகாபாவி கையிலா என் குழந்தை சிக்கியிருப்பாள்?



ஐயோ! பாவி கையில் அகப்பட்ட எதுவும் திரும்பியதில்லையே! நான் என்ன செய்வேன்? அவனைப் பிடிக்க வழி ஒன்றுமில்லையா...?'

'ஸார்...மனதைத் தளரவிட வேண்டாம் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். எப்படியாவது குழந்தையை உங்களிடம் சேர்ப்பிப்பது...'

அதற்குள் நடுவில் பேசினார் ஜமீந்தார். 'இன்ஸ்பெக்டர், இப்பொழுதுதான் எனக்கு ஒரு விஷயம் நினைவிற்கு வருகிறது... முந்தாநாள் இரவு மணி எட்டு இருக்கும். நான் வெளியே சென்று திரும்பியவன், காரிலிருந்து இறங்கி உள்ளே செல்லும் சமயம், திடீரென்று ஒரு குரல், 'ஏய் கனகசுந்தரம்! உன் கொட்டம் அடங்கும் நாள் வந்துவிட்டது. பார்த்துக்கொண்டே இரு' என்று இடிமுழக்கம் போன்று முழங்கிற்று. நான் திடுக்கிட்டு திரும்பிப் பார்ப்பதற்குள் ஒரு முக்காடிட்ட உருவம் வேகமாகச் சென்றுவிட்டது. அதைக் கேட்ட அன்று மனதில் கொஞ்சம் திகில் இருந்ததே தவிர பிறகு என் குழந்தையின் நடன அரங்கேற்ற கெடுபிடியில் அது யார் என்ன என்பதை நினைத்துக்கூட பார்க்கவில்லை. ஆனால், இன்று அவன் ஒருவேளை நீங்கள் சொல்லும் பக்கிரிசாமியோ எனச் சந்தேகம் எழுகிறது. அப்படியே இருந்தாலும், அவனுக்கு என்னிடம் என்ன விரோதம் இருக்க முடியும்...ஒன்றும் புரியாமல் மூளை குழம்புகிறதே...' இரு கரங்களிலும் தலையைத் தாங்கியபடி உட்கார்ந்துவிட்டார் ஜமீந்தார் கனகசுந்தரம்.

இவ்வார்த்தைகளை அருகிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த ஜமீந்தாரிணி முகத்தை தலைப்பால் மூடிக்கொண்டு விம்மினாள். இன்ஸ்பெக்டருக்கு அக்காட்சி காண சகியாததாக இருந்தது.

ஜமீந்தார் மேலும் தொடர்ந்தார். அவரது கண்கள் சூன்யத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தது. ஏறக்குறைய ஐம்பது ஆண்டைக்கண்ட அவரது தோற்றம் இந்த ஒரேநாளில் பத்து வருடம் கூடுதலாகக் காட்டிற்று.

'இன்ஸ்பெக்டர் ஸார், வாழ்வில் எனக்கு ஏதாவது குறை இருந்ததென யாராவது நினைத்திருப்பார்களா? ஆனால் எனக்கு இருந்தது மகத்தான குறையொன்று. அது குழந்தையில்லாக் குறைதான். கடைசியாக ஒன்று பிறந்தும் அதையும் சில மாதங்களில் பறிகொடுத்தோம். அந்த துயரத்தைத் தீர்க்க நானும், பங்கஜாவும் ஒவ்வொரு ஆண்டும் ஒரொரு க்ஷேத்திரத்திற்குச் சென்று வந்தோம். அம்மாதிரிதான் ஐந்து வருடங்களுக்கு முன்பு குடந்தை மகாமகத்திற்குச் சென்றிருந்தோம். அங்கு மகாமகக் குளத்தில் நீராடிவிட்டு படியேறி வரும்பொழுது ஒரு குழந்தை அழுதுகொண்டு நிற்கக் கண்டோம். அங்குள்ளவர்களையெல்லாம் விசாரித்தோம். பத்திரிகைகளில்கூட விளம்பரம் கொடுத்தோம். ஆனால், யாரும் குழந்தையை அழைத்துச் செல்ல வரவில்லை. பங்கஜாவும், நானும் அக்குழந்தையை தெய்வமே மன்திரங்கி எங்களுக்கு அளித்த பரிசாக எண்ணி அதன்பேரில் உயிரையே வைத்து வளர்த்தோம். அந்த எங்கள் உயிரான குழந்தை நளினியைப் பறிக்க எந்த யமனோ வந்துவிட்டானே! இந்தப் பிரிவை நான் எப்படித்

தாங்குவேன்? ஜமீந்தாரின் கண்கள் மழையைப் பொழிந்தன.

ஆடம்பரத்தில் எவ்விதக் குறைவுமின்றி ஒருவருக்கும் தலைவணங்காமல் வாழ்ந்து வந்த ஜமீன்தார் மார்பு வெடிக்க விம்மினார்.

'ஸார், உங்கள் குழந்தையை எப்படியாவது உங்களிடம் கொண்டு வந்து சேர்ப்பது என் பொறுப்பு. கவலையை விடுங்கள். நான் வருகிறேன்.' இன்ஸ்பெக்டர் விடை பெற்றுக்கொண்டார்.

ஃ ஃ ஃ

அடர்ந்த பயங்கரமான காடு அது. அதனுள் புகுந்துவிட்டால் இரவா பகலா என்று அறிய முடியாத இருள். இதுவரை யாரும் அம்மாதிரியான ஒரு காடு இருப்பதை அறிந்தே இருக்கமாட்டார்களோ? கரடுமுரடான பாதையில் வளைந்து வளைந்து சென்றால் ஒரு பழைய குடிசை. அதனுள் முணுமுணுக்கென்று எரிந்துகொண்டிருந்த காடை விளக்கின் ஒளியில் பெண் குழந்தை ஒன்று கிழிந்த கோரைப்பாயில் கிடப்பது தெரிந்தது. தாங்கிக்கொண்டிருந்த அக்குழந்தையை கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான் பக்கிரிசாமி. அவன் கண்கள் பயங்கரமாக, பழிவாங்கும் ஓர் ஆவேச பாவத்தை உமிழ்ந்துகொண்டிருந்தன. அவன் விட்ட பெருமூச்சின் பயங்கரக் காற்றில் அவனது மனதின் பழைய நினைவேடுகள் புரண்டுகொண்டே வந்து, கடைசியாக அந்த ஒரு ஏடு மாத்திரம் புரளாமல் நின்றது...

எட்டு வருடங்களுக்குமுன். அவன் பக்கிரிசாமியில்லை. கந்தன், ஜமீந்தாரின் பங்களா தோட்டக்காரன். அதோடு ஜமீந்தாரின் அபிமானத்தற்குப் பாத்திரமானவன். அநேக வருடங்களாக அவரிடம் வேலை பார்த்து வருபவன். சமீபத்தில்தான் வள்ளியை மணந்துகொண்டு வந்தான். புருஷன், மனைவி இருவருமே தோட்ட வேலை செய்து வந்தார்கள். அத்துடன் ஜமீந்தாரின் அறையை சுத்தம் செய்வது, அவருடைய ஸ்நானத்திற்கு ஏற்பாடு செய்வது போன்ற வேலையும் கந்தனைச் சேர்ந்ததுதான்.


அது ஜமீந்தாருக்கு ஆனந்தத்தைக் கொடுத்த காலம். ஆம். ஜமீந்தாரிணி அப்பொழுது கர்ப்பவதியாக இருந்தாள். இருபதாண்டு வாழ்க்கையில் எந்தப் புத்திர பாக்கியம் கிடைக்க ஏங்கினாரோ அது கிடைக்கப் போகிறது அவருக்கு. கந்தனுக்கு இரு மடங்கு சந்தோஷம். எதனாலென்றால், எசமானருக்கு கிடைக்கப்போகும் மகப்பேறுகூட தன் மனைவி வள்ளியும் சூழ்காதிருந்ததில் அவனுக்கு ஆனந்தம்.

அன்று ஜமீந்தாரிணி பங்கஜாக்ஷியின் பிறந்த தினம். எப்பொழுதையும்விட விசேஷமாக, அம்முறை நிறை மாத கர்ப்பிணியான தன் மனைவிக்கு விலையுயர்ந்த வைர மாலை ஒன்று அன்பளிப்பாக வாங்கி வந்திருந்தார் ஜமீந்தார்.

ஸ்நானம் செய்து புத்தாடையுடுத்தி, நெற்றியில் குங்குமம் பளிச்சென்று துலங்க பெருமையுடன் வந்த தம் மனைவிக்கு தன் கரத்தாலேயே மாலையை அணிவிக்க நினைத்தவராய், அதை எடுக்க அலமாரியைத் திறந்தார் ஜமீந்தார். ஆனால், வைர மாலை அங்கில்லாதது கண்டு அவருக்கு தூக்கிவாரிப் போட்டது. ஓரிடம் விடாமல் தேடியாயிற்று. வீட்டில் ஒருவர் விடாமல் விசாரித்தாகிவிட்டது. யாவரும் கையை விரித்து விட்டனர். இச்சம்பவம் ஜமீந்தாருக்கு ஓர் அபசகுனமாகத் தோன்றியது. கடைசியாக தவசுப் பிள்ளை சொன்ன விவரம் திகைப்பை உண்டாக்கிற்று அவருக்கு. கந்தன்தான் அவ்வறையினுள் கடைசியாகச் சென்று திரும்பினான் என்பதுதான் அது.

அவர் கந்தனையும் விடவில்லை. ஆத்திரம் அவரது அறிவை மழுங்கச் செய்தது. கந்தன், தான் அப்பண்டத்தைக் கண்ணாலும் காணவில்லை என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவனையே குற்றவாளியாக்கி போலீசிலும் ஒப்படைத்துவிட்டார்.

நிரபராதியான கந்தன், தண்டனையடைந்து சிறை சென்றவன் இரண்டு மாதங்களில் தப்பி ஓடி வந்துவிட்டான். வள்ளி நிறை மாதமாக, ஆதரவற்ற நிலையில் இருப்பதை எண்ணியே அவன் வந்தான். ஆனால், அவன் வந்து பார்த்த சமயம், பராமரிப்பற்ற அவள், பிரசவித்த பெண் குழந்தை அருகில் கிடக்க கடைசி மூச்சை விட நிமிடத்தை எண்ணிக்கொண்டிருந்தாள். கந்தன், எவ்வளவோ சிரமப்பட்டு கொண்டுவந்து ஊற்றிய ஒரு வாய்ப் பாலை முழுங்கியதும் வள்ளியின் மூச்சு நின்றுவிட்டது.



அச்சமயம், அச்சின்னஞ் சிறு சிசுவை வைத்துக் காப்பாற்ற அவன் ஊர் ஊராகத் திண்டாடியது, சிறையினின்றும் ஓடிவந்ததால் மறைந்து வாழும் நிலைமை இவை யாவும் அவனது உள்ளத்தில் ஓர் அசுர குணத்தை வளர்த்து வந்தது. இருந்தும் குழந்தை வளர்க்கும் முயற்சியில் அக்குணம் அடங்கி இருந்தது.

இவ்வாறு மூன்று வருடங்கள் சென்றன. குழந்தையுடன் அப்பொழுது மகாமகத்திற்கு வந்திருந்தான் கந்தன். திருவிழாவில் குழந்தை கேட்ட மிட்டாயை வாங்கித் தர எண்ணி, அதை கீழே இறக்கியவன், மிட்டாயை வாங்கிவிட்டு குழந்தையைப் பார்த்தால் காணவில்லை. அக்கூட்டத்தில் புகுந்து புகுந்து எவ்வளவோ பாடுபட்டுத் தேடினான். ஆனால், பலனில்லை.

நெஞ்சு வெடித்தது கந்தனுக்கு. வாழ்வில் இருந்த ஒரே அன்புப் பிணைப்பும் போயிற்று. இனி தன் இஷ்டம்போல இருக்க நினைத்தான் அவன்.

அன்றிலிருந்து அவன் கந்தனில்லை. திருடன், கொள்ளைக்காரன் பக்கிரிசாமி. 'அவன் பெயரைக் கேட்ட ஜனங்கள் நடுங்கினார்கள். சிறைக்குச் செல்வதும் தப்பிவிடுவதும் அவனுக்குத் தண்ணீர்பட்ட பாடு.

அன்றும் அப்படி ஓடி வந்தவனுக்குத்தான், சுவரொட்டியின் மூலம் ஜமீந்தார் பெண் நளினாவின் நடன அரங்கேற்ற சமாசாரம் தெரிய வந்தது. அது ஜமீந்தாரிடம் உள்ள குரோதத்தை நன்றாகத் தூண்டிவிட்டது.

'ஓகோ! ஜமீந்தாரின் 'உயிரா'மே அவர் மகள் நளினா! ஊரில் பேசிக்கொள்கிறார்களே! பாவி, கனகசுந்தரம்! உன்னால் வந்த கதிதானே எனக்கு இது? உன் 'உயிரை' உன்னிடமிருந்து பிரிக்கிறேன் பார்.' பல்லைக் கடித்தவண்ணம் உறுமினான் பக்கிரிசாமி. ஜமீந்தாருக்கு விடுத்த எச்சரிக்கையின் காரணமும் இதுதான்.

ஆயிற்று. அவன் நினைத்தபடியே ஜமீந்தாரின் 'உயிரை' கொண்டுவந்தாகிவிட்டது. இனி கழுத்தை நெறித்து அதன் மூச்சை நிறுத்த வேண்டியதுதான்.

அதற்கு முன்பாக இவ்வளவு ஆபரணங்களையும் எடுத்து பத்திரப்படுத்த வேண்டுமே. 'கண்ணால்கூட கண்டிராத ஒரு வைர மாலைக்காக அவன் பட்ட அவமானத்திற்கும் கஷ்டத்திற்கும் பிரதிபலனேபோன்று அலங்கார வைர அணிகளுடன் எதிரில் கிடந்தது குழந்தை.

ஒவ்வொரு அணிகளாக குழந்தை உடலிலிருந்து எடுத்து வந்தவனுக்கு, வளையைக் கழற்றும் சமயம் புறங்கையில் அவன் கண்டது அவனுக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணிற்று. அவன் கையில் உள்ளதைப் போல குழந்தையின் புறங்கையிலும் நக்ஷத்திர வடிவில் பச்சை குத்தியிருந்தது!

மங்கிய நினைவொன்று அவனுள் எழுந்தது. ஏதோ ஓர் ஆவலால் உந்தப்பட்டவனாக பரபரப்புடன் நளினாவின் வலது காலை தன் கரத்தில் எடுத்து உன்னிப்பாகப் பார்த்தான் பக்கிரிசாமி. அவனது கண்கள் அகல விரிந்தன. அவன் கண்டது சுண்டுவிரலையொட்டி மற்றொரு சின்னஞ்சிறு விரல். சந்தேகம் தெளிய இன்னும் ஒன்றே ஒன்றுதான் பாக்கியிருந்தது. ஆவ-



லுடன் குழந்தையின் சட்டையை விலக்கி முதுகுப்புறம் பார்த்தான். குழந்தை முன்பு சுட்டுக்கொண்ட காயத்தின் வடுவும் அங்கு இருந்தது. சந்தேகம் தீர்ந்துவிட்டது. மகாமகத்தில் காணாமற்போன குழந்தையேதான் அது. அவனது உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பி வழிந்தது.

குழந்தை நளினாவை தலையிலிருந்து கால்வரை உற்று நோக்கினான். ஒவ்வொரு அவயவமும் பளபளவென்று தங்கவண்ணமாக மின்னிற்று. அவனும் மூன்று வயதுவரை வளர்த்தானே. அப்பொழுது இப்படியா இருந்தது? அக்குழந்தைக்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம்! இந்தப் பொன் நிறமும், தலை முதல் கால்வரை மின்னும் ஒரு தனி அழகும் எப்படி வந்தது இவளுக்கு? துன்பமே அறியாது அன்பிலே வளர்ந்ததற்கு எடுத்துக்காட்டாக இருந்தது குழந்தை.

நல்ல அதிருஷ்டமுள்ள குழந்தைதான். அதுதான் அவனைவிட்டுப் பிரிந்தது. இல்லாவிடில் ஒரு ஜமீந்தாரின் மாளிகையில் அவர் செல்வ மகளாக ஊரே புகழ வாழ முடியுமா? அன்பும் ஆசையும் பொங்க, நளினாவின் பூபோன்ற, மருதாணியினால் சிவந்த கரங்களை எடுத்து சொரசொரப்பான தனது கன்னங்களில் பதித்துக் கொண்டான் பக்கிரிசாமி. அவன் மனதில் திடீரென ஓர் எண்ணம் எழுந்தது. ஆமாம்... ஜமீந்தாருக்கும் இவ்வயதில் ஓர் குழந்தை இருக்க வேண்டுமே?' ஆனால், அதைப்பற்றி அதிகம் சிந்திக்கவில்லை அவன்.

அன்று ஆடிய ஆட்டத்தில் அயர்ந்து தூங்கின நளினா, பொழுது விடிந்துதான் விழித்துக்கொண்டாள். அவள் கண் திறந்ததும் தன்னையே ஆவலுடன் நோக்கிக்கொண்டிருக்கும் பக்கிரிசாமியின் பயங்கரமான முகத்தையும் அச்சூழ்நிலையையும் பார்த்ததும் பீதியோடு, 'அப்பா அப்பா' என அலற ஆரம்பித்தாள். நளினா அம்மாதிரி அழுவதைப் பார்க்க அவன் மனதை என்னவோ செய்தது. 'நான்தானம்மா உன் அப்பா. உண்மையில் என் குழந்தைதான் நீ' எனச் சொல்ல அவனது நா துடித்தது.

ஆயினும் அறிவு அதைச் செய்ய விடாமல் தடுத்தது. ஒரு ஏழை, திருடன், கொள்ளைக்காரனின் மகளாக நளினாவை நினைக்க அவன் மனம் கூசியது. இப்பொழுது வளருவதுபோல் மேன்மையாக அவனால் வளர்க்க முடியுமா? சிறையிலும் வெளியிலுமாகக் காலத்தைக் கடத்தும் அவன், நளினாவை வைத்துக் கொண்டுதான் என்ன செய்வான்? ஜமீந்தாரின்மீது அவன் அறியாமலேயே அவனுக்கு நன்றி உண்டாயிற்று. பரம வைரியாக நினைத்தவரை மானஸீகமாக வணங்கினான் பக்கிரிசாமி. குழந்தை நளினாவை அவரிடமே கொண்டு சேர்க்க நிச்சயித்துவிட்டான். அதற்குச் சரியான நேரம் இரவுதானே!

நளினாவை எப்படியோ சமாதானம் செய்து அக்காட்டில் கிடைத்த கனிவகைகளைக் கொடுத்து ஒரு வழியாகப் பகல் பொழுதைக் கழித்தான்.

இரவு மணி ஒன்றிருக்கும். எங்கும் அமாவாசை இருள். அந்த இருளோடு இருளாகத் தூங்கும்

குழந்தையைத் தோளில் சுமந்து கொண்டு ஜமீந்தார் பங்களாவை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான் பக்கிரிசாமி. வழியில் அடிக்கடி நின்று நளினியை தடவிக் கொடுப்பதும் முகத்தை உற்றுப்பார்த்துப் பெருமைப்படுவதுமாகச் சென்றான்.

கடைசியாக, அந்த பங்களாவும் வந்தது. பின்புறமாகச் சென்று தோட்டச் சுவரைத் தாண்டிக் குதித்தான். யாராவது தன்னைக் கவனிக்கிறார்களாவென்று நாலாபுறமும் நன்றாகப் பார்த்துக்கொண்டான். போலீஸ் முதலியன தன்னைக் கவனிக்கவில்லையென்று அறிந்துகொண்டதும், முன்பு எவ்விதமாக நளினியை எடுத்து வந்தானோ, அவ்விதமாகவே கம்பியில்லாத திறந்த சன்னல் வழியே சென்று அவளை பஞ்சணையில் கிடத்திவிட்டு வந்தான்.

படுக்கையறையின் மங்கலான நீலநிற விளக்கொளியில் அக்கட்டிலருகில் சிலைபோன்று அமர்ந்திருந்த ஜமீந்தாரிணி மெல்லிய சத்தம் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினாள். கட்டிலின் மேல் ஏதோ கிடப்பதை அறிந்து அருகில் சென்று பார்த்ததுதான் தாமதம், அக்கணமே அவள் வாயினின்றும் ஓர் ஆனந்தக் கூக்குரல் கிளம்பிற்று.

அக்குரலைக் கேட்ட ஜமீந்தாரும் மற்றவர்களும் 'என்ன என்ன!' என்றபடி ஓடி வந்தவர்கள். நளினியை இரு கரங்களாலும் அணைத்தபடி ஆனந்தத்தினால் வாயடைத்து இருந்த பங்கஜாட்சியைக் கண்டனர்.

'என் கண்ணே! நீ வந்துவிட்டாயாம்மா?' என்றபடி மகளின் அருகில் பாய்ந்தார் ஜமீந்தார்.


இக்காட்சியை மறைவிடத்தில் நின்று, தன்னை மறந்த நிலையில் பார்த்துக்கொண்டிருந்த பக்கிரிசாமியின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. ஆனந்த ஊற்றோ அது!

அருகில் ஆணரவம் கேட்டதும் தன்நிலை உணர்ந்து மதிலைத் தாண்ட ஓட ஆரம்பித்தான் அவன். ஆயினும், என்னே அவன் துரதிருஷ்டம்! எதிர்த் திசையினின்றும் வந்துகொண்டிருந்த போலீஸ் சேவகன், அவனைப் பிடித்துவிட்டான். பக்கிரிசாமி நினைத்தால் தப்பியிருக்கலாம். ஆனால், தப்பியோட விரும்பவில்லை அவன். ஒவ்வோர் முறையும் பிடிபடும்பொழுதும் தண்டனையடையும்பொழுதும், அவனது கண்கள் கனலைக் கக்கும், பற்கள் நறநறவெனக் கடிபடும். ஆனால், இம்முறையோ அவன் முகத்தில் புன்னகை அரும்பிற்று. அவன் உள்ளத்தில் அமைதியும் இன்பமும் நிறைந்திருந்தது. ஆம், ஆயுள்முழுதும் சிறையில் இருக்க வேண்டி வந்தாலும் கவலையின்றி மகிழ்ச்சியுடன் இருப்பான் அவன்!

அதேசமயம், குழந்தை நளினி தன் மழலை மொழியில் நடந்ததை நினைவு வந்தவரை கூறிவிட்டு, 'அப்பா! திருடன் ரொம்ப நல்லவன் இல்லையா அப்பா?' என்று ஜமீந்தாரின் கழுத்தைக் கட்டிக்கொண்டாள்.

'ஆமாம் என் கண்ணே! என் உயிரைத் திரும்பவும் எனக்களித்த அவன், உண்மையாகவே ரொம்ப நல்லவனம்மா' என்றார், பக்கிரிசாமியைப்பற்றிய வரலாறு ஒன்றும் அறியாத ஜமீந்தார். நன்றிப் பெருக்கால் அவர் குரல் தழதழத்தது.






சேங்காலிபுரம் அனந்தராமதீக்ஷிதர்

27-வது தசகம்

### 4. மந்தர மலையைப் பாற்கடலில் சேர்ப்பித்தல்

सन्धानं कृतवति दानवैः सुरौघे
मन्थानं नयति मदेन मन्दराद्रिम् ।
भ्रष्टेऽस्मिन्बदरमिवोद्वहन् खगेन्द्रे
सद्यस्त्वं विनिहितवान् पयः पायोधौ ॥

ஸந்தானம் க்ருதவதி தானவை: ஸுரௌகே
மந்தானம் நயதி மதேன மந்தராத்ரிம்
ப்ரஷ்டே(அ)ஸ்மின் பதரமிவோத்வஹன் ககேந்த்ரே
ஸத்யஸ்த்வம் விநிஹிதவான் பய: பயோதௌ

பதவுரை:- ஸுரௌகே-தேவர்களின் கூட்டம், தானவை-அஸுரர்களுடன், ஸந்தானம்-ஒற்றுமையை, க்ருதவதி-செய்துகொண்டு, மதேன-கர்வத்தோடு, மந்தானம்-மத்தான மந்தராத்ரிம்-மந்தரமலையை, நயதி-கொண்டு வரும் போது, அஸ்மின்-இந்தமலை, ப்ரஷ்டே-நழுவ, தம்-அம்மலையை, த்வம்-தாங்கள், ககேந்த்ரே-பக்ஷிராஜனை கருடன்மேல், பதரமிவ-இலந்தையைப் போல, உத்வஹன்-ஏற்றி வைத்துக் கொண்டு, பய: பயோதௌ-பாற்கடலில், ஸத்ய.-உடனே, விநிஹிதவான்-வைத்தீர்கள்.

கருத்துரை:—ஏ குருவாயூரப்பா! தேவர்களின் கூட்டம் அஸுரர்களுடன் ஸ்நேஹம் செய்துகொண்டது. பிறகு கர்வத்துடன் மத்தான மந்தரமலையை கொண்டுவந்தது. எடுத்து வரும் பொழுது இந்த மலை கீழே நழுவவே அதை கருடன்மேல் இலந்தையைப் போல தாங்கள் அநாயாஸமாக தூக்கி வைத்துக்கொண்டு பாற்கடலில் வைத்தீர்களாமே என நம்பூதிரி கேட்க ஸ்ரீ குருவாயூரப்பனும் ஆம் என்று சொல்லி தலையை அசைத்து அங்கீகாரம் செய்தாராம்.

விளக்கவுரை.— ஸ்ரீ பகவானுடைய கட்டளைப்படி தேவர்கள் அஸுரர்களுடன் ஸந்தி செய்துகொண்டனர். ஸ்ரீ பகவான் அவர்கட்கு மந்தர பர்வதத்தை மத்தாக செய்துகொள்ளும்படியும் கட்டளையிட்டார். அதற்காக தேவர்களும், அஸுரர்களும் சேர்ந்து மந்தர மலையைத் தூக்கிவந்தனர். அவர்கள் 'பெரும் மலையைத் தூக்கி வருகிறோம்' என்று கர்வம் கொண்டனர். அப்பொழுது அவர்கள் கையிலிருந்து அம்மலை கீழே நழுவியது. ஸ்ரீபகவான்

உடனே தனது கையால் அம்மலையை கருடன்மேது எடுத்து வைத்து கடலில் கொண்டு சேர்த்தார். ஸ்ரீபகவான் தன்னைப் பஜிக்கும் பக்தர்களாயினும் கர்வத்தை அடைந்தால் அதைப் போக்க சிறிது துன்பத்தைக் கொடுப்பார். அதனாலேயே அம்மலை கீழே நழுவியது. இங்கு நம்பூதிரி

मदेन मन्दराद्रि

(மதேன மந்தராத்ரிம்) என்று அவர்கட்கு இருக்கும் கர்வத்தை வெளியிட்டிருக்கிறார். பகவானை உபாஸிப்பவர்களுக்கே கர்வம் கெடுதலைக் கொடுக்கிறதென்றால் தெய்வபலமில்லாதவர்களுக்கு அஹங்காரம் எவ்வளவு கெடுதலைக் கொடுக்கும் என்பதை விவேகிகளான எல்லோரும் உணரவேண்டும். இந்திராதி தேவர்கள் மந்தரமலையைத் தூக்கி வருகையில் பாரம் தாங்காமல் கீழே விட்டுவிட்டதை ஸ்ரீமத் பாகவதத்தில்,

दूर भारोद्वहश्रान्ताः शक्रवैरोचना
दयः ।
अपारयन्तस्तं वोढुं विवशा विजहुः
पथि ॥
8-6-34.

தூரபாரோத்வஹச்ராந்தா:
சக்ர வைரோசனாதய:
அபாரயந்தஸ்தம் வோடும்
விவசா விஜஹு: பதி

என்று கூறப்பட்டிருக்கிறது. இதையே நம்பூதிரி भ्रष्टेऽस्मिन् (ப்ரஷ்டேஸ்மின்) என்ற பதத்தால் தெரியப்படுத்தியிருக்கிறார். மேலும் ஸ்ரீபகவான் மலை கீழே நழுவும்போது, கீழே விழாமல் தடுத்து அதைத் தன்னுடன் கருடன்மேல் அனாயாஸமாக ஏற்றிவைத்துக்கொண்டு தேவர்களும், அஸுரர்களும் புடைசூழ கடலை அடைந்த விபரம் ஸ்ரீமத் பாகவதத்தில் வருமாறு:—

गिरिं चारोप्य गरुडे हस्तेनैकेन
लीलया ।
आरुह्य प्रययावब्धिं सुरासुर
गणैर्वृतः ॥
8-6-38.

கிரிம் சாரோப்ய கருடே
ஹஸ்தே நைகேனலீலயா
ஆருஹ்ய ப்ரயயா வப்திம்
ஸுராஸுர கணைர் வ்ருத:

இந்த ச்லோகத்தால், எவ்வளவு மனுஷ்யபலம் இருந்தபோதிலும் தெய்வபலமில்லாவிட்டால் ப்ரயோஜனமில்லை என்பது வெளியாகிறது. முப்பத்து மூன்று கோடி தேவர்களும், அறுபத்தாறு கோடி அஸுரர்களும் சேர்ந்தும் தூக்க முடியாத மலையை ஸ்ரீ பகவான் அனாயாஸமாகத் தூக்கிக் கடலில் கொண்டு சேர்த்தார். என்பதை बदरमिवोद्वहन् (பதரமிவோத்வஹன்) என்று நம்பூதிரி சொல்லியிருப்பதிலிருந்தே ஸ்ரீபகவானுடைய பலமின்றி நம்மால் ஒன்றும் நடைபெறாது என்பது வெளியாகிறது.

## 5. பாற்கடலைக் கடைதல்

आधाय द्रुतमथ वासुकिं वरत्रां
पाथोधौ विनिहित सर्वबीजजाले ।
प्रारब्धे मथनविधौ सुरासुरैस्तैः
व्याजात्त्वं भुजगमुखेऽकरोः
सुरारीन् ॥

ஆதாய த்ருதமத வாஸுகிம்
வாத்ராம்
பாதோதௌ விநிஹித ஸர்வ
பீஜஜாலே
ப்ராரப்தே மதனவிதௌ
ஸுராஸுரைஸ்தை:
வ்யாஜாத் த்வம் புஜகமுகே
கரோ: ஸுராரீன்



பதவுரை:— அத-பிறகு, த்ருதம்-சீக்ரமாக, வாஸுகிம்-வாஸுகி என்ற சர்ப்பத்தை, வரத்ராம்-கடைவதற்கான கயிறாக, ஆதாய-செய்துகொண்டு, விநிஹித ஸர்வபீஜ ஜாலே-வைக்கப்பட்ட எல்லாவிதமான விதைகளின் ஸமூஹத்தை உடையதான, பாதோதௌ-கடலில், தை:-அந்த ஸுராஸுரை:-தேவாஸுரர்களுடன், மதன விதௌ-கடையும் கார்யமானது, ப்ராரப்தே-ஆரம்பிக்கப்பட்டபொழுது, த்வம்-தாங்கள், வ்யாஜாத்-கபடமாக, ஸுராரீன்-தேவர்களின் சத்ருக்களான அஸுரர்களை, புஜகமுகே-வாஸுகியின் முன் பக்கத்தில், அகரோ:-இருக்கச் செய்தீர்கள்.

கருத்துரை: ஏ குருவாயூரப்பா, தாங்கள் வாஸுகியை கடையும் கயிறாகச் செய்தீர்கள். எல்லாவித ஓஷதிகளின் வித்துக்களும் அடங்கியிருக்கக்கூடிய கடலைத் தேவாஸுரர்கள் கடைய ஆரம்பித்தனர். அப்பொழுது தாங்கள் கபடமாக அஸுரர்களை வாஸுகியின் முகப்பக்கம் இருக்கச் செய்தீர்களாமே என நம்பூதிரி கேட்க, ஸ்ரீ குருவாயூரப்பனும் ஆம் என்று சொல்லி தலையை அசைத்து அங்கீகாரம் செய்தாராம்.

விளக்கவுரை:— ஸ்ரீபகவான் ஸமஸ்தமான செடி, புல், கொடி மற்றுமுள்ள பச்சிலை ஓஷதிகளை பாற் கடலில் போட்டு மந்தரமலையை மத்தாகவும், வாஸுகியைக் கயிறாகவும் செய்து, 'சோம்பலின்றி தேவர்களான நீங்கள் கடையுங்கள். நானும் உதவி புரிகிறேன். இதன் பயனான அம்ருதம் உங்களுக்கே. அஸுரர்களுக்கு ச்ரமம்தான் மிச்சம். ஆகையால் அஸுரர்கள் எதை விரும்பினாலும் நீங்கள் அதற்கு உடன்படுங்கள். எல்லாக் காரியங்களும் பொறுமையினால் ஸித்திப்பதுபோல் பரபரப்பால் ஸித்திக்காது. கடலிலிருந்து உண்டாகும் காலகூட விஷத்தைக் கண்டு பயப்படக்கூடாது. மேலும் அதிலிருந்து உண்டாகும் வஸ்துக்களில் பேராசையோ, கோபமோ, விருப்பமோ கொள்ளக்கூடாது' என்றெல்லாம் உபதேசித்தது விஸ்தாரமாக ஸ்ரீமத் பாகவதத்தில் சொல்லப்பட்டிருப்பது வருமாறு:—

क्षिप्त्वा क्षीरोदधौ सर्वा वीरुत्तृण
लतौषधीः ।
मन्थानं मन्दरं कृत्वा नेत्रं कृत्वा तु
वासुकिम् ॥
8-6-22

सहायेन मया देवा निर्मन्थध्वमत
न्द्रिताः ।
क्लेश भाजो भविष्यन्ति दैत्या यूयं
फलग्रहाः ॥
8-6-23.

यूयं तदनुमोदध्वं यदिच्छन्त्यसुराः
सुराः ।
न संरम्भेण सिध्यन्ति सर्वेऽर्थाः
सान्त्वया यथा ॥
8-6-24.

न भेतव्यं कालकूटाद्विषाज्जलधिसं
भवात् ।
लोभः कार्यो न वो जातु रोषः
कामस्तु वस्तुषु ॥
8-6-25.

க்ஷிப்த்வா க்ஷீரோததௌ ஸர்வா
வீருத்த்ருணலதௌஷதீ:
மந்தானம் மந்தரம் க்ருத்வா
நேத்ரம் க்ருத்வாது வாஸுகிம்
ஸஹாயேன மயா தேவா
நிர்மந்தத்வமதந்த்ரிதா:
க்லேசபாஜோ பவிஷ்யந்தி தைத்யா
யூயம் பலக்ரஹா:
யூயம் ததனுமோதத்வம்
யதிச்சந்த்யஸுரா: ஸுரா:

ந ஸம்ரம்பேண ஸித்யந்தி
ஸர்வே (அ)ர்த்தா: ஸாந்த்வயா யதா

ந பேதவ்யம் காலகூடாத்விஷாஜ்
ஜலதி ஸம்பவாத்

லோப: கார்யோ ந வோஜாது
ரோஷ: காமஸ்து வஸ்துஷு

நம்பூதிரி இவ்வளவு கருத்தையும் திரட்டி

आधाय द्रुतमथ

(ஆதாய த்ருதமத) என்ற ஒரே ச்லோகத்தால் வெளியிட்டிருக்கிறார். இங்கு ஸ்ரீமத் பாகவதத்தில்

वीरुत्तृणलतौषधीः

(வீருத்த்ருணலதௌஷதீ:)

என்றதால் செடி, புல், கொடி, ஓஷதி முதலியவற்றை மட்டும் கடலில் போட்டதாக கூறப்பட்டிருக்கிறது. நாராயணீயத்திலோவெனில்

विनिहित सवे बीज जाले

(வினிஹிதஸர்வ பீஜஜாலே) என்றதால் எல்லாவிதமான விதைகளும் போடப்பட்டதாகத் தெரிகிறது. நம்பூதிரி மஹாபக்தரானதால் அவர் சொன்னபடி செடி கொடிகளுடன் விதைகளும் போடப்பட்டிருக்கலாம்.

இவ்வாறு பச்சிலை முதலியவற்றைப் பாற்கடலில் போட்டு கடைய மந்தர மலையை மத்தாகவும், வாஸுகியைக் கயிறாகவும் செய்து கடைய ஆரம்பிக்கும்பொழுது ஸ்ரீ பகவான் கபடமாய் 'அபரிசுத்தமான வால் பக்கத்தை நாம் பிடிக்கவேண்டாம். தலைப் பக்கத்தைப் பிடிப்போம்' என உரத்திச் சொல்லி வாஸுகியின் தலைப்பக்கத்தில் பிடிக்கத் தேவர்களும் அப்படியே தலைப் பக்கத்தைப் பிடித்தனர். व्याजात

(வ்யாஜாத்) என்ற பதத்திற்கு பொருள் கூறுமிடத்தில் 'பக்தப்ரியா' என்ற நாராயணீய வ்யாக்யானத்திலும்

व्याजादिति, । हरिः सुरैः मार्ध अहिपुच्छममङ्गलं इत्युचः वदन् पूर्व पूर्वकायं जगृहे ।

(வ்யாஜாதிதி, ஹரி: ஸுரை: ஸார்தம் அஹி புச்சமமங்களம் இத்யுச்சை: வதன் பூர்வம் பூர்வகாயம் ஜக்ருஹே)

என்று சொல்லி தலைப்பக்கத்தை ஸ்ரீ பகவான் பிடித்ததாக உள்ளது. ஆகவே அஸுரர்கள் 'மலமூத்ரங்கள் வெளியாகும் வால் பக்கத்தை நாங்கள் பிடிக்கமாட்டோம். நாங்களும் வேதங்களைக் கற்று ஆசாரத்துடனிருப்பவர்கள். பிறப்பாலும் சுத்தமானவர்கள்' எனச் சொல்லி தனித்து உட்கார்ந்து விட்டனர். உடனே ஸ்ரீபகவான் 'நீங்களே தலைப்பக்கத்தைப் பிடியுங்கள்; நாங்கள் வால்பக்கத்தைப் பிடிக்கிறோம்' எனச் சொல்லி தேவர்களுடன் வால்பக்கத்தைப் பிடித்தார். உடனே அஸுரர்கள் விஷத்தைக் கக்கும் தலைப் பக்கத்தைப் பிடித்தனர். இதையே நம்பூதிரி

व्याजात्त्वं भुजगमुखेऽकरोः सुरारीन्।

(வ்யாஜாத்த்வம் புஜகமுகே(அ)கரோ: ஸுராரீன்)

'கபடமாக அஸுரர்களைத் தலைப்பக்கத்தைப் பிடிக்கச் செய்தார்' எனச் சொல்லியிருக்கிறார். இங்கு सुरारीन्

(ஸுராரீன்) 'அஸுரர்களை' என்று சொன்னதால் அவர்கள் 'ஸாதுக்களுக்கு சத்ருக்கள்' அதாவது தீங்கு இழைப்பவர்கள். ஆகையால் தண்டனை கொடுக்கத்தக்கவர்கள் என்பதை வெளிப்படுத்தி அவர்களை தலைப்பக்கத்திலிருக்கச் செய்தார் என்பதும் வெளியாகிறது.

(தொடரும்)





# துணைப் பறவை

எஸ்.விஜயராகவன்

'ஹேமா! எழுந்து போய் முகத்தை அலம்பிக்கொள்; நேற்று வாங்கின 'நைலானை'யும் உடுத்திக்கொண்டு காற்றுட 'நப்பு கார்டன்' வரைக்குமாவது போய் வாயேன்!' என்றாள் கமலா.

'நீ வரலியா அக்கா?'

'நான் எப்படி வர முடியும்? 'அவர் ஆபீசிலிருந்து வந்தால் காபி, டிபன் கொடுக்க வேணுமே! எனக்காக நீயும் ஏன் சாயங்கால நேரத்திலே அடைந்து கிடைக்கணும்?'

'நான் போகவில்லை, அக்கா!' ஹேமா விடாப்பிடியாகச் சிணுங்கினாள்.

'ச்சே...அசடே! வயசுப் பெண் நீ; இப்படியெல்லாம் 'மசமச'ன்னு இருக்கலாமா? கவலையில்லாமல் சந்தோஷமாக இருக்கணும்னு தானே உன்னை இங்கே பம்பாய்க்கு அழைத்து வந்திருக்கேன்? வீண் வேதனையெல்லாம் பட்டு உடம்பைக் கெடுக்காதே! போ...வேணுமானால் கோபுவையும் அழைத்துக்கொள்!'

கமலா உள்ளே சென்றாள். ஹேமாவும் முகம் கழுவிக் கொண்டு புது 'நைலானை' அணிந்து கொண்டாள். ஏற்கனவேயே கண்ணைப் பறிக்கும் அழகு அவள். அந்த அழகுக்கும் எழில் கூட்டியது அவளது ஒல்கிய உடலைத் தழுவி நழுவிய நீலப் புடவை. அதற்கேற்ற அரக்குச் சோளி, அவளது அங்

கங்களின் வாளிப்பை அழகுற வெளிப்படுத்தியது.

பிறகு, தனது அக்காவின் குழந்தை கோபுவுக்கும் உடைகள் உடுத்தினாள். காலில் செருப்பை மாட்டிக்கொண்டு 'சரக்...சரக்'கென்று ஒயிலாக அடிவைத்து 'ப்ளாக்'குக்கு வெளியே வந்தாள் ஹேமா.

பாலச்சந்திரா ரோட்டிலிருந்த இவர்களுடைய 'ஜாவேரி நிவாஸி'லிருந்து 'நப்பு கார்டன்' ஒரு பர்லாங்கு தூரம்தான். கோபுவுடன் ஹேமா அப்பூங்காவை அடைவதற்குள் அங்கே நன்கு நிழல் விழுந்திருந்தது. பசுமையான புல் தரையில் அங்கங்கே எத்தனை உல்லாச ஜோடிகள்!

இவர்களையெல்லாம் ஜாடையாகக் கவனித்துக்கொண்டு சென்ற ஹேமா தனது மதுர இதழ்கள் மலரத் தனக்குள் 'களுக்'கென்று சிரித்துக்கொண்டாள். ஆனால் அந்தச் சிரிப்பு ஒரு வினாடிதான் நிலைத்தது; மறுகணம் எதிரே சிமிட்டிப் பெஞ்சியில் அமர்ந்திருந்த அந்த இளைஞன்மீது அவள் பார்வை விழுந்ததும், அப்படியே இமைகள் சிலிர்ப்ப அடித்த சிலையாகி விட்டாள்!

'அவராக இருக்குமோ? அவர் இங்கே பம்பாய்க்கு எப்படி வந்தார்?'

கேள்விகள் மின்னலாக நினைவை வெட்டுகையில் ஹேமாவின் தலை சுழன்றது. நெஞ்சை அழுக்கிப் பிடித்துக்கொண்டு தனக்குள் முணுமுணுத்தாள் : 'ஆமாம்...அவரேதான்! அதோ அவரும் என்னை உறுத்துப் பார்க்கிறாரே!'

மறுநிமிஷமே, 'ஹா...நீங்களா ...?', என்று கதறிக்கொண்டு ஓடி 'அவர் காலடியில் விழுந்து, முட்டிவரும் தன் ஆனந்தத்தை, அல்லது துக்கத்தை வெளியே கொட்டவேண்டும் போலிருந்தது ஹேமாவுக்கு. ஆனால் அதற்குத் தெம்பில்லை; ஏன், மனசும்கூட இல்லைதான்!

'ச்சே...அவரை ஏன் நான் பார்த்துப் பேசவேண்டும்? சுயநலமும் புரட்டும் கொண்ட ஆண் வர்க்கத்தின் ஏகப்பிரதிநிதி அவர்; அதை நிரூபித்தும் காட்டிய நயவஞ்சகர்! அவருக்கும் எனக்கும் இனிமேல் என்ன தொடர்பு, சொந்தம்?'

வஞ்சிக்கப்பட்ட அவளுடைய பஞ்சு உள்ளத்தில் வைராக்கியம் மிஞ்சுகையில், ஹேமா 'சட்'டென்று திரும்பினாள். கோபுவின் கையைப் பற்றிக்கொண்டு 'விருட்'டென்று வந்த வழியே அரவம் போல் நழுவி ஓடினாள். திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. ஆனால் அவள் நினைவு...?

## 2

அப்போது ஹேமா லால்குடியில் இருந்தாள். அவளது தந்தை உள்ளூர்த் தபாலாபீஸில் போஸ்ட் மாஸ்டர். எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்த ஹேமா வயசு வந்த காரணத்தால் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்த சமயம் அது. ஆனால் படிப்புத்தான் நின்றதே ஒழியப் பருவத்தின் பூரிப்பால் அவளுடைய பேரெழில் மட்டும் இன்னமும் புது மெருகு பெற்றுத்தான் வந்தது. அது அவள் தவறல்ல; அதே மாதிரி ஹேமாவின் அழகுத் தேனில் வண்டென மயங்கி விழுந்த அந்த இளைஞன் வாசுவையும் யார் குறை கூற முடியும்?

உணர்வின் விழிப்பிலே அந்த அன்பு உள்ளங்கள் அருகருகே வந்தன. கண்பார்வையிலே காதல் காவியம் பாடி வளர்ந்த அவர்களது நேசம் நேரில் சந்தித்து அளவளாவும் அளவிற்கு வளர்ந்தது. ஆனால் அந்த இனிய நாட்கள் அப்படியே நீள முடியவில்லையே!

திடீரென்று வாசுவின் தாய் இறந்தாள்; அவன் தந்தையும் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுத் தம் சொந்த ஊரான விழுப்புரத்திற்குக் குடித்தனத்தை மாற்றலானார். வாசுவும் லால்குடியை விட்டுக் கிளம்ப வேண்டியதாயிற்று!

பிரியும் நாள் நெருங்குகையில் இரு உள்ளங்களும் துடித்தன. பெற்ற தாய் இறந்து இரண்டு மாதங்கள் கூட மறையாத நிலையில் வாசு தன் தந்தையிடம் ஹேமாவைப் பற்றிப் பேசத் தயங்கினான்.

'உங்கள் நிலை எனக்குப் புரிகிறது வாசு! ஆனால் மேலே என்னதான் செய்வதாக உத்தேசம்?' என்று கலக்கத்துடன் வினவினாள் ஹேமா.

'ஹேமா! நீ வீணுக்கெல்லாம் கண்கலங்காதே. விழுப்புரத்திற்கும் லால்குடிக்கும் அதிக தூரமா என்ன? அம்மாவின் மறைவால் அப்பா மனம் நொந்து தவிக்கிறார். இச்சமயத்தில் நான் கல்யாணப் பேச்சை எடுக்கலாமா? இரண்டு மாதங்கள் போகட்டும்; அப்பாவிடம் சொல்லி உன் அப்பாவுக்கு எழுதச் சொல்கிறேன். எங்கே, இப்போது என் ஹேமா சிரித்துக் கொண்டே விடை கொடுப்பாளாம்!...' என்று குழைந்தான் வாசு.

கோரியபடியே ஹேமாவின் முகம் மலர்ந்தது. 'போய் வாருங்கள், வாசு! இடையில், இங்கே அப்பா வேறு ஏதாவது வரன் பார்த்துவிட்டால் என்ன செய்வது என்ற பயம்தான் எனக்கு...' என்று இழுத்தாள் அவள்.

'அப்படி ஏதாவது நேர்ந்தால் உடனே எனக்கு எழுது; நான் பறந்தோடி வரமாட்டேனா?' என்று சிரித்தான் வாசு.

'அப்படியானால் நான் பாக்கியசாலிதான்!' என்று 'கிளுக்'கிய ஹேமா வாசுவுக்குப் பிரியா விடை கொடுத்தாள்.

## 3

வாசு விழுப்புரம் சென்று, ஆடிக்கு ஐப்பசி ஆறு மாதங்கள் ஓடி மறைந்தன.

அப்போதுதான் அவள் பயந்தபடியே எல்லாம் நடக்க ஆரம்பித்தன. ஏதோ காரியமாகச் சென்னை சென்ற ஹேமாவின் அப்பா, அங்கே ஜகதீசன் என்ற ஒரு வரனைப் பார்த்து ஜாதகம் வாங்கி வந்தார். பொருத்தங்கள் சரியாக இருந்ததால் 'பெண் பார்க்க' வரும்படி பிள்ளை வீட்டாருக்குக் கடிதமும் பறந்தது!

ஹேமா துடித்தாள். வாசு சொன்னபடி நிலைமையை விவரித்து அவனுக்கு ஒரு ரகசியக் கடிதம் எழுதினாள். சென்னையிலிருந்து அவர்கள் வருமுன் உடனே புறப்பட்டு வரும்படியும் அன்புக் கோரிக்கை விடுத்திருந்தாள் ஹேமா.

ஆனால் என்ன ஏமாற்றம்! நான்கைந்து நாட்களாகியும் யாதொரு தகவலும் இல்லை. தேனைப் பேசிச் சென்ற வாசு அவளை மறந்துவிட்டானா? இறுதிவரை வாசு அவளை ஏமாற்றியே விடுவானா? ஹேமாவின் பெண் உள்ளம் அஞ்சித் துடித்தது.

தொடர்ந்த நாட்கள் அவள் பயத்தையே உறுதி செய்தன.

வாசுவிடமிருந்து எந்தவிதமான தகவலும் இல்லை. அதற்குப் பதில் ஜகதீசன் என்ற பையன் அடுத்த புதன்கிழமையன்று தூத்துக்குடி எக்ஸ்பிரஸில் வருவதாகத் தந்தி வந்துவிட்டது!

ஹேமாவிற்கு எப்படி இதைத் தடுப்பதென்று புரியவில்லை. புதன்கிழமை நெருங்க, நெருங்க அவள் சித்தமே கலங்கிவிடும் போலிருந்தது. இறுதியில் எப்படியோ புதன்கிழமைப் பொழுதும் புலர்ந்தது. ஆனால் அது கொணர்ந்த கோரச் செய்தி!

வரன் வீட்டார் வந்து கொண்டிருந்த தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் அரியலூர் அண்டை தடம் புரண்டுவிட்டது! எண்ணற்ற உயிர்ச் சேதம்! மறுநாள் பத்திரிகைகளில் வந்த உயிர் நீத்தவர்களின் ஜாபிதாவில் ஜகதீசன் என்ற பெயரும் இருந்தது!

அட ஆண்டவனே! ஹேமாவுக்கு இச்சம்பந்தத்தில் விருப்பமில்லைதான்; என்றாலும் இப்படியொரு நாசத்துக்குப் பிறகா அவள் இச்சை நிறைவேற வேண்டும்? அதற்குப் பதில் அவளது ஆசை நிராசையாகியிருந்தாலும் பாதகமில்லையே!

ஹேமா விசும்பினாள், விம்மினாள், வேதனையுற்றாள்.

தொடர்ந்த நாட்களிலும் ஹேமா அநுபவித்த மனவேதனையைச் சொல்லி முடியாது. வாசுவிடமிருந்து பிறகும்கூடத் தகவலே எதுவும் வரவில்லையாதலால், அவன் மீதிருந்த அவள் அன்பும் செத்து, ஏன் ஒருவித வெறுப்பே கூட மூண்டுவிட்டது. இத்துடன் இந்த ஆண் வர்க்கத்தின் மீதே நம்பிக்கையை இழந்துவிட்ட அவள், தனக்குக் கல்யாணமே வேண்டாமென்று அடம் பிடித்தாள். நாளடைவில் அவளுக்கு வாழ்வின் மீது கூட ஆசையில்லை; உற்சாகமோ, மகிழ்ச்சியோ இல்லாமல் நடைப்பிணமாகக் காலம் தள்ளினாள் அப்பேதை!


இச்சமயத்தில் தான் ஹேமாவின் அக்கா கமலம் பம்பாயிலிருந்து வந்தாள். அருமைத் தங்கையின் அவல நிலை அவளது நெஞ்சை உருக்கியது. சிறிது நாட்களாவது தன்னுடன் பம்பாய்க்குக் கூட்டிச் சென்று, அவளைத் தேற்றி அனுப்புவதாக அழைத்துச் சென்றாள்.

ஆனால், இங்கே வந்த இடத்தில் அவள் ஏன் எதேச்சையாக வாசுவைப் 'பார்க்'கிலே காண நேர வேண்டும்? அவன் இங்கே எப்படி வந்தான்? ஹேமாவை ஏமாற்றிய பின் பம்பாய்ப் பெண் ஒருவளை மணந்து கொண்டு இங்கே வந்திருக்கிறானோ அக்கல் நெஞ்சன்? அவனுடன் கூடவே ஒரு சிறுவனும் இருந்தானே? அது அவன் குழந்தையோ என்னவோ?

## 4

வேதனையால் விண்டு போன உள்ளத்துடன் வேகமாக நடந்து 'ஜாவேரி நிவாஸை' அடைந்தாள் ஹேமா. அங்கே நேராகத் தன் அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டாள். இடைமறித்து, 'என்ன'வென்று கேட்ட கமலத்தின் கேள்விக்கு, 'என்னைத் தனியே விடு!' என்ற ஒரே பதில் தான் வெடித்து வந்தது.

அறையினுள் கிடந்த பஞ்சு மெத்தையிலே தன் பூ மேனியைத் துவள விட்டுப் படுத்த ஹேமா கண்ணீர் உகுத்து அழுதுகொண்டிருந்தாள். பட்டுத் தலையணைகூடத் திட்டுத்திட்டாக நனைந்து விட்டது. அப்போது தான் கதவை யாரோ 'படபட' வென்று தட்டினார்கள்.



வெறுப்புடன் உருண்டு எழுந்த ஹேமா கதவைத் 'தடால்' என்று திறந்தாள். எதிரே அவள் அக்கா கமலா; கூடவே வாசுவுடன் 'பார்க்'கில் பார்த்த அதே சிறுவன்!

'ஹேமா! இதோ உனக்கு யாரோ கடிதம் அனுப்பியிருக்கிறார்கள்; இந்தப் பையன்தான் கொண்டு வந்தான்!' என்றாள் கமலா.

'சரி...அவனைப் போகச் சொல்!' என்ற ஹேமா 'வெடுக்' கென்று அக்கடிதத்தைப் பிடுங்கிக்கொண்டாள். தொடர்ந்து தன் அறைக்குள் வந்த ஹேமா மீண்டும் கதவைச் சாத்திக் கொண்டாள். கடிதத்தின் உறையைப் பார்த்ததுமே அது வாசுவின் எழுத்துத்தான் என்று அவளுக்குப் புரிந்தது! ஆனால், அவன் ஏன் இப்போது அவளுக்கு எழுதியிருக்கிறான்? அவளை மேலும் வதைக்க என்ன எழுதியிருக்கிறானோ? குமுறும் நெஞ்சுடன் நடுங்கும் மென்கரத்தால் கடிதத்தைப் பிரித்துப் படித்தாள் ஹேமா:

'அன்பு மிக்க ஹேமா,

இன்று என்னைப் பார்க்கில் கண்டதுமே உன் நியாயமான கோபத்தையும், அதிர்ச்சியையும் புரிந்துகொண்டேன். உன் அன்

புக கடிதத்திற்குப் பதிலே எழுதாதது என் மாபெரும் தவறு இல்லையா?

உண்மையில் உன் கடிதம் கிடைத்ததும் அப்பாவிடம் பேசி அவர் சம்மதமும் பெற்றேன். பிறகு நாங்கள் இருவருமே லால்குடிக்குப் புறப்பட்டோம். ஆனால், எங்களுடைய புனித யாத்திரையை விதி நாசமாக்கிவிட்டது; நாங்கள் ஏறி வந்த தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் அரியலூரண்டை தடம் புரண்டு...!'

இதென்ன விபரீதம்! மேலே படிக்க முடியாமல் நிறுத்திய ஹேமா நெஞ்சம் குமுறினாள். அன்று ஏற்பட்ட ரயில் விபத்து அவளை இரு பக்கங்களிலும் தாக்கிவிட்டதா? அவளைப் பெண் பார்க்க வந்த இளைஞனை வதைத்ததுமின்றி, வாசுவையும் அல்லவா ஆபத்தில் புரட்டியிருக்கிறது! ஹேமா கலக்கத்துடன் மேலே படித்தாள்:

'...விபத்தில் சிக்கிய எங்களுக்கு உடல் முழுவதும் காயம்; நல்ல நினைவு வரப் பத்து நாட்களாயின. ஹேமா, உடல் தேறியதும் எனக்கு உன்னைத்தான் நினைவூட்டினார் அப்பா. ஆனால், நான்தான் மீண்டும் லால்குடி போக வேண்டாமென்று தடுத்து விட்டேன்! ஏன் தெரியுமா? உன்னுடைய எதிர்கால இன்பத்தில் ஒருவிதமான குறையும் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான்! நீ என்னை மறந்துவிட வேண்டுமென்பதற்காகவே உனக்குக் கடிதமே கூட எழுதாமலிருந்து விட்டேன்!

பிறகு நான் பம்பாய்க்கு வந்து, இங்கே என் அண்ணனுடன் தங்கியிருக்கிறேன்; உள்ளூர்க் காலேஜ் ஒன்றில் பேராசிரியர் உத்தியோகம். இன்று நீ கோபத்துடன் சென்றதுமே கூட இருந்த என் அண்ணாவின் பையனை அனுப்பி உன்னைத் தொடர்ந்து விலாசத்தைக் கொணரச் செய்தேன். பிறகு இக்கடிதம் எழுதுகிறேன்.

ஹேமா, இன்று உன்கூட இருந்த சிறுவன் உன் குழந்தையென நினைக்கிறேன். உனக்குச் சர்வமங்களமும் உண்டாகட்டும். என்னைப் பொருத்த வரையில் நான் ஒரு சிறகொடிந்த பறவை; இன்பவானிலே துணையோடு பறக்க முடியாத நொண்டிப் பறவை! ஆம்... ஹேமா, அன்றைய ரயில் விபத்து என் இடக் காலை விழுங்கி விட்டது...!'

கடிதத்தை மேலே படிக்க முடியாத ஹேமா 'ஓ'வென்று அலறினாள்.

'ஐயோ வாசு! தெய்வத்திற்குச் சமமான உங்களுடைய அன்பு உள்ளத்தை நான் எப்படித் தவறாக எண்ணி விட்டேன்? எனக்கு மன்னிப்பு உண்டா? நீங்கள் சிறகொடிந்த பறவையென்று வாடுகிறீர்களே; அதை நான் பொறுப்பேனா? உங்களுக்கு வானத்தை அறியாத இன்பமளிக்கும் துணைப் பறவையாக நானிருக்கமாட்டேனா?' என்று புலம்பியபடி எழுந்தாள் ஹேமா.

மறுகணமே அவளுடைய பூப்பாதங்கள் வாசுவின் வீட்டை நோக்கி விரைந்து கொண்டிருந்தன.



# திருவெம்பாவை

சங்கீதகலாநிதி செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர் ஸ்வரப்படுத்தியது

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே

உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீர்அடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்குஆவோம்

அன்னவரே எம்கணவர் ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்

இன்ன வகையே எமக்கு எங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய். (9)

ராகம்: சௌராஷ்ட்ரம்.] [தாளம்: ஆதி. (1 களை.)
(17 வது மேள ஜன்யம்.)

| | | | |
|---|---|---|---|
| 1 | ; தநிஸா ஸா ஸ்நிதா தா பா | பாம தபா பம | மக பம கரீ ‖ |
| | மு ன்னைப்ப ழம் பொ ருட்கும் | முன் னை ப்ப. | ழம் பொ ரு ளே ‖ |
| | ; ஸரி ஸநிதா ஸா ஸநிரிஸ ரீ | ; கமா பபம | தா தா பா பம ‖ |
| | பி ன்னை ப்பு து மைக்கும் | பே ர்த்துமப். | பெற்றி ய னே ‖ |
| 2 | தரீ ஸா. ஸா ஸ்நிதா நிதபா | பமபதநித பமமா | மகபம கரீ ‖ |
| | மு. ன்னை ப்ப ழம்.பொருட்கும் | மு.ன்னை ப்ப. . | ழம் பொ ரு .ளே ‖ |
| | ; ஸரி ஸநிதா ஸா ஸநிரிஸ ரீ | ; கமா பபம | தா தா நிதபா ‖ |
| | பி ன்னை . ப்பு து மைக்கும் | பேர் த்தும ப் | பெற்றிய னே ‖ |
| | பா மதா தஸ் நிஸா ஸா ஸா | நிதா ரிஸா ஸா | ஸ்நிதா தநிதபா ‖ |
| | உ ன்னைப்பி ரா னா க | ப்பெ ற்றஉன்சீ | ர டி. யோம்... ‖ |
| | தா ரிஸா ஸா ஸ்நிதா தா பா | பாம தபா மா.ப | மகரி கமா பா ‖ |
| | உன்ன டியார் தா. ள்ப ணி | ஆங் க வர்க்கே. பா. | ங்கா. வோம் |
| | ; பா ப பபம மகபம கரீ | ரீ, ஸா, ஸநி | தா தரி ஸா ரீ ‖ |
| | அன்ன வரே. எம்க . ண வர் | ஆ வார் அ | வ ரு. கந் து ‖ |
| | ; ஸ ரீ க மா பா ; பா பம | தா ; தரிஸ்ஸ | ஸ்நிதா தநிதபா ‖ |
| | சொன்னபரி சே தொழும். | பாய்ப ணி | செய் . வோம்... ‖ |
| | ; பபம தத ஸ் நிஸா, ஸா ஸா | தரீ ஸ்ஸா ஸா | ஸ்நிதா தநிதபா ‖ |
| | இன்ன வகை. யே. எ மக் | கெங்கோன் நல் | கு தியேல்.. ‖ |
| | ; தரீ ஸ்ஸா ஸ்நிதா தா பா | பாம தபா பம | மகரீ ‖ |
| | என்னகுறையும் இ லோம். | ஏ லோ ரெம். | பா. . வாய் ‖ |

(முன்னைப் பழம் பொருட்கும்)

X இந்தக் குறி கோமள (சிறிய) நிஷாதத்தைக் குறிக்கும்.



# அன்பும் அறிவும்

பத்மாஸனி தேசிகன்

திரையில் படம் ஓடிக்கொண்டிருந்தது.

என் மனம் என்னவோ படத்தில் லயிக்கவில்லை. கண்கள் மட்டும் படத்தில் சூன்ய திருஷ்டியுடன் பதிய, உள்ளம் எதை எதையோ எண்ணி ஏங்கியது. இடைவேளை. பளீரென்று மின்சார வெளிச்சம் முகத்தில் படவும் தான் திடுக்கிட்டு சுயஉணர்வு பெற்றேன். எத்தனை நாழியாக என் கண்கள் நீரைப் பொழிந்துகொண்டிருந்தனவோ, யாராவது பார்த்துவிடப் போகிறார்களே என்ற அச்சத்துடன் அவசரமாக முகத்தைத் துடைத்துக்கொண்டேன். அருகில் உட்கார்ந்திருந்த என் தோழி சுசீலா, என் தோளைப் பிடித்து உலுக்கியவண்ணம் முன் வரிசையில் உட்கார்ந்திருந்த ஒரு பெண்ணை சுட்டிக் காட்டினாள். அந்தப் பெண் தன் மடியில் அமர்ந்திருக்கும் இரண்டு வயது பாலகனைக் கொஞ்சிக்கொண்டும், இடைஇடையே அருகே அமர்ந்திருந்த பெரியவரிடம் சிரித்துப் பேசிக்கொண்டும் இருந்தாள்.

'சுசீலா என்னை நறுக்கென கிள்ளி', என்னடி முழிக்கிறாய்? இன்னுமா புரியவில்லை? அது யார் தெரியுமா?' என்றாள்.

'தெரியவில்லையடி. நீதான் சொல்லேன்' என்றேன்.

'அதான்டி பாலாமணி வக்கீல் குமாஸ்தா வாஞ்சிநாதரின் பெண். உங்க வீட்டுக்கு நாலு வீடு தள்ளி குடியிருந்தார்களே! நினைவில்லையா?' என்றாள்.

'பாலாமணியைத் தெரியாது என்னடி? ஆனால், அவள்தானா இவள் என்றுதான் சந்தேகமாயிருக்கு!' என்றேன் இழுத்தாற்போல்.



அதே சமயம் அகஸ்மாத்தாக பின்னால் திரும்பிய அப்பெண்ணும் எங்களை கவனித்துவிட்டாள். புரிந்து கொண்டதற்கு அடையாளமாக அவள் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

சுசீலா இன்னும் நன்றாக அழுத்திக் கிள்ளிக்கொண்டே, 'உன் சந்தேகம் தீர்ந்துவிட்டதோனோ? அதோ பார் அவளே நம்மைப் பார்த்து சிரித்துவிட்டு எழுந்து வருகிறாள்' என்று என் காதில் கிசுகிசுத்தாள். நான் அசந்து போய்விட்டேன். என்ன, பாலாவா இவள்? ஏழ்மையிலே பிறந்து வறுமையிலே உழன்ற அந்த பாலாமணியா இவள்! இடையில் சாயம் போன மட்டாகப் புடவையும், கையில் கண்ணாடி வளையலும், கழுத்தில் கருகமணி மாலையுமாக அவள் அம்மாவுடன் எங்கள் வீட்டுக்கு சுற்று வேலை செய்துகொடுக்க வரும் அந்த ஏழை பிம்பமா இந்தப் பெண்! அவள், எனக்கும், சுசீலாவுக்குமிடையே குழந்தையுடன் வந்து அமர்ந்துகொண்டாள். இன்னும் எனக்கு பிரமிப்பு நீங்கவில்லை. மின்சார வெளிச்சத்தில் அவள் அணிந்துகொண்டிருந்த வைர நகைகள் 'பளீர் பளீர்' என்று மின்னலைப்போல் வெட்டி கண்களை கூசச் செய்தன. இடையில் விலையுயர்ந்த பட்டாடை பளபளத்தது. இயற்கையிலேயே அவள் நல்ல அழகி. கண்ணாடி வளையலும், கருகமணி மாலையுமாக அவள் இருக்கும்போதே தேய்த்து விட்ட வெண்கல குத்து விளக்கைப் போல இருப்பாள், கருகருன்னு கரு நாகம்போன்ற அவள் பின்னலழகு ஒன்றே போதுமே! இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம். ஈசன் ஏழ்மையில் அவளைப் பிறப்பித்துவிட்டிருந்தாலும், வேண்டியமட்டும் அழகை அள்ளிக் கொடுத்திருந்தார். இப்போது அழகுடன், அணிகளும் சேரவே அவள் ஒரு தெய்வ மங்கைப்போல காட்சியளித்தாள்.

'என்னடி ஜயம்! பேசமாட்டேன்கிறாயே! அதற்குள் என்னை மறந்துவிட்டாயா என்ன?' என்று மெல்ல சிரித்தவாறு என் தோளில் தன் கரத்தை வைத்துக்கொண்டே கேட்டாள் பாலாமணி.

'உன் தோற்றம் என்னை ஊமையாக்கிவிட்டதடி. சௌக்கியம்தானே? இது உன் குழந்தையா? எத்தனை குழந்தைகள்? அவர் யாரு? உன் தகப்பனாரா? பார்த்து நாளாச்சு. அடையாளமே தெரியவில்லை' என்று கூறினேன்.

பாலா கலகலவென்று நகைத்தாள்.

'அவர் என் கணவர். இவன் என் பேரன்' என்று அவள் சிரிப்புக்கிடையே சொல்லவும் எனக்கு தூக்கி வாரிப் போட்டது.

ஐம்பது வயது மதிக்கத்தக்க அந்தக் கிழவரா பாலாவின் கணவன்! இந்தக் குழந்தை பேரனாமே! உன் தந்தையா என்று அவசரப்பட்டுக் கேட்டுவிட்டோமே! பாவம்! அவள் மனம் என்ன பாடுபடும் என்று பதட்டமடைந்த நான் மன்னிப்புக் கோரும் தொனியில் 'தெரியாமல் கேட்டுவிட்டேன். மன்னித்துவிடு பாலா' என்றேன்.

அவள் முகத்தில் எவ்வித மாறுதலும் காணப்படவில்லை. என் முகத்தில் தான் அசடு வழிந்தது.

'போடி பைத்தியம். நீ என்ன தப்பாய் கேட்டுவிட்டாய்? எல்லாரும் கேட்கும் கேள்விதானே இது! சரி; அது கிடக்கட்டும். உன் விஷயத்தைச் சொல்லு. குழந்தைக் குட்டி ஏதாவது உண்டா? உன் அகத்துக்காரருக்கு என்ன வேலை? நீ எங்கு இருக்கிறாய்?' என்று என் தோளை அணைத்தவண்ணம் கேட்டாள் பாலா.

'குழந்தை குட்டி என்ற பிடுங்கலெல்லாம் இதுவரை கிடையாது. அவர் ஒரு எழுத்தாளர். மாம்பலத்தில் இருக்கிறேன் நான்?' என்று சுருக்கமாக என்னைப்பற்றி தெரிவித்துக் கொண்ட நான், அவளைப்பற்றி அறிய ஆவல் கொண்டேன். அவள் தன் விலாசத்தைச் சொல்லி, 'நாளை என் வீட்டுக்கு வா, சாவகாசமா பேசலாம்' என்றாள். படம் முடிந்ததும், கொட்டகையை விட்டு வெளியே வந்தோம். வெளிப்புறம் நின்றுகொண்டிருந்த ஒரு பெரிய 'ப்யூக்' காரில் டிரைவர் பணிவுடன் கதவைத் திறக்க ஒரு ராணிக்குரிய கம்பீரத்துடன் அவள் ஏறி அமர்ந்தாள். அவள் அருகே அவள்



... and published by N. Rajagopalan at The ...
Victory House, Mount Road, Madras. Editor : C. R. Srinivasan, B. A.

கணவர் அமர, மறுநிமிடம் கார் 'விர்'ரென பறந்து சென்று விட்டது.

சினிமா நட்சத்திரம்போல இன்று ஆடம்பரமாக வாழும் பாலாமணி அடி நாட்களில், நான் கட்டிக் கழித்த ஆடையை புத்தாடையென மதித்த பூரிப்புடன் வாங்கி கட்டிக்கொள்வாள். அவளது தகப்பனார் ஒரு வக்கீல் குமாஸ்தா. அவருடைய குறைந்த வருமானம் அந்த பெரிய குடும்பத்தின் பசியைத் தீர்க்க எப்படி உதவ முடியும்? ஏழெட்டுக் குழந்தைகள் கொண்ட குடும்பமது. பாலாமணிதான் மூத்தவள். அவள் தாய் அப்பளாம் இட்டு விற்றும், பெரிய மனிதர்கள் வீட்டில் சுற்று வேலை செய்தும் கொஞ்சம் பணம் சம்பாதிப்பாள். பாலாமணி தாய்க்கு உதவி செய்தது போக மீதி நேரத்தில் பத்திரிகைகளுக்கு கதை, கட்டுரை எழுதி கொஞ்சம் பணம் சேர்ப்பாள். இவ்விதமெல்லாம் கஷ்டப்பட்டும் வறுமையில் வாடி வதங்கிக் கொண்டுமிருந்த பாலாமணி இன்று ஒரு ராணிபோல விளங்குகிறாள்.

இவ்விதம் சிந்தித்தவண்ணமிருந்த என்னை தோளைப்பற்றி உலுக்கினாள் சுசீலா. என்னடி ஜயம், நின்று கொண்டே தூங்குகிறாயா என்ன?' என்று பரிகாசமாகக் கேட்கவும்தான் இன்னும் தியேட்டரின் வாசலிலேயே நின்றுகொண்டிருக்கிறோம் என்ற உணர்வு வந்தது. பிறகு இருவரும் வீட்டை நோக்கி நடந்தோம். நீண்ட நேர மௌனத்திற்குப் பிறகு சுசீலா மெள்ள ஆரம்பித்தாள்.

'ஜயம், பார்த்தாயா பாலாமணிக்கு அடிக்கும் யோகத்தை! கண்ணுடி வளையல்களுக்குக்கூட விதியற்றுக் கிடந்த கையில் வைர வளைகள்! அவள் கழுத்திலிருக்கும் நெக்லெஸ் ஒன்றே ஐம்பதினாயிரம் பெறுமே! அவள் கட்டிக்கொண்டிருக்கும் புடவையைப்போல ஒன்று வாங்கக்கூட நமக்கு அந்தஸ்து போருதம்மா உம்; அழகுக்கேற்ற அணி. அணிகளுக்கு ஏற்ற அழகு. கொடுத்து வைத்தவள்!' என்று பெருமூச்செறிந்தாள்.

முதலில் பாலாவை செல்வ நிலையில் கண்டதும் என் மனதிலும் இவ்விதம் தான் பொறாமை எழுந்தது. அவள் கிழ கணவரை எண்ணிப் பார்த்தபோது என் பொறாமை விலகி அனுதாப உணர்ச்சி மேலோங்கியது.

'என்ன ஐச்வரியம் இருந்து என்னடி? தாலி பாக்யம்தானேடி எல்லா பாக்யங்களுக்கும் மேலான பாக்யம்! நெற்றிக் குங்குமமே அணிகலத்தில் சிறந்த அணிகலன்! பாவம், கிழவனை மணந்துகொண்டவளுக்கு மனதில் நிம்மதி ஏது? வாழ்க்கையில்தான் என்ன இன்பம் இருக்கப் போகிறது? வைர நெக்லஸ் புரளும் வெண் சங்கு கண்டத்திற்குள்ளிருந்து எழும்பும் பெருமூச்சுக்கள் எத்தனை எத்தனையோ! இத்தனை செல்வமும் வெறுமையா வந்தது? அவளது இளமையை பலி வாங்கிக்கொண்டல்லவா வந்தது' என்று அனுதாபத்துடன் சொன்னேன். சுசீலா அதற்குமேல் வாய் திறக்கவே இல்லை. பாலாமணியைப்பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கும்போது என் வாழ்வை எண்ணிப் பார்க்கலானேன்.

நாம் இளைஞருக்கு வாழ்க்கைப்பட்டு கண்ட சுகம் என்ன? மருந்துக்காவது ஒரு இன்சொல் உண்டா? சதா சர்வ காலமும் எந்த கோட்டையையோ பிடிக்கப் போகிறார்ப்போல யோசனை. யோசனை முடிந்தால் எழுத்து. எழுத்து முடிந்தால் யோசனை! உலகப் பிரசித்தி பெற்ற ஒரு எழுத்தாளரின் மனைவியாக வாழ்வது வெளிக்கு வேண்டுமானால் பெருமையாக இருக்கலாம். அவர்கள் தனக்குத் தானே பேசிக்கொள்வதும், அர்த்தமற்று சிரித்துக்கொள்வதும் நாம் குறுக்கே போய் ஏதாவது பேசிவிட்டால் குடியே முழுகிவிட்டாற்போல கூச்சலிடுவதும்...சட்!...இந்தப் பைத்தியங்களோடு அவல வாழ்வு வாழ்வதைவிட கழுத்தில் சுருக்கு போட்டுக்கொண்டு மாளலாம்! பார்வையை நீர் திரையிட்டது. சுசீலா சட்டென்று என்னைப் பிடித்து நிறுத்தி இருக்காவிட்டால், எதிரே வந்த ஒரு ஆசாமியின்மீது மோதிக்கொண்டிருப்பேன். நல்ல வேளை, அவளால் என் மானம் காப்பாற்றப்பட்டது.



'தூக்கத்தில் நடக்கும் வியாதியாடி உனக்கு?' என்று சுசீலா நையாண்டியாகக் கேட்டாள். தூக்கத்தில் நடக்கும் வியாதியைவிட கொடிய வியாதியான மனோ வியாதி என்னைப் பிடித்து வதைப்பதை அவள் என்ன கண்டாள்!

அன்று இரவு ஒரு நிமிடம்கூட என்னால் கண்ணயர முடியவில்லை. வறுமையில் காய்ந்த பாலாவின் கன்னிப் பருவம், தன் குடும்பத்தில் தாண்டவம் புரியும் பஞ்சப் பேய்க்கு தன் இளமையைக் காவு கொடுத்துவிட்டு ஒரு பணக்காரக் கிழவருடன் தன் வாழ்வைப் பிணைத்துக்கொண்ட அவளது அவல வாழ்வு, பொன்னும் வைரமும் ஒளிரும் அந்த பகட்டான மார்புக்கடியில் வேதனைத் தீயால் வெந்து மடிந்து கொண்டிருக்கும் இதயம், கிட்டத்தட்ட அவள் வாழ்வைப்போலவே பாலைவனமாகிவிட்ட என் வாழ்வு; திரும்பத் திரும்ப இவைகள்தாம் என் மனத் திரையில் நிழலாடிக்கொண்டிருந்தன. ஒருவிதமாகப் பொழுது விடிந்தது. பாலாவை சந்திக்கத் துடித்துக்கொண்டிருந்த நான், அன்று சாயங்காலம் புறப்பட்டேன். பாலா விலாஸ் என்று பொறிக்கப்பட்டிருந்த அந்த பங்களாவின் முகப்பில் சற்று நேரம் நின்று அதன் வனப்பிலே சொக்கினேன். பங்களாவிற்குள் ஒரே ஆட்டையும், சிரிப்பும், கொம்மாளமுமாக இருந்தன. 'நான் தயங்கியவண்ணம் உள்ளே சென்றேன். முன்புற ஹாலில் மெத்தை தைத்திருந்த ஒரு நாற்காலியில் பாலா மிக சொகுசாக சாய்ந்து கொண்டு வீற்றிருந்தாள். மற்றொரு நாற்காலியில் ஒரு இளம் பெண் அமர்ந்து ஸ்வெட்டர் பின்னிக்கொண்டிருந்தாள். ஊஞ்சற் பலகையில் ஒரு இளைஞன் உட்கார்ந்து மெல்ல ஆடிக்கொண்டிருந்தான். மூவரும் தமாஷாகப் பேசி சிரித்துக்கொண்டிருந்தனர். தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தை, இவ்வளவு அமர்க்களத்திலும் விழித்துக்கொள்ளாது நிம்மதியாக தூளியில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன்.

அந்தப் பெண்தான் முதலில் என்னைப் பார்த்தாள். பார்த்ததும், 'சித்தி, யாரோ வந்திருக்காப்பலே இருக்கு'



"இது என்னய்யா டான்ஸ்? ஒரே சத்தம் காதைத் தொளைக்குது?"

"ப்ரோக்ராம்லேயும் 'சப்தம்'ன்னுதான் போட்டிருக்கு!"

என்றாள். அந்த இளைஞன் எழுந்து மாடிக்குப் போய்விட்டான்.

'வா, ஜயம்' என்று என்னை அகமும், முகமும் மலர வரவேற்றாள் பாலாமணி. பிறகு மேஜையருகில் சென்று அதன் மேல் இருந்த 'காலிங் பெல்லை' விரலால் அழுத்தினாள். அடுத்தகணம் ஒரு பரிசாரகன் வணக்கத்துடன் வந்து நின்றான். 'ஒரு கப் டீயும், பலகாரமும் எடுத்து வா' என்று பாலா உத்தரவு இடவும், அவன் உள்ளே திரும்பிச் சென்றான். அந்தப் பெண் எங்கோ வெளியில் செல்ல ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்தாள். 'இந்தப் பெண் யார்?' என்று வினவும் பாவனையாக பாலாவைப் பார்த்தேன்.

'என் நாட்டுப்பெண்' என்று சொல்லிவிட்டு கலகலவென்று சிரித்தாள் பாலா. அந்தப் பெண்ணுக்கு பாலாவின் வயதுதானிருக்கும். பாவம், தன்னொடத்தப் பெண்ணை நாட்டுப் பெண் என்று சொல்லிக்கொள்ள அவள் மனம் என்ன பாடுபடும்! அந்த நாகரீக யுவதி காலில் பாதரட்சைகளை அணி

த்துகொண்டு டம்பப் பை சகிதம் பாலாவினருகே சென்று, 'சித்தி, குழந்தையை விட்டுட்டுப் போகட்டுமா? கூட எடுத்துச் செல்வதென்றால் ரொம்ப தொந்தரவாயிருக்கு?' என்றாள்.

'சரி; அவனை நான் பார்த்துக்கொள்கிறேன். இதைவிட எனக்குத்தான் என்ன வேலை. நீ நிம்மதியா போய் விட்டு வா. ஆனால், சீக்கிரம் வீடு திரும்பி விடுங்கோ. ஏனென்றால் அப்பாவுக்கு உங்களோடு ஒன்றாக சாப்பிடாவிட்டால், சாப்பிட்டத் திருப்தியே இருக்காது' என்றாள் பாலா.

'டக் டக்' என்று பூட்ஸ் ஒலிக்க டென்னிஸ் மட்டையைச் சுழற்றிக்கொண்டே அந்த இளைஞன் மாடிப் படிகளில் இறங்கி வந்தான். இருவரும் ஜோடியாகச் சென்று காரில் அமர்ந்து கொண்டனர். அவள் ஒய்யாரமாக காரில் சாய்ந்துகொள்ள, அவன் சாரத்தியம் செய்யலானான். அவர்கள் சென்றதும் நான் பாலாவின் பக்கம் திரும்பினேன். அவள் புன்சிரிப்புடன் என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் முகத்தில் யாதொரு சலனமும் தென்படவில்லை. ஆனால், என் உள்ளம் அவளுக்காகப் பரிதவித்தது. தன் வயது பெண்ணொருவள் தன் கண்ணெதிரில் இளம் வயது கணவனுடன் உல்லாசமாக வாழ்வதை பாவம் எப்படி சகிப்பாள்? அதுமட்டுமா? அவர்களது குழந்தையை வேறு இவள் கவனித்துக் கொள்ள வேண்டும் அவர்கள் ஜோடியாக ஊர் சுற்றுவதற்கு. சீ, இதைவிட வேறு நரகம் ஒன்று உண்டா என்ன? நகையும், நட்டும், காரும், பங்களாவும், ஆளும், அம்பும் இருந்துவிட்டால் போதுமா? பணத்தால் கிடைக்கும் இந்தப் பெருமைகளோடுமட்டும் ஒரு பெண்ணின் மனம் நிறைவு பெற்று விடுமா?

இப்படி எண்ணி என் மனம் வருந்தியது.

ஆனால், அவள் முகத்தில் சோகத்தின் நிழல்கூட தட்டுப்படவில்லை. ஒன்று அவள் உள்ளத்து உணர்ச்சிகளை முகத்தில் பிரதிபலிக்கவிடாது சாமர்த்தியமாக அமுக்கிவிடும் ஒரு கை தேர்ந்த நடிகையாக இருக்க வேண்டும். அல்லது தியாகமென்னும் தீயில் மூழ்கி, இளமையின் ஆசாபாசங்களை எரித்துவிட்டு வெளியேறிய தியாகக் கொழுந்தாக இருக்க வேண்டும். அல்லது செல்வத்தின் மாயையில் அவளது உள்ளத்து உணர்ச்சிகள் மரத்துப் போயிருக்க வேண்டும். இந்த மூன்று வகைகளில் பாலா எதைச் சேர்ந்தவள்?

என் மனம் குழம்பித் தவித்தது.

'என்ன ஜயம், பேசாமடந்தையா ஆகிவிட்டாயா என்ன?' என்று கேலியாகக் கேட்கவும்தான் என் வாய்ப்பூட்டு திறந்துகொண்டது.

சிறிது நேரம் லோகாபிராமமாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டு, பிறகு தன் சொந்த விஷயத்துக்கு வந்தாள் பாலா.

'நம்மூர் பட்டாமணியும் பாடசாலத்தின் பெண் சந்திராவையும் நினைவிருக்கா உனக்கு? அவள் விவாகத்தின்மூலம்தான் எனக்கு இந்த வாழ்வு ஏற்பட்டது. சந்திராவின் கணவருக்கு இவர் தாய் மாமன். எனக்கு ஏதோ கொஞ்சம் சங்கீத ஞானமிருந்தது. ஊரிலே எந்தக் கல்யாணம் நடந்தாலும் பாட்டுப் பாட என்னை அழைக்காமலிருக்க மாட்டார்கள். சந்திராவின் கல்யாணத்திலும் நான் பாடினேன். எல்லோரும் என் சங்கீதத்தையும், சாரீரத்தையும் புகழ்ந்தார்கள். சந்திராவின் புக்ககத்து மாமாவுக்கு என் சங்கீதத்தோடு என்னையும் சேர்த்துப் பிடித்துவிட்டதாம். ஏற்கனவே மனைவியை இழந்தவர். வெகு நாள்வரை மறு விவாகத்தைப்பற்றிச் சிந்திக்காமலிருந்தவருக்கு என்னைப் பார்த்ததும் மனம் சபலித்ததாம். என் பாட்டும் அழகும் அவரை வசீகரித்துவிட்டனவாம். போன இளமை திரும்பி வந்துவிட்டதுபோன்ற உற்சாகத்துடன் அவர் என்னைப் பார்க்க வந்தார். என் தந்தை பூர்ண சந்தோஷத்துடன் தன் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டார். நான் அவரை நமஸ்கரித்துவிட்டு எழுந்தபோது அவர் என்னைக் கேட்ட கேள்வி:—

'என்னை மணந்துகொள்ள உனக்கு இஷ்டமா அம்மா! உன் மனத்தில்



தோன்றுவதை சங்கோஜப்படாமல் சொல்லம்மா. மனத்தில் எதுவும் வைத்துக்கொள்ளாதே. பின்னால் வருந்துவதில் பயனில்லை. வேண்டாத பொருளை தள்ளி விடுவதுபோல, நடந்த விவாகத்தை தள்ளிவிட முடியாது. ஆகையால், நன்றாக ஆலோசித்து ஒரு முடிவுக்கு வா அம்மா.'

இப்படி அவர் சொன்னபோது, அவரது பெருந்தன்மையை நான் போற்றினேன். எனது தந்தையின் வயதை ஒத்த அவரிடம் எனக்கு சங்கோஜம் தோன்றவில்லை. நேருக்கு நேராக நோக்கினேன். ஐம்பது பிராயத்தைக் கடந்தவராக இருப்பினும் திடகாத்திரத்தோடு விளங்கினார்.

வழுக்கை விழுந்த தலை; அனுபவ முதிர்ச்சி நெற்றியில் ஆழ்ந்த கீற்றுகளாகத் துலங்கின. ஞான ஒளி வீச வேண்டிய நயனங்களில் நப்பாசை மின்னிற்று. எலுமிச்சம் பழத்தை ஒத்த நிறம். வெள்ளிப்பூண் போட்டத் தடியை அவர் கரத்தில் கண்டதும் என் மனம் சற்று கலக்கம் கொண்டது. தடியின் ஆதரவை நாடும் வயதிலா திருமணம்!

அவரது இடத்தில் ஒரு இளைஞன் அமர்ந்து, இந்தச் சொற்கள் அவன் வாயிலிருந்து வந்திருந்தால்...

வெறும் கற்பனையாலேயே என் உள்ளமும் உடலும் சிலிர்த்தன. எல்லாம் கண நேரம்தான். அடுத்தகணம் என்



கண்களை மறைத்து நின்ற மோகத் திரையைக் கிழித்துக்கொண்டு எங்கள் வறுமை மெல்ல எட்டிப் பார்த்து, என்னை மறந்துவிட்டாயா என்று நினைவுறுத்தவும், மனம் தெளிவடைந்து தன் கடமையை உணர்ந்தது. உறுதி த்வனிக்கும் குரலில் 'எனக்குப் பூர்ண சம்மதம். யோசிப்பதற்கு ஒன்றுமே இல்லை' என்று சொல்லிவிட்டு உள்ளே வந்துவிட்டேன். ஊமையனுக்கு பேசும் சக்தி வந்ததுபோலவும், அந்தகனுக்குப் பார்வை கிடைத்தது போலவும், முடவனுக்கு கால் முளைத்ததுபோலவும் எங்கள் குடும்பம் குதூகலத்தில் ஆழ்ந்தது.

எங்கள் விவாகம் சிறப்பாக நடந்தது. அதோடு எங்கள் தாரித்திரம் தொலைந்தது. என் சகோதரிகளுக்கெல்லாம் நல்ல இடத்தில் மணமாகிவிட்டது. என் தம்பிகள் காலேஜில் படிக்கிறார்கள். எனக்குத்தான் என்ன குறை? நானும் சௌக்கியமாகத்தான் இருக்கிறேன்' என்று கூறி முடித்தாள் பாலாமணி.

நான் சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டு, 'நான் ஒன்று கேட்கிறேன். தவறாக எடுத்துக்கொள்ள மாட்டாயே' என்றேன்.

'நமக்குள் இதெல்லாம் என்னடி? மனம்விட்டுப் பேசேன்' என்றாள் பாலா.

'இந்த செல்வத்தால் உன் மனம் பூர்ணமாக நிறைந்துவிட்டதா பாலா?' என்றேன்.

அவள் 'கலகல'வென்று சிரித்தாள்.

'ஐயம்! கேவலம் வெறும் பணத்தால் மட்டும் வாழ்வு நிறைந்துவிடுமா? அது ஓரளவுக்கு எங்கள் குடும்பத்துக்கு உதவியது உண்மைதான். ஆனால், பணத்தால் நிவர்த்தி செய்ய முடியாத குறைகளை அன்பு செய்துவிடும் ஐயம்! இளம் கணவனை அடைந்துவிட்டதால் மாத்திரம் ஒரு பெண்ணின் வாழ்வு வளம் பெற்றுவிடுகிறதா என்ன? இளம் கணவனைப் பெற்ற எத்தனைப் பெண்கள் கண்ணீரும் கம்பலையுமாக துயர வாழ்வு நடத்தவில்லை. நெறியற்ற கணவனோடு நெஞ்சம் புழுங்க புழுங்க வாழும் பெண்கள் எத்தனை எத்தனையோ! அழகும், இளமையும் கொஞ்ச நாட்களில் மக்கி மடியக் கூடியவை. ஆனால், அன்பு அழிவற்றது. நிரந்தரமானது. அழகும், இளமையும், அன்பும் ஒருங்கே கூடிய கணவன் கிடைப்பதரிது. அந்த பாக்கியங்கள் கிடைப்பது சில புண்ணியவதிகளுக்கே. கிட்டாத வாழ்வை எண்ணி ஏங்கி ஏங்கி வாழ்நாள் முழுவதும் நிம்மதியற்று புழுங்குவதில் பயனென்ன ஐயம்? ஆத்ம சக்தியால் சாஞ்சல்ய உணர்ச்சிகளை வென்று, சித்தி பெற முயற்சிக்க வேண்டும். அன்பின் பாதையிலேதான் இன்பம் நிரம்பிக் கிடக்கிறது. அன்பின் சக்திக்கு மேற்பட்ட சக்தி ஒன்றுமே இல்லை. அன்பின் வலிமைக்குமுன் எந்த இடையூறுகளும் நிலைத்து நிற்க முடியாது. அன்பிற்கு அடிபணியாத எதுவுமே கிடையாது.

செல்வத்தினால் விலைக்கு வாங்கிய பொருளாக மதித்து என்னை நடத்தவில்லை என் கணவர். அவரது மாசற்ற உள்ளத்திலே தூய அன்பு இருக்கிறது. என் பிள்ளை, நாட்டுப் பெண்ணின் மனோசுக வாழ்வைப் பார்த்து மகிழ்வதிலும், என் கணவரின் வற்றாத அன்பு ஊற்றில் திளைப்பதிலும், என் பேரக் குழந்தையின் கிள்ளை மொழிகளில் லயிக்கும் இன்பத்திலும் என் வாழ்நாள் மிக ஆனந்தமாக கழிந்து கொண்டிருக்கிறது.'

இவ்விதம் சொற்பொழிவாற்றிவிட்டு இலேசாக முறுவலித்தாள் பாலா.

நான் நினைத்ததுபோல அவள் வாழ்வு அழுது வழியவில்லை. அவளது இந்த பிரசங்கத்தால் நான் பிரமித்தே போனேன்! கிழவனை மணந்தும் குறையற்ற உள்ளத்தோடு அவளால் வாழ முடிகிறது. அதற்குக் காரணம்? மனம்! ஆம், மனசேதான். அவள் வாழத் தெரிந்தவள்.

நான்?

நான் வாழத் தெரியாதவளா?

கண் நிறைந்த கணவன், நிலம், தோட்டம், வீடு, வாசல், எல்லாம் தானிருக்கின்றன. பாலாவைப்போல உயர்ந்த செல்வ நிலையை அடைந்திரா விட்டாலும், வாழ்வை உல்லாசமாகக் கழிப்பதற்குப் போதுமான செல்வம் எனக்கு இல்லாமல் போகவில்லை. ஆனால், என் வாழ்வில் ஏன் ஆனந்தமில்லை.

பாலாவின் நிலையில் என்னை வைத்துப் பார்த்தேன். அவளது கிழக் கணவனை நினைத்ததும் உடனே அருவருப்பால் என் உடல் சிலிர்த்தது. உடனே அந்த நினைவை அகற்றிவிட்டு, என் நிலையில் பாலாவை நிறுத்திப் பார்த்தேன்.

பாலா என் நிலையில் இருந்தால் என்ன செய்வாள்?

ஆம், அவள் வாழ்வாள். எப்படியும் வாழ்வாள். அவள் வாழத் தெரிந்தவள். வாழ்க்கையின் பாதை, எவ்வளவு கரடுமுரடாக இருந்தாலும், கற்களும், முற்களும் காலைக் கிழித்தெறிந்தாலும், அதைச் செப்பனிட்டுக்கொண்டு முன்னேறும் திறன் அவளுக்கு இருக்கிறது. வறுமைப் புயலில் அகப்பட்டுத் தத்தளித்த அடி நாட்களிலும் அவள் கண் கலங்கியதில்லை. எந்த துன்ப நிலையிலும் அந்த மதிவதனத்தில் மலர்ந்து நிற்கும் சிரிப்பு மறைந்ததில்லை. மலையே புரண்டு விழுவதானாலும் அவள் பதறமாட்டாள். சிரித்துக்கொண்டே தாங்கிக்கொள்வாள். ஆனால், எல்லோருமே பாலாவாக முடியுமா?

அன்பின் வலிமையால் எதையும் அடிமைப் படுத்த முடியும். அதனால் ஆகாத காரியம் எதுவுமில்லை என்கிறாளே பாலா! என் கணவரிடம் எனக்கு அன்பு இல்லையா என்ன? இந்த அன்பினால் எதை சாதிக்க முடிந்தது? என் கண்கள் பலபலவென்று நீரை உகுக்க ஆரம்பித்து விட்டது. பாலாமணி திடுக்கிட்டு 'இதென்ன ஐயம்?' என்று என் தோளை அணைத்தவண்ணம் கேட்டாள். அழுது கொண்டிருக்கும் குழந்தையைப் பார்த்து எதற்கு அழுகிறாய்? என்று கேட்டால் அதன் அழுகை இன்னும் பலப்பட்டு விடுவதுபோல பாலாவின் கனிவு நிறைந்த கேள்வியால் என் குமுறல் அதிகரித்தது.

'பாலா, என் வாழ்க்கை நரகமாகி விட்டதடி. சில சமயம் உயிரைக்கூட விட்டுவிடலாமா என்று தோன்றுகிறது' என்று 'ஓ'வென்றலறிவிட்டேன்.




"இந்தக் கடுதாசியைக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வா..."
"யாருக்குங்க கடுதாசி?"
"முட்டாள்! யாருக்கானால் உனக்கென்னடா? இதையெல்லாம் நீ கேட்டுத் தெரிந்துகொள்ளக்கூடாது தெரியுமா? சொன்ன வேலையைச் செய்!"
" ? ? ? "

பாலா என்னைத் தடவிக்கொடுத்த வண்ணம், 'அப்படி என்னம்மா நேர்ந்து விட்டது உனக்கு வாழ்வையே வெறுக்கும்படி? கொஞ்சம் விளங்கத்தான் சொல்லேன்' என்றாள்.

என்னை ஒருவாறு சுதாரித்துக் கொண்டு சீர் குலைந்த என் வாழ்வைப் பற்றி கூறத் தொடங்கினேன்.

'நான் ஒரு பிரசித்திபெற்ற எழுத்தாளரைக் கை பிடித்தபோது அகமகிழ்ந்து போனேன். என்னைவிட பாக்யசாலி வேறொருத்தி இருக்க முடியாதென்று பெருமிதம் கொண்டேன். என் இளமையின் இன்பக் கனவுகளெல்லாம் நிஜ வாழ்க்கையில் பலிதமடைந்து விட்டதென பூரித்துப் போனேன். புக்ககத்தில் மாமி, மாமனார், மைத்துனர், நாத்தி என்ற பிக்கல் பிடுங்கலெல்லாம் ஒன்றும் கிடையாது. கண்ணுக்கு கவர்ச்சிகரமானவர். பி. ஏ. பட்டதாரி. சொந்த பங்களா, காணிகரையிலிருந்து

வரும் வரும்படியே சுக வாழ்க்கைக்குப் போதும். எல்லாம் எனக்குத் திருப்தி தான். மணமான புதிதில் வாழ்வு ரம்ய மாகத்தான் கழிந்தது. நாளாக ஆக ஆளே மாறிவிட்டார். கதை எழுதட்டுமே! நான் வேண்டாம் என்று தடுக்கவில்லை. எதற்கும் ஒரு வரையறை கிடையாதா? காலை வேளைகளில் வயல் வெளிகளில் சுற்றிக்கொண்டு இருப்பார். பத்து மணிக்குச் சாப்பிட வருவார். சாப்பாடானதும் கதை எழுத உட்கார்ந்து விடுவார். சாயங்காலம் மீண்டும் வயலுக்குச் சென்றுவிடுவார் இரவு ஏழு மணிக்குத் திரும்பிவந்து ஒரு யந்திரம்போல சாப்பாட்டுக் கடனை முடித்துக்கொள்வார். சமையல் நன்றாயிருக்கு, நன்றாகயில்லை என்று எதுவும் வாயைத் திறந்து சொல்லமாட்டார். போட்டதைச் சாப்பிட்டுவிட்டு மீண்டும் மேஜையருகில் உட்கார்ந்தாரானால், இரவு இரண்டு மணிவரை எழுதிக் கொண்டே இருப்பார். சற்று நேரம் பேசுவதற்குக்கூட அவருக்கு ஓய்வு ஒழிவு கிடையாது. நாமே எதாவது பேசுவோம் என்றால் 'வள்'ளென விழுவார். அவரது அழகான கற்பனை ஊற்று என்றால் தூர்ந்துவிட்டதென சீறுவார். ரம்மியமான மாலை வேளையில் உல்லாசமாகப் பேசி சிரித்துக்கொண்டு ஜோடி ஜோடியாகத் தெருவில் செல்லும் இளம் தம்பதிகளைக் காணும்தோறும் என் உள்ளம் குமுறித் துடிக்கும். பூங்காவனமாய்ப் பூத்துக் குலுங்கவேண்டிய காலத்திலே, பொட்டலாகிவிட்ட வாழ்க்கையை எண்ணி எண்ணி மனம் புழுங்கினேன்.

சிந்தனை உலகில் சஞ்சரித்துக் கொண்டும், கற்பனை மனிதர்களோடு வாழும் அவருக்கு, உயிருள்ள ஒரு ஜீவன் தன் அன்புக்காக ஏங்கித் துடிப்பது தெரியப்போகிறதா? பொய்மையே பூஷணமாகப் பூண்டு பொய்மையிலேயே வாழும் அவருக்கும், உண்மை வாழ்க்கையில் உண்மையாகவே வாழ்ந்து, உண்மை இன்பத்தை அள்ளிப் பருகத் துடித்துக்கொண்டிருக்கும் எனக்குமிடையே மெல்லிய சேலையாய் போலத் தோன்றிய இடைவெளி, நாள் ஆக ஆக பெரியதாகிக்கொண்டே போயிற்று. ஒருநாள் ஆறு மணி ஆட்டத்திற்கு என் சிநேகிதி ஒருத்தியுடன் சென்றுவிட்டு வீடு திரும்பும் போது மணி ஒன்பது. வீடெல்லாம் விளக்கின்றி திறந்து கிடந்தது. மாடியில் அவர் அறையில் மட்டும் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. ஹாலில் விளக்கைப் போட்டுவிட்டு 'இந்த வீட்டில் கொள்ளைபோனால்கூட கேட்பார் கிடையாது' என்று இரைந்து கொண்டே மாடிக்குச் சென்றேன் குனிந்து எழுதிக்கொண்டிருந்த அவர், தலையை நிமிர்ந்து 'மகாராணியார் வெளியெல்லாம் விஜயம் செய்துவிட்டு வரும்வரை, நான் வீட்டைக் காவல் காத்துக்கொண்டிருக்க வேண்டுமோ?' என்றார் இடக்காக. எனக்கு அப்போதிருந்த மன நிலையில் கோபம் சீறிக் கொண்டு வந்தது. 'உங்களுக்கு வேண்டுமானால் 'கற்பனை' உலகமாக இருக்கலாம். எனக்கு அப்படி இல்லை. மன உளைச்சல் தாங்காமல் வெளியிலாவது கொஞ்சம் போய்விட்டு வரலாம் என்று தான் போனேன். இதுகூட ஆகவில்லை உங்களுக்கு. உங்களுக்கும் சுமுகமாக வாழத் தெரியாது. மற்றவர்களையும் நிம்மதியாக வாழவிடமாட்டீர்கள் சட்! என்ன வாழ்க்கை இது. முழுக் கயிறில் தொங்கலாம் இதைவிட' என்றேன் வெறுப்புடன்.

அவர் எங்கிருந்தோ ஒரு கயிற்றைக் கொண்டுவந்து 'முழம் போறுமா, இன்னும் கொஞ்சம் விட்டு / தறுக்கித் தரட்டுமா?' என்றார் குறும்பாக. எனக்கு எப்படி இருக்கும்? முகத்தை 'உர்' என்று வைத்துக்கொண்டு 'சரி, சரி. வேண்டிருக்கவில்லை உங்கள் வேடிக்கை. சாப்பிட்டுவிட்டு விடிய விடிய எழுதுங்கள். என்னால் காத்துக்கொண்டிருக்க முடியாது. எனக்குத் தூக்கம் வருது' என்றேன்.

அவர் 'கடகட'வென்று சிரித்து 'சற்றுமுன் சாகப்போறேன் என்றாய். அதற்குள் தூங்கப் போகிறேன் என்கிறாயே' என்றார்.

எனக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. 'நீங்கள் எழுத்தாளர். உங்களுக்குச் சரியாக என்னால் பேச முடியாது. சாப்பிட வரப் போகிறீர்களா இல்லையா? என்றேன் படபடப்பாக.

'சட், இந்த வீட்டில் நிம்மதி ஏது?' என்று கோபத்துடன் நாற்காலியைப் பின்னால் தள்ளிக்கொண்டே எழுந்தார் அவர்.

எனக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்தது. 'நீங்கள் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொண்டிருக்கக் கூடாது. கற்பனை மனிதர்களோடேயே வாழ்ந்திருக்கவேண்டும். அப்போ இந்த நீச்சுப் பிச்சுத் தொல்லை எதுவும் இருக்காது பாருங்கோ என்றேன்' காரமாக.

'நான் பெண்ணையா மணந்து கொண்டிருக்கிறேன். இல்லை; இல்லவேயில்லை. ஒரு ஜடத்தையல்லவா பண்ணிக் கொண்டு திண்டாடுகிறேன். ரசனையற்ற ஜன்மம். கழுதைக்குத் தெரியுமா/கற்பூர வாசனை?' என்று வெறுப்போடு சொன்னார் அவர்.

தாங்கவொண்ணாச் சினத்திலே துடித்துக்கொண்டிருந்த நான், 'உங்களுக்கு என்னைப் பிடிக்கவில்லை என்றால் என் பிறந்தகத்தில் கொண்டு போய்த் தள்ளி விடுங்கள். வேண்டாம் வெறுப்பாக என்னை வைத்துக்கொண்டு ஏன் இப்படி வதைக்கவேண்டும்?' என்று கத்தினேன். இப்படி எங்கள் சண்டை முற்றிப்போய் அவர் கை விரல்கள் என் கன்னத்தில் முத்திரை வைக்கும் அளவுக்கு வந்துவிட்டது. நான் அப்போது கோபித்துக்கொண்டு பிறந்தகம் வந்தவள்தான் பாலா! பிறகு திரும்பவேயில்லை, ஒரு எழுத்தாளனுக்கு, அதுவும் பிரசித்திபெற்ற எழுத்தாளனுக்கு மனைவியாக வாழ்வதைப் போன்ற நரகம் வேறெதுவும் இருக்க முடியாது. வெளிக்கு வேண்டுமானால் பெருமையாக இருக்கலாம். உள்ளூர நரகம், படு நரகம். வாழ்வில் இனி எனக்கு மகிழ்ச்சி ஏது பாலா!' என்று விம்மினேன்.

எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டுவந்த பாலாவின் இதழ் கடையில் ஒரு புன் முறுவல் வழிந்தது. 'ஜயா! நீ அவரை விட்டு வந்துவிட்டாய். இப்பொழுது நிம்மதியாக இருக்கிறாயா? இந்த வாழ்வே உனக்குத் தேவலாம்போலிருக்கிறதா?' என்று நிதானமாகக் கேட்டாள்.



"பாட்டி! நான் எவ்வளவு ரூபாய்க்குச் சமம்?"

"லட்ச ரூபாய்டா கண்ணு!"

"சரி... அப்படின்னா எனக்கு ஒரு காலணா கொடேன்!"

" ? ? ? "

'அதுதானே இல்லை, அமைதி அமைதி என்று உள்ளம் தவிக்கிறது. வீட்டில் எல்லோரும் மாப்பிள்ளைக் கட்சிதான். எனக்குக் குடித்தனம் செய்யத் தெரியவில்லை என்ற அசட்டுப் பட்டம் வேறு. பிறந்த வீட்டு லக்ஷணம்தான் இப்படி என்றால் ஊராருக்கும் கூடவா நான் இளப்பமாகத் தோன்றவேண்டும்? ஒரு பெண் கணவனோடு வாழவில்லை என்றால் அதற்கு அவளது கற்பின் களங்கம்தான் காரணமாக இருக்க வேண்டுமா? சட், என்ன குறுகிய மனப்பான்மை இந்த ஜனங்களுக்குத்தான்! எங்கு போனாலும் சாந்தி கிடையாது. சாந்தி, சாந்தி என்று என் மனம் துடிக்கிறதடி பாலா! இந்த உலகத்தைவிட்டு ஒழியும்போதுதான் எனக்கு சாந்தி' என்று துக்கம் நெஞ்சை அடைக்கக் கூறினேன்.

'பதறாதே ஜயம்! நான் சொல்வதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேள். உன்

கணவர் சாமான்யப் பட்டவரல்ல. உலகம் அவர் எழுத்து வன்மையை மெச்சி புகழ்மாலை சூட்டுகிறது. உலகமே போற்றும் அவரை அடையும் பாக்யம் உனக்கு கிட்டியும், அதன் பெருமையை நீ உணரவில்லை...நான் இடைவெட்டினேன்.

'அவரது எழுத்தில் இனிமை இருக்கிறதோ என்னவோ. ஆனால், அவரிடம் அது மருந்துக்குக்கூடக் கிடையாது. உலகத்தின் உள்ளத்தைக் கவரும் சக்தி அவருக்கு இருக்கலாம். ஆனால், பெண்ணின் உள்ளத்தை உணரும் சக்தியோ, கவரும் தன்மையோ கிடையாது. எழுத்தாளர்களே அரை பைத்தியத்தில் சேர்ந்தவர்கள்தாமே! தனக்குத்தானே பேசிக்கொள்வதும், தலையாட்டிக் கொள்வதும், ஏதோ வெற்றியின் சிகரத்தையே எட்டிவிட்டாற் போன்ற மகிழ்ச்சியில் பொங்கிப் பொங்கி கெக்கலிப்பதுமான பைத்தியங்களுக்குரிய இத்தனை சேஷ்டைகளில் எள்ளளவும் குறைந்ததல்ல எழுத்தாளர்களின் சேஷ்டைகள். மற்றப் பைத்தியங்களுக்கு ஒரு சமயமில்லாவிட்டால் ஒரு சமயம் சிறிது தெளிவு உண்டாவதுண்டு. ஆனால், இந்த எழுத்தாளப் பைத்தியங்களுக்கோ எப்பொழுதுமே தெளிவு கிடையாது. இவர்களோடு வாழ்வதைவிட சுருக்குப் போட்டுக்கொண்டு பிராணனைவிட்டு விடலாம்' என்றேன் மனக்கசப்போடு.

'பிராணனை விடுவதென்றால் அவ்வளவு இலேசா என்ன?' என்று சிரித்த பாலா, மேலும் தொடர்ந்தாள். உலகத்திலே துயரத்தை அனுபவிக்காத மனிதர்களே இருக்க முடியாது. அதற்காக ஒவ்வொருவரும் பிராணனை விடுவதானால் உலகம்தான் ஏது? இப்பொழுது சத்தியமாக உனக்குத்தான் புத்தி தெளிவில் இல்லை. கொஞ்சம் தெளிவு படுத்திக் கொண்டு சிந்தித்தாயானால், தவறு எங்கு இருக்கிறதென்பது உனக்குப் புலனாகும். உன் கணவனின் அன்பையும் ஆதரவையும் எதிர்பார்க்கும் நீ, என்றாவது அவருக்கு அவைகளை அளித்ததுண்டா? அளித்திருந்தால் நிச்சயம் நீ வெற்றிபெற்றிருந்திருப்பாய். உலகம் அவரை ஆயிரம் போற்றினாலும், உன் வாயிலிருந்து வரும் ஒரு சிறு புகழுரைக்கு அது ஈடாகுமா? உலகம் அவருக்குப் புஷ்பமாரியாகச் சொரிந்தாலும், உன் இதயத் தாமரையாகிய அந்த ஒற்றை மலரின் சம்பூர்ண சமர்ப்பணத்திற்கு ஈடாகுமா? அவரைப் போல கலையுள்ளம் உனக்கு இல்லாமல் இருக்கலாம். அதனாலென்ன? ரஸிக உணர்ச்சி ஒன்றிருந்தால் போதுமே! ரஸிகன் இல்லாவிட்டால் கலைஞனுக்கு கதியில்லை. ரஸிக உணர்வு இல்லாவிட்டால் கலை வளரமுடியாது. கலையின்றி ரஸிகத் தன்மையும் பெருக முடியாது. இவ்விதம் கலையும், ரஸிகத் தன்மையும் இணைந்து நின்று ஒன்றையொன்று ஆதரிப்பதனாலேயேதான் இரண்டும் வளம் பெறுகின்றன.

அவரது கலையை நீ ரஸிக உள்ளத்தோடு பாராட்டவேண்டும். கலைஞனின் மனதைக் கவரவேண்டுமானால், ரஸிக உள்ளத்தோடு நீ நடந்து கொள்ள வேண்டும். ஐயா, ஒரே ஒரு தடவை, நான் சொல்வதற்காகவாவது நீ முயற்சி செய்து பார். வெற்றி உனக்கு நிச்சயம் என்றாள்.

'அவரிடம் திரும்பிச் செல்வதா? அது என்னால் முடியாது பாலா. அவர் என்னை அழையாதிருக்கும்போது, என் பெண்மையின் கௌரவத்தைவிட்டு வலியச் சென்று அவர் காலில் விழச் சொல்லுகிறாயா? என் மதிப்பை விட்டுக் கொடுத்து சரணாகதி அடைய என்னால் முடியாது பாலா.

பாலா ஏளனமாகச் சிரித்தாள்.

'எது மதிப்பு? எது கௌரவம்...? இப்பொழுது நீ வாழ்வது ரொம்ப கௌரவமான வாழ்வா? வீட்டவர்கள் சிறுமைப்படுத்த, ஊராரின் இளப்பத்திற்கும், வம்புப் பேச்சுக்களுக்கும் ஆளாகிக்கொண்டு வாழும் இந்த வாழ்வு ரொம்ப கௌரவம் நிறைந்ததோ?

என் மனத்தில் பலமா அறை விழுந்தது! பிறந்த வீட்டின் அவமதிப்பைப் பொறுத்துக்கொண்ட கணவனின் ஒரு சிறு அறையைத் தாங்க முடியாது போய்விட்டதே எனக்கு. பெரிது நினைக்கும் உள்ளம் பெற்றுக்கொண்டிருக்கும் அறைகளை, உடலில் பட்ட அந்த அறை அப்படி வலித்ததா என்ன? இங்கு சிறுமைப் படுவதை அங்குதான் போய் அவருக்குப் பெருமையாக வாழ்வோமே! பாலாவின் யுக்திகளையும்தான் கையாண்டு பார்ப்போமே! பலன் கிடைத்தாலும் சரி. கிடைக்காவிட்டாலும் சரி. இந்த அவல வாழ்வுக்கு அந்த வரண்ட வாழ்வே தேவலாம் போலிருக்கு. ஆனால், அவர் அழையாமல் நாம் எப்படி அந்த வீட்டில் நுழைவது? ஆயுள் முழுவதுமே அழைக்காது இருந்துவிட்டால்......இதுவரை ஏற்படாத பீதி இப்பொழுது என்னுள் புகுந்து, உடல் முழுவதும் பரவி அங்கங்களை வெலவெலக்கச் செய்தன. யாராவது ஒருவர் விட்டுக் கொடுத்தால்தான் சமாதானத்திற்கு வழியுண்டு. ஆண் வலிமையுள்ளது, அது வணங்கிப் போகாது. வலிமையற்றப் பெண்தான் வணங்கிப் போயாகவேண்டும்! ஆண்டவனின் சிருஷ்டியே அப்படியானால், யாரை குறை கூறுவது?

கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பாலாவிடம் விடை பெற்றுக்கொண்டேன்.

'போய்வா, ஜயம். ஆண்டவன் கருணையற்றவன் அல்ல. அடுத்த தடவை நீ இங்கு வரும்போது மூவராக வரவேண்டும். ஆரத்தியை வைத்துக் கொண்டு நான் தயாராகக் காத்திருப்பேன்' என்று சிரித்தவண்ணம் என் முதுகில் தட்டிக்கொடுத்து வழி அனுப்பினாள் பாலா.

'நான் உங்கள் வீட்டுக்கு வர விரும்புகிறேன். என்னை அதற்கு அனுமதிப்பீர்களா?' என்று அவருக்கு கடிதம் எழுதினேன்.

மறு தபாலிலேயே பதில் வந்து விட்டது.

'நீ போகும்போது என்னைக் கேட்டுக்கொண்டா போனாய்? வரும்போது மட்டும் என் அனுமதி வேண்டுமா? மேலும், உன் வீடு, என் வீடு, என்று ஒன்று இருக்கிறதா என்ன? 'நம்' வீடு என்று ஒன்று இருக்கிறது என்பது மட்டும்தான் எனக்குத் தெரியும். உனக்கும் உரிமையுள்ள ஒரு இடத்திற்கு வருவதற்குத் தனிப்பட்ட முறையில் என் உத்தரவு எதற்கு?'



"ஆயிரக் கணக்கான பேருங்க இருக்கிற இடத்திலே இவரு சண்டை போட்டுகிட்டிருந்தாருங்க! ரொம்பக் கஷ்டப்பட்டுக் கொண்டாந்தேன்!"


"எங்கே சண்டை போட்டாங்க?"
"மல் யுத்தத்தில்!"

இந்தப் பதிலைப் பார்த்ததும்தான் எனக்கு மூச்சு வந்தது.

வண்டியைவிட்டு இறங்கிய என்னை, திறந்த மார்பிலே ஒரு துண்டும், வலக் கரத்திலே பிடித்த பேனாவுமாக வாயில் புறத்திற்கு வந்து ஒரு புன் முறுவலாய் என்னை வரவேற்றார் அவர்.

வீடு கிடந்த அலங்கோலத்தைப் பார்த்ததும் என்மீதுதான் எனக்கு கோபம் வந்தது. புழுதிபடிந்த தரை, மூலை மூலையாகத் தொங்கும் ஒட்டடைகள், மூலைக்கு ஒரு பக்கமாக இறைந்து கிடக்கும் துணிமணிகள், தாறுமாறாக கிடக்கும் பண்டம் பாத்திரங்கள்! அப்பப்பா, பார்க்கச் சகிக்கவில்லை. வீட்டை ஒழுங்கு படுத்திவிட்டு, காப்பி, பலகாரங்களைத் தயாரித்து எடுத்துக் கொண்டு அவர் அறையில் நுழைந்தேன். அவர் வழக்கம்போல குனிந்த தலை நிமிராது விறுவிறு என்று எழுதிக் கொண்டிருந்தார்.

இந்தவார வெண்மதியில் வெளுத்து வெளுத்துக் கட்டிவிட்டீர்களே! பிரமாதம் போங்கள். உங்கள் கதைகளை இத்தனை நாளாகப் படிக்காது சதா ஊர் சுற்றிக்கொண்டிருந்து விட்டதற்காக ரொம்ப வருத்தமாக இருக்கு. உங்கள் கலைத் திறனின் மேன்மையை உணர்ந்து கொள்ளாது எவ்வளவு அசடாக இருந்து விட்டேன் நான். வெண்மதியில் வெளியான அந்த சிறு கதையின் ஒவ்வொரு அக்ஷரத்திற்கும் லட்சம் பொன்னை வீசலாமே!' என்றேன் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையைப் போல. அவர் தலையை நிமிர்ந்து வியந்த பார்வையோடு என்னை நோக்கி



'அட, என் பெண்டாட்டிக்குக்கூட ரஸிக உள்ளம் இருக்கிறதா என்ன? எத்தனை நாளாக இந்த விசித்திரம்?' என்றார் கிண்டலாக. நான் அதை காதில் போட்டுக்கொள்ளாமல், அடுத்த கதை என்னவோ?' என்று உற்சாகத்துடன் கேட்டவண்ணம், வெகு சுவாதீனத்தோடு அவர் கையெழுத்துப் பிரதியைப் பிடுங்கிப் படிக்கலானேன்.

'அவர் கையைக் கட்டி உட்கார்ந்து என்னையே வைத்த கண் வாங்காது பார்த்தவண்ணம்' ஐயா, நீ ஊருக்குப் போய்விட்டு வந்ததும் ஒரு நல்லெழுத்தாளென்று நினைக்கிறேன். ஆளே மாறிவிட்டாயோ! என்றார். நான் அந்தப் பிரதியைத் திரும்ப அவரிடம் கொடுத்து, 'முடிவையும் எழுதிவிடுங்கள்' என்றேன். அவர் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார் செயலற்றுப்போய்.

'ஏன் எழுதவில்லை?' என்றேன்.

'ஓடவில்லை. வரயா இப்படியே வெளியே போய் விட்டுவரலாம்?' என்றார் அவர். 'என் மனம் குதூகலத்தில் துள்ளியது. 'அழகான கற்பனை. விறுவிறு' என்று போய்க்கொண்டிருக்கிறது. நடுவில் நிறுத்தினால் தொடர் அறுந்து நேர்த்தியாக அமையாது. கதையை முடித்துவிடுங்கள். அப்புறம் போகலாம். கைவலித்தால் நான் எழுதுகிறேன், நீங்கள் சொல்லுங்கள்' என்றேன்.

பெருமை முகத்தில் பொங்க 'ஏதேது. எழுதாவிட்டால் விடமாட்டாய் போலிருக்கே!' என்று சிரித்துக்கொண்டே விரலிடுக்கில் பேனாவை வைத்துக் கொண்டார் அவர். உள்ளத்தில் அன்பு ஏறி அமர்ந்து ஆட்சி செய்ய அறிவு அமைச்சராக பணிபுரியத் தொடங்கி விட்டால், அதன் ராஜ்யத்தில் அடிமைப் படாத எதுவுமே இருக்க முடியாது என்று அனுபவ பூர்வமாக உணர்ந்து கொண்ட நான், மானசீகமாக பாலுவுக்கு அஞ்சலி செலுத்தினேன்.

★



மேனியழகு நாளுக்கு நாள்
மேன்மையடைவதற்கு...




GOVERNMENT SOAP FACTORY, BANGALORE-3.

கவர்ன்மெண்ட் சோப் பாக்டரி, பெங்களூர்-3.

Printed and published By N. Rajagopalan at The "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

Registered as a Newspaper in CEYLON

